இதழ் 53 ஜூலை 2019

# காலம்

ISSN-1715-4030

## கவிஞர் செழியன் சிறப்பிதழ்



வாழ வேண்டுமென்ற ஆசை.
மனிதனாக வாழ வேண்டுமென்ற ஆசை.
மறுபடியும் மறுபடியும்
கொழுந்து விட்டு எரிகின்றது.

இறுதி மூச்சின் கடைசிச் சொட்டு காற்றிலும்
இந்த நம்பிக்கை துடித்துக் கொண்டுதான்
இருக்கும்.

- அன்புடன்

செழியன்



“ நான் சமூகத்தை எழுதுகிறேன். அதையும் சார்பு நிலையற்று எழுதுகிறேன்.
என்னுடைய நாவல்களும் சிறுகதைகளும் சமூகம் எழுதிய கதைகளே. ”

- இமையம்

(நேர்காணல்)

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்"

- குறள் 666

நினைப்பவர்கள் தாம் நினைப்பவற்றில் உறுதி யுடையவர்களாக இருந்தால் அவர்கள் நினைத்தவற்றை நினைத்தபடி பெறலாம்.

Provided you have the strong will you
will achieve the thoughts you have willed

தேடக் கிடைக்காத படம்




HomeLife Galaxy

REAL ESTATE LTD., BROKERAGE, INDEPENDENTLY OWNED & OPERATED



**Killi** Chelliah BSc.Eng
Sales Representative
**416.624.7562**

**Ranjan** Francis Xavier
Sales Representative
**416.816.1220**



416.284.5555 | 111 Grangeway Ave. #301, Toronto, Ontario, Canada, M1H 3E9

# துப்பிவிட்டுப் போனதே காற்று

செழியன் எம்மை விட்டகன்று ஆண்டு ஒன்றாகிவிட்டது.

ஒரு கடுமையான குளர்காலத்தின் பின் மாலைப்பொழுதில், எதிர்பாராத ஒரு தருணத்தில், மொன்றியல் 'தமிழர்ஒளி' அலுவலுகத்தின் முன்பாகத்தான் செழியனை முதன்முதலில் சந்தித்தேன்.

பெயரளவில் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டிருந்தாலும் முகங்களாக எதிர்ப்பட்ட முதல் சந்திப்பு அதுதான். அன்றுமுதல் எமது நட்பும் அன்பும் தொடர்ந்தது.

ஒருநாள் மொன்றியல் பிளமொண்டான் வீதியிலிருந்த என் வீட்டில், குமார் மூர்த்தியும் ஆனந்த பிரசாத்தும் செழியனும் நானுமாகப் பேசிக்கொண்டிருந்தோம்.

இதமாகக் கடந்த அத்தருணங்களில் ''நான் ஓர் இலக்கிய சஞ்சிகை ஆரம்பிக்க விரும்புகின்றேன். கூட வருவீர்களா?'' என்று தயக்கத்துடன் கேட்டேன்.

உடனே செழியன் ''உங்களுடன் கூட நடப்போம் செல்வம் அண்ணை'' என்றார். அன்று அவ்வாறு கூறியவர் தன் மரணம் மட்டும் என்னைத் தாங்கி அணைக்கும் வேராய்ப் படர்ந்தார்.

'சோகமும் துயரமும் நிறைந்த ஒரு நிழல் எங்கள் நிலங்களில் எழுதப்பட்டுக் கிடக்கின்றது' என்று கூறியவாறு அந்த நிழலை அழிக்கப் போராடப் போனவன்.

'பெர்லின் விமான நிலையத்தில் வந்து இறங்கும் அகதிக் கூட்டத்தில் என்னை நீ தேடி அலையாதே' என்று தன்னை வேறுபடுத்தி நின்றவன்.

'துப்பாக்கிகளை மட்டுமல்ல

துப்பாக்கிகளைத் தந்த

எஜமானர்களையும் நம்பாதே' என்று சொல்லி நாட்டைக் கடந்தவன்.

செழியன் ஒரு கவிஞன், அரசியல் செயற்பாட்டாளன், நல்ல நாடகப் பிரதியாளன், எல்லாவற்றையும்விட நல்ல கணவன், தகப்பன்.

இந்த அனைத்துப் பரிமாணங்களிலும் தொக்கி நின்றது மற்றையவர் மேல் செழியன் கொண்ட பேரன்பு. அன்பும் கவிதையும் கொண்ட இதயமே அவனை இயக்கியது. 'அன்பிலா ஒரு செயல், என்பிலதனை வெயில் போல் காயும்' என்பதை நன்கறிந்தவன்.

'மண்ணோர் மொழியில் பேசினாலும் விண்ணோர் மொழியில் பேசினாலும் அன்பு எனக்கு இல்லையே, ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் கைத்தாளமும் ஆவேன்' என்ற வேதவாக்கை அவன் அறிந்திருந்தானோ தெரியவில்லை. ஆனால் அவனுடைய எல்லா இயக்கங்களிலும் அடிநாதமாக இழையோடிக்கொண்டிருந்தது அவன் நெஞ்சு நிறைந்திருந்த நேசமே.

90களின் நடுப்பகுதியில் செழியன் மிகத் தீவிரமாக இயங்கிய நாட்களில் இலங்கையில் இடதுசாரி செயல்பாடுகளில் முதன்மை பெற்றிருந்த ஒருவர் சொன்னார், ''கனடாத் தமிழர்களில் முற்போக்கு முகாமுக்குத் தலைமை தாங்கக்கூடிய அனுபவமும் அரவணைப்பும் எல்லோரையும் தாங்கிப் பிடிக்கும் குணமும் உள்ளவர் செழியன். ஆனால் அதை உணராமல், சொற்கேளாமல், தன்வழியே போகிறார்'' என்றார்.

அக்கருத்தில் எனக்கும் உடன்பாடு இருந்தது.

செழியன் என் ஆத்மார்த்த பலமாய் இருந்தவன். என்னிலும் இளையவன். என்னிலும் நல்லவன். 'காலம்' சஞ்சிகை அவனை இழந்துவிட்டது. தன் பக்கத்துணையைப் பிரிந்து நிற்கின்றது. இதை ஊழிற் பெருவலி என்று சொல்வதா? இல்லை செழியன் எழுதியது போல, 'துப்பிவிட்டுப் போனதே காற்று' என்று சொல்வதா?

அவன் நினைவுகளைப் பூவெனச் சுமந்து நிற்கின்றது இவ்விதழ்.



# காலம்

இதழ் 53 ஜுன் 2018

**ஆசிரியர்**
செல்வம் அருளானந்தம்

**ஆலோசனைக் குழு**
என்.கே.மகாலிங்கம்
உஷா மதிவாணன்

**அட்டை வடிவமைப்பு**
கே.கே. ராஜா

**இதழ் வடிவமைப்பு**
1st Step Mujeeb

**தொடர்பு முகவரி**

SELVAM ARULANANTHAM
84, COLELUKE LANE
MARKHAM, ONT
L3S 0B7
CANADA
Email : kalam@tamilbook.com
Phone : +1 416 7311752

177/103, Ambals's Building
Avvai Shanmugam Salai,
Royapettah, Chennai - 600 0014.
Email : kaalammagazine@gmail.com
Mobile : +91 95000 45611

**சந்தா** (தபால் செலவு உட்பட)
**இந்தியா**

ஓராண்டு சந்தா : ரூ. 250
இராண்டாண்டு சந்தா : ரூ. 450
ஐந்தாண்டு சந்தா : ரூ. 1,000
ஆயுள் சந்தா : ரூ. 4,000

**பிறநாடுகள்**

ஓராண்டு சந்தா : ரூ. 750
இராண்டாண்டு சந்தா : ரூ. 1,400
ஐந்தாண்டு சந்தா : ரூ. 3,600
ஆயுள் சந்தா : ரூ. 10,000

சந்தா செலுத்த விரும்புபவர்கள் பின்வரும் மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: kaalammagazine@gmail.com
தொலைபேசி: +91 95000 45611

ஒருவேளை இதழ் இடையில் நின்று போனால், மீதி சந்தாத் தொகை திருப்பித் தரப்படும் என உறுதியளிக்கிறோம்.

காலம் இதழை மின்னூலாக Magzter மற்றும் DailyHunt Appகளில் வாங்கிப் படிக்கலாம்

**துப்பிவிட்டுப் போனதே காற்று** | --- 02
**வந்துவிடு, டுப்புடு** | அ.முத்துலிங்கம் --- 02
**விழைந்ததும் விளைந்ததும்** | வெங்கட்ரமணன் --- 02
**செழியன் சிறப்பிதழ் தோழர் செழியன்** | ஸ்ரீதரன் திருநாவுக்கரசு --- 02
**செழியன்: சில குறிப்புகள்** | அருண்மொழி வர்மன் --- 02
**முகில்களுக்கு மேலே நச்சத்திரங்களைப் பார்த்தவர்** | மு. புஷ்பராஜன் --- 02
**பால் வீதியில் ஒரு கவிஞன்** | சி.ரமேஷ் --- 02
**நண்பன் செழியனுக்கு** | ஆனந்த ப்ரசாத் --- 02
**செழியன்:நற்பண்புகள் நிறைந்த ஒரு மனிதன்** | என்.கே. மகாலிங்கம் --- 02
**செழியனின் 'வானத்தைப் பிளந்த கதை' எனது படிப்பனுபவம்** | உஷா மதிவாணன் --- 02
**கவிஞனை நினைவு கொள்வது எப்படி? அல்லது அல்லது** | சேரன் --- 02
**தவறுகளில் இருந்து எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டும்! செழியன் நேர்காணல்** | 'காலம்' செல்வம் அருளானந்தம் --- 02
**இளையராஜா என்னும் இசைத் தொழில் அகம்** | கானா பிரபா --- 02
**மல்கோவா** | ஏஜே. டானியல் --- 02
**நேர்காணல் எழுத்தாளர் இமையம்** | சந்திப்பு: அரவிந்தன் --- 02
**தளை** | கமலா சுந்தர ராமசாமி --- 02
**மன்னிப்பின் ஊடுருவல்** | அகரமுதல்வன் --- 02
**இனப்பிரச்சினை: வரலாறும் படைப்பிலக்கியமும் - 12** | மு.புஷ்பராஜன் --- 02
**ஒரு ருமேனியனுடன் உரையாடுவது எப்படி?** | சிறில் அலெக்ஸ் --- 02
**கவிதைகள்** | தர்மினி --- 02
**சித்திறபீக்கா பாயீஸ்** | --- 02
**ஆழியாள்** | --- 02
**இருவிதமான மழை** | நெடுந்தீவுமுகிலன் --- 02
**களப்பூரான்** | --- 02
**அத்து மீறல்** | தேவ அபிரா --- 02
**சீதாகாந்த் மஹாபத்திர கவிதைகள்** | தமிழில்: சோ.ப --- 02
**நதி வட்டம்** | வ.ஐ.ச.ஜெயபாலன் --- 02
**விரிந்துகொண்டுவரும் தீ** | கற்கி --- 02
**பிரபஞ்ச நூல்** | ஷோபா சக்தி --- 02
**விமானப் பயண உபாதைகள்** | சச்சிதானந்தன் சுகிர்தராஜா --- 02
**ஒரு பெண் நாடோடியின் கதைகள்** | டிசே தமிழன் --- 02
**அந்திமக் காலத்தின் இறுதி நேசம்** | தக்ஷிலா ஸ்வர்ணமாலி, தமிழில்: எம். ரிஷான் ஷெரீப் --- 02

# வந்துவிடு, டுப்புடு

## அ.முத்துலிங்கம்

கலியோப் தேன்சிட்டு இருக்கிறது. திடீரென்று அதை என் வீட்டுத் தோட்டத்தில் காணலாம். எப்பொழுதும் இதன் வருகையை நான் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன். ஒருநாள் வரும். அடுத்த நாளும் வரும். பின்பு பல நாட்களுக்குக் காணாமல் போய்விடும். மறுபடியும் ஒருநாள் எதிர்பார்க்காத சமயம் வரும். முன்னுக்கும் பின்னுக்கும் பறந்தபடியே நீண்ட அலகுகளால் தேன் குடிக்கும். சிலநேரம் அப்படியே ஒரே இடத்தில் அந்தரத்தில் நிற்கும். அதன் இறக்கைகள் செக்கண்டுக்கு 80 வேகத்தில் அடிக்கும். ஒருநாளுக்கு அது தன் உடல் பாரத்திலும் பார்க்க 4 மடங்கு உணவு உண்ணவேண்டும். அல்லாவிடில் இறந்துவிடும். வந்த காரியம் முடிந்ததும் பறந்து போகும். மறுபடியும் அது எப்பொழுது வரும் என்பதைச் சொல்லவே முடியாது.



மின்னஞ்சல் வந்தது. முன்பின் அறியாத ஒரு வாசகர். என்னுடைய சிறுகதைகள், கட்டுரைகள் நேர்காணல்கள் அனைத்தையும் படித்திருப்பதாக எழுதியிருந்தார். பின்னர் பல நாட்களுக்கு ஒன்றுமே இல்லை. திடீரென்று மறுபடியும் ஒரு கடிதம். பின்னர் நீண்ட மௌனம். எப்பொழுது எழுதுவார், எப்பொழுது நிறுத்துவார் என்பதை ஊகிக்கவே முடியாது. கடிதத்தில் உள்ள பெயரைப் படித்தேன். டுப்புடு என்று எழுதியிருந்தது. ஒரு தமிழ் வாசகருக்கு இப்படி ஒரு பெயரா? அந்த மர்ம முடிச்சு அவர் டெலிபோனில் அழைத்தபோது அவிழ்ந்தது. அவர் தமிழ்நாட்டிலிருந்து கனடாவுக்கு படிக்க வந்த ஒரு மாணவர். அவருக்கு நல்ல தமிழ்ப் பெயர் இருந்தது. அவருடைய தாயார் அவர் குழந்தையாக இருந்தபோது செல்லமாக 'டுப்புடு, டுப்புடு' என்றே அழைப்பாராம். இவருக்கும் அது பிடித்தது. ஆகவே அந்தப் பெயரில் அவருடைய நண்பர்கள் அவரை அழைக்கத் தொடங்கினார்கள்.

அவர் என்னை நிறைய வாசித்திருந்தார். பல வருடங்களுக்கு முன்னர் நான் எழுதிய ஒரு சிறுகதையையோ கட்டுரையையோ அவரால் நினைவுகூரமுடிந்தது. சில வசனங்களை அப்படியே ஒப்பிக்கும் ஆற்றல்கூட அவருக்கு இருந்தது. நானே அவற்றை மறந்துவிட்டேன். என்னைச் சந்திக்கவேண்டும் என்று சொன்னார். பின்னர் அவர் பலமாதங்களாக என்னைத் தொடர்புகொள்ளவில்லை. நான் நினைத்தேன், அவர் படிப்பை முடித்துவிட்டு இந்தியா போய்விட்டார் என. உண்மையில் ஒரு வாசகர் எழுத்தாளரைச் சந்திப்பது நல்லது அல்ல. எழுத்தாளர் வாசகரை எப்படியோ கற்பனையில் வளர்த்துச் சித்திரமாக வைத்திருப்பார். அது சந்திக்கும்போது உடைந்து போகும். எழுத்தாளரைப் பற்றிய வாசகரின் கற்பனையும் அவர் எதிர்பார்த்தது போல இருக்காது. இருவருக்கும் அநேகமாக ஏமாற்றம்தான்.

இரண்டு வாரத்துக்கு முன்னர் அவர் திடீரென அழைத்துத் தான் 'தரமணி' திரைப்படத்தைப் பார்த்துவிட்டதாகச் சொன்னார். எனக்கு அப்படி ஒரு திரைப்படம் வந்ததே தெரியாது. அந்தத் திரைப்படத்தின் ஆரம்பத்தில் எனக்கு நன்றி கூறப்பட்டதாகச் சொன்னார். எதற்காக என்று கேட்டேன். உங்கள் 'தொடக்கம்' சிறுகதை கொடுத்த உந்துதலில் இந்தத் திரைப்படம் உருவாகியிருக்கிறது என்று சொல்லிவிட்டு, 20 வருடத்துக்கு முன்னர் நான் எழுதிய அந்தச் சிறுகதையின் சுருக்கத்தை எனக்குச் சொன்னார். ஆச்சரியப்பட்டுப் போனேன். அப்பொழுது இவர் என்னைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டதும் சம்மதம் தெரிவித்தேன்.

சந்திப்பதற்கு ஒரு நாளும் நேரமும் கொடுத்து அவரை அழைத்தேன். ஒரு மணி நேரம் தாமதமாக வந்தார். கதவைத் திறந்து அவரைப் பார்த்ததும் தடுமாறிவிட்டேன். 23, 24 வயது இருக்கும். சராசரி உயரம். தீர்க்கமான கண்கள். அரைத்தாடி. அவர் அணிந்திருந்தது சேர்ட்டுமல்ல; ரீசேர்ட்டும் அல்ல. சிலப்பதிகாரத்தில் 'மெய்ப்பை' என்று ஒரு வார்த்தை வரும். அப்படி உடம்பை மறைக்கும் ஒரு சட்டை. கால்சட்டை கரை தேய்ந்து நூல் நூலாகத் தொங்கியது. கனடாக் குளிருக்கு ஒன்றுமே செய்யமுடியாத சப்பாத்தின் ஒருபக்க நாடா கட்டாமல் தரையில் அலைந்தது. என்னைத் திடுக்கிடவைத்தது அவருடைய சடாமுடி. ஊரிலே வீதி வீதியாகத் திரியும் சாமியார்கள்போல சடை வளர்த்து சுருட்டி சுருட்டி இரண்டு பக்கமும் புளியங்காய்கள் போலத் தொங்கவிட்டிருந்தார். என் அதிர்ச்சியைக் காட்டாமல் அவரை உள்ளே அழைத்தேன். காலை யிலிருந்து அவருக்கு உணவு தயாரிப்பதில் மும்மரமாக இருந்த மனைவி அவரைக் கண்டதும் ஓர் அடி பின்னுக்கு நகர்ந்தார். பிறகு சமாளித்து 'வாருங்கள்' என்றார்.

ஒரு வீட்டின் நடுக்கூடத்தில் ஒரு கிடங்கு இருந்தால் அந்த வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் அந்தக் கிடங்கைத் தவிர்க்கப் பழகிவிடுவார்கள். நடுச்சாமத்தில் ஒருவரை எழுப்பிவிட்டால்கூட அந்தக் கிடங்கைத் தவிர்த்து அவரால் நடமாட முடியும். அப்படித்தான் இருந்தது. என் மனைவி மணிக்கு 2000 வார்த்தைகள் உண்டாக்குபவர். குழம்பு கொதிப்பதுபோல வார்த்தைகள் அவர் நெஞ்சுக்குள்

**'ஒரு செருப்பு வாங்குவதற்கு நாலு செருப்பு போட்டுச் சரிபார்ப்பது போல ஐந்து புத்தகத்தைத் தேர்வுசெய்தால் ஒன்றுதான் சரியாக அமைகிறது. நிறைய நேரம் நல்ல புத்தகத்தைத் தேடுவதில் போய்விடுகிறது.'**

துள்ளிக்கொண்டிருந்தன. அவற்றைப் பூட்டி வைப்பதில் பெரும் சக்தியைச் செலவழித்தார். என் மனைவியும் சரி, நானும் சரி, அந்த இளைஞனுடன் எல்லா விசயமும் பேசினோம். ஆனால் சடாமுடியைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்தோம். அதைப்பற்றிய கற்பனைதான் என் மண்டை முழுக்க நிறைந்திருந்தது. இந்த இளைஞர் சாமியாராகப் போகிறாரா? அல்லது சாமியார் வகையறாவில் இருந்து மாணவனாக மாற முயற்சிக்கிறாரா? எல்லாமே புதிராகத்தான் இருந்தது. நாங்கள் என்ன பேச விரும்பினோம் என்பதை அந்த இளைஞர் எப்படியோ ஊகித்துவிட்டார்.

அசெளகரியமான ஒரு தருணத்தில், பேச்சு சற்று ஓய்ந்தபோது தானாகவே சொன்னார். 'இந்த முடியை நான் 14 வயதில் இருந்தே வளர்க்கிறேன்.' முடி என்று வர்ணித்தது ஆச்சரியமாக இருந்தது. சின்னச்சின்ன பாம்புக்குட்டிகள் தொங்குவதுபோல முடி. கிரேக்கப் புராணத்தில் கடல் கடவுள் பொசைடொன் மெடூசாவை' கற்பழித்துவிடுவார். (சரி, சரி, வன்புணர்வு.) அதீனா தேவதை மெடூசாவின் குற்றத்துக்குத் தண்டனையாக (கவனிக்கவும் அவள்தான் குற்றம் செய்தவள், பொசைடொன் அல்ல) அவள் முடியைக் குட்டிப் பாம்புகளாக மாற்றி விடுவாள். அந்தக் கதைதான் ஞாபகம் வந்தது. இவர் என்ன குற்றம் இழைத்தார்? என்றாலும் கேள்வி கேட்டேன்.

'எப்படி இந்த சடாமுடி ஆசை வந்தது?'

'சிறுவயதில் இருந்தே சாமியார்களைப் பார்த்திருக்கிறேன். படங்களிலும் சினிமாவிலும் சடாமுடியைப் பார்க்கும்போது அதனால் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். காரணம் தெரியவில்லை. 14 வயது தொடங்கியபோது நான் முடி வளர்த்தால் என்ன என்று தோன்றியது. வளர்க்க ஆரம்பித்தேன். தலை முடிதான் ஆரம்பித்தது. தாடி வளர இன்னும் நாள் இருந்தது.' என் மனைவி கேட்டார். 'உங்கள்

அம்மா ஒன்றுமே சொல்லவில்லையா?' 'அங்கேதான் பிரச்சினை ஆரம்பித்தது. அம்மாவுக்குப் பிடிக்கவே இல்லை. எத்தனையோ முறை சொல்லிப் பார்த்தார். நான் மனதிலே நிச்சயித்துவிட்டேன். இந்த முடியை நான் தொடப்போவதில்லை. இது என்னுடைய முடி. இதை என் விருப்பத்துக்குப் பராமரிக்க எனக்கு முழு உரிமை உண்டு. நான் இருக்கும்வரை இது தன் பாட்டுக்கு வளர்ந்துகொண்டே இருக்கும்.'

'ஆனால் எப்படி சடையாக உருவாக்கினீர்கள். சும்மா முடியை வளரவிட்டால் அது சடையாகிவிடுமா?' 'நாட்டிலே நீங்கள் காணும் சாமியார்கள் அப்படித்தான் சடை வளர்க்கிறார்கள். முடி அதுவாகவே பின்னிச் சடையாகிவிடும். ஆனால் நான் செயற்கையாகத்தான் முயற்சி பண்ணி சடையை உண்டாக்கினேன்.'

'எப்படி?'

'முடியை நீளமாக வாரக்கூடாது. சிக்கெடுக்கக்கூடாது. அவை தானாகவே திரளத்தொடங்கும். அப்பொழுது நீங்கள் சடையை தனித்தனியாகப் பிரித்து உருட்டி உருட்டிப் பராமரிக்கவேண்டும். சிலர் சடையை ஸ்திரமாக்க மெழுகை உபயோகிப்பார்கள். ஒருமுறை சடை தனியாகப் பிரிந்து வளர ஆரம்பித்தால் அது அப்படியே தொடரும். வேறு ஒன்றும் செய்யத் தேவை இல்லை.

'நீங்கள் சடை வளர்ப்பது உங்கள் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னீர்கள். மற்றவர்களுக்குப் பிடித்ததா?' 'வீட்டில் மட்டுமல்ல, அந்தக் கிராமத்திலேயே ஒருவருக்கும் பிடிக்கவில்லை. வீட்டுக்கு தூது வந்து சொன்னவர்களும் உண்டு. என்னுடைய தங்கச்சி மட்டும் ஓர் எதிர்ப்பும் காட்டவில்லை. என்னில் அவள் வைத்திருந்த அன்பினால் இருக்கக்கூடும். என் சுதந்திரத்தில் குறுக்கிட அவள் விரும்பவில்லை என்று நினைக்கிறேன்.'

'உங்கள் கிராமத்தில்தானே படித்தீர்கள். உங்கள் கிராமம் எப்படி?'

'என்னுடைய கிராமத்தைப் பற்றிச் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். என்னுடைய 12 வயதுமட்டும் அங்கேதான் படித்தேன். அந்த வயதுக்கிடையில் நான் கிராமத்தில் ஐந்து கொலைகளைப் பார்த்திருக்கிறேன். எல்லாமே சாதிக்கொலைகள். மேல்சாதிப் பெண்ணை வேறு சாதிக்காரன் ஒருவன் காதலித்திருப்பான். சிறிது நாள் கழித்து அந்தப் பெண் இறந்துவிடுவாள். குடும்ப கௌரவத்தைக் காப்பதற்காக அந்தப் பெண்ணின் பெற்றோரே அவளைக் கொலைசெய்து புதைத்துவிடுவது நடந்திருக்கிறது.'

'போலீஸ்?'

'அவர்களும் உடந்தைதான். இப்படியான கொலைகள் வெளியே தெரியவருவதே கிடையாது. என் வீட்டுச் சம்பவத்தை உதாரணம் சொல்லலாம். ஒருநாள் அதிகாலை நாங்கள் திடீரென்று வாடகைக் காரில் புறப்பட்டோம். எனக்கு அப்பொழுது 10 வயது இருக்கும். தங்கைக்கு 6 வயது. பள்ளிக்கூடத்தில் எனக்கு அன்று பரீட்சை இருந்தது. ஒருவருமே அதைப் பொருட்படுத்தவில்லை. எங்கோ தூரத்துக் கிராமத்துக்கு கார் போய்க்கொண்டிருந்தது. பாதி வழியில் நான் 'எங்கே போகிறோம்?' எனக் கேட்டேன். அம்மா சொன்னார், 'உன் மாமா முறையான ஒருவர் சாவதற்குத் தொடங்கிவிட்டார். அவர் இறப்பதற்கு முன்னர் அவரைப் பார்க்கவேண்டும்.'

சாரதி அப்பாவிடம் விலாசத்தைக் கேட்டான். அவரிடம் பாதி விலாசம்தான் இருந்தது. அவர்கள் வேறு வீடு மாறி விட்டதால் வீதிப் பெயர்தான் அப்பாவுக்குத் தெரியும், வீட்டுக்கு நம்பர் கிடையாது. ஒவ்வொரு வீடாக விசாரித்து விசாரித்துக் கடைசியில் வீட்டைக் கண்டுபிடித்தோம். அது வீடு அல்ல. பாழடைந்துபோன ஒரு குடிசை. இயற்கை வீட்டுக்கு வெளியே நின்றால் நல்லாயிருக்கும். இங்கே இயற்கை வீட்டுக்குள்ளே புகுந்துவிட்டது. வீட்டு நடுவிலே ஒரு செடிகூட முளைத்து, தன் பாட்டுக்கு நின்றது. நாங்கள் போய்ச் சேர்ந்தபோது நிறையக் கூட்டம் சேர்ந்துவிட்டது. மாமா இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். நான் எட்டிப் பார்த்தபோது மாலையோடு, தலைமாட்டில் குத்துவிளக்கு எரிய மாமா கம்பீரமாகக் கிடந்தார். நோய்வாய்ப்பட்டு மெலிந்து உடல் வாடியதாக ஒன்றும் தெரியவில்லை.

மாமாவின் மகளை வேறு சாதிக்காரன் காதலித்தான். அவனைக் கொன்றுவிட்டார்கள். பழிவாங்குவதற்காக மாமாவை அவர்கள் கொலை செய்தார்களாம். ஒருத்தரும் வருந்தியதாகத் தெரியவில்லை. போரில் நெஞ்சில் ஈட்டி பாய்ந்து இறந்துபோன ஒருவரை மெச்சுவதுபோல அவரைப் புகழ்ந்தார்கள். அன்று இரவு முழுக்க எப்படிப் பழிவாங்கலாம் என்று திட்டம் தீட்டுவதிலேயே கழிந்தது. அப்பொழுதுதான் முதல்முறையாகச் சாதி வெறி அந்தக் கிராமத்தை எவ்வளவு ஆட்டியது என்பது எனக்கு ஒருவாறு தெளிவாகியது.'

'ஒரு நாவல் வாசித்ததுபோல கதை இருக்கிறது. ஏதாவது புத்தகம் சமீபத்தில் படித்தீர்களா?'

'ஒரு செருப்பு வாங்குவதற்கு நாலு செருப்பு போட்டுச் சரிபார்ப்பது போல ஐந்து புத்தகத்தைத் தேர்வுசெய்தால் ஒன்றுதான் சரியாக அமைகிறது. நிறைய நேரம் நல்ல புத்தகத்தைத் தேடுவதில் போய்விடுகிறது.'

'அப்படி இல்லை. மோசமான புத்தகம் என்று ஒன்றுமே கிடையாது. ஏதாவது ஒரு நல்ல விசயம் இருக்கும். தேடித்தான் பார்க்கவேண்டும். சதாம் உசைன் தூக்குக்காக காத்திருந்தபோது படித்த கடைசி புத்தகம் ஹெமிங்வே எழுதிய 'கிழவனும் கடலும்' நாவல். கதை ஒன்றும் பெரியதில்லை. கிழவன் இரண்டு மாதங்களாக கடலுக்கு மீன் பிடிக்கப் போயும் ஒன்றுமே கிடைக்கவில்லை. மற்ற மீனவர் கேலி பேசி கிழவனை ஏளனம் செய்கிறார்கள். இறுதியில் அவன் மூன்று நாட்கள் போராடி மிகப்பெரிய மீனைப் பிடித்து வருகிறான். கரை சேர்ந்தபோது சுறாக்கள் கடித்து மீனின் எலும்புக்கூடுதான் மிஞ்சுகிறது. கிழவனுக்கு வெற்றியா, தோல்வியா? வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் கலந்து கிடக்கிறது. அதுதான் அதற்கு நோபல் பரிசு கிடைத்தது.'

'ஆனால் ஹெமிங்வே தற்கொலை செய்துகொண்டாரே.'

' 'என்னுடைய அம்மாவின் மரணச்சடங்குக்குப் போவதை, ஒரு நல்ல உவமையைத் தேடுவதற்காக நான்

தள்ளிப்போடுவேன்' என்று ஓர் எழுத்தாளர் சொன்னார். ஹெமிங்வே நல்ல எழுத்தைத் தேடிப்போனவர். அது கிடைக்காததால் தற்கொலை செய்தார். பல எழுத்தாளர்கள் தற்கொலை செய்திருக்கிறார்கள். அது கிடக்கட்டும். இப்பொழுது படிப்பு முடிந்துவிட்டதுதானே. திரும்பவும் உங்கள் கிராமத்துக்குப் போக மாட்டீர்களா?'

'இப்பொழுது போவதாக இல்லை. என் பெற்றோர் என்னை கனடாவில் படிக்க அனுப்பியது காரணமாகத்தான். அவர்களுக்கு நான் வெளிநாட்டில் தங்கியிருப்பது வசதியாக இருக்கிறது. என்னுடைய தங்கச்சியை என்னுடைய கோணலான சிந்தனைகளால் நான் கெடுத்துவிடுவேன் என அஞ்சுகிறார்கள். அவளுக்குப் பல சாதகங்களை ஆராய்ந்து மாப்பிள்ளை தேடுவது நடக்கிறது. எல்லோருக்கும் நான் சாதிக்கு எதிரானவன் என்று தெரியும். அத்துடன் சாத்திரம் பார்த்துப் பெற்றோர் கல்யாணம் செய்து வைப்பதையும் நான் எதிர்ப்பவன். ஆணும் பெண்ணும் சந்தித்துக் காதலித்துத் திருமணம் நடக்கவேண்டும் என்பது என் விருப்பம். நான் தங்கையின் மனதைக் கெடுத்துவிடுவேன் என்று அவர்கள் அச்சப்படுகிறார்கள். தங்கச்சிக்குக் கல்யாணம் நிச்சயமான பிறகுதான் நான் அங்கே போகமுடியும்.'

'உங்களை ஒரு Rastafariyan என்று சொல்லலாமா?

'அப்படியும் சொல்லலாம். ஏனெனில் மார்க்கஸ் கார்வே சொன்னதை நான் நம்புகிறேன். உங்களுக்குத் தெரியும், எத்தியோப்பியாதான் மனித இனத்தின் தொட்டில் என்று. மனிதன் எத்தியோப்பியாவிலிருந்து வெளியேறி உலகம் முழுவதும் பரவினான். கார்வே சொன்னார், ஒரு கறுப்பு அரசன் மக்களின் விடுதலைக்காக முடிசூடுவான் என்றார். அப்படியே நடந்தது. ஹைலி செலாசி அரசபீடத்தில் அமர்ந்தார். பைபிளில் சொல்லியிருக்கும் அரசன் சொலமனுக்கும், ஷீபா ராணிக்குப் பிறந்த குழந்தை மனெலிக்கின் வழித்தோன்றல் செலாசி. 2000 வருடங்களாக இந்த அரச சங்கிலி அறாமல் தொடர்ந்தது. ஹைலி செலாசி 225 வது தலைமுறை அரசர்.'

'ஆனால் அவர் சிறையில் இறந்துவிட்டார் என்று படித்திருக்கிறேனே.'

'இல்லை இல்லை. அவர் இறக்கவில்லை. செய்திகள் அப்படித்தான் சொல்லும். அவற்றை நம்பக்கூடாது. உண்மையில் அவர் உயிருடன் இருந்து மக்களை வழிநடத்துகிறார்.'

'பழமையில் எப்படி ஊறமுடியும்? நாகரிகம் என்றால் சம்பவங்கள் முன்னோக்கி அல்லவா நகரவேண்டும்?'

'முன்னோக்கி என்பது உண்மைதான், ஆனால் அந்தச் சம்பவம் நடக்கும்போது அது தெரியாது. ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கைவரை' நூலைப் படித்திருப்பீர்கள். அதிலே நாலாயிரம் வருடங்களுக்கு முன்னர் நடந்திருக்கக் கூடிய ஒரு கற்பனைச் சம்பவம் வரும். ஒருத்தன் தன் குதிரையைக் கொடுத்துத் தாமிரக் கோடாலி ஒன்றை வாங்கிவருவான். அவனுடைய பாட்டன் புலம்புவான்; அவனைத் திட்டித்தீர்ப்பான். 'ஒரு குதிரை இருந்தால் அது பொதி சுமக்கும். அதன்மேல் வருடக் கணக்காகப் பயணம் செய்யலாம். போருக்குப் பயன்படுத்தலாம். அது இறந்தால் ஒரு மாதத்துக்கு உணவாகும். உன் மூளை கெட்டுப்போச்சுது.' இளைஞன் ஒன்றுமே பேசமாட்டான். அவனுக்குத் தெரியும், ஒரு கோடாலி இருந்தால் நூறு குதிரைகள் சம்பாதிக்கலாம் என்று. நாகரிகத்தின வரலாறு அதுதானே.'

'ஆமாம், ஞாபகமிருக்கிறது. உங்கள் திருமணம் பற்றி ஏதாவது திட்டம் உள்ளதா?'

'அப்படி ஒன்றுமில்லை, ஆனால் சாதகப் பொருத்தம் பார்த்து நிச்சயமாக நடக்காது.'

'அம்மாவைப் பார்க்க நினைப்பதில்லையா? படிப்பு முடிந்துவிட்டதுதானே.'

'அது எப்படி? நான் முடி வெட்டவேண்டுமே?'

'முடி எங்கே போகப்போகிறது. வெட்டினால் மறுபடியும் வளரும்தானே.'

'வலசை போகும் பறவை எங்கேயாவது பாதியில் மனதை மாற்றித் திரும்பியிருக்கிறதா? 14 வயதில் நான் எடுத்த முடிவு இது. வாழ்நாள் முழுக்க என் முடியை வளர்க்கத் தீர்மானித்திருக்கிறேன்.'

'அம்மா உங்களுடன் பேசுகிறாரா? எழுதுவது இல்லையா?'

'ஒவ்வொரு நாளும் அவரிடமிருந்து குறுஞ்செய்தி வரும். இதோ' என்று செல்பேசியைத் திறந்து காட்டினார். ற, ர பிழையுடன் அன்று வந்த நாலு வரிச் செய்தி இப்படி முடிந்திருந்தது. 'வந்துவிடு டுப்புடு.'

இரண்டே இரண்டு வார்த்தைகள்தான். ஆனால் ஒரு தாயின் ஆழமான பிரிவுத் துயரை உணர்த்தப் போதுமாய் இருந்தன.

பேசிக்கொண்டே இருந்தபோது நேரம் கடந்துவிட்டது. காலையிலிருந்து மனைவி சமைத்த உணவை அவர் பரிமாற டுப்புடு நிமிடத்தில் சகலத்தையும் பிசைந்து உருமாற்றிச் சாப்பிட்டார். மனைவி, 'கூட்டு எப்படியிருந்தது' என்றார். அவர் திடுக்கிட்டுவிட்டார். கூட்டு எங்கேயோ புதைந்துபோய்க் கிடந்தது. 'நாங்கள் இலக்கியம் பற்றி உரையாடவில்லை. உங்களிடம் முக்கியமான இலக்கிய விசயம் ஒன்று பேசவேண்டும், மாலை நிச்சயம் அழைக்கிறேன்' என்றுவிட்டுப் புறப்பட்டார். அவருடைய தலையில் இரண்டுபக்கமும் சடைமுடி குட்டிகுட்டிப் பாம்புகள்போலத் தொங்கின. அவர் தலையை ஆட்டும்போது சூரிய ஒளியில் அவை மின்னின. ஒரு குருவி பறந்த பின்னர் மரக்கிளை சிறிது ஆடுமே அப்படி என் மனசு அசைந்தது. மாலை வந்தது. டுப்புடுவிடம் இருந்து அழைப்பு வரவில்லை. அடுத்த நாள் விடிந்தது. அழைப்பு இல்லை. பல நாட்கள் கழிந்துவிட்டன. சிலவேளை இன்று மாலை அழைப்பார். அல்லது ஒருமாதம் கழித்து அழைப்பார். கலியோப் குருவிபோல, டுப்புடு என்று பெயர் சூட்டப்பட்ட இந்த இளைஞர், இந்த வருடம் முடிவதற்கிடையில் என்னை அழைக்கலாம்; அழைக்காமலும் விடலாம்.

# விழைந்ததும் விளைந்ததும்

வெங்கட்ரமணன்

வயகரா எதற்குக் கண்டுபிடிக்கப்பட்டது, எந்த அளவிற்குப் பயனளிக்கிறது என்பன குறித்து நான் சொல்லப் போவதில்லை, தேவையுமில்லை. ஆண்மைக் குறைபாடுக்கு வயகரா கடந்த இருபது வருடங்களாக முதன்மையான மருந்தாக இருந்து வருகிறது. ஆனால் இதே நீலநிறக் குளிகை, அலாஸ்கா, மற்றும் வடகனேடிய ரெயிண்டீர் மான் இனத்தையும், கவசச் சீல்களையும் பேரழிவிலிருந்து காப்பாற்றும் மாமருந்தாக இருக்கிறது என்று நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?



அருகிவரும் உயிரினங்களைக் குறித்தும் நம்மில் பலருக்கும் கவலையுள்ளது. வயகராவின் துணைகொண்டு இவற்றைக் காப்பாற்றலாம் என்று தற்பொழுது தெரிய வந்துள்ளது. கவலைப்படாதீர்கள், இதற்காக பெங்கால் புலிகளையும் வெள்ளைக் காண்டாமிருகங்களையும், பனிச்சிறுத்தைகளையும் பிடித்து அவற்றுக்கு வயகரா மாத்திரைகளைத் தினமும் புகட்ட வேண்டியதில்லை. அப்படியே முயன்றாலும் அவற்றின் செயல்திறன் மிகுந்து இனம் பெருக வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. சீனாவின் பெரும் பாண்டா, இந்தியாவின் பெங்கால் புலிகள், ஆப்பிரிக்காவின் வெள்ளைக் காண்டாமிருகங்கள் உள்ளிட்ட பல விலங்குகள் முற்றாக மறைந்துபோகக்கூடிய அபாயமிருக்கிறது. எனவே நாடுகள் பலவும் இவற்றைக் காக்கப் பெருமுயற்சிகளெடுத்து வருகின்றன. உயிரினங்களின் மறைவுக்கு மனித குலத்தின், குறிப்பாக ஆண்களின் செயல்திறனிழப்பு ஒரு முக்கிய காரணியாக இருக்கிறது. கடற்குதிரைகள், காண்டாமிருகக் கொம்புகள், பச்சைக் கடலாமைகள், புலிகள், பனிச் சிறுத்தைகள் எனப் பல மிருகங்கள் (மனித) ஆண்களின்

கலவித்திறனை மேம்படுத்த வேட்டையாடப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் அழிவின் விளிம்பிலிருக்கின்றன. இதற்கு ஒரே காரணம், கலவித்திறன் மேம்படும் என்ற ஆதாரமற்ற காரணிதான்.

அலாஸ்காவின் ரெயிண்டீர் மானின் கொம்பு ஆண்களின் கலவித்திறன் மேம்பாட்டிற்கு மருந்தாகிறது என சீனாவின் பண்டை மருத்துவத்தில் நம்பிக்கையிருக்கிறது. 1998ஆம் ஆண்டு வயகரா அறிமுகப்படுத்தப்பட்டது, அதேவருடம் ரெயிண்டீர்கள் வேட்டை மூன்றில் இரண்டு பங்குக்கு மேலாகக் குறைந்தது. இதே அலாஸ்கா, வடகனடா பகுதியில் காணப்படும் மிக அரிதான கவசச்சீல்களின் ஆண்குறியை உட்கொள்வது ஆண்மையை அதிகரிக்கும் எனச் சீனமருத்துவம் நம்புகிறது. 1997ஆம் ஆண்டில் இருபதாயிரம் கவசச் சீல்கள் பிடிக்கப்பட்டு அவற்றின் ஆண்குறிகள் சீனாவிற்குக் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டன. வந்தது வயகரா! அடுத்த ஆண்டிலேயே இந்த வேட்டை பாதியாகக் குறைந்துபோயிற்று. அரைக்குவளைத் தண்ணீருடன் அரைநொடியில் விழுங்கக்கூடிய, விலை குறைந்த மருந்து கிடைக்கத் தொடங்கியபின் ஆபிரிக்கக் காடுகளில் காண்டாமிருகத்தையும், சைபீரியக் குளிரில் பனிச்சிறுத்தையையும் துரத்த வேண்டிய அவசியம் சீனர்களுக்குக் குறைந்துபோயிற்று. அடுத்த முறை தொலைக்காட்சியில் வயகரா விளம்பரம் வரும்பொழுது காண்டாமிருகத்தின் சார்பாக அதற்கு மானசீகமாக நன்றி சொல்வீர்கள் என நம்புகிறேன்.

•

இன்றைய உலகின் அன்றாட வாழ்வில் அறிவியலின் பங்கு மறுக்கமுடியாதது. அறிவியலாளர்களின் முதன்மை நோக்கு, கண்டறிதல். இயற்கை குறித்த நம் புரிதல்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது, அறிவியலின் இலக்கு. இப்புரிதல்களின் விளைவாகத் தொழில்நுட்பம் உருவெடுக்கிறது. பயன்படுதன்மை நுட்பத்தின் முக்கிய காரணி. அடிப்படை அறிவியலுக்குப் பயன்பாட்டில் பெரிதும் முக்கியத்துவமில்லை. தெரியாதன தெரிதலும், தெளியாதன தெளிதலுமே அறிவியலாய்வின் இலக்குகள். அடிப்படைக் கண்டுபிடிப்புகளினால் சமூகத்திற்கு நேரடி நன்மைகள் விளைவதில்லை. வெட்டுவிளிம்பு கண்டுபிடிப்புகளினால் பயனடைய, சிலசமயங்களில் அரை நூற்றாண்டுக்கு மேலாகக்கூடும். உதாரணமாக, லேசர் குறித்த அடிப்படைக் கண்டுபிடிப்பு, கருத்தாக்கம் 1905ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. ஆனால் ஆய்வுரீ தியான முதல் லேசர் கருவி 1960ஆம் ஆண்டில்தான் வடிவமைக்கப்பட்டது. அப்பொழுதுங்கூட அதற்குப் பயனேதுமில்லை. வினாவைத் தேடும் விடை என்று, ஒரு பத்தாண்டுகள் இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது எனத் திண்டாடினார்கள். 1974ஆம் ஆண்டுதான் முதன்முறையாக, இன்றைக்கும் அதே பயனிலிருக்கும் பேரங்காடிப் பட்டைக் குறி படிப்பான் (Bar Code Reader) வடிவமைக்கப்பட்டது. இன்றைக்குத் தகவல் நுட்பம், இணையம், கணினி, தகவல் சேமிப்பு, கண் அறுவைச் சிகிச்சை, லேசர் பற்றவைப்பு, லேசர் பச்சை குத்துதல், லேசர் பச்சை நீக்குதல் எனப் பல வழிகளில் அது பயன்படுகிறது. அறிவியல் நுட்பமாகப் பரிணமிக்கும்பொழுது அதன் திறனை உணரத்தொடங்கும் நாம் அதை எல்லாவழிகளிலும் கையாளத் தலைப்படுகிறோம்.

இப்படிப் பலவழிகளைக் கண்டறிய முற்படும்பொழுது அது பல பக்கவிளைவுகளையும் உண்டாக்குகிறது. ஃபைஸர் நிறுவனம் முதலில் வயகராவை இருதய வலிக்கான மருந்தாகத்தான் கண்டது. மருத்துவப் புலனாய்வில் இது நெஞ்சுவலியைக் குறைக்கப் பயனற்றது எனக் கண்டறியப்பட்டது. ஆனால், நெஞ்சுவலிக்காக இதனை உட்கொண்ட பலரும் வேறுவிளைவுகளைக் கண்டார்கள். வயகரா நீலவைரமாக ஃபைஸருக்கு இருபது ஆண்டுகளாகக் காசு பொழிந்து வருகிறது. ஆனால் எல்லா நேரங்களிலும் விளைவுகள் சுகமானவையாக அமைவதில்லை.

•

### முகமற்ற போர்வீரர்கள்

தானியங்கிநுட்பம் (Automation) தற்பொழுது முதிர்நிலையை அடைந்திருக்கிறது. இன்றைக்கு நீங்கள் சந்தையில $100க்குள்ளாக மிகத் திறன்வாய்ந்த பறவியை (Drone) வாங்கமுடியும். ஆளில்லா விமானங்களைப் பறவிகள் என்று அழைக்கலாம். இந்தக் குட்டிப் பறவிகளால் பல நற்பயன்கள் உண்டு. பேரழிவுக்காலங்களில் மிக விரைவாகத் தகவல் திரட்ட, தேவையான பொருட்களை ஆபத்தில்லாமல் கொண்டு சேர்க்கிறார்கள். பத்திரிகையாளர்கள் பறவைக் கோணத்தில் படமெடுக்கிறார்கள். இல்லங்களுக்கு நேரடியாகப் பொருள்களைக் கொண்டுசேர்க்கிறார்கள், நிலவரைபடத்தைத் துல்லியமாக வரைகிறார்கள், வயல்களில் பூச்சியால் பாதிக்கப்பட்ட செடிகளை விரைவில் கண்டு, குறைந்தபட்ச பூச்சிகொல்லிகளைத் தூவி நோய்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். நேரடியாக மேகங்களை அளத்தலின் மூலம் வானிலையைத் துல்லியமாகக் கணிக்கிறார்கள். இப்படி எண்ணிலடங்கா பயன்களைத் தரும் ஆளற்ற விமானங்களுக்கு வேறொரு முகமும் இருக்கிறது.

2003ஆம் ஆண்டு அமெரிக்கப் போர்வீரர்கள் குவைத்திலிருந்து பாக்தாத் நோக்கி நகர்ந்தபொழுது அவர்களிடம் ஒரு சமரன் (சமர்=போர், சமரன்=போர் எந்திரன், War Robot) கூட இருக்கவில்லை. சரியாக ஏழாண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது போர்முனையில் 7,000 ஆளற்ற விமானங்களும் 12,000 தரைப் போர்வாகனங்களும் போரில் இருக்கின்றன. அமெரிக்க ராணுவத் தளபதி இதைப்பற்றிச் சொல்லும்பொழுது, "இது எங்கள் திறமையைக் காட்டுகிறது. ஈராக்கியப் போராளிகள் எங்கள் தொழில்நுட்பத்தைக் கண்டு அதிர்ந்துபோகிறார்கள்" என்று சொல்கிறார். மறுமுனையில் லெபனானில் இஸ்லாமிய ஆதரவுச் செய்தியாளர், "இது ஈவிரக்கமற்ற

# காலம்
## வெளியீடுகள்



இறுகிப்போன அமெரிக்க, இஸ்ரேலியர்களின் இன்னொரு முகம். அவர்கள் கோழைகள். எனவே உண்மையான ஆண்களைப் போல எங்களுடன் நேரடியாகப் போரில் இறங்கத் தயங்கி இந்த எந்திரங்களை அனுப்புகிறார்கள். எப்படியாவது ஒன்றிரண்டு அமெரிக்க வீரர்களைக் கொன்றால் போதும், அவர்கள் தோற்றோடிவிடுவார்கள்.'' இதே மாதிரியான இருவேறு நோக்கங்கள் முதலாம் உலகப்போர் காலத்திலும் இருந்தன. அப்பொழுது பிரெஞ்சுப் படைத்தலைவர் துப்பாக்கிகளைக் குறித்து இப்படித்தான் சொன்னார். ''உண்மையான ஆண்மகன் கோழையைப்போல தொலைவில் நின்று சுட்டுவிட்டு ஓட முயற்சிக்கமாட்டான். நெஞ்சுயர்த்தி அருகில் வந்து இரு கரங்களாலும் எதிரியின் மார்பில் குத்துவான்.'' ஆனால் இன்றைக்குப் போர் என்பது துப்பாக்கிகள் இல்லாமல் கிடையாது. ஏன் குழுச்சண்டைகளும், கணவன் மனைவி வாக்குவாதங்களும் துப்பாக்கிச் சூட்டில் நிகழ்ந்தேறுகின்றன. ஒரு காலத்தில் கல்லெறிந்தவர்களையும், வில்லம்பு கொண்டு போரிட்டவர்களையும்கூடக் கோழைகளாகச் சொல்லியிருப்பார்கள் என்பது நிச்சயம்.

### போர் அண்மையிலிருந்து சேய்மைக்கு

மனித வரலாற்றில் போரிடல் என்பதில் எதிரிகளுக் கிடையேயான தொலைவு தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. குகைமனிதர்கள் போரிட்டபொழுது ஒருவர்மேல் ஒருவர் விழுந்து புரண்டிருப்பார்கள் என ஓரளவு நிச்சயமாக ஊகிக்க முடியும். பின்னர் அவன் கூர்கற்களைச் சற்றுத் தொலைவில் நின்றபடி (எதிரி பார்க்காத சமயத்தில்) வீசியிருப்பான். தொடர்ந்து வெறும் கைவீச்சில் முடியாத தொலைவை வில்லம்பு கொண்டு எட்டியிருப்பான். பின் தொலைநோக்கி பொருத்தப்பட்ட துப்பாக்கி கொண்டு, கண்ணால் துல்லியமாகக் காணமுடியாத தொலைவிலிருந்து எதிரிகளைச் சுட முடிந்தது. தற்பொழுது புவியியல் அண்மையில் இல்லாமலேயே போரில் ஈடுபடும் நிலை வந்திருக்கிறது. இது தொடர்ச்சியான பரிணாமம்தான் என்றபோதும் இன்றைய தொழில்நுட்பம் தரும் போர்ச் சாத்தியங்களில் தானாக நேரடியாக ஈடுபடாமல், தன் கை கொண்டு இயக்காமல், எதிரியை அழிக்கும் திறன் வசப்பட, போரின் வரையறை முழுமையாக மாற்றி எழுதப்படுகிறது.

### போர் எந்திரன் வடிவாக்கம்

போர்க் கருவிகள் உலகப்பேரழகியைக் கவரும் ரஜினிகாந்தைப் போன்ற புருஷ லட்சணங்களைக் கொண்டிருக்கத் தேவையில்லை. சொல்லப்போனால் இப்பொழுது போரிலிருக்கும் கருவிகள் எந்த விதத்திலும் மனித வடிவத்திற்கு அருகில் வருவதில்லை. சில ஆட்டுக்குட்டியைப் போல நாலுகாலில் நடப்பவை, சில ஒரு சிறிய காகித விமானத்தைப் போன்றவை, இன்னும் சில வெட்டுக்கிளியைப் போலத் தத்திச் செல்லக்கூடியவை. சில நத்தையைப் போல ஊர்வன. 9/11க்குப் பிறகு அமெரிக்கப் படைகளில் இவற்றுக்கான தேவை துல்லியமாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. போர்முனைக்கு ஆளனுப்பத் தேவையில்லாமல், எதிராளியை அடையாளம் காண, அருகிருந்து பார்க்க, பின்னர் துல்லியமாகத் தாக்க சாத்தியமானவையாகக் கருவிகள் இருக்கவேண்டும். அப்படியான கருவிகள்தான், போரினை வடிவமைக்க, தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

### முதல் நகர்வு முழுவெற்றியல்ல

சமரன் நுட்பத்தில் நிச்சயமாக அமெரிக்கா வேறெந்த நாட்டையும்விட மேம்பட்ட நிலையில் இருக்கிறது. ஆனால் முதலில் கண்டுபிடிப்பதோ, பயன்படுத்துவதோ ஒருபோதும் நிரந்தர வல்லமையைத் தீர்மானிக்கப் போவதில்லை. எச்.ஜி. வெல்ஸ் என்பவரின் அறிபுனை கதையில்தான் முதன்முறையாகத் தரைக் கவச ஊர்திகள் (Land Ironclads) சொல்லப்பட்டன. முதலாம் உலகப்போர் காலத்தில் கவசப் போர் ஊர்தி பிரித்தானியர்களால்தான் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள்தான் இவற்றைப் போர்க்களத்தில் பயன்படுத்தத் தொடங்கினார்கள். ஆனால் இருபது வருடங்களுக்குள் கவச டாங்கிகளை அணிவகுப்பு முறையில் துல்லியமாகப் பயன்படுத்தல் ஜெர்மானியர்களுக்கே கைகூடியது.

டாங்கிகள், போர்விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்றவற்றின் வரவு தொடர்ச்சியாகப் போர் முறைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. போர் நுட்பத்தின்கூடவே இவை போர் தர்மங்களைக் குறித்த வரையறைகளைச் சிதைத்து, மாற்றி எழுதின. உதாரணமாக, நீர்மூழ்கிக் கப்பல்களை எப்படிப் பயன்படுத்துவது, போர் தர்மம் என்பது குறித்த வேறுபாடுகள் ஜெர்மனிக்கும் அமெரிக்காவுக்குமிடையே எழத் தொடங்கின; அது அமெரிக்கா முதலாம் உலகப் போரில் நேரடியாக ஈடுபடக் காரணமாக அமைந்தது. அதுவே பின்னர் அமெரிக்கா வல்லரசாக மாற வழிவகுத்தது. ஆரம்ப காலங்களில் எதிரிகளின் இருப்பிடங்களைக் கண்டறிய மாத்திரமே பயனான விமானம், பின்னர் விண்ணிலிருந்து குண்டுபொழியும் போர் உத்தியாக மாறியது. அந்த நிலையில் போர் வீரர்களுடன், கூடவே சராசரி குடிமக்களும் இலக்கில்லாமல் போர் விமானத்தால் அழிக்கப்பட்டனர். இதன் உச்சகட்டம் ஹிரோஷிமா, நகசாகியில் நடந்த அணுத் தாக்குதல். சில நூறு எதிரி வீரர்களை அழிக்க, பல்லாயிரம் எதிரிக் குடிமக்களைப் பலியாக்கலாம் என்பது போர் தார்மீகமாக மாறியிருக்கிறது.

### மாறிவரும் போரின் வரையறை

நவீன போர் ரோபேட்கள் இதே வரலாற்றை மீள நிகழ்த்துகின்றன. ஆளில்லாச் சிறு விமானங்கள், பறவிகள் மூலம் எதிரிகளைத் தாக்குவது, ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், ஏன் நேச நாடாகக் கருதப்படும் பாகிஸ்தானிலும் அமெரிக்காவின் முதல் உத்தியாக மாறி யிருக்கிறது. ஆளில்லா விண்ணூர்திகளின் பயன்பாடும், அவற்றின் மூலம் சாதாரண குடிமக்களைக் கொல்லுதலும் கேள்வியில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வியட்நாம் போரின்போது அமெரிக்க வீரர்களின்



பெருமளவு இழப்பு சராசரி அமெரிக்கக் குடிமக்களுக்குப் பெரும் வேதனையளித்தபோதும் விமானங்கள் குண்டுபொழிவதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது. ஆனால் இந்த முறை மனிதப் போர்வீரர்கள் நேரடியாகக் களமிறங்குவதில்லை; தூரத்திலிருந்துகொண்டு தொலையியக்கிகளின் மூலம் குறுவிமானங்களைக் கொண்டு தலிபான் போராளிகளை அடையாளம் கண்டு, குறுவிமானங்களால் குண்டுபொழிந்து அவர்களை அழிக்கிறார்கள். நேரடியாக அமெரிக்கப் போர்வீரர்கள் களத்தில் இல்லாமலிருப்பது, இத்தகைய மறைவிலிருந்து தாக்குதலைப் பெருமளவு நியாயப்படுத்தியிருக்கிறது.

கடந்த சில வருடங்களில் பாகிஸ்தானின் எல்லைக்குள் 429க்கும் மேலான ஆளற்ற குறுவிமானத் தாக்குதலை அமெரிக்கா நிகழ்த்தியிருக்கிறது. இத்தனைக்கும் அமெரிக்கா பாகிஸ்தானுடன் நேரடியாகப் போரில் இல்லை; சொல்லப்போனால் பாகிஸ்தானைத் தன் நெருங்கிய நண்பனாகவும், இஸ்லாமியத் தீவிரவாதத்தின் மீதான போரில் தன் சகாவாகவுமே பாகிஸ்தானை அமெரிக்கா முன்னிறுத்துகிறது. தோழமை நாட்டின்மீது ஆளற்ற விமானங்கள் கொண்டு தாக்குவது தனக்கு எந்த இழப்புக்கும் இடமில்லாமல் எந்தப் போர் தர்மத்திலும் சாத்தியமற்றது. இருந்தபோதும் இப்படியொரு தாக்குதலைத் துவங்கியதற்கோ, அதைத் தொடர்ந்து நடத்துவதற்கோ அமெரிக்காவில் எந்தவிதமான பெரும் எதிர்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. போர் ஒப்பந்தம் தேவையில்லை; போர்ப் பிரகடனம் தேவையில்லை. நினைத்த நொடியில் குறுவிமானத்தைக் களமனுப்பலாம், இதில் எந்தவிதத் தார்மீக, நடைமுறை ஐயமும் தேவையில்லை என்றாகியிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் அமெரிக்க வீரர்கள் நேரடியாகக் களத்தில் இல்லை என்பதே. தன் வீரர்களுக்குச் சேதமில்லாமல் எந்த விதமான அதர்மத் தாக்குதலிலும் ஈடுபடலாம் என்பது எந்திரன்களைக் கொண்டு நிகழ்த்தப்படும் போரின் ஆதார தர்மமாக மாறிவிடும் அபாயம் துவங்கியிருக்கிறது.

**மாறிவரும் படைதிரட்சி உத்திகள்**

போருக்கு வீரர்களை அழைப்பதன் உத்தி மாறியிருக்கிறது. தோள்வலியும், மனதிடமும் கொண்ட வீரர்களின் தேவை குறைந்திருக்கிறது. திறமையாக வீடியோ விளையாட்டுகளை வெல்லும் பதினாறு வயதுச் சிறுவன் தொலைபோரில் முதன்மை வீரனாகலாம். கண்கொண்டு பார்ப்பதை நொடியில் கைக்கொண்டு அழிக்கும் திறமை போதும். இதுவும் இன்னொரு எக்ஸ் பாக்ஸ் (XBox) விளையாட்டுத்தான். துல்லியமாகச் சொல்ல வேண்டுமானால் போர்வீரனே தேவையில்லை; நுட்பன் (technician) அனைத்தையும் வழிநடத்துவான்; சாதிப்பான். இப்பொழுது அமெரிக்க விமானப்படை, தரைப்படை, கடற்படைக்கு ஆள் சேர்க்க அழைக்கும் தொலைக்காட்சி விளம்பரங்கள் வீடியோ விளையாட்டுகளுக்கு அடிமையான இளைஞர்களைக் குறிவைக்கின்றன. இப்படி ஆள் சேரச்சேர, களத்தில் முன்னின்று போரிடும் வீரர்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். இதையே ஆள்சேர்ப்பு விளம்பரங்கள் முன்வைக்கின்றன. உதாரணமாக, அமெரிக்கக் கடற்படை விளம்பரத்தின் குறிக்கோள் வாக்கியம்: Working everyday to unman the front lines.

**சமீபத்தில் அமெரிக்க ராணுவத்தின் தொலையியங்கி விமானத்தை இயக்கும் ஒரு இளம் வீரன் இப்படிச் சொல்கிறான், "இந்தப் போர் வீடியோ, கேம்ஸ் மாதிரிதான் இருக்கிறது." இதன் நகைமுரண் கொடூரமானது; இப்படியொரு எண்ணத்தை விதைக்கும், வலுப்படுத்தும் அமெரிக்க இராணுவம் முன்னெடுப்பது 'தீவிரவாதத்திற்கு எதிரான போர்'.**

### போரும் அமைதியும்

போரிடச் செல்வது என்பதன் நடைமுறையும் இப்பொழுது மாற்றியெழுதப்பட்டிருக்கிறது. மனைவி மக்களைப் பிரிந்து கொடுமையான பாலையிலோ, அடர்ந்த மழைக்காடுகளிலோ பரிச்சயமில்லாத இயற்கையையும் விலங்குகளையும், பருவங்களையும் எதிர்கொண்டு எதிராளியைத் தாக்குவது என்பது தேவையில்லாததாக மாறி யிருக்கிறது. தன் வீட்டிலிருந்து காலை உணவு அருந்திவிட்டு, காரில் ஏறிக் குழந்தைகளைப் பள்ளியில் இறக்கிவிட்டு, குளிரூட்டப்பட்ட அறையில் கணினித் திரையின் முன் அமர்ந்து பல்லாயிரம் கிலோமீட்டர்களுக்கு அப்பால் இருக்கும் குட்டி விமானத்தைத் தொலையியக்குவது போர்வீரரின் நடவடிக்கை ஆகியிருக்கிறது. இயற்கையின் நிர்ப்பந்தங்கள் கலைத்துப் போடப்படுகின்றன. ஆப்கானில் இரவில் குளிரில் ஒடுங்கும் தலிபான் போராளிகள் மீது அமெரிக்கப் பகலில் இருந்துகொண்டு இடதுகையால் கோக் அருந்தியவாறு வலதுகை விசைப்பலகையை இயக்க, குண்டுபொழியும் சாத்தியம் மெய்ப்படுகிறது. எட்டுமணி நேரப் போருக்குப் பின் மீண்டும் காரேறி வயலின் பாடம் முடித்த குழந்தையைத் திரும்ப அழைத்து வீடு வந்து மனைவியுடன் உணவருந்தி பின்னிரவில் களித்திருப்பது, எந்திரன் மூலம் போரை முன்னடத்தும் அன்றாட வாழ்வாகி யிருக்கிறது.

### கொலைவெறியும் குற்றவுணர்வும்

நேரடியாகக் களத்தில் இருக்கும்பொழுது தன் உயிருக்கு ஆபத்து எனும் திகிலில் முன்னகர வேண்டும். எதிராளியைத் தாக்கத் தோழர்களின் வியூகம் தேவை. வெற்றிகரமாகத் தாக்கியபின் சதையும் இரத்தமும் பிளந்துகிடக்கும் சக உயிரை நேரடியாகப் பார்க்கும்பொழுது ஏற்படும் மன அதிர்வை எதிர்கொள்ள வேண்டும். சோர்ந்த உடலுடன் இலக்கு பிழைத்து ஆயுதமில்லாத குடிமகன் உயிரிழந்ததாக அறியும் பொழுது ஒருகணம் தன் வயோதிகத் தகப்பனின் உருவம் தோன்றி மறையலாம். வெற்றியிலும் தோல்வியிலும் சொல்லொண்ணா மன அழுத்தம் நிச்சயம். அகச்சிவப்புக் கதிர்களின் (Infrared) உதவியால் உடல்சூட்டைக் கொண்டு இருளில் அடையாளம் காணும் எந்திர விமானத்திற்கு ஏ.கே 47 ஏந்திவரும் எதிர் வீரனும் இரவில் கைக்கோலுடன் சிறுநீர் கழிக்க சந்தில் வரும் பாட்டியும் ஒன்றுதான். அடுத்த நொடியில் ஒற்றை விசையின் மூலம் தெளிவில்லாத அந்நபரின் மீது குண்டுபொழிய முடியும். எல்லாம் முடிந்து பகல் வெளிச்சத்தில் கிழவியை அடையாளம் கண்டாலும் பாதகமில்லை. பிழை குண்டுபொழிந்தவனிடம் இல்லை, தவறாக அடையாளம் காட்டிய சமரனின் அகச்சிவப்புக் கதிர்கள் மீதே. மாலையில் கூடைப்பந்தாட்டம் துவங்குவதற்குமுன் தொலைக்காட்சி காண வீடு திரும்பிவிடலாம். இடையில் நேரமிருந்தால் அன்றைய போரின் துணுக்கை யூ ட்யூப் வீடியோவாக மாற்றித் தன் வெற்றியை அடுத்த நொடியில் வலைபரப்பலாம். இது நாளை குறித்த ஊகமில்லை. இன்றைய நிதர்சனம். தற்பொழுது யூ ட்யூப்பில் அமெரிக்க ஆளற்ற குறுவிமானங்களின் நேரடித் தாக்குதல்கள் குறித்த எண்ணற்ற வீடியோ துணுக்குகள் கிடைக்கின்றன. இவற்றில் சில பின்னணி இசைக்கோர்வையுடன் இருக்கின்றன. அடுத்த துணுக்கை ஆவலுடன் எதிர்நோக்கும் நேயர் கூட்டம் காத்திருக்கிறது. இத்தகைய துணுக்குகளுக்கு ஒரு விசேடப் பெயரும் உண்டு War Porn. நினைவிலிருக்கட்டும்; இது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று பெயரிடப்பட்டது. இதில் சமரன் கொண்டு தொலைவிலிருந்து நிகழ்த்துவதை பின்னணி இசையுடன் செல்பேசியில் தரவிறக்கிப் பார்ப்பது எந்தவிதமான தர்மத்தை இளைஞர்களுக்குப் போதிக்கும்? இதனை எதிர்கொள்ளும் எதிரி எந்தத் தார்மீகச் செய்தியைப் பெறுவான்?

க்ராண்ட் தெஃப்ட் ஆட்டோ (Grand Theft Auto) போன்ற நேரடி வீடியோ விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்தால் எளிதில் உணரலாம்; நிஜ வாழ்வில் நாம் செய்யாத, செய்வோம் என்று யோசித்துப் பார்க்கமுடியாத குரூரமான செய்கைகளை வீடியோ கேம்களில் செய்யப் பலரும் ஒருபோதும் தயங்குவதில்லை. தலையைக் குறிவைத்துத் துப்பாக்கியால் மூளையைப் பிளந்து நிணமும் சதையுமாக வெளித் தெறிக்கும்பொழுது வீடியோ விளையாட்டை யாரும் நிறுத்துவதில்லை. சமீபத்தில் அமெரிக்க ராணுவத்தின் தொலையியங்கி விமானத்தை இயக்கும் ஒரு இளம் வீரன் இப்படிச் சொல்கிறான், "இந்தப் போர் வீடியோ, கேம்ஸ் மாதிரிதான் இருக்கிறது." இதன் நகைமுரண் கொடூரமானது; இப்படியொரு எண்ணத்தை விதைக்கும், வலுப்படுத்தும் அமெரிக்க இராணுவம் முன்னெடுப்பது 'தீவிரவாதத்திற்கு எதிரான போர்'.


Protection For You
& Your Family
Our services
Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «
Are You Getting Million Dollar Advice?
Life100
INSURANCE & INVESTMENTS INC.
416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6
Sritharan Thurairajah CLU, CHS
Simple Solution in a Critical Situation

### போர் எந்திரன் நுட்ப எளிமை

ஆனாலும் சமரன் போரின் போக்கு அப்படியொன்றும் அமெரிக்காவுக்கோ அல்லது வேறு வல்லரசுகளுக்கோ முற்றிலும் சாதகமாக இருக்கப்போவதில்லை. கிட்டத்தட்ட 56 நாடுகள் போர்களுக்கான சமரன் தயாரிப்பில் இறங்கி யிருக்கின்றன. அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் துவங்கி, சீனா, இந்தியா ஈடாக, வட கொரியா, ஈரான், பாகிஸ்தான் என்று பல நாடுகளும் இதில் அடக்கம். அமெரிக்கா வடிவமைக்கும் போர் எந்திரன்களின் 70% பாகங்கள் சீனாவில் தயாராகின்றன. ப்ருக்கிங்ஸ் கழகத்தின் 21ஆம் நூற்றாண்டுக்கான அமெரிக்கத் தற்காப்பு உத்திப் பிரிவின் இயக்குநர் பீட்டர் வாரன் சிங்கர், "சீனாவில் தயாரிக்கப்படும் வன்கலனைக் கொண்டு வடிவமைக்கப்பட்டு இந்தியாவில் எழுதப்படும் நிரலிகளைக் கொண்டு இயக்கப்படும் சமரன்களால் அமெரிக்கப் போர் வல்லாண்மைக்கு எந்தவிதத்தில் உத்தரவாதம் கூறமுடியும்?" என்று கேட்கிறார். வன்கலனில் (Hardware) ஒரு சிறிய மென்கலன் வழுவை (Software Bug) உள்ளிட்டோ, வைரஸ் நிரலியை இணைத்தோ, இப்படியான எந்திரன்களின் கட்டுப்பாட்டை முழுமையாக வேறொருவர் கைகொள்ள முடியும். அல்லது, அமெரிக்காவுக்கு எதிராகவே இந்த எந்திரன்களைத் திருப்பிவிட முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தக் குட்டி எந்திரப் பொறிகளை வடிவமைப்பதோ உற்பத்தி செய்வதோ அப்படியொன்றும் கடினமானதல்ல. இவற்றை உற்பத்தி செய்ய அணு உலைகளைப் போலவோ டாங்கித் தயாரிப்புத் தொழிற்சாலை போலவோ பெரிய வசதிகளும், ஆயிரக்கணக்கான தொழிலாளிகளும், முதலீடும் தேவை யில்லை. பெரும்பாலான சமரன்களை இணையத்தின் வழியாகவே வாங்கமுடியும். குடிசைத் தொழிலாக ஒரு சிறிய மேசையின் முன் அமர்ந்து இவற்றை முழுமையாகத் தயாரிக்க முடியும். தற்செயலாக எதிரிகளின் கையில் இந்தப் பொறிகள் சிக்கினால் மிக எளிதாக அவற்றைப் பிரித்து மீள்பொறியாக்கம் செய்து (Reverse Engineering) அவற்றின் அமைப்பையும் செயற்பாட்டையும் கற்க முடியும். இந்த நிலையில் தேசங்கள் கடந்த சிறு பயங்கரவாதக் குழுக்களும், மிக எளிதாக, மிக விரைவில் எந்திரன் போர்த்திறனைப் பெறுவது தவிர்க்க முடியாதது. சொல்லப்போனால் பல பயங்கரவாதக் குழுக்களும் எந்திரன்களை வடிவமைத்து வருகின்றன. எந்திரன்கள் வாய்க்கப் பெற்றால் வீர மரணத்திற்குப் பின் சுவர்க்கத்தில் எழுபத்திரண்டு கன்னியர்கள் கிடைப்பார்கள் என்றெல்லாம் போதிக்கத் தேவையின்றி உடனடியாகக் களமிறக்கலாம்.

### உணர்ச்சிகளற்ற போர்வீரன்

முற்றிலும் தானியங்கிச் சமரன்கள் களமிறங்கும்பொழுது போர்க்குற்றம் என்பதன் வரையறை என்னவாக இருக்க முடியும்? எந்திரன்கள் உணர்ச்சிகளற்றவை. போர் முனையில் அவற்றின் சகா கொல்லப்படும்பொழுது அவை அழுவதில்லை; மனச்சிதைவடைவதில்லை. தொடர்ந்தும் தம் கால்களை முன்னகர்த்தியே செல்வன. எனவே அவை கொல்லும்பொழுது அங்கே சீற்றம், கோபம், பழிவாங்கல், தார்மீகம் போன்ற சிந்தனையின்றி, உணர்வுகளின்றி செயல்படுகின்றன. இவற்றால் நிகழ்த்தப்படும் போர்களுக்கு எந்தக் குற்ற வரையறை சாத்தியமாகப் போகிறது? ஊர்ந்துவரும் கவச ஊர்தியும், சக்கர நாற்காலியில் வரும் கிழவியும் இவற்றுக்குக் கிட்டத்தட்ட ஒன்றுதான். ஏதோ ஒரு இலக்கத்தில் பூச்சியம் ஒன்றானால் இவற்றுக்கிடையே வித்தியாசமில்லை.

"எதிரிப் போர்வீரர்களைத் துல்லியமாக அடையாளம் காணுவதற்கும் அழித்தொழிப்பதற்குமாக வடிவமைக்கப்பட்ட சமரன் இலக்கின்றிச் சாதாரண குடிமக்களைத் தாக்கினால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டதற்கு, அமெரிக்க ராணுவ நிபுணர், "இதில் உண்மையில் சமூக, அறவியல், தார்மீகம் எதுகுறித்தும் பேசத் தேவையில்லை. இது தயாரிப்பு மேம்பாடு (Production Improvement) குறித்த விஷயம்" என்று சொல்லும் அவர், "ஆனால் தொடர்ந்தும் அது தவறாகச் சாதாரண குடிமக்களைக் கொன்றுகொண்டிருந்தால் அவசியம் இவற்றைக் களத்திலிருந்து மீளப்பெற்று சோதித்தாக வேண்டும்" என்று சொல்கிறார். இதற்குக் காரணம், எந்தவிதமான தார்மீகமும் இல்லை; வெறும் வர்த்தகக் கட்டாயம்தான் (Commercial Imperative). செயல்திறனற்ற பண்டத்தைச் சந்தையில் யாரும் தொடர்ச்சியாக வாங்கமாட்டார்கள் அல்லவா? அதேபோலக் கால்களை இழந்து வரும் போர் சமரனுக்கு ஆயுட்கால மருத்துவக் கவனிப்புத் தேவையில்லை. உலையிட்டு உருக்கி உலோகத்தை மீளப்பெறலாம். சமீபத்தில் ஹொலிவூட் படங்களில் சிறந்த நூறு பாத்திரங்களையும் கொடூரமான நூறு வில்லன் பாத்திரங்களையும் பட்டியலிட ஒரு பொது வாக்கெடுப்பு நிகழ்த்தினார்கள். அந்த இரண்டு பட்டியல்களிலும் இடம்பெற்ற ஒரே ஒரு பாத்திரம் டெர்மினேட்டர். இயந்திரன்கள் எவ்விதமான தார்மீக வரையறைகளுக்குள்ளும் கட்டுப்பட்டனவல்ல.

### இன்னொரு அணுப்பரவல் அதன் மேலும்

போர் எந்திரன் துப்பாக்கிகள், டாங்கிகள், போர் விமானங்கள் போன்றவற்றைப் போன்ற தொடர்ச்சியான போர் நுட்ப மேம்பாடல்ல என்பது இப்பொழுது உங்களுக்குத் தெளிவாகியிருக்கும். இது அணு ஆயுதங்களைப் போல அடிப்படைப் போர்ச் சட்டகத்தை மீளமைக்கும் நுட்பம். எனவேதான் விஞ்ஞானிகள் சமரன்களைப் பயன்படுத்துவதை அணு ஆயுதப் பரவலுக்கு ஒப்பிடவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். இன்னொரு ஹிரோஷிமா நாகசாகி அழிவுக்கு நாம் தயாராகி வருகிறோம். இரண்டாம் உலகப் போர் சமயத்தில் அணு அறிவியலாளர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டதைப் போலவே இப்பொழுது போர் எந்திரன் நுட்பர்கள் முனைந்து வருகிறார்கள். ஒருமுறை அல்பர்ட்

ஐன்ஸ்டைன், “நாம் செய்வது என்னவென்று தெரிந்தால் அதற்குப் பெயர் ஆராய்ச்சியில்லை அல்லவா?” என்று சொன்னார். ஒருபுறம் ஆர்வம் அறிவியலை முன்னெடுத்துச் செல்ல, மறுபுறம் அரசியலும் வர்த்தகமும் அவற்றின் பயன்பாடுகளைத் தீர்மானிக்கின்றன. ஒரு காலத்தில் புனைவுகளாக இருந்தவை இப்பொழுது ஆய்வகங்களிலும், தொழிற்சாலைகளிலும், போர் உத்திக்கூடங்களிலும், ஏன் தீவிரவாதிகளின் கூடாரங்களிலும் தீர்க்கமாக விவாதிக்கப்படுகின்றன. தயாரிப்பு எளிமை, பாகங்களின் தாராளச் சந்தை, சிக்கலற்ற வடிவமைப்பு போன்றவை அணுஆயுதங்களைக் காட்டிலும் எந்திரன் போரைச் சிக்கலானவையாக்குகின்றன. கட்டவிழ்ந்திருக்கும் இந்த நுட்பம் கைமீறிப் போகும் நாள் தொலைவில் இல்லை. போர், முன்னெப்பொழுதுமில்லாத ஒரு புதிய திருப்பத்தில் இருக்கிறது. ஐயாயிரம் வருடங்களாக சக மனிதனைக் கொன்றழிக்கும் ஏகபோகம் மனிதனிடமிருந்து விலகி உணர்ச்சிகளற்ற சமரன்களிடம் இடம் பெயருகின்றன. மனிதனை அழிக்கும் சக்தியை வேறொன்றிடம் நாம் கையளிக்கத் தயாராகி வருகிறோம்.

**விதைத்ததும் விளைவதும்**

விதைப்பது ஒன்று விளைவது வேறொன்று என்றிருக்கும் பொழுது அறிவியல் நம்மை அழிவுப்பாதைக்குத்தான் கொண்டு செல்கிறதா? இதை எப்படிக் கட்டுப்படுத்துவது? பலரும் உடனடியாக இன்றைக்கு இருக்கும் பல சிக்கல்களுக்கும் அறிவியலே காரணம் என்று மட்டையடியாக அடித்துச் சொல்வதைக் கேட்கிறோம். இது எந்த விதத்தில் நியாயம்?

நான் இரண்டு உதாரணங்களை முன்வைத்தேன். வயகரா மாத்திரையால் எதிர்பாராத நல்விளைவு ஏற்பட்டிருக்கிறது. தானியங்கித் தொழில்நுட்பத்தால் பல நன்மைகள் இருந்தாலும் ஆளற்ற போர்முனைகளில் முகமற்ற வீரர்களின் போக்கு, போரின் வரையறையை மாற்றி எழுதியிருக்கிறது. இன்னும் நன்மை, தீமை என இருமுக உதாரணங்களை அறிவியலில் நிறையக் காணமுடியும்.

இவை ஒவ்வொன்றிலும் கவனமாக நோக்கினால், மனிதனுடைய பேராசையே அறிவியல் கண்டுபிடிப்புகளைத் திசை திருப்பியிருக்கிறது. அணுசக்தியானாலும், ஆட்கொல்லி மருந்துகளானாலும் பேரழிவுக்கு அவற்றை இட்டுச் சென்ற முடிவுகள் அரசாங்கங்களின் கையிலேயே இருந்திருக்கின்றன. இப்பொழுது அவை வர்த்தக நிறுவனங்களின் கைகளுக்கும் மாறத் தொடங்கியிருக்கின்றன. உலக வரலாற்றின் பேரழிவுகளைப் பட்டியலிட்டால், அரசியல், மதம், வர்த்தகம், தனிநபர் பேராசை எனப் பல முன்னிடங்களைப் பெறுகின்றன. இவர்களின் கைகளில் அறிவியல் ஆயுதமாகப் பயன்பட்டிருக்கிறது. எதிர்விளைவுகளைக் கவனமாக ஆராய்தலும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வும் கட்டாயம் அவசியம். எல்லா நேரங்களிலும் இத்தகைய ஆய்வையும், விழிப்புணர்வையும் அறிவியலாளர்களே நமக்குத் தருகிறார்கள். அணுஆயுதப் பரவல், உலகளாவிய சூடேற்றம், தொற்றுநோய்கள், மரபுமாற்றம் எனப் பலவற்றின் கோரமுகங்களையும் தொடர்ச்சியாக அறிவியலாளர்களே பிரச்சாரம் செய்து, அவற்றின் முன்னணிப் போராளிகளாகப் போரிடுவதை நாம் வரலாற்றில் கண்டுவருகின்றோம். மறுபுறத்தில் வலுவான தரவுகளின் ஆதாரமிருந்தும் உலகளாவிய சூடேற்றம், தடுப்பூசிகள் எனப் பலவற்றையும் வர்த்தகர்களும் அரசியல்வாதிகளும் முற்றாக மறுதலித்து, உலகை அழிவுநோக்கிச் செலுத்திவருகிறார்கள். (இடையில் அறிவியல் காரணிகளைத் தெரிந்துகொள்ள முனைப்பின்றி, சமூகக் காவலர்களாகத் தங்களை வரித்துக்கொள்ளும் இலக்கியவாதிகளும், மதவாதிகளும் குட்டையைக் குழப்புவது வேறு கதை.) இயற்கையைக் கண்டறியும் ஆர்வத்தால் பக்கவிளைவுகளாக வரும் பேரழிவுகளைக் கட்டுப்படுத்த அறிவியலன்றி வேறு திறமான வழியேதுமில்லை. வாழ்க்கைத்தர உயர்வு, பிணி நீக்கம், நீண்ட ஆயுள் என இன்றைய அறிவியலைப் போல மானிடத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்ற, செல்கின்ற துறை ஏதுமில்லை.

**எனவே அவை கொல்லும்பொழுது அங்கே சீற்றம், கோபம், பழிவாங்கல், தார்மீகம் போன்ற சிந்தனையின்றி, உணர்வுகளின்றி செயல்படுகின்றன. இவற்றால் நிகழ்த்தப்படும் போர்களுக்கு எந்தக் குற்ற வரையறை சாத்தியமாகப் போகிறது? ஊர்ந்துவரும் கவச ஊர்தியும், சக்கர நாற்காலியில் வரும் கிழவியும் இவற்றுக்குக் கிட்டத்தட்ட ஒன்றுதான். ஏதோ ஒரு இலக்கத்தில் பூச்சியம் ஒன்றானால் இவற்றுக்கிடையே வித்தியாசமில்லை.**

# செழியன் சிறப்பிதழ்




# செழியன் சிறப்பிதழ்
# தோழர் செழியன்

ஸ்ரீதரன் திருநாவுக்கரசு

மன நிம்மதி ஆன்மாவின் இழிநிலை என வாழ்ந்து மறைந்த தோழர் செழியன்!

செழியனின் முக்கியத்துவம் என்னவென்றால், பிரதானமாகத் தமிழ்த் தேசிய விடுதலை என்ற போராட்டத்திற்கு ஒரு வர்க்க உள்ளடக்கத்தைக் கொடுக்க முயன்றது.



தீண்டாமை, சுரண்டல், ஒடுக்குமுறை என வாழ்ந்த கிராமப்புற மக்களின் முகத்தை முன்னிறுத்தியதில் அவர் கனதியான பாத்திரத்தை வகித்திருந்தார்.

1960களின் நடுப்பகுதியில் தீண்டாமைக்கு எதிரான எழுச்சி வடபுலத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது.

1980களின் முற்பகுதியில் புதிய எழுச்சிகளுக்கு தோழர் சிவகுமார் செழியன் பங்களித்திருந்தார்.

தேசிய விடுதலைக்கான குரல் முனைப்படைந்திருந்த காலத்தில் வர்க்கம், சாதி, பெண்ணொடுக்குமுறை தொடர்பாக வாய்வீச்சு இல்லா நடைமுறை முயற்சிகளை எடுத்தவர் சிவகுமார்.

கிராமங்களில் விளிம்புநிலை மக்களை நோக்கிய பயணம். இந்த மக்களுடன் ஒன்றித்த வாழ்வு அவரது நடைமுறையாக இருந்தது.

தான் பிறந்து வளர்ந்த சமூகப் பின்புலச் சூழலுக்கேற்ப அரிதாரம் பூசிக்கொண்டு செழியன் வாழவில்லை. இரட்டைமுகத்துடன் வாழவில்லை.

மகாகவி பாரதியைப்போல் சகல சமூக அநீதிகள் தொடர்பாகவும் எல்லா இடங்களிலும் கேள்வி எழுப்பினார்.

கவித்துவ உள்ளம் கொண்ட செழியன் ஈழ மாணவர் பொதுமன்றத்தின், ஈபிஆர்எல்எப்இன் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகளை வரைவதில், வடிவமைப்பதில் முக்கிய பாத்திரத்தை வகித்தவர்.

பிடிவாதமான போராட்டக்காரர். வெகுஜன அமைப்புக்களைக் கட்டுவதில் ஈழ மாணவர் பொதுமன்றத்திற்கப்பால் கிராமியத் தொழிலாளர் விவசாயிகள் முன்னணியை, ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியை உருவாக்குவதில் சக தோழர்களுடன் இணைந்து தீவிர பணியாற்றியவர்.

ஈழப்போராட்டத்திற்கு ஒரு உள்ளார்ந்த அர்த்தத்தைக் கொடுப்பதில் செழியனின் பங்களிப்பு முக்கியமானது

பயங்கரவாதத் தடைச்சட்டம், சித்திரவதை, சிறைப் படுகொலைகள், கலாச்சார அழிப்புக்களுக்கு எதிராக இணைந்து பணியாற்ற வேண்டிய அனைத்துத் தளங்களிலும் முனைப்புடன் இணைந்து பணியாற்றினார்.

தமிழ்ப் போராட்டத்தில் ஜனநாயகம் ஒரு சவாலாக இருந்ததை, இது முழுப் போராட்டத்தையும் நாசமாக்கும் என்பதில் அவருக்குத் தீவிர முன்னுணர்வு தொலைநோக்கு இருந்தது.

அவர் தனது தேசிய விடுதலை சமூக நீதிச்செயற்பாடுகளை தனது வீட்டிலிருந்து, தனது அயலிலிருந்து தொடங்கினார். வீட்டுச் சூழலில் இருந்து தப்பித்து ஊருக்கே உபதேசம் என்றவாறு அவர் வாழவில்லை. சம்பந்தப்பட்ட மனிதர்கள் மறைந்த பின்னர் பொய்திரிபு வரலாறு எழுதும் போர்வழிகள் நிறைந்த காலத்தில் இதனை குறித்துரைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.



‘வானத்தைப் பிளந்த கதை’, ‘மரணம்’ கவிதைத் தொகுதி, இதர எழுத்துக்கள், ஆற்றுகைகளில் இதனைப் புரிந்துகொள்ள முடியும்

செழியனின் சமூக நேர்மை முக்கியமானது.

ஒரு போராட்டக்காரனாக, கவிஞனாக, தேடலும் முரண்களும் கொண்டவர் செழியன்.

*1979-1986* வரை ஊரிலும் தனது இறுதி மூச்சுவரை புலம்பெயர் நாட்டிலும் தேடலுடன் அலைந்த மனிதன். இடையறாத மானிடத் தேடல். நிம்மதியாக அவனால் இருக்கமுடியாது. செழியனைப் பொறுத்தவரை ‘மனநிம்மதி ஆன்மாவின் இழிநிலை’ போலும்.

மரபிலிருந்து பாலிப்போமாகில் ஒரு சித்தனைப் போன்ற ஓயாத மானிட தரிசனத் தேடலில் அகாலமாக மரணம்.

அவன் கவிஞனாகி ஆற்றுகைகள் நிகழ்த்தும் காலத்தில் அவரை அருகிருந்து பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை.

தமிழ்ச் சூழலில் சமூக மாற்றம், முற்போக்குப் பொதுவுடைமை பேசும் பலர் சமூக இயக்கத்தில் பங்கேற்பது குறைவு.

‘கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றல் அன்றி’ சமூகச் செயற்பாட்டுடன் இவற்றை இணைத்துத் தன்னை அடையாளப்படுத்தினான்.

தோழர் சிவகுமாரின் வாழ்வும் மரணமும் ஈழப்போராட்டத்தின் பொருள் பொதிந்த உள்ளடக்கத்தின் வரலாறு.



# செழியன்: சில குறிப்புகள்

அருண்மொழி வர்மன்



செழியனின் நினைவிலும் அவர் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளையும் மீட்டுப் பார்க்கின்றபோது செழியன் பற்றியதாகவே சிந்தனை இருக்கின்றது. ‘செழியன் என்ற ஆளுமையை ஒட்டுமொத்தமாக எப்படிப் பார்ப்பது? செழியன் எப்படியானவராக இருந்தார்? அவர் சமூகத்துடன் எப்படி உறவாடினார்? செழியன் போன்ற மனிதர்களை இந்தச் சமூகம் எப்படிக் கையாண்டிருக்கின்றது?’ என்பதாகச் சிந்தனைகள் செழியன் குறித்தும் இறந்துபோன இன்னும் சில நண்பர்கள் மற்றும் ஆளுமைகள் குறித்ததுமாக மாறி மாறி வந்துபோய்க்கொண்டே இருந்தன.

*(1)*

செழியனின் இறப்பின் பின்னர் பலரும் எழுதிய குறிப்புகள் செழியனின் வீழ்ச்சியையும் தொட்டுச் சென்றனவாகவே இருந்தன. அவர்களின் குறிப்புகள், ஒரு விதத்தில் கையறுநிலையினதும் செழியனின்பாற்பட்ட அக்கறை யினதும் விழைவாகவே இருந்ததை உணர முடிந்தது. ஆனால், செழியனின் வீழ்ச்சி என்று பிரதானமாக மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்ற அவரது கட்டுப்படுத்த முடியாத மது பாவனையை எப்படிப் புரிந்துகொள்வது? மது பாவனைக்கு அடிமையாதல் என்பதைவிட, அப்படியான நிலைக்குச் செழியனைத் தள்ளிய சமூகக் காரணிகளை எப்படி நாம் எதிர்கொள்வது? மிகத் தீர்க்கமான பார்வையும் தெளிவும் கொண்டிருந்த செழியன், பின்னாளில் தான் சார்ந்திருந்த இயக்கச் செயற்பாடு ஒன்றினை இன்னொரு எழுத்தாளருக்குச் சொல்லி, அவர் அதனை எந்தப் புரிதலும் இல்லாமல், கேவலமான முறையில் சித்தரித்து எழுதியிருந்தபோது மௌனம் சாதித்துக் கடந்து போனதை எந்தப் பின்னணியில் பொருத்திப் பார்ப்பது என்கிற கேள்விகள் தொடர்ந்து எழுந்தவண்ணமே இருக்கின்றன.

(2)

தனதுபாடசாலைநாட்களிலேயேசமூகவேலைத்திட்டங்களை முன்னெடுத்த செழியனின் புலப்பெயர்வு, நிர்ப்பந்தத்தால் நிகழ்ந்தது. அவர் சார்ந்திருந்த இயக்கத்திற்குள்ளான உள்முரண்பாடுகள், பின்னர் புலிகளால் ஏற்பட்ட மரண அச்சுறுத்தல் என்பனவே அவரை நாட்டைவிட்டு வெளியேறச் செய்தவை.

செழியனின் நினைவு நிகழ்வில் பேசிய 'காலம்' செல்வம் குறிப்பிட்டதுபோல, "பெர்லின் விமான நிலையத்தில் வந்து இறங்கும் அகதிகள் கூட்டத்தில் என்னைத் தேடி அலையாதே" என்று எழுதிய செழியன், உண்மையில் தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து பங்கேற்று, அப்படி இருக்கத்தான் விரும்பினார். ஆனால், தமிழ் விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் வன்முறையாக வெடித்தபோதே அவர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டார். தான் சார்ந்திருந்த இயக்கத்துக்குள்ளும் ஜனநாயகத்துக்காகக் குரல் கொடுத்துப் போராடிக்கொண்டிருந்தவர் செழியன். அதே சமயத்தில் அவர் சார்ந்திருந்த EPRLF இயக்கம் விடுதலைப் புலிகளால் தடைசெய்யப்பட்டும், செழியன் விடுதலைப் புலிகளால் தேடப்பட்டும், தலைமறைவாகி இருக்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

தன் நாட்டையும், மக்களையும் நேசித்த, அதன் விடுதலைக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துப் போராட்டத்தைத் தொடங்கிய செழியன் போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டதை ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆன்மாவின் சீரழிவென்றே கருதமுடியும். செழியனின் நினைவாக வெளியிடப்பட்ட 'தோழமை என்றொரு சொல்' என்கிற நூலில் சி.அ. யோதிலிங்கம், செழியனின் இறப்புப் பற்றிப் பேசியபோது, அவரது மகள் தமிழினி, 'ஓரிடத்தில் இருக்கின்ற மரத்தைப் பிடுங்கிக்கொண்டு வந்து இன்னொரு இடத்தில் நட்டால் அது எப்படி உறுதியாக நிற்கமுடியும்' என்று கூறியதைக் குறிப்பிடுகின்றார். உண்மையில் செழியன் மாத்திரமல்லாமல் திணிக்கப்பட்ட புலப்பெயர்வினை ஏற்கமுடியாமல், தமக்கான வாழூடகமாகப் புலம்பெயர் வாழ்வினைத் தகவமைத்துக்கொள்ளாமல் திணறியவர்கள்தான் எத்தனைபேர்!

நாட்டைவிட்டு வெளியேறிய செழியனின் மனநிலையைப் பற்றியும் அது அவரில் ஏற்படுத்திய உளவியல் ரீதியான தாக்கம் குறித்தும் இந்த நிகழ்வில் குறிப்பிட்ட செழியனின் துணைவி துளசி, தொடர்ச்சியாகச் செயற்படுவதும் எழுதுவதுமே அந்த உளவியல் தாக்கத்தில் இருந்த விடுபடுவதற்குச் செழியன் கையாளக்கூடிய உபாயம் என்று தான் தொடர்ந்து உற்சாகப்படுத்தி வந்ததாகக் குறிப்பிட்டார். புலப்பெயர்வு, அதிலும் குறிப்பாக செழியன் போன்ற மக்களை நேசித்த செயற்பாட்டாளர்கள் மீது திணிக்கப்பட்ட புலப்பெயர்வும் அது தரும் தனிமை, வெறுமை, அந்நியமாதல் என்பன தரக்கூடிய மனநெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்கான உபாயங்களாகவே துளசி கூறிய வழிமுறைகளை நாம் கருதவேண்டும்.

(3)

கனடா வந்த ஆரம்ப காலத்திலும் மிகவும் உற்சாகமாகப் பொதுவேலைகளை முன்னெடுக்கின்றவராகவே செழியன் இருந்திருக்கின்றார். 'தேடகம்' அமைப்பின் ஆரம்பகால உரையாடல்களில் பங்கெடுத்ததுடன் அந்த அமைப்பின் தோற்றுனர்களில் ஒருவராகவும் செழியன் இருந்திருக்கின்றார். அதுபோல கனடாவில் மேடையேற்றப்பட்ட முக்கியமான நாடகங்கள் பலவற்றின் பிரதியை எழுதியவராகவும் செழியன் இருந்திருக்கின்றார். ஆயினும் புலம்பெயர் வாழ்விலும் செழியன் சார்ந்திருந்த, செழியன் செயற்பட்ட அமைப்புகளுக்குள் ஏற்பட்ட பிரிவுகளும் உடைசல்களும்கூட செழியனைக் கட்டாயமாகப் பாதித்திருக்கும். அதுபற்றிய சுய விமர்சனப் பார்வை கட்டாயமாக அவர் செயற்பட்ட அமைப்புகளுக்கும் அவர் செயற்பட்ட தளங்களின் சக செயற்பாட்டாளர்களுக்கும் இருக்கவேண்டும். செழியனின் மரணத்தை, அவர் செய்துகொண்ட சுய அழித்தல்களை வெறுமே செழியன் மற்றும் அவரது பழக்கங்கள் (Habits) சார்ந்த பிரச்சினையாகவே புலம்பெயர் மக்கள் மற்றும் அமைப்புகள், குறிப்பாக கனடாவில், பேசுவது தமக்கான பொறுப்புக் கோரல்களில் இருந்து விடுபடுகின்ற, சுயவிமர்சனங்களைத் தட்டிக்கழிக்கின்ற பாங்காகவே நான் பார்க்கின்றேன்.

(4)

பொறுப்புக்கூறல் என்று வருகின்றபோது செழியனை எப்படிப் புரிந்துகொள்வது என்பது மீண்டும் குழப்பமாகவே உள்ளது. ஈழத்தில் தான் சார்ந்திருந்த அமைப்புகள் மற்றும் இயக்கங்களில் தொடர்ந்து பொறுப்புணர்வுடன் உரையாடி இயங்கிவந்தவர் செழியன். அவர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த ஆரம்ப காலங்கள் பற்றிய அவரது மற்றும் அவர் நண்பர்களது குறிப்புகளிலும் அவரது இத்தன்மையைக் காணமுடிகின்றது. ஆனால் இலக்கியத் தோட்டத்தில் செழியன் முக்கிய வகிபாகம் வகித்ததாக அ.முத்துலிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார். 'காலம்' இதழிலும் முக்கிய வகிபாகம் செழியனுக்கு இருந்ததுடன் அவர் நெடுங்காலம் அதன் உதவி ஆசிரியராக இருந்ததாகவும் 'காலம்' செல்வம் அவர்கள் குறிப்பிடுகின்றார். ஆனால் இவை இரண்டும் பற்றிய விமர்சனபூர்வமான பார்வையுடன் அணுகியவர்களுக்கு செழியன் பொறுப்பாக எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. அந்த அமைப்புகளில் தான் இருப்பது கூடத் தனக்குத் தெரியாது என்று அவர் நகைச்சுவை என்ற போர்வையுடன் அளித்த பதில்கள் உண்மையில் ஒருவித தட்டிக்கழித்தல்களே! அதை ஏன் செழியன் செய்தார் என்று இன்றும் தெரியவில்லை.

(5)

செழியனைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய விடயம், அவர் வெவ்வேறு வேலைத்திட்டங்களுக்கும் அவற்றில் ஈடுபட்டவர்களுக்கும்


NEWEST DESIGNS
HIGHEST QUALITY AT THE LOWEST PRICE
SPECIAL OFFER
48 HOURS DELIVERY!
Memory Foam Mattress Blowout
sunflowers EXCLUSIVE!
TOP GRAIN 100% GENUINE ITALIAN LEATHER SOFA SETS
Sunflowers
furniture
3024
KENNEDY RD.
416.609.8556

**செழியனின் நினைவு நிகழ்வில் பேசிய 'காலம்' செல்வம் குறிப்பிட்டதுபோல, "பெர்லின் விமான நிலையத்தில் வந்து இறங்கும் அகதிகள் கூட்டத்தில் என்னைத் தேடி அலையாதே" என்று எழுதிய செழியன், உண்மையில் தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து பங்கேற்று, அப்படி இருக்கத்தான் விரும்பினார்.**

கொடுத்த ஆதரவு பற்றியதாகும். ரொரன்றோவில் இளையவர்களாக நாங்கள் பொதுவேலைகள், இலக்கியக் கூட்டங்கள் என்பவற்றில் ஈடுபடத்தொடங்கியபோது அதற்கு முழுமனதுடன் ஆதரவளித்து எம்மை ஊக்குவித்த மிக மிகச் சிலரில் செழியனும் ஒருவர். நாம் ஒருங்கிணைத்த கூட்டங்கள் என்று மாத்திரம் என்றில்லாமல், நான் கலந்துகொண்டு பேசிய பல்வேறு கூட்டங்களில் தேடி வந்து கைகொடுத்துப் பேசும் செழியனின் இயல்பும் அவரது மென்மையான குளிர்ந்த கைகுலுக்கல்களும் இப்போதும் மனதில் இருக்கின்றன.

கணேசன் ஐயரின் 'ஈழப்போராட்டதில் எனது பதிவுகள்' நூல்வெளியீட்டுவிழா நடந்தபோது நாம் இருவரும் உரையாற்றி இருந்தோம். நான் பேசி அவையை நோக்கி வந்தபோது கைகுலுக்கி உற்சாக வார்த்தைகளை உடனே தந்தவர்கள் செழியனும் ஸ்ரீஸ்கந்தனும். இவர்கள் இருவரும் சொன்ன வார்த்தைகள் என் தொடர்ச்சியான இயக்கத்திற்கு வழிதந்தவை. இதையொத்த அனுபவங்களை நண்பர்கள் சிலரும் என்னுடன் பகிர்ந்துள்ளார்கள். அவர்களும் அதைப் பொதுவில் பகிரும்போது செழியனுக்கு அடுத்த தலைமுறையின் செயற்பாடு பற்றி இருந்த ஆக்கபூர்வமான நிலைப்பாடுகள் இன்னும் தெளிவாகும்.

அதுபோல நான் செயற்படும் தளங்களில் ஒன்றான 'நூலகம்' நிறுவனத்திற்கு நெருக்கடியான காலகட்டங்களில் கணிசமான தொகை நிதிப்பங்களிப்புகளை வழங்கியவராகவும் செழியன் இருந்துள்ளார். செழியனது தனிப்பட்ட பொருளாதாரநிலை பற்றி நான் அதிகம் அறிந்தவனல்ல; ஆயினும் பல்வேறு பொது விடயங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் தாராளமாக அவர் பொருளுதவி செய்ததை அறிவேன். செழியனது மரணத்திற்குப் பின்னர் செழியனது வீழ்ச்சி என்று திரும்பத் திரும்பப் பேசியவர்கள், செழியனது இந்தப் பரிமாணத்தினைக் குறிப்பிடவேயில்லை என்பதையும் இங்கே கட்டாயமாகப் பதிவுசெய்யவே வேண்டும்.

*(6)*


செழியனுடனான எனது உறவு அனேகம் இலக்கிய/கலை/அரசியல் சார்ந்த நிகழ்வுகளில் சந்திப்பது, பேசுவது, கலைவது என்றே இடம்பெற்றது. சில தடவைகள் கூட்டங்களுக்கு அழைக்க அவருடன் பேசியிருக்கின்றேன். கணேசன் ஐயரின் சுயவரலாற்றுப் பதிவு, 'பெயரிடப்படாத நட்சத்திரங்கள்' கவிதைத் தொகுப்பு, கோர்டன் வைசின் 'The Cage' ஆகிய நூல்கள் குறித்த எனது கட்டுரைகள் குறித்துப் பேச அவர் அழைத்திருந்தார். நூலக நிறுவனத்திற்காக வாய்மொழி வரலாறு செய்வதற்காக அவருடன் 'தாய்வீடு' டிலிப்குமார் ஊடாகப் பேசி, பின்னர் நான் தொடர்புகொண்டேன். மகிழ்ச்சியுடன் உடன்பட்டிருந்தார். ஜனவரி மாதத்தின் இறுதிப்பகுதியில் ஒரு திங்களன்று கதைத்திருந்தேன். வாய்மொழி வரலாற்றினைப் பதிய எமக்கு உகந்த நாளாக புதன் / வியாழக் கிழமையைக் குறிப்பிட்டிருந்தேன். அதனை உறுதி செய்ய மீண்டும் தொடர்புகொண்டபோது அவரைத் தொலைபேசியில் பிடிக்கமுடியவில்லை. சில நாட்களின் பின்னர்தான் செழியன் தனது கடைசிப் பயணத்திற்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார் என்பதை அறிந்துகொண்டேன்.

இளவயதிலேயே சமூகப் போராட்டங்களில் ஈடுபட்டு அரசியல் மயப்படுத்தப்பட்ட செழியன் போன்றவர்களும் அவர்கள் தலைமுறையில் கணிசமானவர்களும் செயற்பாட்டுத் தளத்திலிருந்து அனேகம் ஒதுங்கிவிட்ட நிலையில், அர்ப்பணிப்பும் அரசியல் பட்டறிவும் கொண்ட அந்தத் தலைமுறையினரின் கூட்டு அனுபவத்தினதும் வழிகாட்டலினதும் இழப்பினை எப்படி ஈடுசெய்வது என்று கலந்தாய்வது சமகாலத்தின் முக்கிய தேவைகளில் ஒன்றாக இருக்கின்றது. செழியன் வாழ்வார், ஒரு விதத்தில் முன்மாதிரியாகவும் இன்னொரு விதத்தில் வகை மாதிரியாகவும்!

**குறிப்புகள்:**

*1. ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி (2018) அன்று 'தோழமை என்றொரு சொல்' என்கிற செழியன் நினைவு ஒன்றுகூடலும் நினைவு மலர் வெளியீடும் ரொரன்றோவில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள், செழியன் பற்றிய நினைவுகள், மருத்துவமனையில் கடைசியாக அவரை எஸ்.கே. விக்னேஸ்வரன் அவர்களுடன் சென்றுபார்த்தபோது இருந்த செழியனின் நிலை போன்ற பல்வேறு விடயங்களுடன் செழியன் எப்படி நினைவுகூரப்படுகின்றார் என்பதுவும் தொடர்ச்சியாக மனதிற்கு உழன்றபடியே இருக்க, அடுத்தநாள் ஏப்ரல் 30 அன்று எழுதிய குறிப்பு இது.*

*2. இந்நிகழ்வின் ஒளித்தொகுப்பினை 'வடலி' தளத்தில் காணலாம். அதற்கான இணைப்பு: https://www.youtube.com/watch?v=7_9AHURReWg*



# முகில்களுக்கு மேலே நச்சத்திரங்களைப் பார்த்தவர்

மு. புஷ்பராஜன்

அன்று 'தாய்வீடு' பத்திரிகை நடாத்திய 'அரங்கியல் விழா 2017' அந்தி மழை ஏனோ சிணுங்கிக்கொண்டிருந்தது. கனடாவிற்கும் மழைக்கும் அப்படி என்னதான் காதலோ! நண்பர் என்.கே.மகாலிங்கம் அரங்க முகப்பில் என்னை இறக்கிவிட்டு காரைப் 'பாக்' பண்ணச் சென்றுவிட்டார். அரங்கின் முன் விறாந்தையில் நின்றுகொண்டிருந்த பார்வைக் கூட்டத்துடன் கலந்து பிராக்குப் பார்த்துக்கொண்டு நின்றேன். எப்ப வந்தீங்க என்ற குரல். முன்னால் ஒருவர். சட்டென்று அடையாளம் தெரியவில்லை. விரக்தியின் விளிம்பில் வழிந்த சிரிப்பின் அடையாளப் புள்ளி என் பொறியில் அறைந்தது. செழியனா? திகைத்துப் போனேன். கண்களில் கலந்திருந்த சோர்வு. வடிந்துபோன கன்னங்கள். உருக்குலைந்திருந்தார். நிற்கவும் பலமற்று, கதைப்பதற்கும் இசக்கமற்றுக் காணப்பட்டார். என்ன இப்பிடி போயிற்றீங்களே என்றேன். சொன்னார். திடீரென மயங்கி விழுந்தது, ஈரல் சேதமடைந்திருந்த நிலை. டொக்ரரின் அபாய எச்சரிக்கை எனத் தொடர்ந்தார். நான் கனடா வரும்போது அபூர்வமாக வாய்க்கும் மாலை நேரச் சந்திப்புக்களை நகைச்சுவைகளால் நிறைத்தவர்களில் ஒருவர் நின்ற கோலம் மனதைப் பிசைந்தது. ஏன் இவ்வாறு தன்னைத் தானே அழித்துக் கொள்ளவேண்டும். தேசம் என்னும் பெரும் நம்பிக்கையின் வீழ்ச்சி; உள்ளிருந்து சிறுகச் சிறுக அரித்துக் கொல்லும் துயருடன் ஒரு தலைமுறையைத் தேசம் தேசமாய் அலைய விட்டிருக்கிறதா? அவரைத் தேற்ற மனம் விழைந்தது.



ஏதாவது சாப்பிடுவோமா?

டொக்ரர் 'அட்வைசுக்கு' அப்பால் எதையும் சாப்பிட முடியாது.

டொக்ரர் ஏதாவது நம்பிக்கையாகச் சொன்னாரா?

சொன்னார்.

மனம் ஆறுதலாக இருந்தது. பின்னர் ஒரு நினைவு தினக் கூட்டத்தில் மீண்டும் கண்டேன். உடல்நிலையில் எவ்வித மாற்றமும் தெரியவில்லை. பின்னர் ஒருநாள் அந்தத் துயர்மிகு செய்தி வந்தடைந்தது. மரணத்தின் மூலம் தன்னிடம் அழைத்தார். புத்தம் புதிய பட்டு வேட்டி, சேட்டு. கண்ணாடி அணிந்தபடி சவப் பெட்டியினுள் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். முகம் எவ்வளவு தெளிவாக இருந்தது! நோயின் சிறையிலிருந்து விடுபட்ட சுதந்திரத் தெளிவாக இருக்கலாம்.




செழியனின் எள்ளல்கள், கவிதை வரிகள், தலைமறைவுக் கால அனுபவங்கள் மனதில் வந்து வந்து போயின. வண்ணத்துப்பூச்சியைக் காப்பாற்ற மகளுக்குப் பொய் சொல்லி, பின்னர் சொன்ன பொய்க்காக வருந்தியவன். நிலவும் அதன் தண் ஒளியும் கவிஞர்க்குப் பரவசம் அளிக்கையில், அவை தன் தலைமறைவுக் காலங்களில் எவ்வகையில் அச்சமூட்டியது எனப் பதிந்தவன். புதிய எஜமானர்களுக்காகத் தெருக்களில் மரணிப்பதை வெறுத்தவன். முகில்களுக்கு மேலால் நச்சத்திரங்களைப் பார்த்தவர். இப்போது நச்சத்திரங்களுக்கும் முகில்களுக்கும் ஊடாக நேசித்த நதிகளை, இலைகளை, வண்ணத்துப்பூச்சிகளைப் பார்க்கிறாரா? 'நிலவை உருக்கிப் பனியாய்த் திரட்டி இலைகளின்மீது வெள்ளியைப் பூசி அவருக்கு அழகுகாட்டும் மரங்கள்' எல்லாம் இருக்கின்றன. செழியன் இல்லை. அவனது படைப்புக்களைத் தவிர.


செழியன் பற்றி, அவரின் அமைதியான சுபாவம் பற்றி, கல்வி கற்பித்த ஆசிரியை பேசுகிறார். தோழர்கள் அவர் சார்ந்திருந்த கட்சி பற்றிப் பேசுகிறார்கள். செழியன் கட்சிக்கு மேலாக விடுதலையை நேசித்தவர், மனிதர்களை நேசித்தவர் என்பதை எமது மாலைநேர மகிழ்ச்சிகளின்போது வெளிப்படுத்தியுள்ளார். அநீதிக்கு எதிராக அவரது கிராமத்தில் நடந்த போராட்டங்களின்போது அவர் காட்டிய உறுதி பற்றிப் பேசுகிறார்கள். வண்ணத்துப்பூச்சிக்கு இளகிய மனமும் ஒடுக்கப்பட்டோர்க்கான போராட்ட உணர்வும் ஒரு மையப் புள்ளியிலிருந்து முளைத்த இரு சிறகுகள்தானே!

2009ஆம் ஆண்டு ஆவணிமாதம் 'காலம்' இதழில் 'செழியன் கவிதைகள்' பற்றி நான் எழுதிய மதிப்பீட்டின் ஒரு பகுதி மிகச் சிறிய திருத்தங்களுடன்:

"தனது அனுபவத்திற்கூடாக, போராட்டம் அவருக்கு அளித்த உயிராபத்துகளினூடாக, போராட்டம் எடுத்த புதிய விளைவுகளைப் பற்றிய தனது உணர்வுகளை மிகக் கடுமையாகவும், எள்ளலாகவும் வெளிப்படுத்திய போதிலும், போராட்டத்தின் தேவைபற்றியும் அது முன்னெடுக்கப்படவேண்டிய அவசியம் பற்றியும் அறிந்தவராகவே இருக்கிறார். இவர்போல் உயிராபத்து அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட பலர், அதிலும் குறிப்பாகப் படைப்பாளிகள் பலர், போராட்டத்திலிருந்து ஒதுங்கிக்கொண்டது மட்டுமல்ல, அதற்கு எதிராகவும் மாறிக்கொண்டு, அந்த மாற்றத்தையே தமது புத்தி ஜீவித்தனத்தின் புது அடையாளமாகக்கொண்டு இயங்குபவர்களிலிருந்து விலகி நிற்கிறார் என்பதை இவர் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. தான் வாழும் சூழலுக்குள்ளும், தன் அடையாளத்திற்கு ஏங்குபவராகவே இருக்கிறார். அடையாளம் காணமுடியாத பதுங்கு குழிக்குள்ளும், பெருவெளியில் தூர்ந்துபோன வேர்களையும் தேடுகிறார். அந்நியர்களால் கறைபடிந்த தேசத்தில் புதிய துப்பாக்கிகளின் நடமாட்டங்கள் இருந்தபோதிலும்,

'இன்னமும் முகில்களுக்கு மேலே
தெரியும் நட்சத்திரங்கள்'
என்று நம்பிக்கையும்
'எஞ்சியிருப்பவை
கரித்துண்டுகளாயினும்
எழுதியே முடிப்போம்'
என்று உறுதியையும் வெளிப்படுத்தியவர்."

மரணத்தோடு பொருதித் தோற்றுப் போவதைத் தவிர வேறு எதைத்தான் கண்டோம்? சென்று வா நண்பா!



# பால் வீதியில் ஒரு கவிஞன்

**சி.ரமேஷ்**

மானுடத்தின் மகத்தான கலைஞன் தன் மக்களை நேசிப்பவனாகவும் மண்மீது தாகம் கொண்டவனாகவும் காணப்படுகிறான். மண் மீதும் தான் நேசிக்கும் மக்கள் மீதும் கொண்ட அளவற்ற பிரியம் மகத்தான கலையை உருவாக்குகிறது. அந்நேசிப்பின் வழி பிறக்கும் அனுபவங்களையும் உணர்வுகளையும் யதார்த்தத்துடன் மோதவிட்டு பிரக்ஞைபூர்வமான கலைத்துவமிக்க கலாசிருஷ்டிகளை உருவாக்குகிறான். அதுவே எல்லா அகிலத்துக்குமான காலசிருஷ்டி உருக்கொள்கிறது. மூடுண்டவெளிக்குள் பாழ்பொழுதுகள் கற்றுத்தந்த பாடமும் மக்கள் எதிர்கொண்ட இடர்களும் அனுபவங்கள் வாயிலாகத் தான் தரிசித்த அவலவாழ்வும் செழியனை ஆலாபனையற்ற கவிஞனாக்கியது. வன்மங்களுக்கெதிரான அறச்சீற்றமும் சுயமாய் துலங்கும் உணர்திறனும் உயிர்த்துடிப்புமிக்க கலைஞனாக்கியது. வாழ்வின் நீரோட்டத்தில் அவனுடைய சமூகவாழ்வும் இலக்கியவாழ்வும் சமாந்தரமாகப் பயணித்தன.



"கலைஞன் என்பவன் வரலாற்றாசிரியனாகவும், கவிஞனாகவும், மெய்யியலறிஞனாகவும், உற்று நோக்குபவனாகவும், இவை அனைத்தும் ஒருங்கு சேரப் பெற்றவனாகவும் இருக்கவேண்டும்" என்பார் ஏ.ஏ. பெஸ்டுகேவ் மார்லின்ஸ்கி. அவ்வகையில் இலக்கியத் தாகம் கொண்ட கலைஞனாகவும் கவிஞனாகவும் தீர்க்க சிந்தனைமிக்க அரசியல் போராளியாகவும் விளங்கிய செழியன் இறுதி மூச்சு வரை மனித நேயமிக்க செயற்பாட்டாளனாக விளங்கியவன். ஆராவாரமிக்க கவிஞர்களுக்கிடையே அமைதியைத் தனதாக்கிக் கொண்டவன். மக்களுக்காகச் சிந்திய உதிரத்தையும் உதிரம் படிந்த வரலாற்றையும் நேர்த்திமிக்க காலசிருஷ்டிக்கூடாகக் கலையாக்கியவன்.

நடக்கும் பாதையில் தடைக்கல்லாக இருந்த சமூகச் சீர்கேடுகளையும் சமூகப் புல்லுருவிகளையும் உலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டியவன். தனது வாழ்க்கைப் படிகளைத் தான் வாழ்ந்த நெறிகளுக்கூடாக அர்த்தமாக்கிச் சென்றவன்.

செழியன் களப்போராளியாகத் தன்னை முன்னிறுத்தி ஈழப் போராட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த காலப்பகுதியில் 'இல்லாமல் போன என் தோழனுக்கு' என்னும் தொகுப்பு வெளிவந்தது. அத்தொகுப்பு இற்றை வரை ஈழத்தில் போதிய கவனத்தைப் பெறவில்லை. அருந்தலாக ஒரு சிலரிடம் மாத்திரமே அத்தொகுப்பு காணப்பட்ட சூழ்நிலையில் 1985களில் வெளிவந்த 'மரணம்' தொகுப்பினூடாகவே செழியன் எனக்கு அறிமுகமானார். போராளிகளைத் தாயக மீட்புப் போராளிகள், மாற்றுக்கருத்துப் போராளிகள் என உருச்சிதைப்பு செய்யப்படாத காலத்தில் வெளிவந்த இத்தொகுப்பு கூடிய கவனத்தைப் பெற்றது. 1985.05.14ல் அனுராதபுரத்தில் அப்பாவிச் சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்டதைப் புலிப்பேராளிகள் நியாயப்படுத்திய சூழலில் அக்கொலையைக் கண்டித்து குரல் கொடுத்த கவிஞர்களில் நா.சபேசனும் செழியனும் முதன்மையானவர்கள். அனுராதபுரப் படுகொலைக்கான ஆழ்ந்த வருத்தத்தை நா.சபேசனுடைய 'நான் ஆசைப்படுகிறேன்' கவிதை எடுத்துரைக்க, மனித நேயங்களும் மனிதப் பண்புகளும் அறவே அழியும் வண்ணம் வெறித்தனமாக நிகழ்த்தப்பட்ட இத்தாக்குதலை செழியனின் 'ஒரு சிங்கள நண்பிக்கு' எனத் தொடங்கும் கவிதையும் கண்டித்தது. அத்தருணத்திலே மனிதநேயமிக்க செழியன் என்னும் கவிஞனைக் கண்டடைந்தேன். இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் சுயஅறிதலின் பல்வேறு கணங்களையும் வெளிப்படுத்திய அக்கவிதை மானிடத்தை நேசித்த மனிதநேயனாக செழியனை அறிமுகப்படுத்தியது.

சூரியனும் கொடுமையாய்
சுட்டெரித்தான்
எங்கள் மண்ணும்
அனலாய்த் தகித்தது
இனம் பிரியாத சோகம்
நெஞ்சில் பரவியது

எனத் தொடங்கும் அக்கவிதை, அனுராதபுரக் கொலையால் துன்புற்று, துவண்டு நிற்கும் தமிழனின் இதயத்தையும் தமிழ் சிங்கள உறவுகளின் மகோன்னதத்தையும் வெளிப்படுத்துகிறது. இக்கவிதையானது,

மனிதநேயங்களை
மரணித்த மனித உருவங்களை
மனிதத்துவம்
ஓர்நாள் தோற்கடிக்கும்

என முடியும். என்றுமே வன்முறை ஜெயிக்கப் போவதில்லை. மானிடத்தை நேசிக்கும் மனிதமே என்றும் உலகை ஆளும் என்பதை ஈழத்தமிழனுக்கு அறைந்து சொன்ன உணர்ச்சிக் கவிஞன் செழியன். தமிழர்கள் செய்த அநாகரிகச் செயலை எடுத்துரைக்கும் இக்கவிதை தமிழ் சிங்கள உறவுகளுக்குப் பாலமாகவும் அமைந்தது என்பது கண்கூடு. இப்படுகொலையினை சபேசன், செழியனைப் போன்று 'படுகொலைகளின் கதை' என்னும் கட்டுரை வாயிலாக கவிஞர் சேரனும் கண்டித்தார்.

'மரணம்' தொகுப்பினை அடுத்து வெளிவந்த 'அதிகாலையைத் தேடி', 'குழந்தைகளிடம் பொய் கூறாதீர்கள்', 'ஆளற்ற தனித்த தீவுகளில் நிலவு ஈரமற்ற மழை', 'கடலை விட்டுப் போன மீன் குஞ்சுகள்' முதலான தொகுப்புக்கள் இலங்கையில் மாத்திரமன்றி தமிழகத்திலும் நன்கு பேசப்பட்ட தொகுப்புக்கள் ஆகும்.

சொந்த தேசமற்று அநாதரவாய்த் தமிழர்கள் அல்லலுற்று வாழ்ந்த காலப்பகுதியில் வகைதொகையின்றி அழிக்கப்பட்டனர். தமிழரின் வாழ்வியல் இருப்பே கேள்விக்குள்ளானது. இக் காலப்பகுதியில் ஈழப்போராட்டத்தையும் சிதைந்துபோன மனித வாழ்வையும் அதன் வலிகளையும் அவை வேரூன்றிய பூர்வீகபூமியையும் பாடியவர் செழியன். குருதி சிந்திப் புலர்ந்த விடிகாலைப் பொழுதுகளும் துப்பாக்கி வேட்டுக்களும் உயிரற்ற உடலங்களும் எரிகின்ற கந்தக மணமும் மனிதப் பேரவலமாக விரிந்த, தான் வாழ்ந்த காலப்பகுதியில் தன்னுடைய கருத்துக்களை வெளிப்படையாக முன்வைத்தவர்.

"இன்னவை தாம் கவி எழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர் சோலை, கடல்
மின்னல் முகில் தென்றலினை
மறவுங்கள்! மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, அன்பு
என்பவற்றைப் பாடுங்கள்"

என்ற மஹாகவியின் கூற்றை மெய்ப்பித்தவன். இதனை செழியன் 'மரணம்' தொகுப்புக்கு எழுதிய முகவுரை உறுதி செய்கிறது. "அழகிய அந்திக்காட்சிகளை, பௌர்ணமி நிலாவைப் பற்றி எண்ணி எங்களால் எழுத முடியவில்லை. சிறையிலிடப்பட்ட எங்களது இரவுகளை, அதிகாலைப் பொழுதுகளை, முட்களை ஏந்தும் பூக்களைப் பற்றி நாங்கள் எழுதுகின்றோம்" என்ற செழியனின் வரி நிதர்சனமானது. இவருடைய 'மரணம்' கவிதை உணர்வின் ஊற்றில் உண்மைகளுக்காய்க் குரல் கொடுக்கும் கவிஞனின் உள்ளத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

எங்கே இருக்கின்றாய் / எம் உண்மைத் தோழா / முகம் தெரியாத / கரிய இருளில் / திசை தெரியாத / சமவெளியில் / உன் முகத்தை / எங்கே என்று / கால்களை இழந்த / நாம் தேடுவது?...

நசுக்கப்பட்டவைதான் எம் குரல்கள் / பால்நிலவு தெறிக்க / குமுறி எழுந்து வரும் / கடல் அலையாய் / சடசடத்து இலை உதிர்க்கும் / பசுமரங்களை அதிரவைத்து / அசைந்து செல்லும் காற்றாய் / எங்கள் குரல் வளைகள் /

அறுக்கப்படும் வரை / குரல் கொடுப்போம். / மரணத்தைக் கண்டு / நாம் அஞ்சவில்லை / ஒரு அநாதைப் பிணமாய் / ஒரு அடிமையாய் / புதிய எஜமானர்களுக்காக / தெருக்களில் மரணிப்பதற்கு / நாம் வெறுக்கிறோம் / மகிழ்ச்சிக்காகப் போராடி / மக்களுக்காக மரணிப்பதற்கு /நாம் அஞ்சவில்லை. / எங்களை நெருங்கி வருகின்ற / மரணத்துக்காக நம்பிக்கையோடு / நாங்கள் காத்திருக்கிறோம் / உண்மையை மறுப்பவர்களிடம் கூறுங்கள் / எங்கள் மரணம் / அது ஒரு முடிவல்ல.

பேராளியின் மனக்குறிப்பாய் விரியும் இவ்வரிகளில் மக்களுக்காக ஈழதேசத்தை நேசித்த மனிதநேயியினுடைய குரலைத் தரிசிக்கலாம்.

பயிற்சிமுகாமில் மரணித்த தோழன் ராஜனுக்காய் எழுதிய ‘தோழனுக்கு ஒரு கவிதை’, சகபோராளிகளையும் தன்னைப் போலவே நேசித்த செழியனின் உள்ளத்தை வெளிப்படையாகக் கோடிட்டுக் காட்டுகிறது. தாய், தங்கைகளை இழந்து தேசத்துக்காய்ப் போராட வந்தவன் தொடக்கப் புள்ளியிலேயே காணாமல் போக அடுத்த பேராளியின் வரவுக்காய்க் காத்திருக்கும் சகதோழனின் குரலாய் ஒலிக்கும் இக்கவிதை, சங்கக் கவிதைகளுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

“தோழா! / அந்நியர்கள் இன்னமும் / எங்கள் வயல்களில் / எங்களது வடலிகளில் / எங்களது முற்றங்களிலெல்லாம்... / புழுதியை வாரி / முகத்தில் தூற்றும் / எங்கள் நிலங்களில் / மறுபடியும் / மறுபடியும் / எழுந்து வருகின்ற /உங்கள் வரவுகளுக்காக / எங்கள் கால்களை ஊன்றி / தொலைதூரப்பயணத்தில் / கரங்களை உயர்த்தி / விழிகளை நிமிர்த்தி காத்திருக்கிறோம்.”

உள்ளுணர்வின் தடத்தில் கட்டுறும் அகம்சார் மென்னுணர்வுகளைக் கவிதையாகப் படைத்தவர் செழியன். உணர்வுகளும், உணர்ச்சிகளும் இரண்டறக் கலந்து பிரவேசிக்கும் இவ்வகவெளி தேசத்தில் பெண்ணுக்குரிய தேவைப்பாடுகளையும் பெண் ஆற்ற வேண்டிய பணிகளையும் வெளிப்படுத்தி நிற்கிறது. செழியனின் ‘ஒரு பெண்ணின் காதல் கடிதம்’ என்ற கவிதை, நாட்டிற்காகப் போராடச் சென்றவனுக்கும் அவனுடைய காதலிக்கும் இடையிலான உரையாடலாக அமைகிறது. இதில் சொல்லும் சேதிகளும் சேரனின் ‘மீண்டும் அதே கதை’ என்ற கவிதையில் வரும் செய்திகளும் ஒரே நிகழ்வையே சித்திரிக்கின்றன.

“காலை. / திடீரென வந்தனர் / தலைமயிர் உதிரும்படி / அவன் தலையைச் சுவரில் மோதினர். / மேசை அதிர்ந்து / கவிழ்ந்து கொண்டது. / அதன்மேல் இருந்த / தொய்வுக் குளிகைகள் / காலணியின் கீழ் / நசுங்கித் தேய்ந்தன... / நிலத்தின் மீது இரத்தம் / உறைந்தது... / மறுபடி, மறுபடி / தொடர்வது இதே கதை”

இதன் தொடர்ச்சி செழியனின் கவிதையில் அதே எளிமையுடனும் அதே சொற்கட்டுமானத்துடனும் அதே வீச்சுடனும் வெளிப்படுகிறது.

**போராளிகளைத் தாயக மீட்புப் போராளிகள், மாற்றுக்கருத்துப் போராளிகள் என உருச்சிதைப்பு செய்யப்படாத காலத்தில் வெளிவந்த இத்தொகுப்பு கூடிய கவனத்தைப் பெற்றது. 1985.05.14ல் அனுராதபுரத்தில் அப்பாவிச் சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்டதைப் புலிப்பேராளிகள் நியாயப்படுத்திய சூழலில் அக்கொலையைக் கண்டித்து குரல் கொடுத்த கவிஞர்களில் நா.சபேசனும் செழியனும் முதன்மையானவர்கள்.**

“இங்கு / தொடர்ந்தும் நிலைமை / ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது / அவர்கள் / மறுபடியும் / கடந்தவாரம் / ஒரு கிராமத்தைச் சுற்றி வளைத்து / தாக்கியிருந்தனர் / அறுபது பெண்கள் உட்பட / பலர் மாண்டு போயினர். / இன்னும் பலர் சதை / வெறியர்களின் கோரத்தனத்திற்குப் பலியாகினர்...”

சேரனின் ‘ராணுவ முகாமிலிருந்து கடிதங்கள்...’, ‘ஒரு சிங்களத் தோழிக்கு எழுதியது’ முதலான கவிதைகளுக்கு ஒப்பாக அக்காலச் சூழ்நிலைகளை இக்கவிதை விளக்குவதுடன், திருமணம் தொடர்பாகப் போராளிகள் கொண்டிருந்த நிலைப்பாட்டையும் இக்கவிதைகள் எடுத்து விளக்குகின்றன.

ஈழவிடுதலைப் போராட்டம் திசைமாறிப் பயணித்த காலப்பகுதியில் அதன் கொடுமைகளை, பேராளிகள் சக போராளிகளை வேட்டையாடிக் கொன்ற நீசத்தனங்களைக் கண்ணுற்று, துயருற்று வருந்திய ஏக்கங்களை அதன் பாடுகளைக் கவிதையில் கொண்டுவந்ததில் செழியனுக்குப் பெரும்பங்குண்டு. செழியனின் ‘துப்பாக்கி மட்டுமே வைத்திருப்பவர்கள்’ இதனை நுண்ணுணர்வுத் தளத்தில் வெளிப்படுத்தி நிற்கிறது.

அது
ஒரு பின்னிரவு
மௌனம் உறைந்து போன
அந்த இரவுவேளையில்

என்ன கெட்ட கனவோ
தூக்கம் விழித்து
ஒரு பறவை கீச்சிட்டது...
நண்பர்களே
நாங்கள் தெரிந்துகொண்டோம்
அழகாய் வெண்பறவைகள்
வானத்தில் வட்டமிட்டு
சிறகசைத்துப் பறக்கையில்
திடீரென
பூமியில் விழுந்து மோதி
சிதறுவது போல
நிகழ்ந்து போய்விட்ட
உங்கள் முடிவுகளை
நாங்கள் தெரிந்துகொண்டோம்

எனத் தொடங்கும் கவிதை, "குறித்துக் கொள்கிறோம் / நண்பர்களே! / சுதந்திரத்துக்காய் போராடி / சுதந்திரம் மறுக்கப்பட்ட / மனிதர்களின் வரலாற்றை" என தொடரும். ஒரே நோக்கத்துக்காகப் போராட முனைந்தவர்கள் தம் பாதையிலிருந்து விலகி தம் சகோதரர்களையே வேட்டையாடுவது கண்டிக்கப்படவேண்டிய செயல் ஆகும். "இப்படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும், தமிழ்ப் போராளிகள் ஒன்றுபட்டே போராட்டத்தினை முன்னெடுக்கவேண்டும்" என்ற கோரிக்கையை மலையக மக்களின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் முதலிய அரசியல் தலைவர்கள் முன்னெடுத்தபோதிலும் சகோதரப் படுகொலைகள் ஈழமெங்கிலும் நிறுத்தப்படவில்லை.


இதன்பின் செழியனின் கவிதைகளைத் தேடி வாசிக்கும் ஒருவனானேன். ஒருநாள் மாலைநேரம் பேராசிரியர் செ.யோகராஜா அவர்களுடன் அவர் வீட்டில் செழியன் பற்றி உரையாடிக்கொண்டிருக்கும்போது நான் கேட்காமலே, 'அதிகாலையைத் தேடி' மற்றும் சுகனின் 'நுகத்தடி நாட்கள்' தொகுப்புகளின் போட்டோ பிரதிகளைத் தந்து உதவினார். இந்தக் காலகட்டத்தின் சிறந்த ஆளுமைகளில் ஒருவனாக செழியனைக் கண்டடைய அத்தொகுப்பு உதவிற்று எனலாம்.

பௌசர் தனது புத்தகக்கடையைத் தன் வீட்டிலிருந்து கொள்ளுப்பிட்டிக்கு மாற்றியபோது அங்கிருந்த றஸ்மியின் துணையோடு 'ஆளற்ற தனித்த தீவுகளில் நிலவு ஈரமற்ற மழை' தொகுப்பு எனக்குக் கிடைத்தது. 41 பக்கங்களில் 'மூன்றாவது மனிதன்' வெளியீடாக அத்தொகுப்பு வெளிவந்தது. செழியனின் தொகுப்பைப் படிக்காமலே விமர்சனம் செய்யும் மூத்த தலைமுறை ஒன்று ஈழத்தில் உள்ளதை நினைக்கும்போது வருத்தமாக உள்ளது. செழியனின் 'கடலை விட்டுப் போன மீன் குஞ்சுகள்' தொகுப்புக்கு முன்னுரை எழுதிய மு.பொ., 'ஆளற்ற தனித்த தீவுகளில் நிலவு ஈரமற்ற மழை' தொகுப்பை இருநூலாகக் கருதி தன் விமரிசனத்தை முன்வைக்கிறார். நூல் குறித்த தேடலும் அறிவின்மையுமே மு.பொ. இவ்வாறு எழுதக்காரணம் எனலாம். இந்நூல் செல்வம் அவர்களின் 'காலம்' வெளியீடாக வெளிவந்தது. 'காலம்' சஞ்சிகையைக் கொண்டுவருவதில் செழியனுக்கும் பெரும் பங்கு இருந்தது என்பதுவும் இங்கு நினைவுகூரத்தக்கது. கனதியும் துயரமும் நிறைந்த இக்கவிதைகளைக் கடந்து போவது யாருக்கும் எளிதன்று. சத்தியத்தின் சாட்சிகளாகவும் நிதர்சனத்தின் பதிவுகளாகவும் உள்ள இக்கவிதைகளில் கவிஞனின் அப்பழுக்கில்லாத உள்ளத்தைத் தரிசிக்கலாம். 'குழந்தைகளிடம் பொய்களைக் கூறாதீர்கள்' தொகுப்பு ஒன்றே என்னிடம் கைவசம் இல்லாதது. அக்குறையை, அவருடைய சகல கவிதைகளும் ஒருங்கிணைந்து வந்த 'கடலை விட்டுப் போன மீன் குஞ்சுகள்' தொகுப்பு ஓரளவுக்கு நிறைவு செய்தது எனலாம். கவிஞரும், நாவலாசிரியரும் எழுத்தாளரும், நாடகக் கலைஞருமான செழியன் மனிதநேயமிக்கவராகவும் விளங்கினார். நட்பாலும் அன்பாலும் வாழ்க்கையையும் கவியாக்கி வருபவர் என்னும் செல்வத்தின் கூற்று இதனை மெய்ப்பித்து நிற்கிறது.

ஈழ விடுதலை இயக்கங்களுக்கிடையலான உள்முரண்பாடுகளால் போராளிகள் வகைதொகையின்றி வேட்டையாடப்பட்ட சூழலில், இறந்து விடுவோம் என்று நிச்சயமாய்த் தெரிந்திருந்தும், வாழவேண்டும் என்ற அவாவோடு உயிரைக் கையில் பிடித்தபடி ஒரு போராளி தப்பிப் பிழைத்து, நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து போவதை, உணர்வும் உயிர்ப்புமாகப் பதிவு செய்யும் நாவலே, 'ஒரு மனிதனின் நாட்குறிப்பு' ஆகும். 1998ஆம் ஆண்டு 'கனேடியன் நியூ புக் பப்பிளிக்கேசன்ஸ்' வெளியீடாக, கனடாவிலிருந்து வெளிவந்த இந்நாவல் இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் தோற்றத்தையும், இயக்கப் பிளவுகளுக்குப்பின் விடுதலைப் போராளிகள் எதிர்கொண்ட நெருக்கடிகளையும் எடுத்து விளக்குகிறது. 'போராடக் கற்றுத் தந்த, போரட மட்டுமின்றி மனிதனாகவும் வாழவும் கற்றுத் தந்த தந்தைக்கு' இந்நூலை செழியன் சமர்ப்பணம் செய்துள்ளார். இந்நாவல் ஆரம்பத்தில் 'தாயகம்' இதழிலேயே உண்மைத் தொடராக வெளிவந்தது. 13.12.1986ல் தொடங்கும் குறிப்பு, 23.01.1987உடன் நிறைவு பெறுகிறது. கொலை அச்சுறுத்தலுக்குள்ளாகி 42 நாள் தலைமறைந்து வாழும் மாற்றியக்கப் போராளிகளின் அனுபவப் பகிர்வாக இந்நாவல் வெளிவந்திருந்தது. இது பின்னர் விரிவாக எழுதப்பட்டு 'வானத்தைப் பிளந்த கதை' என்ற பெயரோடு வெளிவந்தது. இந்நாவல் குறித்து பா.துவாரகனுடன் நான் நிகழ்த்திய உரையாடல்களும் விவாதங்களும் இன்றும் மனதில் பசுமையாக நிற்கின்றன.

கவிதா நிகழ்வு இடம்பெற்றபோது கவிதா நிகழ்வுக்குரிய பாடல்களை செழியன் எழுத விளைந்ததன் பயனாய்ப் பாடலாசிரியராகவும் பரிணமித்தார். இவரின் 'தோணிகள் வரும் ஒரு மாலை', 'புலரும் வேளையில்' முதலான இசைத்தட்டுகள் முக்கியமானவை. 'அகதிகளே அகதிகள்' என்னும் இவரின் முதலாவது பாடல், 'கடலை விட்டுப் போன மீன் குஞ்சுகள்' தொகுப்பில் இடம்பெறுகிறது.

செழியன் நாடகக் கலைஞராகவும் விளங்கினார். இவர் பிரதியாக்கம் செய்த மூன்று நாடகங்களும் முக்கியமானவை.


Honda
CHECKERED
FLAG EVENT
OUR BIGGEST EVENT OF THE YEAR IS BACK!
HONDA
2019
CR-V LX
$85/3.99% APR
Proudly built in Ontario. The 2018 best-selling SUV in Ontario.
2019
Civic LX
$61/1.99% APR
2019
Accord LX
$83/2.99% APR
HONDA
Formula Honda
Where You're Treated Like Family.
Shan Sarvananthan
Sales Manager
Cell: 416-720-1184
2240 Markham Road
(Just below Finch)
Scarborough
www.formulahonda.com
Rajah Tharmalingam
Sales Manager
Cell: 647-833-4998



இந்நாடகங்கள் அரங்காடல் நிகழ்வுக்காய் எழுதப்பட்டவை. 'பெருங்கதைகள்', 'வேருக்குள் பெய்யும் மழை', 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' என்ற நாடகங்கள் இன்றும் இவர் புகழ்கூறி நிற்கின்றன.

நண்பா, 'கறை படிந்த பாடங்களின் முடிவில் மக்கள் எப்போதும் புதிய வரலாற்றைப் படைப்பார்கள்' என, 'பெர்லினுக்கு ஒரு கடிதம்' கவிதையில் நீ அறை கூவியிருந்தாய். ஆனால் எம்மக்கள் என்றும் மாறாத மனங்களுடனும் ஆறாத காயங்களுடனுமே இன்றும் வாழ்ந்து வருகிறார்கள் என்பது ஈழதேசத்தின் பெருந்துயரம்.

ஈழத்தின் முன்னணிக் கவிஞராக அறியப்படும் செழியன் யாழ்ப்பாணத்தில் தாயக விடுதலைப் போராளியாக இருந்து பணியாற்றிய காலங்கள் மறக்கமுடியாதவை. அக்காலங்களில் அர்ப்பணிப்பும் துடிப்பும் மிக்க அரசியல் போராளியாகவும் அவர் விளங்கினார். பாசறைகளில் அவர் எடுக்கும் வகுப்புக்கள் அலாதியானவை என நண்பர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

போராட்ட காலத்தில் செழியன் செய்த தியாகங்கள் அளப்பரியவை. மாணவனாக இருந்த காலப்பகுதியில் GEUS எனப்படும் ஈழ மாணவர்ப் பொது மன்றத்தில் (General Union of Eelam Students) இருந்து ஈழதேசத்தின் விடுதலைக்காய், மக்களின் விடிவுக்காய் செழியன் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை. அன்றைய காலத்தில் ஈழ மாணவர் பொது மன்றத்தின் செயலாளராக டேவிற்சன் இருந்தாலும், உண்மையிலேயே அனைத்துப் பொறுப்புகளையும் நிர்வகித்தவராக செழியனே காணப்பட்டார். செம்மண் பூமியின் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுக்காய் புத்தூர், மத்தாளஓடை, ஊரெழு முதலான இடங்களில் பல்வேறு போராட்டங்களை நிகழ்த்தினார். செழியனின் மிக முக்கிய பணியாகக் கருதப்படுவது கல்வி வட்டங்களைத் தொடர்ச்சியாக நடாத்தியமை. ஈழ மாணவர் பொது மன்றத்தினரால் நடாத்தப்படும் இக்கல்வி வட்டம் பெரும்பாலும் உரும்பிராயில் அமைந்துள்ள செழியனின் வீட்டிலேயே நடாத்தப்பட்டது. இக்கல்வி வட்டத்தில் வங்காலையில் சுட்டுக் கொல்லப்பட்ட வண. பிதா செபஸ்டியான் அடிகளாரும் வண. பிதா சிங்கராயார் அடிகளாரும் வண. பிதா ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரும் கலந்து கொள்வர். இக்கல்வி வட்டம் போராளிகள் மக்களோடு மக்களாக இயங்கவும், மக்களின் விடியலுக்கு நேசக்கரம் நீட்டும் உறுப்பினரைத் தெரிவு செய்யும் நோக்கத்துக்காகவுமே நடாத்தப்பட்டன. இளைஞர்களிடம் தலைமைத்துவப் பண்புகளை வளர்க்கவும் இக்கல்வி வட்டம் உதவி செய்தது எனலாம். ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியூடாக பெண்ணுரிமைக் கருத்துக்களை முன்னிறுத்தி செழியன் மேற்கொண்ட பணிகளும் அளவிடமுடியாதவை.

இக்கால கட்டத்தில்தான் சிறுப்பிட்டி மக்களின் கூலி உயர்வுப் போராட்டம். கோரிக்கை மறுக்கப்பட்டு அம் மக்களின் வாழ்வாதரம் முடக்கப்பட்ட நிலையில் அவன் உருவாக்கிய ஜனசக்தி சவர்க்காரத் தொழிற்சாலை முக்கியமானது. மாணவர் பொது மன்றத்தின் பிரதான செயற்பாட்டாளராக விளங்கிய செழியனே 'ஜனசக்தி' சோப் விற்பனையையும் முன்னெடுத்தான். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுக்காய் உருவாக்கப்பட்ட இந்த சோப்பினை ஈழமக்கள் விடுதலை முன்னணி அமைப்பினர் வீடுவீடாகக் கூவிக்கூவி விற்பனை செய்தனர். கொழும்புத்துறை, கச்சேரி, குருநகர், தெல்லிப்பழை, சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, உரும்பிராய் என இந்த சோப் விற்பனை யாழ்ப்பாண குடாநாடு முழுவதும் களைகட்டியது. மில்க்வைட் சோப் பின்தள்ளப்பட்டு 'ஜனசக்தி' சோப் முன்னிலை பெறும் அளவுக்கு இந்த சோப் விற்பனை சூடு பிடித்தது எனலாம்.

இவ்வாறான போராளிகளின் உழைப்பும் ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலைக்கான குரலும் 'ஈழமக்கள் விடுதலை முன்னணி' என்ற அமைப்பை 1981ல் 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' என்ற பெயருடைய அமைப்பாக்கியது. இப்பின்னணியிலும் செழியனின் கரம் இருந்தது என்பதுவும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

புன்னாலைக் கட்டுவன் வீதிப் போராட்டம், புத்தூர் வீதிப் போராட்டம் என மக்கள் தோழனாய் நின்று செழியன் நடாத்திய போராட்டங்கள் ஏராளம். மனிதாபிமானத்துடன் செழியன் மக்களுக்காகச் செய்த களப்பணிகளும் அநேகம். 1978க்குப் பின்னர் 1980களில் மட்டக்களப்பினை மினி புயல் தாக்கியது. அத்தருணத்தில் ஈழ மாணவர் பொது மன்றத்தினர் யாழ்ப்பாண மக்களிடம் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் மாற்றுடைகளைப் பெற்று மட்டக்களப்பு, கல்லாறு, களுவாஞ்சிக்குடிப் பிரதேசமெங்கும் லொறி ஒன்றினூடாகக் கொண்டுசென்று சீ.வி.சி.கி உதவியுடன் பொருட்களை விநியோகித்தனர். இதில் செழியன், தமயந்தி (குட்டிவிமல்), சுகு, மோகன், ந. ரமேஸ், தாஸ் முதலான ஈழமக்கள் விடுதலை முன்னணி அமைப்பினர்களும் பங்கு பற்றினர். இச்செயற்பாட்டை ஈழ மாணவர் பொது மன்றத்தினர் முன்னெடுத்த வேளையில் கல்லாறு விதானையார் கொடுத்த பொய்யான தகவலின் அடிப்படையில் தாஸ் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

செழியனின் மிகப் பிரதான பணிகளில் ஒன்று, 1980களில் இருந்து 'ஈழ மாணவர் குரல்' என்ற பத்திரிகையை சுகுவுடன் இணைந்து வெளியிட்டமை. ஆங்காங்கே தன்னியல்பாய்ப் போராடிக்கொண்டும் போராட்ட எண்ணங்களுடனும் இருக்கும் மாணவர்களை அமைப்பு ரீதியாக ஒன்றிணைக்கவும் அவர்களுடன் தொடர்பைப் பேணுவதற்கும், உண்மை நிலையறியாது வழி தடுமாறி நிற்கும் மாணவர்களை ஒன்றிணைக்கவும் உருவாக்கப்பட்ட பத்திரிகையே 'ஈழ மாணவர் குரல்' ஆகும். திருப்பங்களும் முன்னேற்றங்களும் நிகழ்ந்து வரும் ஈழப் போராட்டத்தில் மாணவர் சக்தி முதன்மையானது, அவர்களும் போராட்டத்தில் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்னும் நோக்கில் இப்பத்திரிகை உருவாக்கப்பட்டது. புரட்சிகரப் போராட்டம் பொங்கி எழுவதை முதலாளித்துவ ஆதிக்கச் சக்திகளும் வர்க்கநலன் பேணும் மேட்டுக்குடிகளும் எதிர்த்து வந்தனர். அத்தடையை உடைத்து மாணவர்களுக்கு விழிப்பை ஊட்டி அவர்களையும் போராட்டத்தில் உள்வாங்கிக் கொள்ளும் நிமித்தம் உருவாக்கப்பட்ட இப்பத்திரிகை, தம் பணியினைச் செவ்வனே செய்தது. "தூக்கிய துப்பாக்கிகளின் வேலை முடியவில்லை, ஆயுதங்கள் அனைத்தும் ஆயத்தமாகவே உள்ளன" என்ற பத்மநாபாவின் அறிக்கைகளும் பத்திரிகைக்கு உரமூட்டின. இப்பத்திரிகையில் எழுதப்பட்ட 'அடைந்தால் தாய்நாடு இல்லையேல் வீரமரணம்' என்ற கட்டுரை, ஈழப் போராட்டம் சரியான பாதையில் செல்லவேண்டிய அவசியத்தையும் கூறி நிற்கிறது.

செழியனின் போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும், மக்கள் தோழனாய் நின்று சாதித்த சாதனைகள் ஈழ தேசம் என்றும் நினைவில் நிலைநிறுத்திக் கொள்ளத்தக்கவை. நிக்கரகுவா மக்களுக்கு ஆதரவு தெரிவித்து சென்னையிலுள்ள அமெரிக்க தூதுவரலாயத்தின் ஈழ மாணவர் பொது மன்றத்தின் அங்கத்தவர்களோடு செழியன் நடாத்திய ஆர்ப்பாட்டமும் எவராலும் மறக்க முடியாது. (ஈழ மாணவர் குரல் குரல் 04 அக்டோபர்1985.)

இதுபோல செழியனின் விசால அறிவுக்கு உரம் போட்ட பிறிதொரு செயல் ஜக்காரியா காலனி சூளைமேட்டில் இருந்து 'செந்தளம்' பத்திரிகையினை காத்திரமாகக் கொண்டுவந்தமையாகும். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சிறந்த பத்திரிகையில் பிறிதொன்று 'ஈழப்போராளி'. ஈழதேசம் முழுவதும் விடுதலைப் போர் தீவிரம் பெற்ற சூழலில் வெளிவந்த இப்பத்திரிகையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் உரைக்கப்பட்ட தாரக மந்திரம் இன்றும் அந்நாட் போல மனதில் உள்ளது. "தவறுகளைக் கண்டறிதல், சுயவிமர்சனம், விமர்சனத்துக்குட்படுத்தல், சரியான திசை நோக்கி முன்னேறுதல் என்னும் இயங்கியற் பொருள்முதல்வாதத்தின் அடிப்படையில் செயற்படுபவர்கள்தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள்". முற்போக்குச் சிந்தனையுடன் கட்டுக் கோப்பாக வளர்த்தெடுக்கப்பட்ட இவ்வியக்கம் பின்னாட்களில் இந்திய அரசின் மாய வலைக்குள் சிக்குண்டு தம் பணி மறந்து பயணித்ததுதான் வருந்தத்தக்க செயலாகும்.

கிராமிய உழைப்பாளர் சங்கத்துடன் இணைந்து, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடிய செழியனின் மனிதநேயப் பணிகளே அவனை விடுதலைப் போராட்டத்தின் அரசியல் போராளியாக முன்னிறுத்தியது. அவ்விடுதலைப் போராட்டமே அவனைக் கவிஞனாகவும் நாவலாசிரியனாகவும் நாடகாசிரியனாகவும் பரிணமிக்கச் செய்தது. நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து சென்ற குற்றவுணர்வும், தொடர்ந்து ஈழப் போராட்டத்தை இதய சுத்தியுடன் முன்னெடுத்துச் செல்ல முடியாத ஆதங்கமும் செழியன் என்னும் மகா கலைஞனை முடக்கிப் போட்டன. வாழ்க்கையைப் பனை மரத்தின் அடியிலும், வயல் வரம்புகளுக்குள்ளும் தொலைத்துவிட்டுப் புலம்பெயர்ந்து சென்று பனிப்புலங்களுக்கடியில் தன் வாழ்வை எழுதத் தொடங்கிய பறவை தனக்குள் புழுங்கி மனம் வெதும்பி தன்வாழ்வை முடித்துக்கொண்டது.



# நண்பன் செழியனுக்கு

ஆனந்த ப்ரசாத்

**தோ**ழனே...

நீயும் போய் ஒரு வருடமாகிறது. உயிரற்ற உன்னைப் பார்க்க முடியாமல் போனதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. செல்வம், குமார்மூர்த்தி, நீயுமாக முப்பது வருடங்களுக்கு முன்னம் என்னை விட்டுவிட்டு மாகாணம் மாறிப் போய்விட்டீர்கள். நான் அன்னியப்பட்டுப் போனேன். உன்னோடு அதிகம் பழகி உன்னை அறிந்துகொள்ள இயலவில்லை. ஒருமுறை நான் அங்கு வந்த போதில் நால்வருமாகக் 'கால'த்தோடு இணைந்தோம். தீவிரமாக எழுதினோம் சில காலம். திடீரென்று மூர்த்தி காலமாகிவிட... நீயும் நானும் ஏதேதோ காரணங்களால் உயிரோடு காலமாகிவிட... செல்வம் முழுத் துன்பங்களையும் தாங்கிக்கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறார். 'கால'த்தை ஆரம்பித்தவர்களில் இரண்டு பேர் இன்னமும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு... நான் இப்போது மீண்டும் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

ஒருமுறை நாளதுவரையில் நான் எழுதிய கவிதைகளைத் தொகுத்துத் தருமாறு தொலைபேசியில் உன்னிடம் கேட்டபோது... "ஆனந்தப்ரசாத் எனது நண்பன்... அதனால் கடமையாக இதனைத் தொகுத்துக் கொடுக்க வேண்டும்..." என்று கொள்கையளவில் ஒத்துக்கொண்டாய். பின்னர் அது நடக்கவில்லை. என்ன இருந்தாலும் நீயும் அரசியலில் ஈடுபட்டவன்தானே, போகட்டும். எனது பெரிய மகிழ்ச்சி என்னவென்றால் 'சொட்டு வாழ்வு அல்லது கிணறும் தவளையும்' என்ற எனது கவிதைத் தொகுதியை நீயே உனது கையால் வெளியிட்டு வைத்துவிட்டுப் போனாய். இந்த நிறைவு என்னோடு இறுதிவரை இருக்கும்.

தோழனே... நீ எவ்வளவு மகத்தானவன்! உனது மகத்துவங்களை அதிகம்பேர் அறிந்திருக்கவில்லை. நீ நாடகப்பிரதிகள் எழுதினாய்... எனினும் உனக்கு வெளிக்கு நடிக்கத் தெரியவில்லை. நீ ஒரு குடத்துக்குள் எரிந்து கொண்டிருந்தாய். பலர் அதிலிருந்து வெளிச்சம் பெற்றுக்கொண்டு போனார்கள். டொரண்டோவில் நீ இருந்த வதிவிடங்களில் சில தடவைகள் வந்து போயிருக்கிறேன். ஒவ்வொன்றும் இன்னமும் எனது நினைவுகளில். கடைசியாக உனக்குப் பிடித்த... நீ பாடிக்கொண்டிருந்த எனது பாடலை நான் பாடக் கேட்டுவிட்டுத்தான் போயிருக்கிறாய். போயிருக்கக் கூடிய வயதில்லைத்தான்... எனினும் உனது ஆத்மாவை உனது எழுத்துகளுக்குள்ளும் எங்களுக்குள்ளும் பதுக்கி வைத்துவிட்டுத்தான் அகன்றிருக்கிறாய். நாங்கள் இருக்கும்வரை அது எங்களோடேயே இருக்கும்.

இப்படிக்கு...
ஆனந்தப்ரசாத்



Honda Ad

# செழியன்: நற்பண்புகள் நிறைந்த ஒரு மனிதன்

**என்.கே. மகாலிங்கம்**

**சி**லருக்குப் பெற்றோர் சூட்டிய இயற்பெயரிலும் பார்க்க அவர்களே தமக்குத் தேர்ந்துகொண்ட புனைபெயர் நீடித்து வாழ்கிறது. சிவகுமார் என்ற செழியனும் அதில் ஒருவர்.

செழியன் யாழ்ப்பாணத்தில் இயக்கத்தில் இருந்தபோது காதலித்துத் திருமணம் செய்தவர். இருவரும் தமிழீழ இயக்கம் ஒன்றில் தீவிரமாக இயங்கியவர்கள். செழியன் அவ்வியக்கத்தில் மத்திய குழுவில் முக்கியமான அங்கத்தவராக இருந்தவர் என்றும் சொல்வார்கள். செழியனை நான் கனடாவில் கண்டபோது அவர் றயசேன் பல்கலையில் ஊட்டச்சத்து தொடர்பான கல்வி கற்றுக்கொண்டிருந்தார். அது தொடர்பாக ஒரு சிறிய நூலும் எழுதி வெளியிட்டிருக்கிறார். நண்பர்களுக்கும் ஊட்டச்சத்துள்ள உணவுகளைப் பற்றிச் சொல்லுவதுடன் அவருடைய வீட்டுக்கு நண்பர்களை அழைத்து அப்படியான உணவுகளை அவரே சமைத்தும் கொடுத்துள்ளார். இலங்கை இந்திய எழுத்தாளர்கள் இங்கு வந்தால் அவர்களையும் வீட்டுக்கு அழைத்து உணவு கொடுத்து உபசரித்துள்ளார். பலரை அழைத்துப் பெரு விருந்து கொடுக்காவிட்டாலும் சிறிய நண்பர்கள் வட்டத்தை அழைத்து விருந்து கொடுத்துள்ளார். இவ்வகை விருந்துகள் பெரும்பாலும் மதுவின்றி அமைவதில்லை.



செழியனைப் பொறுத்தளவில் மதுவை அதிகம் எங்கே பழகி இருப்பார் என்று ஊகிப்பது எளிது. அவர் ஓர் விருந்தினர் உணவகத்தில் வேலை செய்தார். (செழியன் வேலை செய்யாமல் இருந்தது மிகவும் குறைவு.) அது உயர்தர விருந்து உணவகம். அடிக்கடி விருந்துகள் நடைபெறும். அங்கே மது ஆற்று நீர் போலக் கிடைக்கும். விருந்து முடிந்த பின்னர், அங்கே வேலை செய்பவர்கள் மதுப் போத்தல்களுடன் வீடு செல்வதும் உண்டு. செழியனிடம் தோள் பை ஒன்று தோளில் எந்நேரமும் தொங்கிக் கொண்டிருக்கும். அதற்குள் பேனை, பேப்பர், புத்தகங்களுடன் போத்தலும் இருக்க ஆரம்பித்தது இந்தக் காலத்தில்தான் என்று நினைக்கிறேன். ஒருவர்

தான் குடிப்பது மனைவிக்குத் தெரியாது என்று சொல்லிக்கொள்ளலாம். நான் இதை நம்புவதில்லை. மனைவி தெரியாதது போல் இருக்கலாம். ஆனால் கணவன் செய்யும் எந்தச் செயலுமே மனைவிக்குத் தெரியாமல் இருப்பதில்லை. அவர்களிடம் அப்படியான மோப்ப சக்தியோ உள்ளுணர்வோ இருக்கிறது.

செழியன் சத்துணவில் கவனம் கொண்ட நாள்கள் சிறிது சிறிதாகக் குறைய, பின்னாளில் மதுவில் விருப்புக்கொண்டவராக மாறினார் என்பதுதான் நகைமுரண். அதற்கு உளவியல்ரீதியாகப் பலரும் பல காரணங்களைக் கூறலாம். மது தீமையானது என்று அவருக்குத் தெரியும். ஆனால் அதை அருந்துவதில் மிகுந்த சந்தோசத்தையும் அடைந்தார். ஒருமுறை ஒரு நண்பர் விருந்துக்கு அவரையும் எங்களையும் அழைத்திருந்தார். அந்த நண்பர் மது இல்லாத விருந்தொன்றை எல்லோருக்கும் அளித்தார். செழியனுக்கு மகா கோபம். இதற்காகவா இந்த மனிதர் இவ்வளவு தூரம் எங்களை அலைக்கழித்தார், இனிமேல் அவருடன் கதைப்பதில்லை என்று சபதம் எடுத்தார். செழியன் கோபம் கொள்பவரோ உரத்துப் பேசுபவரோ அல்லர். குடித்தாலும் நிதானம் இழக்காதவர். அன்பானவர்.

மது ஒரு நோயாக அவரைப் பற்றி இருந்த காலத்தில் அதற்கான நிவாரணத்தைத் தேடுவதற்கும் அடிக்கடி மருத்துவரிடமும் சென்றார். கடைசி ஆண்டுகளில் குடிப்பழக்கமுடையவர்களைச் சீர்திருத்தும் 'அல்கோஹோலிக் அனானிமஸ்' போன்ற இடங்களுக்கெல்லாம் போயிருக்கிறார். மதுவால் உடலைக் கெடுத்துக் கொண்டதன் பின்பு அங்கு சென்றிருக்கிறார். மருத்துவர்களால் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அவரின் உயிருக்குக் காலக்கெடுதான் கொடுக்க முடிந்தது. அது அவருக்குத் தெரிந்திருந்தது. தன் உடல்நிலை மோசமாகி விட்டதைத் தன் நண்பர்களுக்கு அடிக்கடி சொல்லுவார். முடிவும் அவருக்குத் தெரிந்திருந்தது. எல்லாரைப் போலவும் அவருக்கும் இன்னம் சிறிது காலம் வாழ விருப்பம் இருந்தது. அதனால் மருத்துவமனைக்கு அடிக்கடி போய் வந்தார். இறுதியில் அவராலேயே தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

இது குடிப்பழக்கத்தினைக் கைக்கொண்டவர்களின் சாதாரணமான கதைதான். ஆனால் செழியனைப் பொறுத்தவரை இந்தக்கதை ஒரு பெரும் சோகம். இயல்பிலேயே அவர் ஓர் இலட்சியவாதி. பதின்ம வயதிலிருந்தே பள்ளிப் பருவத்திலேயே அவர் ஓர் இலட்சியவாதி. மாணவப் பருவ காலத்திலே கையெழுத்துப் பத்திரிகை நடத்தியவர். தொழிலாளர்களுக்காக முன்னின்று உழைத்தவர். மாணவர் சங்கத்தில் பங்குபற்றியவர். கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் எழுதியவர். பிரசுரித்தவர். தன்னலமில்லாத வாழ்க்கை வாழ்ந்தவர். தமிழர் இனரீதியாக ஒடுக்கப்படுவதைக் கண்டு பல இளைஞர்களைப் போல தமிழீழ இயக்கத்தில் தீவிரமாகப் பங்காற்றியவர். அதிலும் ஒரு நகைமுரண். இவர் வன்முறையில் நம்பிக்கை அற்றவர். ஆயுதப் போராட்டம் இளைஞர்களின் கொள்கையாக இருந்தபோது இவர் ஒரு தொழிற்சங்கவாதி போல இயங்கியவர். ஆயுதப் போராட்டம் நெருக்கடிக்கு ஆளாகியபோது இவரே பிற ஆயுதக் குழுவால் உயிராபத்துக்கு உள்ளாகி உண்மையாகவே துரத்தப்பட்டவர். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மதில்களைப் பாய்ந்து தாண்டி, கேற்றுக்குள் ஒளிந்திருந்து மயிரிழையில் தப்பியவர். அப்படித் தப்ப முடியாதவர்கள் உயிரை விட்ட காலம் அது. 'என்னை பேர்லின் விமான நிலையத்தில் தேட வேண்டாம்' என்று வீராப்பாக ஒருகாலத்தில் கவிதை எழுதியவர், நாட்டை விட்டே ஓடி கனடாவில் தஞ்சம் புகுந்து வாழ்ந்தார். இவர் வாழ்வில் பல நகைமுரண்கள். என்ன செய்வது? அதுதான் வாழ்வின் உண்மை முகம்.

இயல்பாகவே கவிதை, கதை, நாடகம், பத்திரிகை, இயக்கம், அரசியல், நட்புகள் போன்றவற்றில் ஆர்வமாக இருந்த இவர் கனடாவிலும் அவற்றைச் செய்யாமல் இருந்திருந்தால்தான் நாம் அவரைப் புரிந்து கொள்ளாமல் இருந்திருப்போம். கனடா வந்த அவர், ஆரம்பத்தில் மொன்றியலில் வாழ்ந்தார். அக்காலத்தில் அதாவது, 80 களின் கடைசி ஆண்டுகளில் செல்வம், மூர்த்தி, ஜெயகரன் போன்ற ஒத்து கருத்துள்ள எழுத்தாளர்களைக் கண்டு கொள்கிறார். அவர்களுடன் கூட்டுச் சேர்கிறார். திரும்பவும் அவரின் வாழ்க்கை அவர் எண்ணம் போலவே வன்முறை அற்ற கலை வாழ்க்கையை நாடுகிறது. கவிதைகள், தன் வரலாற்றுக் கட்டுரைகள், நாடகங்கள் எழுதுகிறார். புத்தகங்கள் போடுகிறார். பழைய இலட்சியத்தின் எச்சங்களாக இயக்கங்களைப் பற்றிய விமர்சனங்கள், ஈழப் போராட்டத்தில் உண்மையான அக்கறைகள் தொடர்கின்றன. வாழ்வில் பிடிப்பும் ஏற்படுகின்றது. மனைவி, மூன்று குழந்தைகள், உற்றார் உறவினர், நல்ல நண்பர்கள் என்று அவர் வாழ்க்கை மகிழ்ச்சியாகவே சென்றது. ஆனால் இடையில் பிடித்த பிசாசு அவரை நீண்ட காலம் வாழ விடவில்லை.

குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் என்று எவருடனும் மிக அன்பாகப் பழகக் கூடியவர் செழியன். எவரையும் தலைவா, நண்பா, அண்ணை என்று அன்புடன் அழைப்பார். தலைவா என்ற பதம் இயக்கத்தினர் பாவித்த பதம் போலும். இடதுசாரிகளின் தோழர் என்ற பதம் போல. கோபம், எரிச்சல், பொறாமை, வஞ்சகம், புறம் சொல்லல் போன்ற குணங்கள் எதுவும் அற்றவர். தன் கருத்துக்களை மென்மையாகவே சொல்பவர். நகைச்சுவை உணர்வுள்ளவர். சினிமாப் பாடல்கள், ஈழத்து மெல்லிசைப் பாடல்கள் போன்றவற்றை மென்மையாகப் பாடக் கூடியவர். அவரின் பாடல்களில் ஒருவகைச் சோகம் இழையோடிக்கொண்டே இருக்கும். அதற்கான குரலும் மனமும் உடையவர். தன் முனைப்பு, புகழ், பணம், ஆடம்பரம், திமிர் ஆகியவை அற்ற நல்ல குணங்கள் நிறைந்த அவரைப் போல நல்ல பண்புள்ள ஒரு மனிதரைக் காண்பது அப்படி ஒன்றும் எளிதானதல்ல. எம் வாழ்வில் நிரப்ப முடியாததோர் இழப்பு அவருடையது.



# செழியனின் 'வானத்தைப் பிளந்த கதை' எனது படிப்பனுபவம்

## உஷா மதிவாணன்



**நா**ன் ஒரு வாசகி மட்டுமே! ஆனால் வாழ்க்கையில் மிகவும் விரும்பிச் செய்யும் ஒரு வேலையும் அதுவே! சிறு வயதில் இருந்தே படித்துக்கொண்டே இருப்பதில் விருப்பம். சம கால எழுத்தாளர்களில் ஒரு விசுவருபம் என்று நான் கணிக்கும் ஜெயமோகனின் மூலம் 'காலம்' செல்வத்தின் அறிமுகம் கிடைத்தது. செல்வம் என்னை செழியனின் புத்தக வெளியீட்டு விழாவிற்கு அழைத்தது மட்டுமில்லாமல், அந்த நூலைக் குறித்து என்னைப் பேசவும் சொன்னார். ஈழ எழுத்தாளர்களைக் குறித்த என் பார்வை மிகவும் குறுகியது என்று கூறியும் அவர் ஒரு இலக்கிய வாசகி என்ற பார்வையில் இருந்து அதைச் செய்தால் போதுமானது என்று கூறியதால் நானும் ஒத்துக்கொண்டேன். ஆனால் பல்வேறு காரணங்களினால் என்னால் அந்தக் கூட்டத்தில் பேச முடியவில்லை. மிக முக்கியமான காரணம் புத்தகத்தைப் படிக்க முடியவில்லை என்பதே.

ஆனாலும் செல்வம் அவர்களின் அழைப்பை ஏற்று அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். எனது நண்பர் வெங்கட் ரமணன் அந்நூலைப் பற்றிப் பேசப் போகிறார் என்று அவரது மின்னஞ்சல் மூலம் அறிந்திருந்தேன். அதுவும் ஒரு ஊக்கியாக இருந்தது. அத்துடன் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களும் வருகிறார்கள் என்பதும் அவரது உரையைக் கேட்கும் வாய்ப்பு அமைந்ததும் ஆவலைத் தூண்டியது.

அந்த விழாவிற்குச் சென்றதும் அந்த வித்தியாசமான சூழலை அனுபவித்ததும் மறக்கமுடியாத விஷயமாகும். வானத்தைப் பிளந்தவரை அணுகி நூலில் கையொப்பமிட வேண்டினேன். 'நட்புடன்' என்று எழுதியதின் தூண்டலில் அடுத்து வந்த ஒரு வாரத்தில் அந்நூலைப் படிக்க ஆரம்பித்தேன். புத்தகத்தை முழுமையாகப் படித்து முடித்தவுடன்தான் கீழே வைக்க முடிந்தது.

நல்ல அப்பாக்கள் விளைகின்ற விளை நிலத்திலே முளைத்து "என்ன பயம்! சாகிறது ஒரு தரம்தான்" என்று தகப்பனால் போடப்பட்ட உரத்தினால் வளர்ந்து, பிறகு வானத்தையே பிளந்த ஈழத் தமிழர்கள் எத்தனை பேர் என்பதை உணரும்போது மனம் பதைக்கிறது.

●

சக மனுஷியாக உலகில் அனைத்து நாடுகளிலும் நடக்கும் கொடுமைகளையும், துயரங்களையும், அநீதிகளையும் கேட்கும்போது அதிர்ந்துபோவேன். இந்நூலைப் படித்துக்கொண்டிருந்த அந்நேரத்தில் சக தமிழனின் மீளாத்துயரத்தைக் கூடவே இருந்து அணுஅணுவாக அனுபவித்தேன். நண்பர் செழியனின் நூல் ஒரு கற்பனை அல்ல, இது ஒரு கதை அல்ல, நமது கூடவே நடந்து கொண்டிருக்கும் உண்மை என்பதால், இந்தக் கதையை ஒரு வாசகியாக மட்டுமே ஒரு தூரத்தில் நின்று படிக்க முடியவில்லை.

வெகு நிதானமாக சைக்கிளில் ஏறி வீட்டைவிட்டு, வளர்த்த நாய் மரணத் துயருடன் வழியனுப்ப, 50 மைல் தூரத்தில் அடுத்த நாட்டில் இருக்கும் ராமேஸ்வரத்திற்கு 30 வருடங்களுக்கு முன் ஓடிப்போன செழியனை நேரில் பார்த்தபோது, மிகவும் சாத்வீகமான முகத்துடனும், எந்த நிகழ்விலும் அடியோடிக் கொண்டிருக்கும் அங்கதத்தை உணர்ந்து உள்ளூர நகைத்துக்கொண்டிருக்கும் முக பாவனையுடனும் இருந்தார்.

ஒரு ஆழ்ந்த நகைச்சுவை உணர்வுடன் எல்லா நிகழ்வுகளும் விவரிக்கப்பட்டிருந்தாலும், படிக்கும்போதே அடிவயிற்றில் கத்தியைச் செருகி அதைப் பாதி வரை மட்டும் இழுத்து நிறுத்தி ஆறாத காயமாகத் தக்க வைக்கும் விதமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. "என் இதயத்திலேயே இருக்கின்ற என் மகனே! என்னுடையதும் உன்னுடயதுமான மக்களுக்காக நீ இறந்து போய் விடு" என்று அழுது சிறைக்காவலர்களையே அதிர வைத்த ஒரு அயர்லாந்து தாயை மேற்கோள் காட்டி அவளைப்போல நீயும் இரு என்று தனது தாய்க்கு ஒரு 20 வயது குழந்தை எழுதுகிறது

இப்படித் தொடங்கும் இந்நூல், செழியனின் பள்ளிக் காலம், எழுத்து முயற்சி, நிருபரான கதை எனத் தொடர்ந்து, திடீரென இந்தியப் பயணத்திற்குச் சென்று இந்தியத் தமிழனின் இனப் பற்றினை எள்ளுகிறது. இடையில் ஆறு வரிகள் இந்நூலின் மூல நோக்கத்தை அடிக்கோடிடுகின்றன. ஒரு வரியைத் தருகிறேன்:

"மனிதன் இறந்து போவான் என்பது எவ்வளவுக்கு எவ்வளவு நிச்சயமோ அதைவிட நிச்சயம், மறைக்கப்பட்ட உண்மைகள் எல்லாம் வெளிவரும் என்பது."

நூலாசிரியர் எட்டாவது வகுப்பு படிக்கும்போதே (13 வயது இருக்குமா?) 'தமிழ் இளைஞர் பேரவையினர்' என்ற அமைப்பினைச் சேர்ந்த பொன்.சிவகுமாரனின் மறைவு இவரில் ஒரு பெரிய மன எழுச்சியைத் தருகிறது. அவ்வெழுச்சியின் செயல்பாடுகளை, ஒரு சராசரி பெற்றோரைப் போல் இவரது வீட்டார் தடுக்கவில்லை. தமிழரின் உரிமைக்கான முழக்கம் எழுப்பப்பட்ட தந்தை செல்வாவின் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் அன்றே, நாய் உட்பட்ட இவரது குடும்பத்திற்கு இரவுகளில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது புரிகிறது.

பிறகு இவரது எழுத்து முயற்சியும், நிருபரான கதையும் நகைச்சுவையாக விவரிக்கப்படுகின்றன. திடும் என ஆசிரியர் செல்லும் இந்தியப் பயணத்தின் இடர்ப்பாடுகள் எழுதப்பட்ட அளவுக்கான காரணங்கள் முதலில் தெளிவாக விளக்கப்படவில்லை. அக்காரணங்கள், மலைகளைத் தகர்க்க வானத்திலிருந்து தூதர்கள் வருவதேயில்லை என்று அடுத்த அத்தியாயத்தில் கோடிட்டுக் காட்டப்படுகின்றன. இந்நூல் ஒரு வரலாற்று நிகழ்வைப் படம் பிடிப்பதால் இம்மாதிரி கோடுகள் மட்டுமே வாசகனுக்குத் திருப்தி அளிக்குமா என்ற கேள்வி எழுகிறது.

அதுபோலவே பத்மநாபாவுடனான முதல் சந்திப்பும் அந்த நிகழ்வின் பின்புலத்தைத் தெளிவாக்கவில்லை. "எல்லா உண்மைகளும் தானாகவே தெரிந்து போய்விடும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு எப்போதுமே இருந்தது" என்று செழியன் இந்தச் சந்திப்பினைக் கடந்து சென்று விடுகிறார்

பிறகு, 'ஈழ மாணவர் பொது மன்ற'த்தில் செயல்பட்டு வரும் ஆசிரியர், எவ்வாறு முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பெரும் வெறிகொண்ட மன்ற உறுப்பினர்கள் தமிழ் முஸ்லிம் கலவரங்களின்போது அழகான, இளமையான முஸ்லிம் பெண்களை முன்னரே பார்த்து வைத்துப் பின்னர் கற்பழிக்கின்றனர்; முஸ்லிம்களும் அவ்வாறே எங்கட பிள்ளைகளையும் கற்பழிக்கின்றனர் என்பதையும் தோழரின் வாய் வழிச் செய்தியாகச் சொல்லிச் செல்வது படிப்பவருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. எந்தப் போராட்டத்திலும், எழுச்சியிலும் எவ்வகையிலும் ஈடுகட்ட முடியாத இழப்புகள் பெண்களுக்குத்தான் என்பது நம்மை மீண்டும் அதிர வைக்கிறது. இலங்கைப் போலிசாரிடமிருந்து இவர்களைக் காப்பாற்றும் தமிழ்ப் பொலிசாரும் தமிழ்ப் போராளிகளே என்பதையும் ஆசிரியர் நாசூக்காக விளக்குகிறார்

உள்மன எச்சரிக்கையைப் புறம் தள்ளாமல் இலங்கை இராணுவத்தினரிடமிருந்து தப்பிக்கும் இவர், தோற்றோடிப்போன குதிரை வீரனாக மாறிய கதையும் நன்றாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இராணுவத்தினரின் செயல்பாடுகளும், பொது மக்களின் அனுதாபமும், போராளிகளின் உயிர் வாழ்வதற்கான உத்வேகமும் ஒரு கதை போலச் சொல்லப்பட்டாலும், போராட்டம் வேகம் கொள்வதையும் உணர்த்துகிறது. அதுபோலவே ஆனந்தியின் மோட்டார் சைக்கிள் காணாமல் போய் மீண்ட கதை, யாழ்ப்பாணத்தில் கட்டுக்கோப்புள்ள ஒரு சமூகம் எவ்வாறு ஒரு காட்டு தர்பாராக மாறுகிறது என்பதையும் அதன் அவல நிலையையும் மிக ஏளனமாக நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.



நாம் அடுத்த தலைமுறையினருக்கு (அவர்களுக்கு என்பது அத்தியாயத் தலைப்பு!) எதையாவது சொல்லியே ஆக வேண்டும் என்று ஆரம்பிக்கும் செழியன், நாம் பிறந்த வீட்டைப் பார்க்க முடியாமல் போகும் துயரத்தில் ஆரம்பிக்கிறார். ஒரு பெரியம்மாவால் சிவசுதன் என்று பெயர் மாற்றப்பட்ட, தற்போது அமெரிக்காவில் வசிக்கும் இவரது கடைசி தம்பியின் பிறப்பினை ஒரு கவிதையைப் போல விவரிக்கும் இவர், அத்தம்பியின் மக்கள் "தமிழ் கஷ்டமான மொழி என்று முடிவெடுத்து விட்டார்கள்" என்பதைப் பதிவு செய்யும்போது ஒரு மொழியின் (செம்மொழி ஐயா!), கலாசாரத்தின், பண்பாட்டின் முடிவினை, இவரது குடும்பம் புலம்பெயர்ந்ததின் விளைவாக நேர்கொள்ளும் துயரமாகவே வாசகனால் உணர முடிகிறது. அதனூடேயே இராணுவத்திற்கும் இவருக்கும் ஏற்பட்ட உறவும் (!) மக்கள் செல்வாக்கு பெற்ற தோழர் ஐயா புளொட் இயக்கித்தினால் கொல்லப்பட்ட உண்மையும் நுட்பமாக விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில் இவர் சார்ந்த இயக்கத்தின் மீது இவருக்கும், சிந்திக்கக் கூடிய இவரது சக போராளிகளுக்கும் எழும் முரண்பாடுகளுக்கான காரணங்கள், முளைவிடத் தொடங்கிய ஒரு முட்செடியின் வீரிய விதையாக இவர்கள் நடுவே விதைக்கப்பட்டு, கடைசியில் சொந்த மண்ணிலிருந்து கிளம்பி வானத்தைப் பிளந்து வேறு மண்ணில் வந்து விழுவதற்கு அடிகோலுகின்றன.

புலிகளின் அமைப்பைப் பகிரங்கமாக விமர்சித்தவர்களும், ஒரு ஜனநாயக அமைப்பினைக் கட்டி எழுப்பியுள்ளோம் என்று மார் தட்டியவர்களுமான இவரது இயக்கித்தினர் எவ்வாறு புலிகளைப் போலவே மாறினர் என்பதைத் தெளிவாக விவரிக்கும் இந்த அத்தியாயம், படிக்கும் தமிழரின் மனதில் நம் இனம் இப்படித்தான் தன்னையே முயன்று அழித்துக் கொள்ளுமோ என்ற வேதனையையும் துயரையும் எழுப்புகிறது.

தமிழகத்தில் குடிகொண்டு ஈழத்தில் நடக்கும் போராட்டத்தினை வழிநடத்தும் தலைமைப் பீடத்திற்கும் ஈழத்தில் இருக்கும் தோழர்களுக்கும் இடையே எழும் முரண்பாடுகள் தலைமையினால் தீர்க்கப்படாமல், எங்கே தனது அமைப்பினரே தங்களைக் கொன்று விடுவார்களோ என்ற அச்சத்தைப் பல தோழர்களிடம் விதைப்பது மட்டுமில்லாமல், அவர்கள் இயக்கத்தை விட்டு வெளியேறவும் காரணமாக அமைவது இங்கே தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

தோழர் டேவிட்சனின் கதையும் 'புஞ்சி கொட்டியா' என்ற அத்தியாயத்தில் (புரிந்து கொண்டாயா என்பதன் தூய தமிழ் இதுவோ?) சொல்லப்படுகிறது. அவரும் இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசினார். ஒரு முக்கிய போராளி என்பது மட்டுமே அப்போது தெரிந்தது. இந்த அத்தியாயத்தைப் படித்தபின் அவர் எப்பேர்ப்பட்ட போராளி மற்றும் வீரர் என்பது மனதில் ஒரு மலைப்பை ஏற்படுத்துகிறது. இந்த எனது நூல் மதிப்பினை தோழர் டேவிட்சனின் கவனத்திற்குக் கட்டாயம் கொண்டுசெல்லுமாறு வேண்டுகோள் வைப்பதுடன், அவரது நாட்குறிப்புகள் எழுதப்பட வேண்டியதின் வரலாற்று முக்கியத்துவத்தை அறிந்து அவர் அதை எழுதவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். இந்த அத்தியாயம் ஈழப் போராட்டத்தின் உள் அரசியலையும், தனி மனித நுட்பங்கள், கோளாறுகள் எந்த அளவு ஒரு இனப் போராட்டத்தையே வேறு திசையில் திருப்பி விடுகின்றன என்பதையும் தெளிவுடன் விவரிக்கிறது.

தோழர்களே தோழர் ரமேஷைக் கடத்திய கதை எவ்வாறு இவரிடமும் மற்றும் நேர்மையாகச் சிந்திக்கிற தோழர்கள் மத்தியிலும் பதற்றத்தை உருவாக்கியது என்பதை நமக்குத் தெளிவாக்குகிறது. செழியனின் வார்த்தையிலேயே கூறினால்,

"அதுவரையில் புலிகளிடம் ஜனநாயகம் இல்லை, டெலோவில் ஜனநாயகம் இல்லை என்று சொல்லி வந்தவர்கள், தமது அமைப்பிலும் ஜனநாயகம் இல்லை என்பதை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்ட போது, பேசுவதற்கு வார்த்தைகள் ஏதுமின்றித் தலைகுனிந்து நிற்கவில்லை."

தோழர் ரமேஷைக் கடத்திய கதையைப் படித்து முடிக்கும்போது இந்த அமைப்பின் தலைமை ஜனநாயக மனப்பான்மை மட்டுமில்லாது, ஒரு அமைப்பினை வழி நடத்தும் செயல் திறனையுமே இழந்து செயல்பட்டிருப்பது வெளிச்சத்திற்கு வருகிறது. அப்போது ஜனநாயக விரோதச் செயல்களைத் தட்டிக் கேட்கும் மனப்பான்மையை இழந்துவிட்ட, தலைமையின் இந்நடவடிக்கைகளை நியாயப்படுத்துகின்ற மனநிலையில் இருந்த பெரும்பான்மையான தோழர்களுடன் ஒத்துப்போவது இவருக்கும் மற்ற நேர்மையாகச் சிந்திக்கிற தோழர்களுக்கும் இயல்பாக நடந்து விடுவதும் வாசகனுக்குப் புரிகிறது.

எதற்காக இந்த அமைப்பில் இணைந்தோமோ எதற்காக இந்த அமைப்பைக் கட்டி அமைத்தோமோ அந்த நோக்கங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டு ஜனநாயக விரோதப் படுகுழிக்குள் விழுந்துவிட்ட இந்த அமைப்பில்

இனியும் எதற்காக இருக்கவேண்டும் என்ற கேள்வியின் பதில் இவருக்கு வாழ்வின் திருப்புமுனையாக அமைந்து விடுகிறது.

அமைப்பை விட்டு மட்டுமல்ல, இந்தப் போராட்ட களத்தையே விட்டு விலகி, குடும்பத்தைப் பார்க்கவும், வெளிநாட்டுக்குப் போய்விடவும் முடிவு எடுப்பதற்கு, செழியனும் தோழர்களும் தள்ளப்படுகிறார்கள். அதற்கு முன்பு விசுவானந்த தேவர் போன்ற பலர் இவர்களின் முடிவினைப் மறுபரிசீலினை செய்யத் தூண்டினாலும் விசு அவர்களின் கொலையும் அவரது நினைவுகளும், கடைசிவரை படிக்க முடியாமல் போன அவரது கடிதமும் செழியனின் மனதில் பெரும் பாரமாக இன்றும் இருப்பது, இவரைப் போன்றோர் இதுபோலச் சுமக்கும் பாரங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ என்ற மலைப்பை நமக்குள் விதைக்கிறது.

பிறகு ஆரம்பிக்கிறது இனப்பற்றினால், போராட்ட குணத்தினால், ஜனநாயகப் பற்றினால் போராடக் கிளம்பிய இவரையும், இவரது தோழர்களையும் வேட்டையாட, அனைத்துத் தரப்பினரும் ஒன்று திரண்டு கிளம்பிய கதை. ஒரு அணிலைப் போலப் போராட்டத்திற்கு உதவக் கிளம்பினேன் என்கிறார். அணிலும் உயிருக்கு அஞ்சினால் ஒலிம்பிக் ஓட்டக்காரனைவிட வேகம் பிடிக்கும் என்பதையும் எழுதுகிறார். படிக்கும்போது நமது இதய ஓட்டம் வேகம் பிடிக்கத் தொடங்குகிறது.

எனது இதயம் என் வாய்க்கு வந்து விட்டது என்று சொல்வார்கள். இந்நூலைப் படிக்கும்போது அடிக்கடி இது படிப்பவருக்கு நிகழ்கிறது. இது உண்மைக் கதை ஐயா, கற்பனை அல்ல என்ற உண்மை நம்முடன் தொடர்ந்து பயணிப்பதால் ஏற்படும் அந்த உணர்வு, ஆனி பிராங்க்கின் நாட்குறிப்புக்களைப் படித்தபோது ஏற்பட்ட உணர்வாகும். பிறகு, இணைந்த அமைப்பை விட்டுவிலகி சொந்த மண்ணிலும் வாழ வகையின்றிக் குடும்பத்துடன் புலம்பெயர்கிறார்.

*13 மார்கழி 1986லிருந்து 29 தை 1987* வரை இவரது வாழ்க்கையில் மட்டுமல்ல, நமது நினைவிலும் மறக்க முடியாத நாட்களாக மாறுகிறது. ஈழத்தில் இருந்த இயக்கங்களை ஒவ்வொன்றாகத் தடை செய்த 'அந்த' இயக்கம், இவரது அமைப்புடன் கடுமையாக மோதி அழிக்க முற்படும்போது, இவர்களது தற்போதைய நிலைப்பாடு அவர்களுக்குத் தெரியாமல் இவர்களும் வேட்டையாடப்படுகிறார்கள். முதலில் விடுதலைப் புலிகள் இவர்களைக் குறி வைத்துத் துரத்துகிறார்கள். பால்நிலவும் தப்பிச்செல்வர்களுக்கு இடையூறாகி நூலாசிரியரிடம் வசை வாங்குகிறது. உடல் படுத்தும் பாடுகள் உயிரைக் காக்கும் பொருட்டுச் சகித்துக் கொள்ளப்படுகின்றன.

வாழைத்தோட்டமும், மிளகாய்த் தோட்டமும், மரவள்ளித் தோட்டமும் அடைக்கலம் தருகின்றன. மகாலிங்க அண்ணார், அடைக்கலம் மறுத்தவரிடையே மறுபடியும் தங்க வைக்கிறார். வசை பாடிய நிலவு திரும்ப வந்து சிரிக்கிறது.


"யாருடைய நிலைமைக்காக இது சிரிக்கிறது? தேசத்தை நேசித்த என்னைப் பார்த்தா? தேசத்தைப் பார்த்தா? இல்லை இந்த மனிதர்களின் விசித்திரமான நடத்தையைப் பார்த்தா?" என்று இந்த கவியின் மனம் அந்நிலையில் கூட கேள்வி எழுப்புகிறது.

இப்படியாக ஆரம்பிக்கிற இவரது தப்பியோடல் ஒரு விறுவிறுப்பான நாவலைப் போல விவரிக்கப்படுகிறது. எல்லாப் பக்கங்களில் இருந்தும் துரத்தப்படுகிறார்கள். தப்பிவிட்டார்கள் என்பது தெரிந்தும்கூடத் தப்புவார்களா என்று நாமும் தவிக்கிறோம். நூலாசிரியர் இங்கிருந்து ஆரம்பித்து நம்மை ஒரு நிமிடம் கூட நூலைக் கீழே வைக்க விடவில்லை. ஈழப் போராளிகளின் மற்றுமொரு பக்கம் மிகத் தெளிவாகப் படிப்பவனுக்குப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

புலம்பெயர்ந்த பல துயரக்கதைகளைப் படிக்கும்போது அவை கண்ணீரை வரவழைத்திருக்கின்றன. அவை எனது மனித இனத்தின் துயர். ஆனால் இந்த நூல் என் இனத்தின் துயர். கண்ணீர் மட்டுமல்ல, கூடவே ஆழ்ந்த வருத்தமும் கூடக் கை கோர்த்து எழுகிறது. உணர்வுகளை ஒதுக்கிவிட்டுக் கொஞ்சம் புத்தியுடன் இந்நூலைப் பார்க்குங்கால் இவனுங்க திருந்தவே போறதில்லையா (மூளையே இல்லாத துப்பாக்கிகள் சொந்த சகோதரர்களையே நோக்கி நீட்டப் பட்டதைக் கண்டித்தது தவறா?) என்கிற நிராசை அடிக்கடி எழுகிறது. ஆனாலும் பெரியவரையும், சிறியவரையும், ஈழத் தமிழ் போலிசாரையும், டேவிற்சன், பாலா, ஜெகன், பரதன், ஜோதிலிங்கம், சூரியன், தமயந்தி ஆகியோரையும் பற்றிப் படிக்கும்போது இவை எல்லாம் இப்படி நடக்க வேண்டும் என்று இருக்கிறது என்ற பிரபஞ்ச ஒழுங்கை நினைவுகூரத் தோன்றுகிறது.


இது ஒரு போராளியின் நாட்குறிப்புகள் என்பது உண்மையா யினும் படிப்பவரை ஈர்த்து ஒரு விறுவிறுப்பான நாவலைப் படிக்கும் அனுபவத்தை இது ஒரு சாதாரண வாசகனுக்கு அளிக்கிறது.

ஆனாலும், ஒரு இரண்டாயிரம் பக்கத்துக்கான வரலாறு இந்த நாட்குறிப்பில் ஒளிந்திருக்கிறது என்பதுவும், அதுவும் வெளி வரும் காலம் அருகில் உள்ளது எனவும் நம்ப முடிகிறது. இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும், அன்னையரும், சகோதிரிமார்களும், மனைவிகளும் தங்களது நாட்குறிப்பையாவது எழுதுவார்களா? ஒரு இலங்கைத் தோழி 10 வருடங்களுக்கு முன் சென்னையில் ஒரு குழுவில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள நேர்ந்தபோது அவரது உடம்பில் தன்னிச்சையாக எழுந்த நடுக்கத்தையும், அந்த மரண பயத்தையும் நேரில் உணர்ந்த நான், எமது பெண்டிரின் அனுபவங்களை இந்த உலகம் அறிய எழுத வேண்டும் என விழைகிறேன்.



# கவிஞனை நினைவு கொள்வது எப்படி? அல்லது அல்லது

சேரன்



கவிஞனை நினைவு கொள்வது எப்படி?
உண்மையான மனிதன் அவன்தான் என்பதை
நீங்கள் உய்த்துணரும் பொழுதிலா?

அல்லது

இரண்டும் சில்லும் வெடித்துச் சிதறியபின்
கல் பரவிக் கிடக்கும் ஒழுங்கையில்
வெறுங்காலோடு
சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வருகையில்
சிகரெட் பற்ற வைக்க முடியவில்லையே என்று
அவனுக்கு ஆதங்கம் மேற்பட்ட பொழுதிலா?

அல்லது

அக்கினி நட்சத்திரம் எரித்த பிற்பாடு
எஞ்சியிருக்கும் முருங்கைக்காய் போன்ற உடலில்
தசையை விட மயிர்கள் எழுச்சி பெற்றிருந்த
காலங்களில்
ஓர்மையும் விட்டுக்கொடாமையும்
தோள் துவண்டாலும்
துப்பாக்கியைச் சுமந்தே தீர்வது என்ற உறுதியில்
நடந்த கால்களையா?

அல்லது

மழைத்தாரைகளுக்கு இடையில்
நனையாமல் நளினமாக நடந்து போவது எப்படி என்று
கற்றுத் தந்த நாட்களையா?

அல்லது

வீட்டின் துளசி மாடத்தின் பின்புறம்,
காதலில் செய்யத் தவறி விட்ட
எல்லாப் பாவங்களையும் நினைவு கொண்டு

காதலியின் அடிவயிற்றை முத்தமிட்ட போது
திருட்டுத்தனமாக எட்டிப் பார்த்த
நள்ளிரவுக் கொள்ளிக் கண்ணனுக்கு
ஏ.கே.நாற்பத்தேழைக் காட்டிய கணத்தையா?

அல்லது

வன்னிப் பெருங்காட்டில்
ஒருவருமே பெயரறியாத மரத்தின் கீழ்
வெறுங்கையோடு நின்ற உன் தோழனை
அவர்கள் புன்னகையோடு சுட்டுக் கொன்றதைக்

கேள்வியுற்றபோது
உன் முகத்தில் படர்ந்த
ஆற்றாமையின் வரைகோடுகளையா?

அல்லது

அநியாயமான வீரச்சாவை விட
வாழ்தலே போராட்டத்தின் மையக் கண்ணி என்று
இடைவிடாது ஒலித்த உன் குரலையா?

கொலைகாரர்கள் பட்டினத்தைச் சூழ்ந்து விட்டார்கள்
நண்பர்கள், தோழர்களின் சிதைகள்
ஆங்காங்கே எரிகின்றன
தப்பிச் செல்வதற்கு எஞ்சியிருக்கும் ஒரே பாதையும்
அரை நாளும் இனி இருக்காது


ஆணவமற்றவன்
அங்கதத்தில் திளைப்பவன்
அன்பின் செழிப்பில் அச்சம் தவிர்த்தவன்
சாக மறுத்தவன்

அன்று பத்திரமாக அனுப்பி வைத்தோம்
அப் பெரும்பொழுதுக்கு முடிவில்லை

கவிஞனை நினைவு கொள்வது எப்படி?

களிப்பும் கேளிக்கையும் தீவிர உரையாடலும்
உயிரேற்றிய
அவன் வீட்டு வரவேற்பறையில்
நண்பர்கள் குரல் இப்போது இல்லை
எல்லோரும் தொலைவு கொண்டு போய் விட்டார்கள்
கவிதையின் அந்தரங்கத் தீப்பிழம்பாய்
ஒலி எழுப்பிய மதுக் கிண்ணங்கள்
கரைந்து போய் விட்டன
யார் யாருடைய வீட்டுச் சுவர்களில்
அவனுடைய முகம் அழியா நினைவாகத் தொங்குகிறது
எனத் தெரியாது
அவனை இழந்தபின் ஒரு துளி கண்ணீர்
பெரும்பாறை போலக் கனக்கிறது
விரியாத மயில் தோகை போல
கவிஞனின் நினைவுகள் எல்லா அறைகளிலும்
மாறி மாறி உழல்கின்றன

சரிதான்
போய்விட்ட கவிஞனைப் போக விடுங்கள்
அல்லது...



# செழியன் நேர்காணல்

‘காலம்’ செல்வம் அருளானந்தம்

*(பிப்ரவரி 2010ல் ‘தீராநதி’ இதழில் வெளியான நேர்காணல்.)*



**ஈழப் போராட்டத்தின் இலக்கிய முன்னோடிகளில் ஒருவர், கவிஞரும், நாடகக்காரருமான செழியன். கவிதை மனம்தான் செழியனைப் போராட்டத்தில் முன்னோடியாக்கியது. தமிழியல் வெளியீடாகிய ‘மரணத்தின் வாழ்வு’ கவிதைத் தொகுப்பின் மூலம் அறிமுகமாமீனவர் இவர். இதுவரை ஐந்து கவிதைத் தொகுப்புகள் வந்துள்ளன. இவற்றைவிட ‘ஒரு மனிதனின் நாட்குறிப்புகள்’ என்ற இவரது சுயவரலாறு, ஈழத்துத் தமிழ் வாசகப் பரப்பில் ஒரு அதிர்வைக் கொடுத்தது. இவரது மூன்று முக்கியமான நாடகங்கள் ரொறன்டோவில் மேடையேறி உள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக செழியன் விடுதலைப் போராட்ட அரசியலுக்கு முன்னதான கிராமிய உழைப்பாளர் சங்கத்துடன் இணைந்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக உழைத்தவர். இந்தப் பயிற்சிக்குப் பின்னர் தன்னை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துடன் இணைத்துக் கொண்டவர். ‘பெர்லின் விமான நிலையத்தில் வந்து இறங்கும் அகதிகள் கூட்டத்தில் என்னைத் தேடி அலையாதே’ என்று எழுதிய செழியனை, ஈழ விடுதலைப் போராட்டத்தின் விதி கனடாவில் சந்திக்க வைத்தது ஒரு முரண்நகை.**

**செழியன் என்ற பெயர் கேள்விப்பட்டுப் பல சகாப்தங்கள் ஆகிவிட்டன. எல்லா நம்பிக்கையையும் இழந்த இன்றைய நிலையில் செழியனுடன் பேசும்போது, சில நம்பிக்கைகள் துளிர்க்கின்றன.**

# தவறுகளில் இருந்து எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டும்!

**தீராநதி: இலங்கையில் உள்ள தமிழர்கள் எவருக்கும் சுதந்திரமாகத் தமது கருத்தைச் சொல்வதற்கான ஒரு சூழல் தற்போது அங்கு இல்லை. புலம்பெயர்ந்து வாழ்கின்ற ஈழத் தமிழர்களுக்கு மட்டும்தான் சுதந்திரமாகத் தங்கள் கருத்துகளைச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இலங்கைத் தமிழர்களின் சுதந்திரத்திற்காக எண்பதுகளில் போராடத் தொடங்கிய இளைஞர்களில் ஒருவரான நீங்கள், இன்று புலம்பெயர்ந்து வாழ்கிறீர்கள். போராட்டத்தில் பங்கெடுத்தும், பின்னர் விலகியிருந்து பார்த்தும் வந்துள்ள உங்கள் கடந்த கால் நூற்றாண்டு அனுபவத்தின் அடிப்படையில், இன்றைய நிலை பற்றிய உங்கள் அவதானிப்பைச் சொல்ல முடியுமா?**

**செழியன்:** 'கடந்த அறுபது வருட கால இலங்கைத் தமிழர்களின் சுதந்திரப் போராட்டம் படுதோல்வி அடைந்துவிட்டது என்பதுதான் உண்மை. இப்போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த போதும், தோல்வியடைந்து கொண்டிருந்த காலப் பகுதியிலும் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தனர். வன்னி முற்றாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததின் பின்னர், இப்போது இந்தத் துன்பங்களும் வேதனைகளும் அதிகரித்துள்ளன. வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் மட்டுமல்ல; இலங்கை முஸ்லீம் மக்கள், மலையகத் தமிழர்கள் என்று இலங்கைக்குள் எல்லாச் சிறுபான்மையின மக்களும் இன்று அச்சத்திற்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் தங்களுக்கு எந்தவிதமான கௌரவமான அரசியல் தீர்வும் கிடைக்காது என்று நம்புகின்றனர். தமது பாரம்பரிய நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிகழலாம்; தமது சொந்த மொழி, மதம், கலாசாரம் மெல்ல மெல்லப் பறிக்கப்பட்டு விடும் என்ற எண்ணப்பாடும் உருவாக ஆரம்பித்துள்ளது. புலிகளை அழித்ததின் பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி, 'இனி இலங்கையில் சிறுபான்மை இனம் என்று ஒன்றும் கிடையாது' என்று கூறியது மிகக் கவனமாகக் கருத்திற்கு எடுக்கப்படவேண்டிய விடயம்.

**தீராநதி: ஆனால், இலங்கை அரசுடன் சேர்ந்து இயங்கும் தமிழ் அரசியல் கட்சிகள், இன்னும் இலங்கையில் வாழும் சிறுபான்மை இன மக்களுக்கு அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று சொல்கின்றனவே. இதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

**செழியன்:** அவர்கள் இலங்கை அரசின் பாதுகாப்பு அரண்களுக்குள்ளும் இலங்கை அரசாங்கம் வழங்கும் மாதாந்த பணக்கொடுப்பையும் நம்பி வாழ்பவர்கள். அரசுக்கு எதிராக எந்த விமர்சனத்தை முன்வைத்தாலும் அவர்களின் உயிரே பறிக்கப்படும் என்ற நிலையில் நாட்களைக் கடத்திக் கொண்டிருப்பவர்கள். அவர்களால், விடுதலைப்புலியின் அழிவுக்குப் பிறகு இலங்கையில் இனிமேல் சிறுபான்மை இனங்களின் பெயரில் கட்சிகளே இருக்கக் கூடாது என்ற எண்ணக்கருவைக் கொண்டுள்ள இலங்கை அரசிடம் இருந்து, சிறுபான்மையின மககளிற்கான அரசியல் தீர்வைப் பெற்றுத்தர முடியும் என எப்படி நம்புவது? கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமது சொந்தக் கட்சியின் முகத்தையே அரசிடம் இழந்து போனவர்கள் அவர்கள் என்பதும் கவனத்துக்குரியது. ஏனைய கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் இருக்கக்கூடிய கருத்துச் சுதந்திரத்தை மறுத்து அவர்களைப் புலிகள் தடைசெய்யவும் கொலை செய்யவும் ஆரம்பித்ததால் நிகழ்ந்த ஒரு அனர்த்தமே இது. இதை இலங்கை அரசு மிகத் தந்திரமாகப் பாவித்துக் கொண்டது. 'விடுதலைப்புலிகளை அழித்த உடன் ஒரு அரசியல் தீர்வுத் திட்டம் உடனடியாக அமுலுக்கு வரும்' என்று அரசுடன் சேர்ந்து இயங்கும் கட்சிகளுக்கு நம்பிக்கை ஊட்டப்படுவது உண்மைதான். ஆனால், அந்த நம்பிக்கை இன்று அவர்களுக்கே இல்லை.

**தீராநதி: இலங்கைத் தமிழர்களின் போராட்டம் தோல்வியடைய தமிழீழ விடுதலைப்புலிகளின் தவறுகள் மட்டும்தான் காரணமா?**

**செழியன்:** வரலாற்றை விஞ்ஞான ரீதியாகப் பார்க்கின்றவர்கள் அப்படி ஒரு முடிவுக்கு வரமுடியாது. கடந்த அறுபது வருட காலமாக இப்போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும், எல்லாச் சிறுபான்மை இன மக்களும், இந்தப் போராட்டத்தின் தோல்விக்குக் காரணமாகின்றனர். யாருமே மற்றவரைக் கைகாட்டிவிட்டுத் தப்பிக்கொள்ள முடியாது என்றுதான் சொல்லுவேன். இலங்கையில் ஒரு பலமான சிறுபான்மை இனமாக இருந்த மலையகத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்கள் ஆக்குவதற்கு ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி 1948ம் ஆண்டு சிங்கள இனவாத அரசிற்கு ஆதரவளித்த அன்றே, நாம் எமது ஒட்டுமொத்த தோல்விக்கான தலைவிதியை எழுதிக்கொண்டோம். பின்னைய காலத்தில் இருந்த எல்லா ஆயுதம் தாங்கிய இயக்கங்களும் ஏறத்தாழ ஒரே முகத்தைக் கொண்டவைதான்.

இந்த அமைப்புகளுக்குள் கருத்துச் சுதந்திரம் இருந்ததில்லை. உள்ளியக்கக் கொலைகளை நடாத்தின. மட்டுமல்லாமல், மக்களையும் கொன்றன. விடுதலையை மக்களுடன் இணைந்தே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மறந்து, மக்களிடம் இருந்து மெல்ல மெல்ல அந்நியமாகின. எல்லா ஆயுதப் போராட்ட அமைப்புகளும் முஸ்லீம் சிறுபான்மை யினரின் அவநம்பிக்கைக்கு உள்ளாகின. ஐக்கிய முன்னணியில் உண்மையான நம்பிக்கை வைக்காமல் செயல்பட்டன. தமிழ் மக்களின் விடுதலைக்காக இந்திய அரசில் தங்கியிருந்தன. இதில் புலிகளின் தவறு எண்ணிக்கை

**செழியன்: 'நான் மட்டும் தவறே செய்யவில்லை' என்ற எண்ணக்கருயாரிடமுமே இருக்கமுடியாது என்ற கருத்துடையவன் நான். எனவே, நான் தவறே செய்யவில்லை எனச் சொல்லமாட்டேன்.**

அளவில் அதிகமானது என்று மட்டும் கூறலாம். இவற்றுக்கு மேலாக ராஜீவ்காந்தியின் கொலை. புலிகளின் இடத்தில் இன்னுமோர் இயக்கம் இருந்திருந்தாலும்கூட தமிழ் மக்களின் போராட்டம் தோற்றுப் போயிருக்குமே தவிர, ஒருபோதும் வென்றிருக்காது. ஒருவேளை, இன்னும் பல வருடங்களுக்கு முன்னரே தோற்றுப்போயிருக்கலாம்.

**தீராநதி: விடுதலைப்புலிகள், ராஜீவ் காந்தி கொலையின் மூலமாக இந்தியாவைப் பகைத்துக் கொண்டதுதான் அவர்களது அழிவுக்கு முக்கியக் காரணம் என்று கருதுகிறீர்களா?**

**செழியன்:** இந்தியா, விடுதலைப்புலிகளைப் பகையாளியாகக் கருதியமைக்கோ, அவர்களை அழிக்க வேண்டும் என்று முடிவெடுத்ததற்கோ, ராஜீவ் காந்தியின் கொலை மட்டும் காரணம் இல்லை. இந்தியாவினால் வழங்கப்பட்ட 13வது திருத்தச் சட்டம் தமிழ் சிறுபான்மையினருக்கான நீதியான தீர்வு கிடையது என எப்போது புலிகள் கருத்துத் தெரிவித்தார்களோ அன்றில் இருந்தே புலிகளின் நாட்கள் எண்ணப்பட்டன. இதனுடன், பேச்சுவார்த்தை மேன்மைகளை சரிவரப் பயன்படுத்திக்கொள்ளாத புலிகளின் தவறுகளும் சேர்ந்துகொண்டது. ஆனால், புலிகளின் அழிவுக்குப் பிறகு அந்த மேடையே காணாமல் போய்விட்டதே. இதற்கு என்ன சொல்வது? புலிகள், பேச்சுவார்த்தை மேடைகளைச் சரியாக பாவித்து இருந்தாலும் தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வு கிடைத்திருக்குமா, அதை இந்தியா அனுமதித்திருக்குமா என்பது எனக்குள் ஒரு கேள்வியாக இன்று எழுகிறது.

**தீராநதி: இலங்கைத் தமிழர்கள் சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவின் பங்கை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

**செழியன்:** யாழ்ப்பாணத்தில், எங்கள் கிராமத்தில் ஒரு காட்டு வைரவர் கோயில் இருந்தது. வருடத்திற்கு ஒரே ஒரு தடவை அங்கு திருவிழா நிகழும். இந்தத் திருவிழாவிற்கு, தமது பழைய நண்பர்களை ஒரே நேரத்தில் பார்ப்பதற்கு, இலங்கையின் பல பகுதிகளிலும் பணிபுரிந்த எங்கள் கிராமத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தவர்கள், வியாபாரிகள் மற்றும் உறவினர்கள் எல்லாரும் வருவார்கள். இந்தத் திருவிழாவிற்கென உரும்பிராய் மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களில் உள்ள வீடுகளில் கிடாய் ஆடுகள் வளர்க்கப்படும். விசேடமான கிடாய் ஆடுகள் தெரிவு செய்யப்பட்டு, நோய், அங்கவீனங்கள் எதுவுமே வந்துவிடாமல் கவனமாகப் பேணப்பட்டு, செல்லமாக வளர்க்கப்படும். உணவு விடயத்திலும் புண்ணாக்கு இவர்களுக்குத் தினமும் தீத்தப்படும். விசேட இலைகளான பலா இலை, கிளுவை இலை இந்த ஆடுகளுக்குத் தாராளமாக வழங்கப்படும். மதமதப்பாகவும் மினுமினுப்பாகவும் காளையைப் போல வளர்ந்த இந்தக் கிடாய்களை மற்ற ஆடுகள் பொறாமையாகப் பார்க்கும். திருவிழா நாள் அன்று இந்தக் கிடாய்களைக் குளிக்க வைத்து, சந்தனப் பொட்டிட்டு, கழுத்தில் மாலை இட்டு அழகான நடைபவனம் அழைத்துச் செல்வார்கள். வீதிகளின் இருபுறமும் மக்கள் நின்று இந்தக் கிடாய்களை ஆரவாரம் செய்து பிரமிப்பாகப் பார்க்க, ராஜநடை நடந்து இந்தக் கிடாய்கள் கர்வமாகச் செல்லும். தனக்கு முன்னால் நின்ற கிடாய் மிகப்பெரிய கத்தியால் ஒரே வெட்டில் கழுத்து துண்டிக்கப்பட்டுத் துடிதுடிப்பதைப் பார்த்ததின் பின்னரேஏனைய கிடாய்களுக்குத் தமக்கு நடக்கப்போகும் விபரீதம் புரியும். இதே போலதான், இலங்கைத் தமிழ் இளைஞர்களைத் தனது வேள்விக்கிடாய்களாகவே வளர்த்த இந்தியா, கடைசியில் தனது வேள்வியை நடாத்தி முடித்துக் கொண்டது. இப்போது, மீண்டும் இலங்கைத் தமிழ் இளைஞர்களை வேள்விக் கிடாய்களாக வளர்த்து இன்னொரு வேள்வியை நடாத்த இந்தியா முயற்சிக்கின்றது.

**தீராநதி: இலங்கைத் தமிழர்கள் எப்படித்தான் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கப் போகின்றார்கள்?**

**செழியன்:** இலங்கை வடக்கு, கிழக்கு தமிழர்கள் தனித் தனியாகப் போராடி தங்கள் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று நான் கருதவில்லை. இலங்கையில் உள்ள எல்லாச் சிறுபான்மை இனக் கட்சிகளும், எல்லாச் சிறுபான்மை இனமக்களும் தமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக முதலில் ஐக்கிய முன்னணிக்குள் வரவேண்டும். சிறுபான்மை இனங்களுக்குள் இருக்கின்ற அச்சம், சந்தேகங்கள் களையப்படவேண்டும். இதே சமயம், 'சிறுபான்மை மக்களுக்கான கௌரவமான, நீதியான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும்' என்று செயல்படுகின்ற அமைப்புகளுடன் ஒரு வகையான செயல்பாட்டுக்கு வரவேண்டியதும் அவசியம். இவைதான் இலங்கைச் சிறுபான்மை இனங்களுக்கு அரசியல் வெற்றியைத் தேடித்தரும் முன்நிபந்தனைகளாக இருக்கும்.

**தீராநதி: இனி கொஞ்சம் உங்களைப் பற்றி... ஒரு கையில் பேனாவும் இன்னொரு கையில் துப்பாக்கியுடனும் திரிந்த கவிஞர் என்று உங்களைப் பற்றி சிலாகிக்கப்பட்ட காலங்கள் உண்டு. ஒரு எழுத்தாளரான நீங்கள் எப்படிப் போராட்டத்திற்குச் சென்றீர்கள்?**

**செழியன்:** என்னைப் போன்றவர்கள், இன்னமும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள், மாணவர்கள் எனப் பலரும் விடுதலைப் போராட்டத்திற்குச் சென்றதற்குக் காரணம் இலங்கை இனவாத அரசே. அவர்களின் இன ஒடுக்குமுறைகளையும் கொடுமைகளையும் தாங்க முடியாமல் இது நிகழ்ந்தது. ஆனால், கையில் வைத்திருப்பதற்கு அல்ல, கண்ணால் தடவிப் பார்ப்பதற்குக் கூட எனக்கு ஒரு துப்பாக்கியும் கிடைக்கவில்லை. எனது பிரக்ஞை முழுவதும் அரசியல் போராட்டமாகவே இருந்தது. இன்னொரு விடயத்தையும் கூறவேண்டும். தீவிரமான ஒரு படைப்பாளியால் அல்லது மனித உரிமையாளனால் விடுதலை இயக்கத்துக்குள் நீண்ட காலம் இருந்து தாக்குப் பிடிக்க முடியாது என்ற உண்மை.

இயக்கக் கட்டுப்பாடு என்ற பெயரிலும், பெரும்பான்மை முடிவு என்றும் எடுக்கப்படும் பல நடவடிக்கைகளைப் பொறுத்துக் கொள்ளும் சக்தி இவர்களுக்குக் கிடையாது. முரண்பாடுகள் மெல்ல மெல்ல ஆரம்பித்து பெரிதாக வெடிக்கும். இது எனது அனுபவம்.

**தீராநதி: அப்படியானால் நீங்கள் தவறே செய்யவில்லை என்று கருதுகின்றீர்களா?**

**செழியன்:** 'நான் மட்டும் தவறே செய்யவில்லை' என்ற எண்ணக்கருயாரிடமுமே இருக்கமுடியாது என்ற கருத்துடையவன் நான். எனவே, நான் தவறே செய்யவில்லை எனச் சொல்லமாட்டேன். 80களில் நிகழ்ந்த ஒரு கொலைக்குக்கூட ஒருவகையில் நான் உடந்தையாக இருந்துள்ளேன். இதை நான் உணர்ந்துகொள்ளவே இருபது ஆண்டுகளாகிவிட்டன. அப்போது நான் அமைப்பின் அரசியல் போக்கினால் மிகுந்த மனவேதனையும் விரக்தியும் அடைந்திருந்த காலம். மானிப்பாயில் இருந்த அமைப்பின் உறுப்பினர் சாரங்கன் (அவரது உண்மையான பெயர் வேறு), அமைப்பின் பெயரைச் சொல்லியும் துப்பாக்கியைக் காட்டியும் மக்களை மிரட்டிப் பணம் பறித்து வந்த சம்பவம் தெரிய வந்தது. இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் அப்போது பொறுப்பாக இருந்த பொறுப்பாளரால் சாரங்கன் கைது செய்யப்பட்டார். 'சாரங்கனுக்கு மரண தண்டனை கொடுக்கலாம் என்று நினைக்கின்றேன். அப்படியென்றால்தான் அமைப்பில் உள்ள மற்ற அங்கத்தவர்கள் ஒழுங்காக இருப்பார்கள். அமைப்பின் மீதும் எல்லோருக்கும் பயம் ஏற்படும்' என்று பொறுப்பாளர் என்னிடம் அபிப்பிராயம் கேட்டார். 'நீங்கள் விரும்பின மாதிரி என்னவாவது செய்யுங்கள்' என்று சொல்லிவிட்டு ஒதுங்கிவிட்டேன். சாரங்கன், மரண தண்டனை என்ற பெயரில் கொல்லப்பட்டான். ஒரு பொருளாதாரக் குற்றத்திற்கு மரண தண்டனை வழங்கலாமா, ஏன், எந்தக் குற்றத்திற்கு என்றாலும் அதற்கு மரண தண்டனை வழங்குவது சரியா என்ற கேள்விகள் பல வருடங்களுக்குப் பிறகு எனக்குள் எழுந்துள்ளன. அன்று வழங்கப்பட்ட மரண தண்டனையை நான் எதிர்த்திருந்தால் ஒருவேளை சாரங்கன் காப்பாற்றப்பட்டிருப்பான்.

எனக்கிருந்த வாய்ப்பில், என்னுடைய கடமையை நான் செய்யத் தவறிவிட்டேன். இது ஒரு பெரும் குற்றம். மலையைச் சுமப்பது போல நான் இந்தக் குற்றத்தை இப்போது சுமந்து கொண்டிருக்கின்றேன்.

**தீராநதி: இன்னொன்று, இயக்க உள்முரண்பாடுகளால் கடத்தப்பட்ட ஒரு தோழரின் விடுதலைக்காக நீங்களும் உங்கள் நண்பர்களும் கடுமையாகப் போராடியதாக அறியப்பட்டுள்ளதே?**


**செழியன்:** அது வேறு சம்பவம்... கொழும்பு 'தினமுரசு' ஆசிரியாராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றபோது அரசியல் காரணங்களுக்காகப் படுகொலை செய்யப்பட்டவர் அற்புதராஜு (ரமேஸ்). இவர் 1996ம் ஆண்டு ஒரு இரவில் உள்ளியக்க முரண்பாடுகள் காரணமாக ஆயுத பாணிகளால் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டார். அவரைக் கடத்தியவர்கள் யார் என்று மர்மமாக இருந்தது. அற்புதராஜுவைக் கடத்தியவர்கள் கொன்றுவிடுவார்கள் என்று தெரிந்தது. எனவே, அவரை மீட்க தெருவில் மக்களைத் திரட்டிப் போராடினோம். இறுதியில் யாழ் பல்கலைக்கழகத்தில் வைத்து, 'அற்புதராஜுவை விடுவிப்போம்' என்ற வாக்குறுதியை, கடத்தியவர்களே எமக்குத் தந்தனர். அதன்படி விடுதலையும் செய்தனர். இந்தப் போராட்டத்தின் பின்னர், எனது அரசியல் தலைமைக்கும் எனக்குமான இடைவெளி பாரிய இடைவெளியாகிறது. தொடர்ந்தும் அந்த இடத்தில் இருக்கமுடியாது என்பதை மனப்பூர்வமாக உணர்ந்தேன்.

**தீராநதி: புலிகளால் ஏனைய இயக்கங்கள் தடை செய்யப்பட்டபோது, அவர்களால் தேடப்பட்டவர்களில் நீங்களும் ஒருவர். உங்களைத் தேடி அவர்கள் அலைந்தபோது, உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

**செழியன்:** 1986ம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி இரவு என்னைக் கைது செய்வதற்காகப் புலிகள் வந்தனர். ஒரு சில அடி தூர வித்தியாசத்தில் நான் தப்பினேன். பின்னர் நான் தப்பிச் சென்ற இடமொன்றுக்கும் தேடி வந்தனர். அங்கும் சிறு இடைவெளியில் தப்பினேன். பின்னர் ஒரு இரவில் இன்னுமொரு இடத்திற்கு சைக்கிளில் செல்லும்போது மீண்டும் என்னைத் துரத்தினர். துப்பாக்கி பிரயோகம் செய்தனர். தப்பி ஓடிய நான் ஒரு வீட்டு வளவுக்குள் ஒளிந்துகொண்டேன். அந்த வீட்டை ஒரு முறைக்கு இரண்டு தடவை சுத்தமாகத் தேடினார்கள். அந்த வீட்டில் இருந்த தாயும் வயது வந்த மகளும் பதறிப்போய் இருந்தார்கள். சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் நான் ஒளிந்திருந்த இடத்தைவிட்டு வெளியே வந்தபோது, அந்தத் தாயும் மகளும் திடுக்கிட்டு விட்டார்கள். ஆனாலும், எனக்கு உதவி செய்து வேறு வழியில் என்னை அனுப்பி வைத்தார்கள். என்னை அவர்களுக்கு ஒருபோதும் தெரியாது. இருந்தபோதும் விடுதலைக்காக உழைக்கின்ற ஒரு மனிதன் என்ற வகையில் அவர்கள் எனக்கு உதவி செய்தார்கள். இதேபோல அறிமுகமே இல்லாத பலர் எனக்கு உதவியிருக்கிறார்கள். அதனால்தான் நான் நாட்டைவிட்டு வெளியேறி இன்று உயிரோடு இருக்க முடிந்துள்ளது. ஆனால், இந்த சாதாரண மக்களைவிட அதிகமாகச் சிந்திக்க வேண்டிய விடுதலைப்புலிகள், ஏன் தங்களது வேர்களைத் தாங்களே வெட்டிக்கொண்டார்கள் என்ற கேள்விகள் எனக்குள் எழுந்தன. புலிகளின் மீது எனக்குக் கடும் கோபமாகவும் இருந்தது. ஆனால், அதற்காக இலங்கை அரசுடன் சேர்ந்து இயங்குவது என்ற எண்ணம் என்றுமே எனக்கு வந்ததில்லை. இறுதியில் வன்னி மண்ணில் புலிகள் மற்றும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டபோது மிகத் துயரமாக இருந்தது. கண்ணீரைத் தவிர வேறு ஒன்றும் கொடுப்பதற்கு என்னிடம் இல்லை.

**தீராநதி: கடைசியாக எதாவது...**

**செழியன்:** தவறுகளில் இருந்து எல்லாரும் கற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் மீண்டும் ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் மக்களையும் பலிகொடுக்க வேண்டிவரும்.



# இளையராஜா என்னும் இசைத் தொழில் அகம்

கானா பிரபா

“இந்த மனுஷன் மட்டும் இல்லையென்றால் நான் எப்பவோ செத்துப் போயிருப்பேன்”

உணர்ச்சிப் பெருக்கோடு கை காட்டிச் சொல்கிறார் நண்பர், கேட்டுக்கொண்டே அவர் காட்டிய திசையைப் பார்க்கிறார் அருகே அமர்ந்திருந்த சகபாடி. அங்கே லண்டனில் நிறைந்த பெரும் அரங்கத்தின் மையத்தில் இசைக் கலைஞர்கள் புடைசூழத் தன் ஆர்மோனியப் பெட்டியை அணைத்தபடி நிற்கிறார் இசைஞானி இளையராஜா.

இதை லண்டனில் இருக்கும் நண்பர் என்னிடம் சொன்னபோது அதை அனுபவபூர்வமாக உணர்ந்தேன், ஆறு வருடங்களுக்கு முன்னர் இசைஞானி இளையராஜா மெல்பர்னில் இசை நிகழ்ச்சி படைத்துக் கொண்டிருந்தபோது.

அந்த நேரம் எழுபதைத் தொட்ட இசைஞானியாரையே கண் வெட்டாமல் பார்த்துக்கொண்டும், சூழவும் நடக்கும் பாட்டுக் கச்சேரியில் அவ்வப்போது திசை திரும்பியும் அவரை ஒற்றியெடுக்கிறேன்.



நிகழ்ச்சி ஒத்திகையின்போதும், தொடர்ந்த நான்கரை மணி நேரம் கடந்த இசை நிகழ்ச்சியிலும் வாயில் ஒரு சொட்டுத் தண்ணீர் அருந்தாமல் ஆர்மோனியப் பெட்டியை ஒரு கையால் அணைத்தபடி நின்றுகொண்டே இயங்கியது இன்னும் இன்னும் என்னில் ஆச்சரியத்தை விதைக்கிறது, இந்த அசுர உழைப்புக்காரர் மேல்.

இசைஞானி இளையராஜாவின் இசையென்பது நம் வாழ்வின் அங்கமாகிவிட்டது என்ற சம்பிரதாயபூர்வமான வார்த்தைகளோடு கடந்துபோய் விட முடியாத பந்தம். அந்த ‘அங்கம்’ என்பது அத்தியாயம் ‘அன்று’ எம் ஊனோடும்,

“ஒரு படத்தில் தேவைப்படும் பாடலை உடனேயே மெட்டமைத்து இசை கட்டி விடுகிறீர்களே? காட்சியின் சந்தர்ப்ப சூழலைப் பற்றிக் கலந்து பேசுவது அவசியமில்லையா?”

உயிரோடும் பின்னிப் பிணைந்ததொரு அவயவமாகவே கொள்ள முடிகிறது. எத்தனையோ லட்சோப லட்சம் பேரின் மனச்சுமைக்கு மருந்திட்ட இசை என்பது ஒருபக்கம், இன்னோர் பக்கம் இந்த இசை மேதையின் உழைப்பால் விளைந்த படைப்புகள் எத்தனை எத்தனை, ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரம் தனித்து நின்றும், வித்தியாசம் கொண்டும் நிற்கும் பாங்கினைப் பார்க்கும்போது இது ஒரு சாதாரண மனிதனின் இசைச் சரித்திரம் அன்று, எப்போதோ அரிதாகப் பிறக்கும் மேதைகளின் வரிசையில் வைக்கவேண்டிய உன்னதம் என்றே எண்ணி வியக்க முடிகின்றது.

அன்னக்கிளி தொடங்கி இந்த ஆண்டோடு 43 வருட இசைப் பயணத்தில் ஆயிரம் படங்களைக் கடந்து, தமிழில் மட்டும் எழுபதைக் கடந்த எண்ணிக்கையில் பாடலாசிரியர்கள், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி என்று கணக்குப் பார்த்தால் நூறைத் தொடும் அந்தப் பாடலாசிரியர்கள் கணக்கு. அதுபோலவே பாடகர்கள், இசைக்கலைஞர்கள் என்று இளையராஜாவின் இசைப் பட்டறையில் இயங்கிய படைப்பாளிகளை எண்ணிப் பார்த்தால் மலைப்பே விஞ்சுகிறது.

இந்தக் கணக்கில் சிவாஜி கணேசன் என்ற முந்திய யுகத்தின் உச்ச நாயகனில் இருந்து ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த், பிரபு, சத்தியராஜ், கார்த்திக், மோகன் என்று எண்பதுகளின் உச்ச நட்சத்திரங்களின் அதிகபட்சப் படங்கள் என்று எண்ணிக்கை போட்டால் அங்கேயும் இசையோடு இசைஞானிதான் நிற்கிறார்.

இது ஒருபுறமிருக்க அறிமுக இயக்குநர்கள், அறிமுக நாயகர்கள், முழு நீளப் பொழுது போக்குச் சித்திரங்கள், கலையம்சம் மிளிரும் படங்கள் என்று வகைதொகை இல்லாமல் எல்லாவற்றையும் பாரபட்சமின்றி உள்வாங்கி மகத்தான இசைப் படைப்புகளாக வெளிக் கொணர்ந்திருக்கிறார்.

ராமராஜனின், ராஜ்கிரணின் வெள்ளிவிழாப் படங்களுக்கு இசை கொடுத்த அதே கைதான் எழுத்தாளர் பூமணியின் கருவேலம் பூக்கள் படத்துக்கும் இசை கொடுத்திருக்கிறது. பாரதி, காமராஜ் என்று நிகழ் நாயகர்கள் வெள்ளித் திரையில் வந்தபோது அங்கும் ராஜா இருந்தார். ஆனால் எந்தப் படைப்பிலும், படைப்பை மீறிய அதீதமான மேலாண்மை இருக்காது. அந்தந்தப் படங்களின் இலட்சணங்களோடு பொருந்தியே பயணித்திருக்கிறது ராஜாவின் இசை.

இளையராஜா யுகத்துக்கு முன்னரும் பின்னரும் இப்பேர்ப்பட்டதொரு போக்கை அரிதாகவே பார்க்க முடியும், ஒரு உச்ச இசையமைப்பாளர் தனக்கு வாகான ஒரு நட்சத்திர இயக்குநர் படைப்பிலோ, நட்சத்திர நாயகன் படைப்பிலோ தன்னை நிறுத்திப் பழகுவது போல இசைஞானிக்கு இருக்கத் தெரியவில்லை.

இந்தப் போக்கை அவர் தமிழில் மட்டும் கையாண்டதில்லை, சிரஞ்சீவி, நாகார்ஜுனா, வெங்கடேஷ் என்று தெலுங்கிலும், ராஜ்குமார், சங்கர் நாக் என்று கன்னடத்திலும், மம்முட்டி, மோகன்லால் என்று மலையாளத்திலும், அமிதாப் பச்சனுக்கு ஹிந்தியிலும் என மனவோட்டத்தில் சட்டென்று உதிக்கும் உச்ச நட்சத்திரங்களின் படங்களில் இளையராஜா இசை இயங்கிய அதே வேளை, சாகர சங்கமம், ஸ்வாதி முத்யம் என்று கே.விஸ்வநாத்திடமும், அடூர் கோபாலகிருஷ்ணனின் ‘நிழல் குத்து’ விலும், பாலு மகேந்திராவின் ‘யாத்ரா’, பத்மராஜனின் ‘மூணாம் பக்கம்’ என்றும் பிறமொழிக் கலைப்படைப்புகள் வழியே தோய்ந்திருக்கிறது. இவையெல்லாம் கிள்ளி எடுத்த உதாரணங்கள்தான். ஆழ ஆராய்ந்தால் இன்னும் சில கட்டுரைகள் தேறுமளவுக்கு ஆக்கம் நிறைந்த இன்னோரன்ன படைப்புகள் வழியே இளையராஜாவின் இசை இயக்கம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

தமிழ் சினிமாவின் செவ்வியல் படைப்புகளாக உச்சம் போற்றும் ‘உதிரிப் பூக்கள்’, ‘மூன்றாம் பிறை’ காலந்தொட்டு போன வருஷம் வந்த ‘மேற்குத் தொடர்ச்சி மலை’ வரை இந்த உன்னதத் திரை இலக்கியங்களில் இளையராஜாவின் தேவை பேணப்பட்டிருக்கிறது. இளையராஜா என்ற மகா கலைஞனின் ஒவ்வொரு ஆண்டும் இம்மாதிரிச் சாதனைகளோடு நிரப்பப்பட்டிருக்கிறது.

இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முந்திய தீபாவளிப் படங்கள், பொங்கல் வெளியீடுகள் என்று நட்சத்திரங்களது படங்கள் ஒரு சேர வெளியாகும்போது அங்கே பொதுவில் இருப்பது இளையராஜாவின் பங்களிப்பு. அதுவும் வெள்ளி விழா, நூறு நாள் படங்கள் என்று வசூலிலும் சேதாரம் வைக்காது அள்ளிக் கொடுத்தவை.

பாடல்களைப் பார்ப்பதற்காகவே திரையரங்கு செல்லும் மரபிருந்த காலத்தின் எல்லை இளையராஜாவோடுதான் நின்றது.

இப்போது நினைத்துப் பார்த்தால் ஒரு பிரமிப்பை எழுப்பக்கூடிய யுகத்தைக் கடந்து வந்திருக்கிறோம் என்பதைத் தற்காலச் சூழலோடு ஒப்பிட்டு வியக்க முடிகிறது.

இதை single, single ஆகப் பாடல் வெளியிடும் இக்காலத்தில் மட்டுமல்ல, இனி எக்காலத்திலும் நினைத்தே பார்க்க முடியாத சாதனை என்ற அளவிலேயே வைத்துப் போற்ற முடிகிறது.

இம்மட்டுக்கும் இம்மாதிரித் தொகையாக வரும் படங்களின் பாங்குகளைப் பாருங்கள். 'மகாநதி', 'குணா' போன்ற துன்பியல் பின்புலத்தோடு நகரும் குடும்பச் சித்திரங்கள், 'தளபதி', 'சத்ரியன்', 'நாயகன்', 'அபூர்வ சகோதரர்கள்' என்று நட்சத்திர முத்திரை பதித்த படங்கள், 'முதல் மரியாதை', 'முந்தானை முடிச்சு' போன்ற குடும்பச் சித்திரங்கள் என்று இந்தப் படங்களை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு கதைக்களமும் ஒவ்வொரு நிறம். அந்த நிறத்தைத் தூக்கி நிறுத்துவது இசை என்ற ஆதார வேர் என்ற அளவுக்கு இசைஞானி இளையராஜாவின் இசை இயங்கியிருக்கிறது.

"என்னய்யா இங்கேயே நிக்கிறாய், ஷூட்டிங் போகலையா?"ன்னு கேட்கிறார் ராஜா.

"ஷீட்டிங் மட்டுமில்ல சார், டப்பிங்கும் முடிச்சிட்டேன்"னு சொன்னேன்.

அப்படியான்னு ஆச்சரியப்பட்டு சரி, இன்னிக்கே படத்தைப் போடுன்னாரு.

சரின்னு அந்த நாள் ஈவினிங்கே படத்தைப் போட்டுக் காமிச்சேன். மறுநாள் காலை ஏழு மணியில இருந்து ஒன்பது மணிக்குள்ள அந்தப் படத்தில் வரும் அத்தனை ட்யூனையும் போட்டுட்டாரு. ஒன்பது மணிக்கு ரீரிக்கார்டிங், அதுக்கப்புறமா பாடல் பதிவும் பாடல் ஷூட்டிங்கும் இருந்துச்சு.

இப்படித் தன் 'ஆண்பாவம்' படத்தின் இசைக் கோப்பு அனுபவத்தை வானொலிப் பேட்டி வழியாகச் சொன்னார் பாண்டியராஜன்.

"இந்த ஒன்பது பாடல்களையும் காலை 6.45க்கு போட்டு start பண்ணினோம்;. எட்டு மணிக்கு வேற படத்தோட பணிகளை அவர் ஆரம்பிக்கணும். அங்க இசைக்கலைஞர்களுக்கு ஒன்பது மணிக்கு பணி ஆரம்பிக்கும். அதுக்கு முன்னாடி எனக்கு டியூன்ஸ் கரெக்ட் பண்ணிட்டுப் போகணும். இந்த ஒன்பது பாட்டும் குறைஞ்சபட்சம் ஒரு முக்கால் மணி நேரம், ஒரு மணிக்குள்ள கொடுத்திட்டு அவரு டிபன் சாப்பிட்டு வேலைக்கு போனாரு. இந்த உலகத்தை கலக்கிய இந்த ஒன்பது பாட்டுமே ஒரு முக்கால் மணி நேரத்திலதான் டியூன் செய்யப்பட்டதுன்னா மிகப் பெரிய, என்னைப் பொறுத்தவரைக்கும், அது ஒரு உலக சாதனைதான்."

இப்படியாக செம்பருத்தி படத்தின் இசைக் கோப்பு அனுபவத்தை வானொலி வழியே பகிர்ந்தார் செல்வமணி. இது போலவே 'சின்னத்தம்பி' பற்றி பி.வாசு பேசியபோதும், 'கரகாட்டக்காரன்' குறித்து கங்கை அமரன் சொன்னபோதும், வியப்பும் பெருமிதமுமாக இளையராஜாவின் அசுர வேக இசையமைப்பையும், அதன் வழி விளைந்த அற்புதமான மெட்டுகளையும் பற்றிப் பேசுகிறார்கள்.

இதையே மலையாளத் தொலைக்காட்சிப் பேட்டியில் பேட்டியாளர் கேட்கிறார்:

"ஒரு படத்தில் தேவைப்படும் பாடலை உடனேயே மெட்டமைத்து இசை கட்டி விடுகிறீர்களே? காட்சியின் சந்தர்ப்ப சூழலைப் பற்றிக் கலந்து பேசுவது அவசியமில்லையா?"

அதற்கு இளையராஜா சொல்கிறார் இப்படி:

"ஆலோசிக்கவே தேவையில்லை. பாடுற பாட்டுக்கு எதுக்கு ஆலோசனை?காட்சிச் சூழலை எனக்குச் சொன்னதுமே அதுக்குப் பாடணும், எந்த மெட்டும் அது சார்ந்த இசையும் வருகிறதோ அதுதான் பாட்டு. அது தானாக வரணும் நாமாக உருவாக்கக் கூடாது. நாமாக உருவாக்கினால் நம்முடைய அந்த நேரத்து மன வெளிப்பாடு அந்த இசைக் கோப்பில் பிரதிபலித்து விடும்" என்று.

ஒரு இயக்குநர் தான் கொணரும் கலைப்படைப்புக்கான உள்ளாந்த மனக்கிடக்கையை உய்த்துணர்ந்து அதை இசையால் பிரதிபலிப்பது, அல்லது அந்த இயக்குநருக்கே தோன்றாத கோணத்தில் அதைச் செய்து காட்டுவது என்பது இளையராஜா என்ற மேதையின் வழியே மட்டுமே சாத்தியப்பட்டிருக்கிறது.

ஒரு மனிதன் எப்படிச் சட்டுபுட்டென்று தன் சுபாவத்தை மாற்றிக்கொண்டு நகர முடிகின்றது என்ற ஒரு யதார்த்த உலகின் வியப்பை, இளையராஜாவின் இசையிலும் எழுப்ப முடிகிறது. இந்தப் படங்களுக்கெல்லாம் இசையமைக்கும்போது ஒரு குறுகிய கால இடைவெளியில் மனுஷர் எப்படித் தன் இயல்பை நொடிக்கொரு தரம் மாற்றி இன்னொரு படைப்பில் இறங்கி வித்தியாசப்பட்டு நிற்கும் இசைக் கோவையைப் படைக்க முடிகிறது? இது சாதாரணர்களின் உலகில் நினைத்துப் பார்க்க முடியாதவொரு பண்பும், உழைப்பும்.

ஒரு இசையமைப்பாளர் அந்தப் படத்துக்கான நான்கைந்து பாடல்களைப் போட்டுக் கொடுத்துவிட்டு, சம்பிரதாயத்துக்கு நாடக மேடையில் பின்னப்படும் பின்னணி இசை போலக் கலந்துவிட்டால் போதும் என்ற மரபை உடைத்தவர் இளையராஜா.

ஒரு படம் தொடங்கும் ஆதாரப் புள்ளியில் இருந்து அதன் அந்தம் வரை பின்னணி இசையைச் செதுக்கினார். அந்தப் படங்களை எல்லாம் அன்றைய காலத்து ரசிகர்கள் எவ்வளவு தூரம் உள்வாங்கி ரசித்தார்களோ என்னமோ, ஆனால் இன்று 'நாயகன்', 'தளபதி', 'ஆண்பாவம்', 'மௌனராகம்', 'இதயம்', 'இதயத்தைத் திருடாதே' என்று அந்தக் காலம் தொட்டு, நேற்று வந்த 'ஓநாயும் ஆட்டுக்





குட்டியும்' என்று தேடி தேடி ரசிக்கிறார்கள், இளையராஜா கொடுத்த பின்னணி இசையை.

'முதல் மரியாதை'யில் கொடுத்த பின்னணி இசையின் கூறுகளின் ஆழத்தை வியந்து பேசுகிறார் நடிகர் ராஜேஷ் என்றால், பாலியல் விடுதியில் வேலு நாயக்கர் முன்னே கட்டில் சுகத்தைக் கொடுக்க வேண்டிய இக்கட்டில் நிற்கும் பள்ளி மாணவிக்கும் அவருக்குமான உணர்ச்சிப் போராட்டத்தை வைத்துப் பாடம் நடத்துகிறார் பிரபல இசையமைப்பாளர் ரமேஷ் விநாயகம்.

ஆயிரங்கள் கடந்த பாடல்களைக் கேட்டுத் தீர்வதற்கே ஒரு ஆயுள் போதாத நிலையில் அந்தந்தப் படங்களிலே இசைஞானி இளையராஜா இழைத்த பின்னணி இசையை எடுத்து ஆராயப் போனால் வாழ்நாள் போதாது. அவ்வளவுக்குத் தான் பணியாற்றிய ஒவ்வொரு படத்திலும் ஒரு இணை இயக்குநராக நின்று செயற்பட்டிருக்கிறார். இங்கேதான் இளையராஜாவுக்கும் மற்றைய இசையமைப்பாளர்களுக்குமான வேறுபாடு முன்வந்து நிற்கும். ஒரு படத்துக்கு இன்னென்ன ஒளிச்சேர்க்கை வேண்டும் என்றோ, உடை, அரங்க அமைப்பு, ஏன் பாடல்கள் வரை சுயமாகத் தீர்மானிக்கும் வல்லமை ஒரு தேர்ந்த இயக்குநருக்கு வாய்க்கலாம். ஆனால் அதையும் கடந்து ஒரு முழுப்படத்தின் எழுத்தோட்டத்தில் இருந்து முடிவுப்புள்ளி வரையான அசையும் பிம்பத்துக்கான ஓசையைப் பொருத்தி அந்த ஓசையால் உயிர்கொடுக்கும் பணி என்பதே ஒரு சராசரி இசையமைப்பாளனைத் தாண்டி இசைஞானியின் அதீத வல்லமையின் தாற்பரியத்தைக் காட்டும். நாட்கணக்காகத் திரைப் பிரதி எழுதி, எடுத்த படத்துக்கு ஒரு சில மணி நேரத்திலேயே தேவையான இசையால் அந்தப் படத்தின் நிறத்தையே மாற்றி இன்னும் பல படி உயர்த்திக் காட்டியிருக்கிறார் இளையராஜா. இதையே ஒரு இசைமேடையில் பிரபல ஹிந்தி இயக்குநர் பால்கி தன்னுடைய 'பா' படத்தின் காட்சியை, பின்னணி இசைக்கு முன்பாகவும், இசைக்குப் பின்பாகவுமாகச் செய்துகாட்டி, "இளையராஜாவின் பின்னணி இசைத் துணுக்குகளை வைத்துக்கொண்டே இன்னும் ஏராளம் பாடல்களை இசையமைக்கலாம்" என்று சிலாகித்திருந்தார். ஒரு குறிப்பிட்ட படத்தின் ஓரிரு பாடல்களில் இழையோடும் ஆதார சங்கீதத்தை வைத்தே வெவ்வேறு வாத்தியங்களால் வாசித்துப் பின்னணி இசை கொடுக்கும் மாமூல் இசையமைப்பாளர்களை அதிகம் காணலாம். ஆனால் படத்தின் பாடல்களை முன்னிறுத்தாத இசையை எடுத்துக்கொண்டு அந்தப் படத்துக்கான ஆதார இசை (theme) ஆகக் காட்டியிருக்கிறார் ராஜா. இதெல்லாம் முப்பது வருஷங்களுக்கு முன்பே, ஒரு படத்தின் கலைநுட்பம் பற்றி ரசிகர்களுக்கு அவ்வளவு ஈடுபாடில்லாத சூழலில் செய்து காட்டியிருக்கிறார். இன்றும் 'நிறம் மாறாத பூக்கள்', 'ஜானி', 'முள்ளும் மலரும்' போன்ற படங்களை எடுத்துப் போட்டுப் பார்த்தீர்களானால் அந்தந்தப் படங்களுக்குப் பின்னால் செய்து காட்டிய பின்னணி இசையின் மகத்துவம் புரியும். ஒரு குறிப்பிட்ட இசை மெட்டை வைத்துக் காதல், சோகம், நகைச்சுவை, ஊடல், அழுகை என்று விதவிதமாக வித்தியாசமான வாத்தியங்களில் வேறுபடுத்திக் காட்டுவதில் ராஜா ராஜாதான். இன்றைக்கு அந்தப் படங்களின் இசை மட்டுமே போதும், இன்ன காட்சியில் இந்த இடம் என்று விரல் நுனியில் தகவல் வைத்திருப்பான் இளையராஜாவின் பின்னணி இசையில் முக்குளித்த இசை ரசிகன்.

கைரளி மலையாளத் தொலைக்காட்சியில் வந்த 'கந்தர்வ சங்கீதம்' என்ற இசை நிகழ்ச்சியில் பாடகி பின்னி கிருஷ்ணகுமார் 'கற்பூர முல்லை' படம் பற்றிச் சிலாகிக்கும்போது, இந்தப் படத்தைப் பாடகி பின்னி கிருஷ்ணகுமார் தொலைக்காட்சியில் பார்க்கும்போது அதில் வந்த முக்கிய பின்னணி இசையைக் கேட்டபோது, இது என்ன ராகத்தின் வழிவந்தது என்று அவர் தேட, கிட்டியது 'மாயா விநோதினி' என்ற ராகம். பிறகுதான் கண்டுணர்ந்தார், இந்தப் படத்தின் நாயகி அமலாவின் கதாபாத்திரத்தின் பெயரும் மாயா விநோதினி. பாருங்கள், எவ்வளவு நுணுக்கமாக இந்தப் படத்தின் கதாபாத்திரத்தை வைத்தே பின்னணி இசையைக் கொடுக்கவேண்டும் என்ற இசைஞானி இளையராஜாவின் உழைப்பு மெய்சிலிர்க்க வைத்தது.

'சிந்து பைரவி' படத்தில் ஜே.கே.பி என்ற சங்கீதகாரனையும், மும்பையின் தாராவியில் நின்று காவல் தெய்வமாக இயங்கும் வேலு நாயக்கரையும் அடையாளப்படுத்தி நிறுத்தியது இளையராஜாவின் இசை.

இளையராஜா முதன்முறையாக தன் பின்னணி இசையின் ஆழமான ஞானத்தை வெளிப்படுத்திய படம் 'முள்ளும் மலரும்' என்கிறார் மகேந்திரன். தன் காலத்தைத் தாண்டிச் சிந்தித்துப் படைப்பாற்றல் பண்ணியவர்கள் காலம் கடந்துதான் இன்னும் அதிகம் பேசப்படுவார்கள். அதை இளையராஜாவின் இசையாற்றலுக்கும் பொருத்திப்பார்க்க முடியும்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் ஆனந்த விகடனின் மதன் கேள்வி பதில்களில் வாசகர் ஒருவர் இளையராஜாவுக்கு மாற்றீடு யார் என்று கேட்கிறார். அதற்கு மதன் சொன்ன பதில் இன்று 25 ஆண்டுகள் கழித்தும் மெய்த்தன்மையோடு உணர வைக்கிறது. ஆமாம், "இளையராஜா அமர்ந்த சிம்மாசனத்தில் அவரைத் தவிர வேறு யாரும் அமரமுடியாது."

# மல்கோவா

ஏஜே. டானியல்

அறை முழுவதும் இருள் மண்டிக்கிடந்தது. நான்கு பேர் மட்டும் உயிர் வாழக்கூடிய நான்கு சுவர்களுக்குள் ஒன்பது பேர் உயிர் வாழ்கின்றோம். எமக்குத் தேவையான பிராண வாயு துண்டிக்கப்படும்போதெல்லாம் ஓங்கி சன்னல் கதவைத்தட்டித் திறந்து நான் உயிர் வாழக் கற்றுக்கொண்டுள்ளேன்.

எவருக்கும் நிரந்தரமான படுக்கை இல்லை.

ஆறு பேர் படுத்தால் மூன்றுபேர் குசினிக்கு எதிரே அழுக்காகிக் கிடக்கும் சோபாவில் அவரவருக்கான இடத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும். அதிகாலை எவன் எழும்பி வேலைக்கு ஓடுவான், அந்த இடத்தில் கொடியை நாட்டலாம் என யுத்தவீரனின் மன நிலையோடு தருணம் பார்த்துக் கிடப்போம்.

யாரும் எதையும் உரிமை கொண்டாட முடியாது. நான்கு சுவர்களுக்குள்ளும் ஒரு பெரிய பொது உடைமைச் சித்தாந்தமே குடி கொண்டிருக்கின்றது.



கிண்டலும் கேலியும் பஞ்சமிருக்காது. எப்போதாவது கிடைக்கும் ஓய்வு நாளில் மட்டும் போர்வைக்குள் அட்டைபோல் சுருண்டு கிடப்போம். இல்லாவிட்டால் மலாத்தடித்து ஏதும் தமிழ் சினிமாவைப் பார்துக்கொண்டு நேரத்தைக் கழிப்போம். ஒன்பது பேரில் ஒரு சமையல்காரன் இருக்கின்றான். அவனிடம் பத்திரோன் சமரி வாங்குவதில்லை. அவன் கடும் உழைப்பாளியாகவும் ஒரு வீட்டுப் பணிவிடைக்காரனைப் போலவும் எம்மோடு நடந்துகொள்வான்.

தொலைபேசியில் பதிந்திருந்த பைபிளைத் தட்டி வாசித்துக்கொண்டிருந்தேன். சில வேத வசனங்கள் என்னோடு பேசின. இறுதியாக அம்மா அனுப்பிவைத்த

கடிதத்தின் இறுதி வரி நினைவுக்கு வந்தது.

அதை மீண்டும் நினைவுபடுத்திக்கொண்டேன். மேலும் அவ்வரிகள் மனதுக்குள் தேவபயத்தை உண்டுபண்ணின.

"தம்பி ஆண்டவரோட விளையாடாத. கோயிலுக்குப் போ. ஆண்டவரட பிரசன்னம் இல்லாமல் எதுவும் செய்ய ஏலாது."

சென்ற ஞாயிறும் ஆராதனையில் பங்கெடுத்தேன். பாஸ்ரர் ஆராதனையில் வாசித்த வேத வசனத்தைக் குறித்துக்கொண்டு வந்திருந்தேன்.

"இதோ தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான் ஆகையால் சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும். அவர் காயப்படுத்தி காயம் கட்டுகிறார். அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது."

குறித்த வசனங்களை மனதில் போட்டுத் தியானித்துக்கொண்டு இருந்தேன்.

அநாதி தேவன் எவ்வளவு நல்லவர். அவரது வார்த்தைகள் பெரிய ஆறுதல் படுத்தியது. என்னையறியாமல் கண்களில் இருந்து நீர் பெருக்கெடுத்தது. இதயத்தை ஆராய்ந்து சரிப்படுத்திக்கொள்ள முயற்சித்தேன். வேறு சிந்தனைகள் மண்டையில் தட்டிக்கொண்டன.

இன்னும் மூன்று லட்சம் குடுக்கவேணும்.

மன்னார் எம்பிக்கு ஏற்கனவே ஒரு லட்சம் அனுப்பி யிருந்தேன். இந்த வாரத்துக்குள் எப்படி அனுப்புவது என்னை நானே கேட்டுக்கொண்டேன்.

நிச்சயமாக முடியாத காரியம்.

ஆனால் தேவனால் முடியாத காரியம் எதுவுமில்லை! கண்ணீர் விட்டு உருக்கமாக செபித்தேன்.

யாரிடமாவது கடன் கேட்டுப் பார்ப்போமா?

இல்லை.

உபவாசம் இருந்து செபிப்போமா?

ம்ம்ம்... கேட்டாலும் யார் தரப்போகிறார்கள். நிச்சயமாகத் தர வாய்ப்பில்லை.

விசா, வேலை இருந்தால் நம்பித் தருவாங்கள்.

இப்ப நம்மால தின்னக்கூட வழி இல்லாமல் இருக்கிறன், எப்படி வட்டிக்கு கடன் தருவாங்க...?

சரி பாப்போம். முடிஞ்ச அளவு கிடைக்கிற எந்த வேலை எண்டாலும் செய்வோம், ஏது கஸ்ரம் எண்டாலும் ஒரு கைபார்த்துவிடுவோம் என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

பசி, தாகம். உடல் கொஞ்சம் தளர்ச்சி அடைந்துகொண்டு செல்கிறது. சரியான உணவு இல்லை. நேர காலத்துக்கு ஒழுங்கா சாப்பிடுறதும் இல்லை. கடைசியா எல்லாம் இருக்கும், உடம்பில ஆரோக்கியம் இருக்காது.

செத்துத்தான் போவோம் இப்படி வாழ்ந்தால். என்னதான் செய்றது?

மழையில் நனைந்து தடிமல் பிடித்துப்போனது. மூக்குத் துவாரங்களில் சளி முட்டிக் கிடந்தது.

மூச்சை இழுத்து விடப் பிரயத்தனம் செய்தேன். போர்வையை அகற்றி இடுப்பிலிருந்து வழுகிச்சென்ற சாரத்தை எங்கோ மூலையில் தேடி எடுத்துச் சரிப்படுத்திக்கொண்டேன்.

கண்களை விரிவாகத் திறந்து சன்னல் கண்ணாடியை ஊடுருவிப் பார்த்தேன்.

வெளிக்கண்ணாடி முழுவதும் குளிரில் உறைந்து கிடந்தது. வீட்டின் உட்பகுதி வெப்பத்தால் வேர்த்து விறுவிறுத்தது. கட்டிலின் குட்டி ஏணிக் கம்பிப் படிகளைப் பிடித்துப் பூனையைப்போல சலசலப்பின்றி மெதுவாய்க் கீழ் இறங்கினேன்.

"பூ ஆரடா இது? கால நேரம் தெரியாமல்... சே நிம்மதியா இந்த வீட்டில ஒரு நேர நித்திர கொள்ள ஏலாது..."

யாரோ, எவர் எந்தத்தட்டு என்று சரியாக என்னால் ஊகிக்க முடியவில்லை. தலை சுற்றிக்கொண்டு இருந்தது. மெதுவாகத் தரையில் காலை ஊன்றி நடந்தேன். மறுபடி யாருடைய காலையோ மிதித்துவிட்டேன்.

ஆனால் மூச்சுப்பேச்சு இல்லை... மின் குமிழ் அணைந்து கிடந்தது. அறை மூலையில் மாதா சொரூபத்தில் இருந்து மெல்லிய ஒளி அறையை ஆக்கிரமித்தது.

கட்டில் கம்பியைப் பிடித்து சன்னலை நோக்கி அரக்கி அரக்கிச் சென்றேன். பனி படிந்திருந்த கண்ணாடியூடே கூர்ந்து பார்த்தேன். சாம்பல் புறா ஒன்று நடுங்கிக்கொண்டு நின்றது.


ஆனாலும் நிலம் இன்னும் முற்றாக வெளுக்கவில்லை. கட்டடத்தின் வெளியே அழகாய் நீண்டு ஓங்கி வளர்ந்து நின்ற மரங்களின் கிளைகளெல்லாம் துண்டாக்கப்பட்டு வெறும் மொட்டையாய் நிமிர்ந்து நின்றன.

குளிரில் இறுகிக்கிடந்த சன்னலைத் திறந்தேன். 'கிறீச்' என்ற மெல்லிய சத்தத்தோடு சன்னல் திறந்தது.

தூரத்து வீதிகளில் மின்விளக்குகள் ஒளிர்ந்துகொண்டு இருந்தன. பனித்தூறல்கள் மின் ஒளியில் கலந்து தங்கத்துகள்களை அள்ளி வீசியது.

ஏழாம் மாடியில் இருந்து தரையைப் பார்த்தேன். கீழே இருந்த சிறுவர் பூங்கா மீது பனி மூடிக்கிடந்தது. மனித நடமாட்டமில்லை. பனித்தூறலும் ஓயவில்லை.

பார்வையைத் திருப்பி, கண்களைக் கடிகாரத்தில் ஊர விட்டேன். நேரம் காலை ஐந்து மணியைக் கடந்துவிட்டது. ரயில் சேவை ஆரம்பமானது. கட்டடத்தின் கீழ்ப்பகுதியினூடாக விரைவு ரயில் புறப்பட்டது. மின்னல் வேகத்தில் அதன்


LAW
T. Jegatheesan
Barrister, Solicitor & Notary Public (ont)
2620 Eglinton Ave. E
Suite 201
Scarborough
On MLK 2S3
Tel: 416 - 266 6154 Fax : 416 - 266 4677



அதிர்வு பலரின் தூக்கத்தை முறித்துப்போட்டது.

இரண்டு மூன்று நிமிடங்கள் பூமி அதிர்ந்தது போல் உணர்வு. வெடியோசையைக் கேட்ட தேவாலயப் புறாக்களைப் போலத் தூக்கத்தில் கிடந்த செல்வத்தாரும் நாகேசரும் எழும்பியடித்து வேலைக்கு ஆயத்தமாகினர்.

அறையில் நான் மட்டும்தான் எதுவித வேலையுமில்லாமல் வெட்டியாய் முடங்கிக்கிடக்குறேன்.

றூமில் உள்ள பலர் இதைக் காரணமாக வைத்துக் கிண்டல் அடித்திருக்கின்றார்கள். சில நேரங்களில் நான் வேலைக்குப் போவது போல நாடகமாடுவேன். இது இரண்டாவது மாதம். நினைத்தாலே வெறுப்புத்தான் வருகின்றது.

வேலை கிடைத்தாலும் பத்திரோன்கள் சக மனிதனை மிருகத்தைப்போல் நடத்துறானுகள்.

பணம் மட்டும்தான் இந்த முதலாளி வர்க்கத்துக்கே முக்கியம். எங்களப்போல அப்பாவியளிடம் எவ்வளவு சுரண்ட முடியுமோ சுரண்டிவிட்டு கடைசியா பேப்பர் இல்லை என்று துரத்தி விடுகிறார்கள்.

ஒரு கடும் உழைப்பாளிக்குக் குறைந்தது பத்து யூரோக்களையாவது ஒரு மணித்தியாலத்துக்கு ஊதியமாகக் கொடுக்கவேண்டும். இதுதான் பிரெஞ்சு சட்டம் என்று தமிழ் கடைக்கார அண்ணன் சொன்ன ஞாபகம். விசா இல்லாதவனென்றாலும்! ஆனால் தமிழ்க் கடை வைத்திருக்கும் முதலாளிகள் மாதம் கூடிய தொகையாக அய்நூறு தொடக்கம் அறுநூறு யூரோக்களைக் கொடுக்கிறார்கள்.

அதிலும் புள்ளா சுத்துமாத்து. சம்பளத்தொகையைக் குறித்த நாளில் கொடுப்பதில்லை. சராசரியாக 12 மணித்தியாலத்துக்கு மேல் வேலை வாங்குகின்றார்கள். தொழிலாளிகள் மயங்கிவிழும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கும். இந்த விடயத்தில் வேற்று நாட்டவர் பரவாயில்லை என்றுதான் கூறிக்கொள்ளத் தோன்றுகின்றது.

பிரான்சுக்கு வந்து மூன்றாம் நாளில் வேலை தேட இரண்டு கிலோ வாழைப்பழமும் தண்ணீர்ப்போத்தலும் ஒரு தோல்பைக்குள் போட்டுக்கொண்டு லாச்சப்பல் கடைத்தெருவுக்கு இறங்கினேன். முடிந்த வரை ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினேன். கிட்டத்தட்ட இரண்டு வாரங்களின் பின்புதான் ஒரு வேலை கிடைத்தது.

நாள் முழுவதும் ரெலிக்காட் விளம்பர கம்பனியின் விளம்பர பேப்பரை வருகிற போகிறவர்களிடம் கால் கடுக்க நின்று கொடுத்துக்கொண்டு நின்றேன்.

“விசா இல்லாட்டால் இப்டித்தான் தம்பி சமாளிச்சு உழைக்க கற்றுக்கொள்.”

வயசான வெயிட்டர் ஐயாவை ஒருநாள் கூறியதை நினைவு கூர்ந்தேன். எப்போதும் பிரான்ஸ் வாழ்க்கையை நினைக்க நினைக்க அழுகைதான் வருது. என்ன செய் யிறது, வெளிநாட்டு ஆசையில சூட் கேசைத் தூக்கிக்கண்டு வந்திடுறோம்.

பாரச் சிலுவையை சுமந்து முடிக்கத்தானே வேண்டும்.

அடச் சீ. என்ன வாழ்க்கை இது?

“கொஞ்சக்காலம் பல்லக் கடிச்சுக்கண்டு இரும்.”

“எத்தின பேர் இப்பிடி சொல்லிட்டினம். ஒரு பிரியோசனமும் இல்லை. விசா இல்லையண்டால் நாயவிட கேவலமா பார்க்கிறாங்க...”

“டேய் ஜன்னல பூட்டடா.”

வீட்டுப்பத்திரோண்ட எடுபிடி கத்தினான்.

நான் எதும் பேசாமல் சன்னலை மூட முயற்சித்தேன். அது கிறீச் என்ற ஓசையுடன் மூட அடம் பிடித்தது. மழை நீர் பட்டு சன்னல் பலகைகள் வீங்கி முட்டிக்கிடந்தன. சுவர்க்கடிகாரத்தின் முட்களின் மெல்லிய சப்தம் நுணுக்கமாக எனது காதுகளில் வந்து சேர வெடுக்கென நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தேன். நேரம் காலை 6.30 மணியைக் கடந்து முட்கள் நகர்ந்தன.

ம்ம்ம். சிகரட் புகைத்துப் பல மணிகள் ஆகிவிட்டன. உதடுகள் அதன் தேவையை உணர்த்தின.

லாச்சியைச் சலசலப்பின்றி மெதுவாய் இழுத்தேன். பெட்டியில் இரண்டு சிகரட். அதில் ஒன்றை எடுத்து சாரத்துக்குள் செருகிக்கொண்டு கிச்சன் அறையை

நோக்கி நடந்தேன். மாதா சொரூபத்தின் கீழ்த்தட்டில் கிடந்த லைட்டரைத் தட்டி சிகரட்டைப் பற்ற வைத்தேன். புகையை சன்னலின் நீக்கலால் ஊதிவிட்டேன். குளிரோடு அது அடங்கிப்போனது.

தலை இன்னும் கிறுத்தது. பிரான்சுக்குள் வந்து இரண்டு வருடங்கள் இதுவரை எந்த பேப்பரும் கிடைக்கவில்லை. ஒப்பிறா றிஜெக்ட் கொமிசன்காரனும் கைய விட்டுட்டான். லோயர்காரி அப்பீல் போட இரண்டாயிரம் யூரோ கேக்கிறாள்.

“ஓகே எண்டு செய்வோம் எண்டால் காச வையடா!” என்று ஒத்தக்காலில நிக்கிறாள் அந்த அம்மாச்சி. காசு கிடந்தால் குடுக்காமலா இருப்பன். பேசாம ஊருக்குப் போய் களங்கண்டி பாஞ்சாலும் நிம்மதியா இருக்கலாம் போல கிடக்கு.

தண்ணீரை விட்டு கேத்தலைத் தட்டினேன்.

அது தன்பாட்டில் கொதித்துக்கொண்டிருக்க ஒரு பிளாஸ்டிக் குபிளேயுள் சாயப் பக்கட்டை போட்டு சீனிப்போத்தலைப் பார்த்தேன். காய்ந்து போய் கிடந்தது. ஒரு கரண்டியை எடுத்து போத்தலின் உள்ளே ஒட்டி இருந்த சீனித் துணிக்கைகளைச் சுரண்டினேன். ‘கிறீச் கிறீச்’ என்ற சத்தம் உறங்கிக்கிடந்தவர்களை எழுப்பி எரிச்சலேற்றியது.

சூடேறிய கேத்தல் நீரின் கொப்பளிப்பும், சீனிப் போத்தலினுள் எழுந்த இரைச்சலும் அக் கணப்பொழுதின் நிசப்தத்தை உடைத்தெறிந்தது.

“பீத்தா மார்து. எவண்டா பூனா மகன் குசினிக்க தேய்க்கிறது...”

சத்தம் போட்டுக்கொண்டு குசினை தேடிப் பாய்ந்து வந்தான் ஒருவன். நான் பயந்து ஒடுங்கிப்போய் கேத்திலில் இருந்து வெளியேறும் நீராவியை விறைத்துப் பார்த்துக்கொண்டு நின்றேன்.

“ஓ தம்பியே! சீதேவிக்கு சீனி தேவப்படுதோ கெட்டகேட்டுக்கு?”

நாறல் மூஞ்சியோட என் முகத்துக்கு முன் வந்து பல்லைக்காட்டினான். நான் அவனை அசிங்கமாய்ப் பார்த்தேன். இரவு அடிச்ச வொட்கா நாற்றம் போகவே யில்லை. வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது. சுவர்ப்பக்கம் திரும்பினேன். சிகரட் புகையை ஊதுவதற்காகத் திறந்த சன்னல் துவாரத்தைப் பெரிதாக்கினேன். காற்று இரைந்துகொண்டு குளிரை முகத்தில் வீசி எறிந்தது.

“தம்பி இண்டைக்கி 27ந் திகதி. றூம் காசு தரயிலை. எப்ப தரப்போறீர்?”

போனமாசம் வவுனியாக்கு அனுப்போணும், தங்கச்சியட புருசன வெளிய எடுக்கோணும் எண்டீரம். ஓகே. இந்த மாசம் ஆர ராசா வெளிய எடுக்கப்போறீர்...? நீர் என்னண்டாலும் செய்யும். முதல் சமறிக்காசை தந்திரும். இல்லாட்டால் வீட்ட விட்டு இறங்கும் ஆமா...”

பல்லை இழித்தபடி கொக்கரித்தான்.

பிடரியில் யாரோ ஓங்கி அறைந்தது போல் இருந்தது. ஜீரணிக்க முடியவில்லை. இந்த விசியம் இவனுக்கு எப்பிடித் தெரியும்? அக்கணம் என்னைத் தூக்கி வாரிப்போட்டது. நரம்பல்லாம் புடைத்துக்கொண்டது. பற்களை நறும்பிக்கொண்டேன். அவன்ர முகத்தில ஓங்கி குத்தவேணும் போல இருந்தது. அந்த நாய்ப்பயலுக்குக் கதைக்க, பேசத்தெரியாது எண்டு பொடியள் சொல்லிவைத்தது நினைவுக்கு வந்தது. மாதர் சூத். காலங்காலத்தால ஊரக்கூட்டி இப்படி அவமானப்படுத்துகிறான். வீட்டில் கிடக்கும் எட்டுப்பேருக்கும் தெரிந்துவிட்டது போல சே..

லஞ்சம் கொடுத்தால்தான் வேலை ஆகும் என்றால் கொடுப்பது தப்பாகத் தெரியவில்லை. ஆமா இவனுக்கென்ன நான் குடுத்தால்? வீட்டுக்காசு தாறன் எண்டிதானே சொன்னான். பிறகென்ன கத்துறான். மண்டை கிறுகிறுத்தது.

அக்காட புருசன் ஒரு புலிப்போராளி முள்ளிவாய்க்கால் கடைசிச் சண்டையில் ஆமியிடம் சரண்டர் ஆகினவர். அரசாங்கம் ஆளைக் கொண்டுபோய் வவுனியா தடுப்பு முகாமுக்கு அனுப்பிவிட்டாங்க. இன்னும் வெளியில் வரவில்லை. எவ்வளவோ முயற்சி எடுத்துப்பார்த்தோம்.

ஜீ எஸ் கடிதம், விசப் கடிதம் எதுவுமே கை கூடவில்லை. இப்போது மன்னாரில் உள்ள ஒரு முஸ்லீம் எம்பியை வைத்து அத்தார வெளியில் எடுக்க வேலை பாக்கிறோம். மூன்று லட்சம் கேட்கிறார் எம்.பி.

அக்காவும் அம்மாவும் வவுனியா பூந்தோட்டத்தில் பிரச்சினைக்குப் பிறகு தங்கி இருக்கிறாங்க. சரியான கஸ்ரப்படுகிறார்கள். அதை நினைத்தாலே கண்ணீர் அருவியாகக் கொட்டும்...

இவன் வேற அசிங்கப்படுத்திறான்.

நிமிர்ந்து சுவர் மூலையைப் பார்த்தேன். எங்கோ இருந்து சில கரப்பான் பூச்சிகள் வேகமாக ஊர்ந்து குப்பை கழிவு கொழுவிக்கிடந்த பொலுத்தீன் பையை நோக்கிப் படையெடுத்து வந்தன. இயந்திரமாய்த் தனது செருப்பைக் கழற்றி கரப்பான் பூச்சியை ஓங்கி அடித்துத் தரையில் நசுக்கியபடியே.. “பூ... ஆரட்ட ஓட்டங்காட்டுறாய்! ஒரடியா செத்துப்போ!” என்றான். “தம்பி, இந்த மாசத்துக்குள்ள காசு வைக்கவேணும். இல்லையண்டால் வீட்ட விட்டு இறக்க வேண்டிவரும். இப்பவே சொல்லீட்டன்.”

அதனை மறுத்து அவனை என்வசப்படுத்த வார்த்தைகள் அந்த நொடியில் எனக்குக் கிடைக்கவில்லை. மௌனம் மட்டுமே மறுமொழியாய்த் தொக்கி நின்றது.

அவன் சாரத்துக்குள் கையைவிட்டு எதையோ சொறிந்தபடி தனக்குள்ளே எதையோ முறுமுறுத்துக்கொண்டு குசினியைவிட்டு வெளியேறினான்.

அவமானப்பட்டவனாய் நிலத்தில் அடித்துப்போட்ட கரப்பான் பூச்சியை வெறித்துப் பார்த்தேன். அது அரை உயிருடன் கால்களை அசைத்துப் போராடிக்கொண்டு கிடந்தது. இந்த

அடி பூச்சிக்கல்ல, எனக்கானது என்பதைத் திட்டவட்டமாகப் புரிந்துகொண்டேன்.

கையில் இருந்த சிகரட் விரலில் சுட, வெடுக்கென எடுத்து சிகரட் கட்டையை நீரில் அமிழ்த்திவிட்டேன்.

ரொய்லட்டில் ஆவிபடிந்து இருந்த சவரக்கண்ணாடியை கைகளால் அழுத்திவிட்டு முகத்தைப் பார்த்தேன். கண்கள் சிவந்து கொவ்வம் பழத்தைப்போல் வீங்கி விகாரமடைந்து இருந்தன.

இந்தச் சமயம் குளிக்க முடியாது. வீட்டுக்காரன் இதுக்கும் ஒரு கதை சொல்லுவான். முகத்தை நீரால் அடித்துக் கழுவினேன். கண்கள் எரிவெடுத்தன.

கொஞ்சம் கிறீமை முகத்தில் தடவினேன். ஜீன்ஸ் அடுக்குகளுக்குள் ஒழித்து வைத்த சென்ற் போத்தலை எடுத்து உடல் முழுவது விசிறியடித்தேன். பையில் இருந்து பணிஸ் துண்டொன்றை எடுத்து நைசாக வாய்க்குள் திணித்தேன்.

பனடொல் ஒன்றை எடுக்கும் முயற்சியில் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த ஜக்கடினுள் கையைவிட்டுத் துலாவினேன். எதுவும் அகப்படவில்லை. இறுதியில் மெல்லிய வெளிர் நீல நிறக் காகிதத்துண்டொன்று கிடைத்தது. சென்ற வாரம் தொடரூந்து பரிசோதகரிடம் பிடிபட்ட நினைவு வந்தது.

இந்தப் பயண ரிக்கட் எடுக்காத குற்றத்துக்கு ஆர்.ஏ.ரீ.பி காரன் நான் இருக்கிற டொமசல் வீட்டுக்கு லெட்டர் அனுப்புவான்.

ஆத்தே, இன்னும் பிரச்சினை, இருக்கிற பிரச்சினையில இது வேற...

வீட்டுக்காரன் மறுபடி எனக்கு முன்னால் தோன்றி ஒரு லெட்டரைக் கண்முன்னே நீட்டினான். திகைத்துப்போனேன்.

ஒருவேளை நான் நினைத்த தண்டப்பணம் கட்டாத லெட்டர்தானோ? பயத்தில் கைகால் உதற ஆரம்பித்தது. அவரது கையில் இருந்த லெட்டரை சாதுவாக வாங்கிப் பார்த்தேன். முகப்பில் இலங்கை முகவரி பொறிக்கப்பட்டு இருந்தது.

அது என்னுடைய அக்கா வவுனியாவில் இருந்து அனுப்பி இருக்கிறாள். ஆவலோடு உடைத்துப் பார்த்தேன். கடிதம் வழமைக்கு மாறாக சற்று நீண்டு இருந்தது.

“அன்புள்ள தம்பி சயந்தா!

எப்பிடி நலமா? நாங்கள் நலம். அம்மாவுக்குத்தான் சரியான சுகமில்லை. நேற்று காலம வவுனிய ஆஸ்பத்திரிக்கு



CGA

NIMAL VINAYAGAMOORTHY

CERTIFIED GENERAL ACCOUNTANT

THE NAME YOU NEED FOR YOUR BUSINESS

Nimal Vinayagamoorthy, CGA

Tel: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-613-2739
Email: nimal@nlraccounting.com
2525 Pharmacy Ave, Toronto, ON M1W 2K2



போற்று வந்தனாங்க. ஒப்பிரேசன் பண்ணவேணுமாம். சுவாசப்பையில அடைச்சுப் போச்சாம். தம்பி எம்பீயோட கதைச்சனியா? இன்னும் காசு வர இல்லை. முழுசா எண்டு சொன்னவனாம் காசு போட இல்லையா?அத்தான் பாவமடா. ஒரே அடி சித்திரவதையாம். ஆள் ஒடிஞ்சு போற்றேர். உன்ன விசாரித்ததா சொன்னார்.

நீ ஒண்டையும் யோசிக்காத. ஆண்டவர பாதத்தில வைச்சு செபி. சர்ச்சுக்குப் போறனியா. அம்மா ஒரே செபம் உபவாசம் எடுக்கிறா. நமக்கு செபம் மட்டும்தான். பைபிள் படி! ஆண்டவரோட விளையாடாத. வசனத்துக்கு செவி சாய்!

வேற ஒரு முக்கியமான விசயம், ஒரு கலியாணம் கேட்டு வந்து இருக்கு. அம்மா உன்னட்ட முடிவு கேக்க வேணும் எண்டு சொல்லிற்றா.."

என்னவா இருக்கும்? யார் அந்த பொட்ட என்ற கேள்வி மனசுக்குள்ள கிளர்ந்தெழ ஆர்வத்தோடு மேலும் படிக்க மற்ற பக்கத்தை வேகமாய்ப் புரட்டினேன்.

சரிதா? யாரு? கேட்ட பெயராக இருக்கு. சரிதா, அவளுக்கு என்ன ஆச்சு?

பெயரையும் விடயத்தையும் வாசித்தபோது தூக்கி வாரிப் போட்டது.

அட கடவுளே. இது உண்மையாக இருக்குமா? இல்லை. நம்ப முடியாது.

அவள் எப்படி என்ன ஒகே எண்டவள்? எனக்கும் செல்விக்கும் இடைல நடந்த எல்லா சம்பவத்தையும் முழுசா அறிஞ்ச ஒருத்தி சரிதா மட்டும்தான்.

இவளா என்னை கலியாணம் செய்ய விரும்புறாள்...?

முடியாது வாய்ப்பே இல்லை.

கைகள் நடுங்கின. நினைவுகள் அலைக்கழித்தன. பள்ளிக்காலம் நினைவுக்கு வந்து பாடுபடுத்தியது.

சில நிமிடங்கள் மனம் கலவரப்பட்டவனாக சுவரோடு சாய்ந்துகொண்டு கடிதத்தின் மீது கண்களைப் படர விட்டேன்.

"தம்பி உன்னொட படிச்ச பொட்டதான் சரிதா. புஸ்பம் அன்ரியட மகள். இப்ப நேர்ஸா வேலை செய்யிறாள். சரிதா வவுனியா பெரிய ஆஸ்பத்திரியில நீள முடியும் ஆளும் இருந்தத விட வடிவுடா இப்ப. பதினைஞ்சு லெட்சம் சீதனமாம். வீடு ஒண்டு கிடக்காம். ஒரே ஒரு புள்ளயாம். எல்லாம் அவளுக்குத்தானாம்.

உன்ர விருப்பம்தான் எங்களுக்கு முக்கியம் எண்டு அம்மா சொல்லி அனுப்பிட்டா. உன்ர விருப்பத்த சொல்லு! வேற என்ன உன்ர போட்டோ கிடைச்சது. தாடி சேவ எடு!

அம்மா கவலைப்படுறா பார்த்துவிட்டு. என் வலப்புக்குள்ள அம்பது யூரோ அம்மாட பிறந்த நாளுக்கு அனுப்பி இருந்தாய். அத எடுத்து ஒரு சாறி வாங்கி குடுத்தன். அப்பாவட பத்தாவது வருசம் வருது. வேற என்ன தம்பி?

வெளி நாட்டுக்கு உன்ன அனுப்பின காசுக்கு அப்பா கட்டின வீட்ட வித்ததுக்கு எல்லாரும் பேச்சு. அவியளுக்கு என்ன தெரியும்? இல்லாட்டியா எங்க போறது? அந்த காச ஏஜென்சிக்கு குடுக்க எல்லாரும் ஏமாத்திட்டாங்க. வா தாறம் எண்டவனுகள் கடைசியில கை விரிச்சிட்டாங்க. இப்ப வந்து வீட ஏன் வித்தனீங்கன்னு கேள்வி நியாயம். விட்டுத்தள்ளு!

வேற என்ன? ஒண்டையும் யோசிக்காத தம்பி. நல்லா ஜெபி. பைபிள் வாசி. ஆண்டவர் உதவி செய்வேர். லெட்டர் கிடைச்ச உடன் பதில் போடு. ஒரு ரெலிபோன் அனுப்பி விடு. சிம் போட்டு உன்னோட குரல கேக்க வேணுமாம், அம்மா ஒரே புலம்பல். சரி, கலியாண அலுவல பாரு. உனக்குப் புடிச்சா சொல்லு. அவியள் வாற வாரம் வருவினம். வீட்டுக்கு பதில் போடு!

இப்படிக்கு

அக்கா"

*(02)*

இனியும் றூமில் நிற்க முடியாது. வீட்டுக்காரன் காரணமே இல்லாமல் குத்துக்கதை போடுவான். எங்காவது வேலை தேடி போவது மேல். துரித கதியில் லெதர் ஜக்கட்டைச் சொருகினேன். லிப்டைத்தேடி நடந்தேன். குளிர் கழுத்தினூடாக உள்ளேற ஜக்கட்டைச் சரிப்படுத்தினேன். பச்சை நிற பட்டனை அழுத்த லிப்ட் சில நொடிகளில் காலடியில் வந்து கதவைத் திறந்தது.

ஆராதனைக்குக் கூட்டிக்கொண்டு போற மேல் வீட்டு அன்ரி பல்லைக் காட்டியபடி உள்ளே.

"தம்பி தோத்திரம் சவா...?"

"போன வாரம் ஆரதன எப்பிடி சவாவே?"

"சவா சவா... அன்ரி"

சரியான அலட்டல். மேலும் கதையை வளர்க்க விரும்பவில்லை. மனமும் சரியில்லை! சடசடவென்று நடையை வேகப்படுத்தினேன். இன்னும் ஏழு நிமிசம் கிடக்கு ரெயினுக்கு. பனி தாராளமாய்க் கொட்டிக்கொண்டு இருந்தது. வானத்தை நிமிர்ந்து பார்த்தேன். வானம் இருண்டு போய்க்கிடந்தது. மரங்களில் கிளைகள் எதுவுமில்லை. வெறும் தண்டுகள் மட்டுமே காட்சி தந்தன. நிலத்தில் மஞ் சள் இலைகள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. முகம் கை கால் என உடலை மூடியபடியே பயணிகள் நடக்கின்றனர். நீண்ட கறுப்புக்கோட் அணிந்தபடி ஒரு அழகான வாலிபன் கையில் தோல்பையோடு வேகமாக நடந்து செல்கின்றான். ஒரு சாம்பல் நிற நாயொன்றின் கழுத்துப்பட்டியை, பார்வை இழந்த ஒரு பெண்மணி இறுக்கமாகப் பிடித்திருந்தாள். அந்த நாய் மூச்சை இழுத்தபடி அவளை இழுத்துச் செல்கிறது. வீதியோரத்தில் சில மனிதர்களின் கையில் காப்பி கப் சிகரட் முத்தம் என பரவசமூட்டக்கூடிய சூழல். என்னால் வேகமாக நடக்க முடியவில்லை.

பனி வழுக்கிக்கொண்டு இருந்தது. கண்களில் எரிச்சல் தலையைச் சுற்றியது.

சிகரட்டைத் தேடினேன். குளிர் கோட்டின் மேல் பையில் மடிந்து போய்க் கிடந்த சிகரட் ஒன்றையும் பற்ற வைத்தேன். ஸ்டேசன் மறைவில் நின்று சுதந்திரமாகப் புகையை ஊதினேன். குளிரில் கைகள் குறண்டிக்கொண்டன.

இப்போது ஒரு கப் காப்பி யாராவது தருவார்களா? கிடைத்தால் எவ்வளது நன்மையாக இருக்கும். பொக்கட்டுக்குள் கையை விட்டேன். உள்ளே கிடந்த இரண்டு யூரோக்களை எடுத்து பரிஸ் சிட்டிக்குச் செல்லும் பயண ரிக்கட்டை வாங்கினேன்.

பரிஸ் செல்வதற்கான விரைவு ரயில் அங்கே வந்து ஆயத்தமாய் நின்றது. விரைந்து ஜன்னல் ஓரம் சௌகரியமான ஒரு ஆசனத்தில் அமர்ந்தேன். தலைச்சுற்று அடங்கவில்லை. கண்ணாடியால் எதையும் பார்க்கமுடியவில்லை. பனி முட்டிப்போய்க் கிடந்தது. இருக்கையில் சரிந்து படுத்தேன். நினைவு செக்குமாடு மாதிரி சுற்றி வந்தது.

சரிதா என்னை எப்படி? நம்ப முடியவில்லை. ஒரு வேளை அவளுக்குத் தெரியாமல் அவளது தாய் தேப்பன் கலியாணம் கேட்கிறார்களோ?

எனக்கும் செல்விக்கும் உயர் தரம் படிக்கும்போது காதல் தூது போனவள் சரிதாதானே. எங்கள் காதலுக்குத் துணை போனவளா என்னுடைய மனைவி? நோ நோ.. இது சாத்தியப்படுமா?

சரிதா வீட்டில் வைத்துத்தானே எங்கள் காதல் நாடகம் பிடிபட்டது. நல்ல வேளை சரிதாவுடைய தாய் தேப்பன் அறியவில்லை. இதில் சரிதாவட தலைதான் உருண்டது. செல்வியட அண்ணனிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட சம்பவத்தை நினைத்தால் இன்றும் வெட்கமும் அவமானமும் வரும். வாழ்க்கையில் முதன்முதல் அசிங்கப்பட்ட நாள். செல்வியை என்னுடைய நினைவில் இருந்து அகற்ற முடியாமல் நான் பட்ட பாடு இருக்கே, சொல்லி மாளாது.

சரிதா என்னுடைய நண்பி. அவள் எப்படி என் மனைவியாக? கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஒருவேளை ஏதும் பழிவாங்கல் இருக்குமோ? நோ நோ.. வாய்ப்பே இல்லை!

ரயில் ஒலிபெருக்கியில் சில அறிவித்தல் பிரெஞ்சு மொழியில் செவியில் விழுந்தது. பின்பு ரயில் புறப்பட்டது. சில நிமிடங்களில் அடுத்த தரிப்பிடத்தில் பயணிகள் சிலர் ஏறினர். அவர்களில் பெரும்பான்மையினர் கருப்பு இனத்தவர். சில பிரெஞ்சுக்காரர் நாகரீகமாக உடையணிந்து இருந்தனர். பார்ப்பதற்கு அரச உத்தியோகம் செய்பவர்கள் என எண்ணத் தோன்றியது

“எக்ஸ் கியூஸ் முவா” என்றபடி எடுப்பான குரலில் ஒரு பெண் எனது அருகில் காலியாக இருந்த ஆசனத்தில் வந்தமர்ந்தாள். நான் சற்று சரிந்து கொடுக்க “மெர்சீ

**ரயில் ஒலிபெருக்கியில் சில அறிவித்தல் பிரெஞ்சு மொழியில் செவியில் விழுந்தது. பின்பு ரயில் புறப்பட்டது. சில நிமிடங்களில் அடுத்த தரிப்பிடத்தில் பயணிகள் சிலர் ஏறினர். அவர்களில் பெரும்பான்மையினர் கருப்பு இனத்தவர்.**

மிஸ்யூ” என்றாள். அவளது குரலில் பணிவும் மதிப்பும் கலந்திருந்தது.

தனது லூவித்தன் பையைத் திறந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் திறந்தாள். Fifty shades of gray என்று அதன் அட்டைப்படத்தில் எழுதப்பட்டு இருந்தது. ரயில், மெட்றோ வாயில் என எல்லா இடங்களிலும் இப்பெயரைப் படித்த நினைவு அரும்பியது.

அவள் அளவான உயரத்தில் நிறத்திலே தொடை வரை நீண்ட சொக்கிங்ஸ் அணிந்திருந்தாள். உதட்டில் சிவப்புச் சாயமும் நகங்கள் முழுவதும் அதே வர்ணத்தையும் பூசி இருந்தாள். நல்ல குடும்பத்தில் பிறந்த, அரசுப் பணி ஒன்றில் வேலை பார்க்கும் பெண் போலத் தோற்றமளித்தாள். தனது நீண்ட வழுவழுப்பான காலை மற்றக் காலின் மீது பின்னிப்போட்டாள்.

அப்பாடா, எப்படி சொல்லுவது தொடைகளின் செழுமை. ஆண்களை சும்மா கசக்கித் தின்பாள்.

ஒரு நடிகையாகவோ அல்லது ஒரு பிரெஞ்சு மொடல் அழகியாகவோ இருக்க வாய்ப்பு இருக்கின்றது.

சைபீரிய ஹாஸ்கியின் கண்களைப்போல் அவளது கண்கள் மினுங்கின. மார்புகள் மலைகளைப்போல குத்தி நின்றன. எந்தச் சலனமும் இல்லை

புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும்போது மட்டும் மெல்லிய சத்தம் நிலவியது. அவளை மரியாதையோடு பார்த்தேன். கொள்ளையழகு.

எனது நெற்றியின் வியர்வை கன்னங்கள் வழியாக வடிந்தோடியது. வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது. அடக் கடவுளே. வாந்தி எடுக்கவேண்டும். தடுக்க வழி

எதுவும் உண்டா? விரைவு ரயில் ஒரு சில இடத்தில் மட்டும் நிறுத்தப்படும். வெளியே போக முடியாது.

வாயில் புளிப்புத்தன்மையான நீர் சுரந்தது.

முடியவில்லை. ஒரு வேளை வாந்தி எடுத்து விடுவேனோ? நோ நோ...

முடியாத காரியம். ஜன்னல் திறக்க முடியாது.

ரொய்லட் திறந்து விட்டு இருக்க மாட்டார்கள்...

சன நெரிசல் வேற.

"ஏசப்பா நீதான் என்னோட இருக்க வேணும். உம்மை நம்புபவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை என்றீர்..."

நான் இயலாமையால் உழன்றுகொண்டு இருப்பதை அப்பெண் கடைக்கண்ணால் பார்த்துவிட்டுப் புத்தகத்தின் மீது தனது கண்ணை ஊர விட்டாள். அவளது பொன் நிறக் கூந்தல், நெற்றி மீது வழிந்துவிட, எடுத்துக் காது அருகில் செருகிச் சரிப்படுத்தினாள்.

அடி வயிற்றுக்குள் மாபெரும் பிரளயம் ஏற்பட்டது. முடியவில்லை. ஓங்காளித்தேன். வெறும் தண்ணீரில் உப்பிய பணிஸ் கரைந்து போய்க் குமட்டிக்கொண்டு வெளியே வந்தது.

எந்தச் சலனமுமின்றி இயந்திரமாய்த் தன்னுடைய கைக்குட்டையை எடுத்து என்னிடம் திணித்தாள். ஏக்கத்தோடு அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

என்னுடைய கண்களில் ஈரக்கசிவை அந்த நொடியில் உணர்ந்தேன். அவளது ஈரப்பதமான கைகள் என் பிடரியைத் தாங்கிக்கொண்டது.

நம்ப முடியவில்லை இப்படியும் மனிதர்..!?

"ca va மிஸ்யூர்" என்றாள்.

எரிந்த தொண்டையால், "மெர்சீ மன்மசல்" என்றேன்.

என் மீது மெல்லிய புன்னைகையைப் படர விட்டாள். பூசி இருந்த சென்ற் நறுமணத்தில் அவளது ஸ்பரிசத்தை உணர்ந்தேன். நிமிர்ந்து பார்த்தேன். உதட்டுச்சாயத்தின் நிறத்தில் ஒரு பிறா தோள்பட்டையில் நெளிந்தது. பார்வையை விலக்க முயற்சித்தேன்.

சில வெண்மையான ரிசியூ பேப்பர் சிலவற்றை எடுத்து எனது கைகளுக்குள் திணித்தாள்.

"மெர்சி புக்கு..."

ஒரு பிளாஸ்டிக் போத்தலில் நிறைந்த நீர் அவளது கையில் இருந்து என் கைகளுக்கு மாறியது. சற்று தயங்கியபடி குடித்தேன். தொண்டை எரிச்சலைச் சற்று குறைத்தது. நன்றி சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும் போல் இருந்தது. பரந்த மனம் அவளுக்கு. உலகத்தில் இப்படியல்லாம் மனிதர்கள் உள்ளனர்தானே? பெண் வடிவில் ஒரு அழகி இப்போ என்னைத் தாங்கிக்கொள்கிறாள்.

பரிசுக்கு செல்லும் வழியில் 'ரோசா பார்க்' என்ற தரிப்பில் அவள் இறங்கப்போகிறாள் என்பதை ஊகித்துக்கொண்டேன். தன்னுடைய பொருட்கள் எல்லாவற்றையும் சரிப்படுத்தினாள். மெல்லிய புன்முறுவல் பூத்தபடியே, போகும்போது, "டேக் கார் மிஸ்டர்" என்றாள்.

அந்த வார்த்தையில் பரிதாபம் கொட்டிக்கிடந்தது. நான் அடைத்த குரலில், "தேங்ஸ்" என்றேன். அவள் வேகமாக நடந்து மறைந்து போகும்வரை அவளைப் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

ரயில் மெதுவாய் பாரிஸ் நகரை நோக்கி முன் நகர்ந்தது.

'அவள் பின்னால் செல்!' என்றது உள்ளிருந்து ஒரு குரல்.

தொண்டை காய்ந்து போய் வயிறு எரிந்து கொண்டு இருந்தது.

கைகளால் அவள் இருக்கையைத் தடவிப்பார்த்தேன். இருக்கையில் அவளது தேகச்சூடு இன்னும் அடங்கவில்லை. அவளது கைகள் என் தேகத்தைத் தீண்டியதை எண்ணிப் பரவசமடைந்தேன்.

எனக்குள்ளே தவிப்பு. அவளுடன் இரண்டு வார்த்தை பேசவேண்டும். அவளை மீண்டுமொரு முறை சந்திக்கமுடியாதா?

அவள் மடியில் குழந்தை போல என்னைக் கற்பனை செய்து பார்த்தேன். உடல் மீது மெல்லிய காம நோய் தொற்றிக்கொண்டதை உணர்ந்தேன்.

இரவு தூங்க முடியவில்லை. அந்தப்பெண்மீது கொண்ட காமம் மெல்ல மெல்ல உடல் மீது பரவத்தொடங்கியது. நாளை எப்படியாவது சந்தித்துப் பேச முடிவு செய்தேன்.

வீதிகள் மீது பனியால் மூடிக்கிடந்தது. மனித நடமாட்டமில்லை. பனித்தூறலும் ஓயவில்லை.

இனம் தெரியாத வெள்ளைக்காரப் பெண்ணிடன் இருந்து என் நினைவுகளைப் பிரித்தெடுக்க முடியாமல் திணறிக்கொண்டு இருந்தேன்.

இதைப் படிப்பவருக்கு ஒருவேளை வேடிக்கையாகத்தான் இருக்கும். சுய நினைவுகளை இழந்து அந்தப்பெண்ணைக் காண்பதற்காக ரயிலேறி எல்லா ஸ்டேசனிலும் அலைந்து திரிந்து இருக்கின்றேன்.

அவள் உடல் மீது நான் கொண்டது காம இச்சையா?அல்லது அவள் மீது நான் செலுத்தும் மரியாதையா? சரியாகப் பகுத்தாய்வு செய்யத் தெரியவில்லை. ஆனால் தவறாமல் அவளது நினைவுலகில் சஞ்சரித்துக்கொண்டு இருந்தேன். சில நாட்களில் தூக்கத்தைத் தொலைத்து அலைய ஆரம்பித்தேன். காதல் இதுவும் ஒரு மாதிரியான இன்பத்தை வாரி வழங்கியது.

மீண்டும் ஓர் நாள் காலை அதே நேரம் ரயில் எடுத்தேன். தயக்கத்தோடு அதே ரயில் பெட்டியில் அவளது வரவுக்காகக்

காத்திருந்தேன். நான் நினைத்தது போல அவள் அதே ரயிலினுள். இம்முறை அவளுக்கு அருகில் இருப்பதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை!

தரிப்பிடம் வர அவளைப் பின்தொடர்ந்தேன். நீண்ட குதிக்கால் கொண்ட சப்பாத்தில் இருந்து 'டொக் டொக்' என்ற சத்தம் அரபிக் குதிரையை நினைவுபடுத்தியது.

அண்மையில் ஒரு தரிப்பிடத்தில் நீல நிற பீ.எம்.டப்ள்.யூ கார் அவளுக்காகக் காத்து நின்றது. அதில் ஏறி மின்னல் வேகத்தில் என்னைக் கடந்து போனாள்.

மனம் அவள் பின்னால் பின்தொடர்ந்து போனது. அடுத்த நாள் ரயிலில் அவள் கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்றாள். என்னுடைய ஆசனத்தைக் கொடுத்து உதவினேன். என்னை நினைவு வைத்திருப்பாளா என்ற சந்தேகம், தயக்கத்துடன் என்னை அறிமுகம் செய்தேன்.

நம்ப முடியவில்லை, இனிமையாகப் பேச ஆரம்பித்தாள்.

நான் பிரெஞ்சு மொழியில் தடக்கினேன். மொழி தெரியாமல் திணறினேன். நிலைமையைப் புரிந்துகொண்டாள்.

"ஆங்கிலம் தெரியுமா?"

"ஆம்" என்றேன்.

ஆங்கிலம் அவளது நுனி நாவில் தவழ்ந்தது. ரசித்துக்கொண்டே இருந்தேன்.

அவளது பெயர் மல்கோவா. அந்துவான் ரஷியாவின் சன் பீற்றர்ஸ்பேக் நகரைச்சேர்ந்தவள். ஆறு வருடங்களாக பரிசில் தனியார் நிறுவனமொன்றில் தொழில்புரிவதாக தன்னை அறிமுகம் செய்திருந்தாள்.

ரயிலில் எங்களுடைய சந்திப்பு தொடர்ந்தது. தான் படித்த புத்தகத்தைப்பற்றிப் பேசுவாள். தற்போது Panthan-ல் வசிப்பதாகக் கூறி இருந்தாள்.

நினையா பிரகாரம் என்னை ஒருநாள் தன்னுடன் வீட்டில் வைன் அருந்தும்படி அழைத்தாள். அது ஒரு ஞாயிறு தினமாக இருந்தது. பனி சரமாரியாகக் கொட்டிக்கொண்டு இருந்தது. ஆடம்பரமாக உடை உடுத்திக்கொண்டு அவளது முகவரியில் உள்ள அடுக்குமாடிக்குப் போனேன்.


ஆறாவது மாடியில் நான்கு என்று இலக்கமிட்ட அறைக் கதவில் அழைப்பு மணியை அழுத்தினேன். உள்ளிருந்து கதவு திறக்கப்பட்டது. தயக்கத்துடன் உள் நுழைந்தேன். வரவேற்பறை முழுதும் சிவப்புக்கம்பளம். உயரமான கூசாக்கள். வீடு நிறைந்த நறுமணம். சப்பாத்தைக் கழற்றி ஒரு பக்கம் வைத்தேன்.

கழுத்து வழியே வியர்வை வழிந்தது. ஒரு வகையான பதட்டம் தலையெடுத்தது. கடிகார முள் ஆறுமணியைக் காட்டியது. பார்வையைச் சுவர் மீது படரவிட்டேன். சுவரில் ஒரு புகைப்படம் ஐந்தடியில் தொங்கிக்கொண்டு இருந்தது.

மேலாடையின்றி ஒரு பெண் கைகளால் மார்பை மறைத்து போஸ் கொடுத்தபடி நின்றாள்.

'திக்' என்று தூக்கி வாரிப் போட்டது. நெஞ்சு வெடித்துச் சின்னா பின்னமாகியது. மெதுவாக அடியெடுத்து வைத்தேன். படத்தை நோக்கிக் கூர்ந்து பார்த்தேன். வேறு யாருமில்லை. அது அவள்தான். நான் பிரியப்படும் மல்கோவா அந்துவான்.

திகைப்பிலிருந்து மீள முடியவில்லை யார் இவள் ஆபாசக்காரி? என்ன தொழில் செய்கிறாள்? நான் நினைத்தது தப்பாகிவிட்டதோ? ஒரு வேளை...? தவறான இடத்துக்கு வந்து விட்டேனோ?



என் பணி கடன் செய்து கொடுப்பது

Das Narayanasamy

Broker | FSCO Lic.: M08007147
Verico Dynasty Wealth|
Brokerage FSCO Lic.:12699

Dir: 416-543 6614

e-Mail: dassamy@gmail.com

என்னை அறியாமலே மனசுக்குள் செபிக்கத்தொடங்கினேன். உதடுகள் துடித்தன. உடல் முழுதும் வேர்த்து விறுவிறுத்தது.

ஒரு குரல் உயரத்தில் இருந்து..

“ஹேய் சவா?”

“ஹெய் கம் அப்ஸ்ரெயர்...”

தயங்கித் தயங்கி கம்பளம் விரித்த படிவழியே மேலேறினேன். மேல் அறையில் சிவப்பு நிற சோபாக்கள் சதுரமாகச் சுற்றி அடுக்கப்பட்டு இருந்தன. மூலையில் நெருப்பு எரிந்துகொண்டு இருந்தது.

என்னுடைய கண்கள் சுற்றும் முற்றும் அவளைத்தேடி அலைகின்றது. இன்னும் கண்ணில் அவள் படவில்லை. மேசையில் கிடந்த ஒரு புத்தகத்தைப் பதட்டத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தேன். எதிரே குளிர் காய்வதற்காக நெருப்பு சுடர்விட்டு எரிந்துகொண்டு இருந்தது. அதன் மஞ்சள் நிற சுவாலையில், முழுவதும் சூடு பரவி இருந்தது. கையிடாத வெள்ளை நிற மெல்லிய நீளக் கவுண் ஒன்றை அணிந்தபடி, கையில் இரு மதுக்கோப்பையை அவள் ஏந்தி வந்தாள்.

தொண்டை அடைத்தது. வாயில் உமிழ் நீர் சுரந்தது. ஒருவித புது உணர்வு. தயக்கத்துடன் அவள் முன் எழுந்து நின்றேன்.

நேராக வந்து முத்தமிட்டு எனக்கெதிரே அமர்ந்தாள். பேச வார்த்தை வரவில்லை. எங்கிருந்து தொடர்வது.. என்ன பேசுவது.. தலை கிறுகிறுத்தது. வெளியே ஓடுவோமா என்று மனசு சொன்னது. அது மரியாதை ஆகாது. எதுவென்றாலும் எதிர்கொள்வோம்.

கையில் இருந்த வைன் கிளாசை நீட்டினாள். தயக்கத்துடன் வாங்கி சியர்ஸ் சொன்னேன். அவள் ஏதோ பேசிக்கொண்ட சத்தம். அதை என் புலனுக்குள் அடக்க முடியவில்லை

வரவவேற்பறையில் அந்தப் புகைப்படம் என்னைத் தொந்தரவு செய்யத் தொடங்கியது. மனம் தடுமாற ஆரம்பித்தது. நிலைகுலைந்து நின்றேன் அவளிடம் அதைப்பற்றி கேட்க மனம் இடங்கொடுக்கவில்லை.

இரு மணித்தியாலத்துக்குள் என்னைப்பற்றி எல்லாவற்றையும் போட்டு வாங்கி விட்டாள். பரிஸ் நகரில் இன்னும் வாழலாம். அதற்கான நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் அவளிடமிருந்து தெறித்தன.

நேரத்தைப் பார்த்தேன். ஏழு மணியைத் தாண்டி முள் நகர்ந்துகொண்டு இருந்தது.

சிகரட் பெட்டியை என்னிடம் நீட்டினாள். ஒன்றை எடுத்துக்கொண்டேன். சிகரட்டை பற்றவைக்கும் முயற்சியில் நெருங்கினாள். உடல் வாசனை எல்லாவற்றையும் மறக்கச்செய்தது. சற்று நேரம் தங்கிச்செல்வதாக உத்தேசம். மீண்டும் மதுக்கோப்பை நிரம்பி வழியும் சத்தம். போதை தலைக்கேறியது.

அங்கிருந்து தயக்கத்துடன் விடைபெற முயற்சித்தேன். கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தேன். இன்னும் சில நிமிடங்களுக்குள் ரயில் நிலையத்தை அடைந்தால் ரயிலைப் பிடித்துவிடலாம். எழுந்து நன்றி கூறி விடைபெற்றேன். கட்டித்தழுவிய படி கன்னங்களில் முத்தமிட்டு வாயில் வரை வந்து வழி அனுப்பினாள்.

இரவு வீட்டுக்கு வந்து தூங்க முடியவில்லை. இரவு 12 மணிக்கு ஒரு குறுஞ்செய்தி bon nuit என்று எழுதி வந்தது. அது மல்கோவா அனுப்பியதுதான். பதில் அனுப்பினேன். அவளது விருந்துக்கும் நன்றி கூறி மீண்டும் ஒரு சிம்பொல் பொம்மையொன்று சிரித்துக்கொண்டு தொலைபேசி திரையில் வந்து கிடந்தது.

மனசு சஞ்சலத்தோடு காலை ரயில் ஏறி லாசப்பல் போனேன். என்னுடைய கல்லூரி நண்பர்கள் சிலரைச் சந்தித்தேன். வேலை பற்றி விசாரித்தேன். ஏதும் வந்தால் சொல்லுவதாகச் சொன்னார்கள். அதில் ஒருவன் பிகாலுக்குப் போகவேண்டும் என்று அடம்பிடித்தான். தயக்கத்துடன் அவர்களுடன் இணைந்துகொண்டேன்.

எங்களுக்கு முன்னால் நீண்டு பரந்த வீதியில் எங்கும் வாகன நெரிசல். எங்களுக்கு முன்னால் காற்றைக் கிழித்துக்கொண்டு ஒரு பீ.எம்.டபிள்.யூ கார் சென்று ஒரு விடுதியின் முன்னால் பிறேக் அடித்து நின்றது.

கறுத்த நீண்ட குளிர் கோட்டும் பறவையின் சிறகால் அலங்கரிக்கப்பட்ட தொப்பி ஒன்றையும் அணிந்தபடி ஒரு பெண் இறங்கினாள். எங்கோ பார்த்த முகம். தயக்கத்தை விலக்கி கிறுகிறு என்று பின் தொடர்ந்தேன். முன்கதவுனூடாக செக்ஸ் டோல் விற்கும் கடை ஒன்றினுள் புகுந்தாள். உள்ளே சென்றவள் வரும்வரை பதட்டத்துடன் காத்துக்கொண்டு நின்றேன்.

சில நிமிடங்களில் ஒரு பெண். அடக் கடவுளே, அது மல்கோவா. அவள் உடை அணிந்து வந்த கோலம் என்னைத் தூக்கி வாரிப்போட்டது. பரிதாபத்துடன் அவளைப் பார்தேன். கண்ணீர் முட்டியது. மெதுவாக நகர முயற்சித்தேன்.

அதற்குள் என் முதுகை யாரோ உலுப்ப, திடுக்கிட்டுத் திரும்பினேன். பின்னால் கறுப்பு இன வாயில்காவலன் முறைத்துப்பார்த்தான். நான் மழையில் நனைந்த கோழியைப்போல் பயந்து ஒடுங்கி நின்றேன். கண்டிப்பான குரலில், இடத்தை விட்டுச் செல் என்று கட்டளையிட்டான். வெடுக்கென்று பார்வையைத் திருப்பினேன்.

சாலையில் சிவப்பு நிற மின் குமிழ் எரிய ஆரம்பித்தது. வாகனங்கள் பிறேக் போட்டு நின்றன. நடையை வேகப்படுத்தினேன். ரயில் தரிப்பிடத்தில் நண்பர்கள் காத்து நின்றார்கள். வெறுப்போடு சாலை ஓரத்தில் அமைந்திருந்த செக்ஸ் சொப்களை விறைத்துப்பார்த்தேன். நகர் வெறும் சூனியமாய்க் கிடந்தது. சிவப்பு நீல நிற மின்குமிழ்கள் கண்களை உறுத்தின. வெடுக்கென வெறுப்போடு பார்வையைத் திருப்பினேன். வானம் இருண்டு கிடந்தது. மழை வரும் அறிகுறி தென்பட்டது

தொலைபேசியைப் பார்த்தேன். அதன் திரையில் சில தவறிய அழைப்பு. அது வீட்டுக்காரனிடமிருந்து என்பதை ஊகித்துக்கொண்டேன். சடார் என்று தொலைபேசியை அணைத்துவிட்டு நடையைத் துரிதப்படுத்தினேன்.

# நேர்காணல்
# எழுத்தாளர் இமையம்

சந்திப்பு: அரவிந்தன்

**உங்களுடைய முதல் நாவலான 'கோவேறு கழுதைகள்' வெளிவந்து இருபத்தி ஐந்து ஆண்டுகளாகிவிட்ட பிறகும் நாவல் கொண்டாடப்படுவதற்கான காரணமாக எதைக் கருதுகிறீர்கள்?**



இதுதான் என்று வரையறுத்துச் சொல்லத் தெரியவில்லை. ஆயிரம் ஆண்டுகள், இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் தமிழ்ச் சமூகத்தால் கொண்டாடுகிற பல நூல்கள் இருக்கின்றன. அந்த வகையில் பார்த்தால் இருபத்தி ஐந்து ஆண்டுகள் என்பது சர்வசாதாரணம்.

**'கோவேறு கழுதைகள்' நாவல் பேசப்பட்ட அளவிற்கு உங்களுடைய பிற படைப்புகள் பேசப்படவில்லையே, ஏன்?**

பேசப்படவில்லை என்று சொல்ல முடியாது. என்னுடைய எல்லா நூல்களுமே பரந்த தளத்தில் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய எல்லா நூல்களுமே இன்றும் அச்சில் இருக்கின்றன. ஒவ்வொரு நூலும் பல முறை மறு அச்சு கண்டிருக்கிறது. மறு அச்சு காணாத நூல் என்று ஒன்று கூட இல்லை. 'கோவேறு கழுதைகள்' நாவலின் வழியாக எனக்குக் கிடைத்த அங்கீகாரத்தைத் தமிழ் எழுத்தாளர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் மௌனம் காத்தார்கள். பெரிய எழுத்தாளர்கள் என்பவர்கள் தவறுதலாகக்கூட என்னுடைய பெயரைச் சொல்வதில்லை. நம்முடைய எழுத்தாளர்கள் அரசியல் செய்கிறார்கள். தமிழ்நாட்டு அரசியல்வாதிகளைவிட இழிவான அரசியல் செய்கிறார்கள். எல்லா விதமான இழிவான இலக்கிய அரசியலையும் மீறி வாசகர்கள் என்னுடைய நூல்களை வாங்குவது மட்டுமல்ல, படிக்கவும் செய்கிறார்கள். வாசகர்கள் நல்ல எழுத்துக்களைத் தேடிப் படிக்கவே




செய்கிறார்கள். 'எங் கதெ' நாவல் வந்த ஒரு மாதத்திலேயே மறு அச்சுக் கண்டது. 'பெத்தவன்' நெடுங்கதை இதுவரை பத்துக்கும் மேற்பட்ட முறை மறு அச்சு கண்டிருக்கிறது. 'கொலைச்சேவல்' நூல் சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்கான SRM பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராய விருதை 2016ல் பெற்றிருக்கிறது. ஆனந்த விகடன் 2016ஆம் ஆண்டிற்கான சிறந்த சிறுகதைத் தொகுப்பு என்று 'நறுமண'த்திற்கு விருது வழங்கியது. என்னுடைய நாவல்களும் சரி, சிறுகதைத் தொகுப்புகளும் சரி, சோடைபோனது என்று ஒன்றையும் சொல்ல முடியாது.

**'எங் கதெ' நாவல் வெளிவந்த இரண்டாவது மாதமே மறு அச்சு கண்டதற்கான காரணம் என்ன? 'எங் கதெ' நாவலுக்கு வந்த விமர்சனங்களை 'அம்ருதா' மாத இதழ் சிறப்புப் பகுதியாக வெளியிட்டது இல்லையா?**

நாவல் வெளிவந்த ஒன்றிரண்டு மாதங்களிலேயே நூறுக்கும் மேற்பட்ட விமர்சனங்கள் வந்தன. அதோடு முகநூலில் ஏராளமானவர்கள் எழுதினார்கள். இது எனக்கு மட்டுமல்ல, என்னுடைய பதிப்பாளர் க்ரியா எஸ்.ராமகிருஷ்ணனுக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. 'கோவேறு கழுதைகள்' நாவலுக்குப் பிறகு 'எங் கதெ' நாவலுக்குத்தான் நிறைய பேர் என்னுடன் போனில் பேசினார்கள். நாவலைப் படித்த ஒவ்வொருவரும் நாவலுக்குள் ஏதோ ஒரு விதத்தில் தங்களை அடையாளப்படுத்திக்கொண்டார்கள். நாவலைப் படித்த ஒவ்வொருவரும் சொன்ன பொதுவான வாக்கியம் 'ஒரே சிட்டிங்கில் படித்தேன்' என்பதுதான். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இதே வாக்கியத்தைத்தான் சொன்னார்கள். அப்படிச் சொல்வதற்கு கதையின் மையமும் கதையைச் சொல்ல தேர்ந்தெடுத்திருந்த மொழியும்தான் காரணம்.

**'கோவேறு கழுதைகள்' நாவலுக்குப் பிறகு உங்களுக்கு மிகப்பெரிய பெயரை வாங்கிக் கொடுத்தது 'பெத்தவன்' நெடுங்கதை. திவ்யாஇளவரசன் காதல் பிரச்சனை, அதனால் தருமபுரி நாயக்கன்கொட்டையில் நடந்த கலவரம்தான் கதைக்குக் கூடுதல் கவனத்தைக் கொடுத்தது. தருமபுரி கலவரத்திற்கு முன்பாகவே கதையை எழுதிவிட்டீர்கள். இது எப்படி சாத்தியப்பட்டது?**

காக்கா உட்காரவும், பனம்பழம் விழவும் சரியாக இருந்தது. சமூகமும் ஊடகங்களும் தமிழ்நாட்டில் திவ்யாஇளவரசன் பிரச்சினையும், நாயக்கன்கொட்டாய் எரிப்பும் முதன்முதலாக நடந்ததுபோல் சித்தரித்ததுதான் வேடிக்கை. காதல் விவகாரத்தால் தமிழ்நாட்டில் குறைந்தது மாதத்திற்கு ஒரு கலவரமாவது நடக்கும். ஊடகங்களின் கவனத்திற்கு வராமல் எத்தனையோ சம்பவங்கள் இருக்கின்றன. "நம்பாளுகூட இவரு தம் பொண்ண ரயிலேத்தி அனுப்பிட்டாரு சார்" என்று ஒருவர் சொன்ன வாக்கியம்தான் 'பெத்தவன்' கதையை எழுதுவதற்குக் காரணமாக இருந்தது. அதோடு புதுக்கூரைப்பேட்டை கண்ணகி முருகேசன் படுகொலையும், ஆதனூர் சேகர் பொன்னருவி கொலையும்தான். இரண்டு சம்பவங்களும் நடந்து கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. கண்ணகி முருகேசன் கொலை வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கிறது.

**'பெத்தவன்' கதையை எழுதியதற்காக உங்களுக்கு எதிர்ப்பு, மிரட்டல் எதுவும் வந்ததா?**

'பெத்தவன்' கதைக்காகவும், 'சாவுசோறு' கதைக்காகவும் லேசான மிரட்டல் இருந்தது. எனக்கு அரசியல் பின்புலம் இருந்ததால், அந்த மிரட்டல் பகிரங்கமாக இல்லாமல் இருந்தது. சாதியக் கட்சித் தலைவர்கள் என்னை மிரட்டியது எனக்கு வருத்தமில்லை. எழுத்தாளர்கள் பலர் நம் சாதிக்கு எதிராக இவன் எழுதி இருக்கிறான் என்று சாதியக் கட்சித் தலைவரிடம் சென்று சொன்னதுதான் வருத்தமாக இருந்தது. மார்க்சியம் பேசிய, பெரியாரியம், அம்பேத்காரியம் பேசிய புரட்சிகர எழுத்தாளர்களின் உண்மையான முகம் அப்போதுதான் தெரிந்தது. சாதிக் கட்சித் தலைவர்களைக் காட்டிலும் மோசமானவர்கள் சாதிக் கட்சி எழுத்தாளர்கள்.

**உங்களுடைய நாவல், சிறுகதைகளுக்கான கருவை, மொழியை எங்கிருந்து எடுக்கிறீர்கள்?**

கதைக்கான கரு என்பதும், கதைக்கான மொழி என்பதும் பொருள் அல்ல, எடுப்பதற்கும் வைப்பதற்கும். கதைக்கான கரு என்பதும், மொழி என்பதும் உணர்தல், வாழ்தல். நான் உணர்ந்ததையும், அறிந்ததையும், வாழ்ந்ததையும்தான் எழுதியிருக்கிறேன். நான் கற்பனைக் கதைகளை எழுதுவதில்லை. யூகமாகவும் எழுதுவதில்லை. அதே நேரத்தில் அப்பட்டமான உண்மைக் கதைகள் என்றும் எழுதுவதில்லை. அப்பட்டமான உண்மைகளை எழுதவே முடியாது. பொழுதுபோக்கிற்காகப் படிக்கிற கதைகளை, மறுவாழ்வு, விண்ணுலக வாழ்வு, ஆன்மா கர்மா என்பன போன்ற கற்பனை கட்டுக்கதைகளையும் எழுதுவதில்லை. யோகாதான் எல்லாவற்றிற்கும் மருந்து என்பனபோன்ற பரிந்துரைக் கதைகளையும், கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்பனபோன்ற நீதிக் கதைகளையும் நான் எழுதுவதில்லை. என்னுடைய கதாபாத்திரங்களுக்குச் சோறுதான் பிரச்சினை. உயிருடன் இருப்பதுதான் பிரச்சினை.

இந்த இரண்டையும்தான் எழுதுகிறேன். நான் சமூகத்தை எழுதுகிறேன். அதையும் சார்பு நிலையற்று எழுதுகிறேன். என்னுடைய நாவல்களும், சிறுகதைகளும் சமூகம் எழுதிய கதைகளே.

**நீங்கள் எழுதிய நாவல்களில் உங்களுக்கு மிகவும் பிடித்த நாவல் எது? நீங்கள் எழுதிய சிறுகதைகளிலேயே உங்களுக்கு மிகவும் பிடித்த சிறுகதை எது?**

நான் அரசாங்கத்திலோ, தனியார் கம்பனியிலோ வேலை செய்யவில்லை. பட்டும்படாமல், விரும்பியும் விரும்பாமலும் வேலை செய்வதற்கு. பிறருடைய கல்யாணத்திற்கு, சாவிற்கு விருப்பமில்லாமல் முகத்தைக் காட்டுவோம் என்பதற்காகச் செல்வதைப் போன்றதல்ல. மாமியாருக்காக மருமகள் சமைப்பதைப் போலில்லை கதை எழுதுவது. ஏனோதானோ என்பதற்கோ, கடமைக்குச் செய்வோம் என்பதற்கோ இடமில்லை. இந்த நாவலை, இந்தச் சிறுகதையை எழுதவில்லை என்றால் செத்துவிடுவோம் என்ற மனநிலை வந்த பிறகுதான் எழுதுகிறேன். ஒவ்வொரு நாவல் எழுதும்போதும், ஒவ்வொரு சிறுகதையை எழுதும்போதும் உலகிலேயே மிகவும் முக்கியமான காரியத்தைச் செய்கிறோம் என்ற உணர்வுடனும், அதைச் சரியாகச் செய்யவேண்டும் என்ற உணர்வுடனும்தான் எழுதுகிறேன். விரும்பிச் செய்கிற காரியத்தில் பிடித்தது, பிடிக்காதது, உயர்ந்தது, தாழ்ந்தது என்ற பேச்சுக்கே இடமில்லை. அரைகுறையாகப் பிடிக்கிற விஷயத்தை நான் ஒருபோதும் செய்வதில்லை. ஒரு நாவல், ஒரு சிறுகதை வாசகருக்குப் பிடிக்கலாம், பிடிக்காமல் போகலாம். ஆனால் ஒரு எழுத்தாளனுக்கு அப்படியல்ல. பிடிக்காத கதையை ஏன் எழுதப்போகிறேன்?

**உங்களுடைய சிறுகதைகளான 'ஆகாசத்தின் உத்தரவு', 'பொருத்தம்', 'பரிசு', 'ஐயா' போன்ற ஒரு சிலவற்றைத் தவிர பெரும்பாலான சிறுகதைகளில் ஆண்கள் மையப் பாத்திரமாக வருவதில்லை. 'கோவேறு கழுதைகள்', 'ஆறுமுகம்', 'செடல்', 'எங் கதெ', 'செல்லாத பணம்' என்று எல்லா நாவல்களிலுமே பெண்கள்தான் பிரதான கதாபாத்திரங்களாக இருக்கிறார்கள். ஏன்?**

பெண் பாத்திரங்களை முதன்மைப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய தனிப்பட்ட விருப்பமல்ல. ஆனாலும் என்னுடைய ஐந்து நாவல்களிலும், அநேக சிறுகதைகளிலும் பெண்கள்தான் முதன்மைப் பாத்திரங்களாக இருக்கிறார்கள். இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டதல்ல. கதையின் தன்மைதான் கதாபாத்திரங்களைத் தீர்மானிக்கிறது. கதாசிரியனல்ல. ஒரு பெண்ணின் வழியாகக் குடும்பத்தை அணுகுவதும் சமூகத்தை அணுகுவதும்தான் சரி என்று தோன்றுகிறது. குடும்பத்தில், சமூகத்தில் அதிகமான உழைப்பைக் கொடுப்பவர்கள் பெண்களாக இருக்கிறார்கள். அதிகமான துயரத்தை எதிர்கொள்கிறவர்களாக, அதிகமான கண்ணீரைச் சிந்துகிறவர்களாக, அதிகமான நெருக்கடிகளை, அவமானங்களைச் சந்திக்கிறவர்களாக, அதிகமான உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகிறவர்களாக, இரட்டை உழைப்பைக் கொடுப்பவர்களாகப் பெண்களே இருக்கிறார்கள். சாதிய ஒழுக்கம், சமூக ஒழுக்கம்



என்பதெல்லாம் பெண்களை மையப்படுத்தியே இருப்பதால், குடும்பம் என்ற நிறுவனம் பெண்ணை ஆதாரமாகக் கொண்டு இயங்குவதால், தனிமனித வாழ்வை, சமூக வாழ்வை அணுகுவதற்குப் பெண் கதாபாத்திரங்களே ஏற்றவை.

**உங்களுடைய நாவல்களிலும் சரி, சிறுகதைகளிலும் சரி, கதாபாத்திரங்கள் சற்றுக் கூடுதலாகப் பேசுவதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

நான் அப்படி நினைக்கவில்லை. 'எங் கதெ' நாவலில் வரும் கமலா பேசுகிற வார்த்தைகளையும் 'செல்லாத பணம்' நாவலில் வரும் ரேவதி பேசுகிற வார்த்தைகளையும் மொத்தமாக எண்ணிச் சொல்லிவிடலாம். 'கோவேறு கழுதைகள்' நாவலில் வரும் ஆரோக்கியமும் சரி, 'செடல்' நாவலில் வரும் செடலும் சரி, 'ஆறுமுகம்' நாவலில் வரும் சின்னபொண்ணு, தனபாக்கியம் போன்றவர்களும் சரி சமூகத்தோடு உறவாட வேண்டிய சூழலில் இருப்பவர்கள். அவர்கள் பேசித்தான் தீர வேண்டும். அவர்கள் எவ்வளவு பேசுகிறார்களோ அந்த அளவிற்கு அவர்களுக்கான சோற்றுக்கான கதவு திறக்கும். சமூகம்தான் அவர்களைப் பேச வைக்கிறது. 'கோவேறு கழுதைகள்' நாவலில் வரும் ஆரோக்கியம் வண்ணாத்தி, 'செடல்' நாவலில் வரும் செடல், பொட்டுக்கட்டிவிடப்பட்ட பெண். 'ஆறுமுகம்' நாவலில் வரும் தனபாக்கியம், சின்னபொண்ணு ஆகியோர் பாலியல் தொழிலாளிகள். இப்படிப்பட்ட பெண்கள் பேசித்தானே தீர வேண்டும். நான் வேண்டுமென்றே அவர்களைப் பேச வைப்பதில்லை. பேசுவது அவர்களுடைய இயல்பு, வாழ்க்கை. தங்களுடைய துயரத்தை, வலியை, ஆற்றாமையை, கண்ணீரை, இழப்பை, பேச்சுகளின் வழியே கரைக்கிறார்கள். அதே நேரத்தில் என்னுடைய கதாபாத்திரங்கள் அவர்களின் குடும்ப, வாழ்க்கைச் சூழலுக்கு மீறி, தங்களுடைய இயல்புக்கு மீறி ஒரே ஒரு வார்த்தை பேசினார்கள் என்று சொல்ல முடியாது. சில எழுத்தாளர்கள் மாதிரி நான் ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி, அதன் இயல்புக்கு மாறாக எனக்குத் தெரிந்த தத்துவங்களை, நீதிபோதனைகளை, லட்சியங்களைச் சொல்வதில்லை. என்னுடைய விருப்பமாக நான் ஒரு சொல்லைக்கூடச் சேர்ப்பதில்லை. என்னுடைய நாவல்களிலும், சிறுகதைகளிலும் இடம்பெற்றிருக்கும் உரையாடல்கள் உயிர்ப்புடன் இருக்கும்.

**உங்களுடைய நாவல்களும், சிறுகதைகளும் பெரும்பாலும் கிராமம் சார்ந்தவையாகவே இருக்கின்றன. நகரம் சார்ந்த கதையை எழுதுவீர்களா?**

'கோவேறு கழுதைகள்', 'செடல்' ஆகிய இரண்டு நாவல்களும்தான் கிராம வாழ்வைப் பதிவு செய்தவை. 'ஆறுமுகம்' நாவல் கிராமமும் நகரமும் இரண்டும் கலந்துதான் இருக்கும். 'சொல்லாத பணம்' நாவல் முழுவதும் நகரம் சார்ந்தே நிகழும். சிறுகதைகளிலும்கூட. 'ஆஃபர்', 'வேலை', 'வீடும் கதவும்' போன்ற கதைகளை உதாரணமாகச் சொல்ல முடியும்.




**உங்களுடைய கதைகளில் கதாபாத்திரங்களின் தோற்றம் குறித்த பதிவுகள் போதிய அளவுக்கு இடம்பெறவில்லை என்று சொல்லலாமா?**

கதாபாத்திரங்களின் மனவோட்டத்திற்கும் செயல்பாடுகளுக்கும்தான் நான் முன்னுரிமை கொடுப்பேன். ஒரு கதாபாத்திரத்தின் தோற்ற விவரிப்பு எந்த அளவிற்குத் தேவையோ அந்த அளவிற்கு மட்டும்தான் கொடுத்திருக்கிறேன். கதாபாத்திரத்தின் தோற்றத்தைவிட எனக்கு முக்கியமானது கதாபாத்திரம் வாழும் குடும்ப, சமூகச் சூழல்தான். தனிமனிதனுடைய கதையைவிட சமூகத்தின் கதைதான் முக்கியம்.

'சாந்தா', 'அணையும் நெருப்பு', 'துபாய்க்காரன் பொண்டாட்டி' போன்ற சிறுகதைகளில் வரும் பெண்கள் சராசரிப் பெண்களைவிட சற்று மிகையான பெண்களாகத் தோற்றமளிக்கிறார்கள்.

சில நேரங்களில் குழந்தைகள் அதனுடைய சக்திக்கும் மீறி, இயல்புக்கும் மீறி, கத்தி அழும். அதைக் குற்றம் என்று சொல்வீர்களா? அப்படித்தான் நீங்கள் சொன்ன கதைகளில் வரும் பெண்கள், வலியில் கத்துகிறார்கள். அது எப்படி மிகையாகும்? மருத்துவர் ஊசிபோடும்போது "வலிக்காது. கொஞ்சம் பொறுத்துக்குங்க" என்று சொல்கிறார். ஆனால், ஊசிபோடும்போது நோயாளி வலியில் கத்துகிறான். கதையைப் படிப்பவர் மருத்துவர் என்றும், கதையில் வரும் கதாபாத்திரங்கள் நோயாளிகள் என்றும் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு கதையின் வெற்றி அது ஏற்படுத்தும் நம்பகத்தன்மையில்தான் இருக்கிறது. நீங்கள் சொன்ன கதைகளில் நம்பகத்தன்மை குறைவாக இருக்கிறதா? எனக்கு அப்படித் தோன்றவில்லை.

**ஐந்து நாவல்கள், ஆறு சிறுகதைத் தொகுப்புகள் எழுதிவிட்டீர்கள். இப்போது திரும்பப் படித்துப் பார்க்கும்போது இன்னும் சிறப்பாக எழுதியிருக்கலாம், மாற்றி எழுதியிருக்கலாம் என்று தோன்றிய நாவல் எது? சிறுகதை எது?**



எப்போதாவது நான் எழுதிய நாவல்களின் சில பகுதிகளையும் சிறுகதைகளின் சில பகுதிகளையும் படித்துப் பார்ப்பேன். அவ்வாறு படித்துப் பார்க்கும்போது மாற்றி எழுதியிருக்கலாம், இன்னும் சிறப்பாக எழுதியிருக்கலாம் என்று தோன்றியதே இல்லை. அரைகுறை மனதுடன் நான் ஒரு வார்த்தையை, ஒரு வாக்கியத்தை எழுதுவது இல்லை. அந்தந்த நாவல் அளவில், அந்தந்தச் சிறுகதை அளவில் முழுமை பெற்ற பிறகே அச்சுக்கு அனுப்புகிறேன். அச்சுக்குப் போய்விட்ட பிறகு மாற்றவோ திருத்தவோ முடியாது என்பது எனக்குத் தெரியும். அதனால் அவசரப்பட்டு எதையும் நான் வெளியிடுவதில்லை. அதனால் திரும்பப் படிக்கும்போது அப்படி எழுதியிருக்கலாம் இப்படி எழுதியிருக்கலாம் என்ற மனநிலை எனக்கு இதுவரை ஏற்பட்டதில்லை. திருத்தப்பட்ட பதிப்பு என்று இதுவரை என்னுடைய எந்த நூலும் வெளியானது இல்லை.

**உங்களுடைய நாவல்களிலும் சிறுகதைகளிலும் பொதுவாகக் காணப்படும் அம்சம் சோகம், கண்ணீர் என்பதாக இருக்கிறது. மனித வாழ்வில் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்திற்கு இடமே இல்லையா?**

வாழ்வில் சோகத்தையும் கண்ணீரையும் தவிர வேறு என்ன இருக்கிறது? மனிதர்கள் எப்படி இருக்கிறார்களோ எப்படி வாழ்கிறார்களோ சமூகம் எப்படி இருக்கிறதோ, எப்படி இயங்குகிறதோ அதைத்தான் நான் கதையாக எழுதியிருக்கிறேன். தனிமனிதனும் சமூகமும் மகிழ்ச்சியாகவும் கொண்டாட்டமாகவும் இருந்தால் இலக்கியப் படைப்புகளும் அவ்வாறுதானே இருக்கும்? தனி மனிதனும், குடும்பமும், சமூகமும் மகிழ்ச்சியாகவும் கொண்டாட்டமாகவும் இருந்தால் அதை மாற்றி எழுத வேண்டிய அவசியம் இல்லை. உண்மைக்கு மாறாகச் சோகத்தையும் கண்ணீரையும் எழுதினால் அது செயற்கையாக இருக்கும். செயற்கையாக எழுதப்படுவது இலக்கியப் படைப்பு அல்ல. செயற்கையான ஜோடனையான பாவனையான இட்டுக்கட்டுதலான எழுத்தை நான் இதுவரை எழுதியதில்லை. அவ்வாறு எழுதப்படும் எழுத்தை இலக்கியமாக நான் ஏற்பதில்லை.

**நீங்கள் எழுதிய எல்லாப் படைப்புகளுமே யதார்த்த ரக எழுத்துக்கள்தான். சர்ரியலிஸம், மேஜிக்கல் ரியலிஸம் போன்ற எழுத்து முறைகளையோ புதிய சோதனை முயற்சிகளையோ நீங்கள் மேற்கொள்வதில்லை. நீங்கள் ஏன் எழுத்தில் புதிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை?**

ஒரு காலத்தில் சர்ரியலிஸம் பற்றிப் பேசினார்கள். அது காணாமல் போயிற்று. பிறகு மேஜிக்கல் ரியலிஸம் பற்றிப் பேசினார்கள். அதுவும் காணாமல் போயிற்று. அதற்கு முன்பு இலக்கியத்தில் எக்ஸிஸ்டென்ஷியலிஸம் என்னும் கோட்பாடு பற்றிப் பேசினார்கள். அதுவும் காணாமல் போயிற்று. மார்க்ஸிய இலக்கியம், பெண்ணிய, தலித்திய இலக்கியம் பேசிக்கொண்டு இருந்தார்கள். இப்போது எதைப் பற்றியும் பேசுவதில்லை. சுய புராணங்கள்தான் பேசுகிறார்கள். இல்லையென்றால் முகநூலில் எழுதிய கருத்துக்குக் கருத்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தத்துவங்களின் மீது பெரிய ஈர்ப்பு இல்லை. நிஜ வாழ்க்கையின் மீதுதான் ஈர்ப்பு. காரணம் அதுதான் உண்மை. நிஜ வாழ்க்கை என்பது கடலைப் போன்றது. கோட்பாடுகள் என்பவை கடலில் அவ்வப்போது வந்து போகும் கப்பல்களைப் போன்றவை. என்னுடைய எழுத்துக்கள் கப்பல்களைப் பார்த்து எழுதப்பட்டவை அல்ல. கடலைப் பார்த்தும், கடலுக்குள்ளிருந்தும் எழுதப்பட்டவை. நான் வாழும் சமூகத்தின் வரைபடத்தை, நான் வாழும் இடத்தின், காலத்தின், நிலவியல் பண்பாட்டின் வரைபடத்தை உருவாக்கிக் காட்ட முயல்வதே என்னுடைய எழுத்தின் முயற்சிகள். 'கோவேறு கழுதைகள்' அப்படித்தான் எழுதப்பட்டது.

மனித இனம் தோன்றி, சிந்திக்கவும் பேசவும் எழுதவும் போதிக்கவும் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை அதிகமாகப் பேசப்பட்ட விஷயம், அதிகமாகச் சிந்திக்கப்பட்ட, போதிக்கப்பட்ட விஷயம், எழுதப்பட்ட விஷயம், 'அன்பாக இருக்கப் பழகு என்பதும், அன்பாக இருப்பது எப்படி' என்பதும்தான். ஆனால் மனித மிருகம் இதுவரை கற்றுக்கொள்ளாத, கற்றுக்கொள்ள விரும்பாத, பின்பற்றாத, பின்பற்ற விரும்பாத விஷயங்களும் இவைதான். நான் இதுவரை எழுதியிருப்பது 'அன்பாக இருக்கப் பழகு, அன்பாக இருப்பது எப்படி' என்பதைத்தான். அதையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு எளிமையாக. வெல்ல முடியாத எளிமையின் வலிமையில் எழுதியிருக்கிறேன் என்றே நம்புகிறேன்.

**சிறுகதை, நாவல் என்று எழுதியிருக்கிறீர்கள். கவிதைகள் ஏன் எழுதவில்லை?**

எது கவிதை, யார் கவிஞன் என்பது எனக்குத் தெரியும். அதனால் கவிதை எழுதுவதில்லை. கவிதையை எப்படிப் படிப்பது என்று தெரியாதவர்கள்தான் இன்று கவிஞர்களாக, இலக்கிய தாதாக்களாக இருக்கிறார்கள்.

**உலகத் தரத்திலான தமிழ் நாவல்கள், சிறுகதைகள் இருக்கின்றனவா?**

தமிழ்த் தரம், இந்தியத் தரம், உலகத் தரம் என்றெல்லாம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உலகத் தரத்திலான இரும்பு, சிமெண்ட், பெயிண்ட் என்று விளம்பரங்களில் கம்பனிக்காரர்கள் பயன்படுத்துகிற வார்த்தைகள் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. உலகத் தரமான இலக்கியம் என்று ஒன்று இருக்க வாய்ப்பில்லை. ஆனால் உலக இலக்கியம் என்று ஒன்று இருக்க வாய்ப்பிருக்கிறது. இதற்கான உதாரணங்களை என்னுடைய நாவல்களிலிருந்தே சொல்ல முடியும். 'கோவேறு கழுதைகள்' உலக இலக்கியமல்ல. அது பிராந்திய இலக்கியம். அதேபோன்று 'செடல்' நாவலும் பிராந்திய இலக்கியம்தான். 'எங் கதெ' நாவலும், 'செல்லாத பணம்' நாவலும் உலக இலக்கியம். 'எங் கதெ' நாவல் ஒரு பெண்ணின் மீதான ஒரு ஆணின் ஈர்ப்பு, அது சார்ந்த மகிழ்ச்சி, துன்பம், வருத்தம், கண்ணீர். இது உலகெங்கும் நடக்கும் கதை. மனித இனம் உள்ளவரை நடக்கும் கதை. அதனால் இது உலக இலக்கியம். கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் சண்டையில் பெண்கள் தானாகவே தீக்குளிப்பதும், தீவைத்துக் கொளுத்தப்படுவதும் உலகம் முழுவதும் நடக்கிற நிகழ்வு. தீவைத்துக் கொளுத்தப்பட்ட ஒரு பெண்ணின் மரணத்தைப் பற்றிப் பேசுகிறது 'செல்லாத பணம்' நாவல். அதனால் அது உலக இலக்கியம். உலகம் முழுமைக்குமான பொதுவான துயரங்களை, இழப்புகளை, வலிகளை, கண்ணீரை, காயத்தை, மகிழ்ச்சியை எந்த இலக்கியம் பேசுகிறதோ அதுதான் உலக இலக்கியம். பிராந்திய இலக்கியம் வேறு. உலக இலக்கியம் வேறு. பிராந்திய இலக்கியத்திற்கென்று தனி அழகு உள்ளதுபோல, உலக இலக்கியத்திற்கும் தனி அழகுண்டு. இது மேம்பட்டது, அது மேம்பட்டதல்ல என்று கூறுவது முக்கியமல்ல. இலக்கியமாக இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியம். உலகத் தரமான, உலகத் தரத்திலான இலக்கியம் என்பதெல்லாம் இலக்கிய தாதாக்கள் பயன்படுத்துகிற வார்த்தைகள்.

**தலித் இலக்கியம் குறித்த பேச்சு இப்போது இல்லையே ஏன்?**

தமிழ், இந்திய, உலக மார்க்கெட்டில் அதற்கான சீசன் போய்விட்டது. அது தனக்கான சந்தை மதிப்பை இழந்துவிட்டது.

**தலித்துகளின் வாழ்வை இலக்கியங்களாக எழுதுவதின் மூலம், தலித்துகளின் வரலாற்றை மீட்டெடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இது குறித்து உங்களுடைய கருத்து என்ன?**

வரலாற்றில் நடந்தவற்றை நினைவுகொள்ள, தகவல்களாக அறிந்துகொள்ள மட்டுமே முடியும். ஒருபோதும் மாற்றி அமைக்க, மீட்டெடுக்க முடியாது. மனித வாழ்வு திரும்புதலற்ற பயணத்தில் இருப்பது. மாட்டுக் கறியைத் தின்பவர்கள், பன்றிக் கறியைத் தின்பவர்கள், கெட்ட வார்த்தை பேசுகிறவர்கள், சுத்தமாக இருக்கவும் நாகரிகமாகப் பேசவும் தெரியாதவர்கள், சேரியில் இருப்பவர்கள் என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் சமூகம் உருவாக்கி வைத்திருக்கிற கற்பிதத்தை, சமூகம் ஏற்றுக்கொண்டிருக்கிற, சமூகம் பின்பற்றுகிற கற்பிதத்தை, மீண்டும் நானே எழுதுவதின் வழியாக, மீண்டும் நினைவுகொள்வதின் வழியாக, மீட்டெடுப்பதின் வழியாக என்ன நடக்கப்போகிறது? பொதுச் சமூகம் உருவாக்கி வைத்திருக்கிற இழிவான மதிப்பீடுகளைத்தான் உங்களுக்கான பெருமைகளாக ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்குத் தரப்போகிறீர்களா? இதற்குப் பெயர்தான் மீட்டெடுப்பா? பொதுப் பாதையில் நடக்க முடியாது, பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாது, பொதுக் கோயிலுக்குள் செல்ல முடியாது, பொதுப் பாதையில் பிணத்தை எடுத்துச் செல்ல முடியாது, பொதுச் சுடுகாட்டில் பிணத்தைப் புதைக்கவோ, எரிக்கவோ முடியாது. இதுதான் இன்றும் நடைமுறை. தமிழ்நாட்டில் சத்துணவு மையத்தில் சமையல்காரியாக ஒரு தலித் பெண் இருக்க முடியாது. ஊர் என்ற இடத்தில் மட்டுமல்ல, ஊர் என்ற வார்த்தை யிலேயே தலித்துகள் இல்லை. ஊர் என்ற நிலப்பரப்பும், சேரி என்ற நிலப்பரப்பும் வேறு வேறாக இருக்கின்றன. இதில் எதை உங்களுடைய பெருமையாக, வரலாறாக, அழகியலாகச் சொல்லி மீட்டெடுக்கப் போகிறீர்கள்? சமூகம் தந்த அவமானங்களை, இழிவுகளைத்தான் உங்களுடைய பெருமைகளாக வரலாறாக மீட்டெடுக்க, ஆவணப்படுத்தப்போகிறீர்களா? மறைந்துகொண்டிருக்கிற அசிங்கங்களை, இழிவுகளை எழுதி என்ன செய்யப்போகிறோம்?

**தலித்துகளுக்கென்று தனித்த வாழ்வு, வரலாறு, பண்பாடு, கலாச்சாரம் இல்லையா? அதைப் பதிவு செய்ய வேண்டாமா?**

பதினோராம் நூற்றாண்டிற்கு முன்பு தலித்துகளின் வாழ்க்கை இன்றையதுபோல் இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அதற்கான வரலாற்றுத் தகவல்களை, ஆதாரங்களை வெகுசனப்படுத்தவில்லை. பொதுப் பார்வைக்குப் போதிய அளவிற்குக் கொண்டுவரவில்லை. கிடைத்தவற்றை உரிய முறையில் மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கவில்லை. தலித் மக்களின் பண்பாடு, கலாச்சாரம் என்பது நிலம் சார்ந்ததாக, உழைப்பு சார்ந்ததாக இன்றும் இருக்கிறது. நிலம், விலங்கினங்கள், பறவையினங்கள், குறித்த அறிவு, எந்தெந்தக் காலத்தில் மழை பெய்யும், எந்தெந்தக் காலத்தில் காற்று வீசும், எந்தெந்த நிலத்தில் எந்தெந்தப் பயிர் செய்யலாம் என்ற இயற்கை சார்ந்த அறிவு இன்னும் தலித் மக்களிடம் மட்டுமே இருக்கிறது. இந்த அறிவுதான் இவர்களுடைய பெருமை. அதேபோன்று நிகழ்த்துக் கலைகளை நிகழ்த்துபவர்களாகவும், நிகழ்த்துக் கலைகளின் பார்வையாளர்களாகவும் இருப்பவர்களும் தலித்துகளே. தமிழில் தலித் இலக்கியங்களாகக் கொண்டாடப்பட்டவற்றைப் படித்துப்பார்த்தால் தெரியும், தலித் இலக்கியத்தின் நிலை என்னவென்று. புத்தகத்தின் வழியாகப் பெறும் அறிவுதான் உயர்ந்தது, நடைமுறை வாழ்வின் வழியாகப் பெறுகிற அறிவு அறிவே அல்ல என்கிற மாயை இருக்கும்வரை தலித்துகளின் அறிவு பெருமை ஒளிபெறப் போவதில்லை.

**இந்திய மொழிகளில் எந்த மொழி இலக்கியத்தை அதிகமாகப் படித்திருக்கிறீர்கள்? உலக மொழிகளில் எந்த மொழி இலக்கியத்தை அதிகமாகப் படித்திருக்கிறீர்கள்?**

தமிழுக்கு அடுத்ததாக நான் அதிகமாகப் படித்தது மலையாள மொழி இலக்கியங்களைத்தான். மலையாள

மொழி இலக்கியங்கள்தான் தமிழில் அதிகமாக மொழிபெயர்க்கப்படுகின்றன. அடுத்ததாக நான் அதிகம் படித்தது ரஷ்ய மொழி இலக்கியங்களை. *1984-1994* காலகட்டத்தில் நான் ரஷ்ய மொழி இலக்கியங்களைப் படிக்காத நாள் என்று ஒன்று இருக்காது. அப்போது ரஷ்ய மொழி இலக்கியங்கள்மீது பெரிய பற்றுதலும் ஈடுபாடும் இருந்தன. இப்போது பிரஞ்சு மொழி இலக்கியங்கள் மீது கூடுதல் ஈர்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

**ஈழ இலக்கியம் உங்களுக்கு எப்போது அறிமுகமானது?**

*1984* காலத்தில் T.E.L.O., E.P.R.L.F., TIGER அமைப்புகளின் சிறுசிறு பிரசுரங்களைத்தான் நான் முதலில் படித்தேன். கோவிந்தனுடைய 'விடுதலை' நாவலைத்தான் படைப்பிலக்கியமாக நான் முதன்முதலாகப் படித்தது. பிறகுதான் கே.டானியலின் 'பஞ்சமர்', செ.யோகநாதனின் படைப்புகள், எஸ்.பொ.வின் எழுத்துக்கள், கா.சிவத்தம்பி, ந.வானமாமலை என்று ஆரம்பித்தது அ.முத்துலிங்கம், சேரன், ஷோபா சக்தி, த.அகிலன், தமிழினி, அனார், ஸர்மிளா செய்யத் என அந்தப் பட்டியல் சற்றுப் பெரியது. இன்றைக்கு எழுதிக்கொண்டிருக்கிற அனோஜன் பாலகிருஷ்ணன், சு.கஜமுகன் வரை படிக்கிறேன்.

**பழைய காலத்தில் எல்லாம் சிறப்பாக இருந்தது, இந்தக் காலத்தில்தான் எல்லாம் மோசமாக இருக்கிறது என்ற ஒரு மனப்போக்கு இருக்கிறதே?**

பழைய காலத்தில் இருந்த குளத்திலும் மீன், பாம்பு, தவளை, நண்டு, பூச்சிகள் இருந்தன. இந்தக் காலத்துக் குளத்திலும் மீன், பாம்பு, தவளை, நண்டு, பூச்சிகள், புழுக்கள் இருக்கின்றன. குளம் என்று இருந்தால் இதுவெல்லாம் இருக்கும். இதுவெல்லாம் இருந்தால்தான் அது குளம். தமிழில் நீதி நூல்கள் எழுதப்பட்ட காலத்தில், சமூகம் எவ்வளவு மோசமாக இருந்திருந்தால் இவ்வளவு நீதி நூல்கள் எழுதப்பட்டிருக்கும்? அப்போதிருந்த மக்கள் தொகைக்கே இவ்வளவு நீதிகள் தேவைப்பட்டிருக்கின்றன என்றால் இப்போதிருக்கிற மக்கள் தொகைக்கு எவ்வளவு நீதி நூல்கள் எழுதப்பட வேண்டும்? அப்போது எழுதினார்கள். இப்போது எழுதுவதில்லை. இப்போதைய எழுத்தாளர்களுக்கு முகநூலில் பதிவிடுவதுதான் இலக்கியம். அந்தக் காலம் புனிதம் என்பதெல்லாம் கட்டுக் கதை.

**இப்படித்தான் இருக்கவேண்டும் என்று திட்டமிட்டுப் படைப்பை உருவாக்குகிறீர்களா? படைப்பைத் திட்டமிட்டு உருவாக்க முடியுமா?**

ஒரு விதையைப் புதைக்கிறோம். ஒரு செடியை, ஒரு மரக்கன்றை நடுகிறோம். எது எப்படி வரும் என்று சொல்ல முடியாது. ஒரு செடி, ஒரு மரம் இப்படித்தான் வளரும், வளர்க்கப்பட வேண்டும் என்று சொல்ல முடியாது. அதே மாதிரிதான் இலக்கியப் படைப்பும். அதே நேரத்தில் மனதிலுள்ளதையெல்லாம் எழுதுவது இலக்கியப் படைப்பல்ல.

**எழுத்தாளர் ஆனதற்காக எப்போதாவது வருத்தப்பட்டதுண்டா?**

ஒரு ஐபிஎஸ் அதிகாரியிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளும்போது, 'ரைட்டர்' என்று சொன்னேன். அதற்கு அவர் 'எந்த ஸ்டேஷன்' என்று கேட்டார். அதே மாதிரி டிபுடி கலெக்ட்டர் ரேங்க்கில் உள்ள ஒரு அதிகாரியிடம் அறிமுகப்படுத்திக்கொள்ளும்போது 'ரைட்டர்' என்றேன். 'எந்த ரிஜிஸ்டர் ஆபிஸ்?' என்று கேட்டார். மூன்றாவதாக ஒரு ஐஏஎஸ் அதிகாரியிடம் அறிமுகப்படுத்திக்கொள்ளும்போது 'ரைட்டர்' என்று சொன்னேன். 'பரவாயில்லியே. நம்ப எனமா இருக்கிங்க?' என்று சொல்லி உற்சாகமாகச் சிரித்தார். பிறகு 'பாக்யா, தினமலர், குமுதம், குங்குமம், ராணியில எல்லாம் ஒங்க பேர பாத்த மாதிரி நெனவில்லியே' என்று கேட்டார். ஒரு புத்தக வெளியிட்டு விழாவில் நண்பர் ஒருவர் 'இவர் எழுத்தாளர்' என்று சொல்லி அறிமுகப்படுத்தினார். கை குலுக்கிய தமிழ்ப் பேராசிரியர் கேட்டார், "எதுல எழுதுறீங்க?" நான் சொன்னேன் "பேப்பர்ல." இப்படிப் பல சந்தர்ப்பங்களில் வருத்தப்பட்டு நொந்துபோயிருக்கிறேன்.

**தற்போது தமிழ் மொழியில் எழுதிக்கொண்டிருக்கிற எழுத்தாளர்கள் பற்றி, எழுதப்படுகிற இலக்கியப் படைப்புகள் பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

நிறைய பேர் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். நிறையவே எழுதிக் குவித்துக்கொண்டிருக்கிறார்கள். தற்போது தமிழில் எழுதிக்கொண்டிருக்கிற பல எழுத்தாளர்களுக்கு எழுத்தாளர்கள் என்ற தகுதி பொருந்தாது. எழுத்தாளர்கள் என்று சொல்லிக்கொள்கிற பலர் தங்களுக்கு எழுத்தாளர் என்ற பட்டம் பொருந்துமா என்று அவர்களே யோசிக்கவேண்டும். தமிழில் எழுதுகிற இலக்கியப் படைப்புகளைச் சகித்துக்கொள்வதைவிட அவற்றுக்கு விமர்சனம் என்ற பெயரில் எழுதுகிற குப்பைகளைச் சகித்துக்கொள்வதற்கு அதிக திறன் வேண்டும்.

**தமிழ்நாட்டுப் பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் குறித்து உங்களுடைய மதிப்பீடு என்ன?**



ஒரு பக்கம் எழுதிவிட்டு நூறு பக்கம் விளம்பரம் தேடுகிறார்கள். கேட்கிறார்கள். அது கிடைக்கவும் செய்கிறது. முகநூலில் சர்ச்சை ஏற்படும் விதத்தில் எழுதுகிறவர்கள்தான் இப்போது எழுத்தாளர்கள்.

**தற்போது தமிழில் யார் யாரை விமர்சகர்கள் என்று சொல்வீர்கள்?**

அப்படி ஒருவர் தனியாக இல்லை. தமிழில் தற்போது விமர்சனம் என்று எழுதப்படுவனவற்றில் பெரும்பாலானவை உளறல்கள். புகழ் மாலைகள் மட்டுமே.

**பழைய காலத்தில் விமர்சனம் நன்றாக இருந்ததா?**

இருந்தது. ஒரு இலக்கியப் படைப்பிற்குரிய அடிப்படை அம்சங்களான வடிவம், உள்ளடக்கம், நோக்கம், மொழி குறித்த வரையறைகளைத் தொல்காப்பிய பொருளதிகாரத்திலேயே காணலாம். தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழில் இலக்கியங்களும், அதற்குரிய விமர்சனங்களும் இருந்திருக்கின்றன. 'திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும், பொருளும் அதனினூஉங்கு இல்' என்ற திருக்குறள் விமர்சனம் பற்றிப் பேசுகிறது. திணை துறை என்பதெல்லாம் கவிதையை எவ்வாறு எழுதவேண்டும், எவ்வாறு எழுதக் கூடாது என்பதற்கான இலக்கியக் கோட்பாட்டு விதிகள்தான். திணை துறை என்பது தமிழில் விமர்சன மரபு இருந்தது என்பதற்கான சான்று. தமிழ் இலக்கிய மரபில் பின்பற்றப்பட்டு வந்த 'அரங்கேற்றம்' என்பதுகூட விமர்சனம் செய்வதற்கான ஒரு வழிமுறைதான். அரங்கேற்றத்தின்போது ஒரு படைப்பு சிறப்பாக இருக்கும் பட்சத்தில் 'சிரக்கம்பம், கரக்கம்பம்' (தலை அசைத்தும் கைகளைத் தட்டியும் பாராட்டும் முறை இருந்துள்ளது) அரங்கேற்றத்தின் மூலம் தகுதியுள்ளவற்றை ஏற்பதும், தகுதியில்லாதவற்றை ஒதுக்குவதும், மதிப்பிடுவதும், ஒப்பிடுவதும், எது இலக்கியம், எது இலக்கியம் இல்லை என்பதும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், அடியாருக்கு நல்லார் போன்றோர் எழுதிய உரைகள், மூலப் பாடத்தோடு ஒப்பீடு செய்வது, தரமானது எது என்று முடிவு செய்து தன்னுடைய கருத்தையும் சேர்த்துச் சொல்வது ஆகியவற்றைச் செய்கின்றன. உரையாசியர்கள் நிச்சயமாகத் திறனாய்வாளர்கள்தான். நச்சினார்க்கினியரைத் தமிழ் விமர்சன மரபின் மூலவர் என்றுகூடச் சொல்ல முடியும். "வரிசையறிந்து பரிசில் கொடுத்தால் குன்றியும் கொள்வேன். வரிசையறியாது தந்தால் குன்றளவானாலும் கொள்ளேன்" என்று ஒரு புலவன் பாடியிருக்கிறான். இதன்மூலம் யார் புலவன், யார் புலவன் இல்லை என்ற தரவரிசையைக் காணலாம். விமர்சனம் என்பது மதிப்பீடு செய்வது. இலக்கியத்தைப் பகுத்தாராய்ந்து திறனாய்வு செய்யும் முறை நம்முடைய மரபில் இருந்துள்ளது. விமர்சனம் என்பது மேலோட்டமாகக் கருத்து சொல்லாமல் தீர்ப்பு சொல்வதாக இருந்திருக்கிறது.

**தமிழ் இலக்கியத்தில் முன்பு ஒப்பீட்டு முறை இருந்ததா?**

தமிழின் 'பா வகை' குறித்து சோ.ந.கந்தசாமி எழுதியிருக்கிறார். 'திராவிட பா வகை' குறித்து எஸ்.எஸ்.சுப்ரமணியம் எழுதியிருக்கிறார். தமிழ் பா வகை திராவிட பா வகை இரண்டையும் ஒப்பீடு செய்தும் விரிவாக ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள். ஒப்பீட்டின் நோக்கம், எது மேலானது எது கீழானது என்பதை அறிவதற்கும், தரத்தை நிர்ணயிப்பதற்கும்தான். தரமானதையும், தரமற்றதையும் அடையாளப்படுத்துவதற்கும்தான். 1857ல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை கால்டுவெல் வெளியிட்டார். சமண வட்டம், இராமாயண வட்டம், சைவ மறுமலர்ச்சி வட்டம், வைணவ வட்டம், எதிர்ப்பார்ப்பினிய வட்டம், தற்கால படைப்பாளிகள் என்று இலக்கியங்களை வகைப்படுத்தி, இலக்கியப் போக்குகளையும் கால்டுவெல் தெளிவாக வரையறுத்துள்ளார். சித்தர்களின் படைப்புகளை எதிர்ப் பார்ப்பனிய இலக்கியமாக வகைப்படுத்தியது முக்கியமானது. தமிழ் மொழி இலக்கியங்களைப் பிறமொழி இலக்கியங்களோடும், பிறநாட்டு இலக்கியங்களோடும் ஒப்பிட்டு, எது மேம்பட்ட இலக்கியம் என்பதை ஒப்புமை செய்து எழுதியிருக்கிறார். கால்டுவெல்லைத் தொடர்ந்து நாம் மதிக்கப்பட வேண்டியவர்கள், சி.வை. தாமோதரம் பிள்ளை, வ.வே.சு. ஐயர், ஔவை.சு.துரைசாமி பிள்ளை போன்றவர்கள். இவர்கள் பழைய நூல்களை அச்சிட்டது மட்டுமல்ல, அச்சிட்ட நூல்களுக்கு உரையும் எழுதியிருக்கிறார்கள். நூலினை அச்சிடுவதற்கான காரணம், நூலின் தன்மை, தரம், முக்கியத்துவம்தான், நூலினை வெளியிடவும் உரை எழுதவும் வைத்திருக்கிறது. இவர்களுடைய உரை விமர்சனப் போக்கில் அமைந்தவை. வ.வே.சு. ஐயரிடம் தெளிவான விமர்சனப் பார்வை இருந்தது. ஒரு இலக்கியப் படைப்பை மற்றொரு இலக்கியப் படைப்போடு ஒப்பிட்டு எது மேல், எது கீழ் என்று மதிப்பீடு செய்கிற இயல்பும் இருந்ததால்தான், கம்பராமாயணத்தை வடமொழி இலக்கியங்களோடும், கிரேக்கக் காப்பியங்களோடும் அவரால் ஒப்பீடு செய்ய முடிந்தது. வ.வே.சு. ஐயரின் விமர்சனப் பார்வை ஐரோப்பிய பாணியிலானது.

**பழைய காலத்தில் எல்லாம் சிறப்பாக இருந்தது, இந்தக் காலத்தில்தான் எல்லாம் மோசமாக இருக்கிறது என்ற ஒரு மனப்போக்கு இருக்கிறதே?**

**மார்க்சியத் திறனாய்வு முறை பற்றி?**


1948ல் ரகுநாதனின் 'விமர்சனம்' என்ற நூல் வெளிவந்தது. படைப்பு, படைப்பு சார்ந்த விமர்சனம் என்ற நிலையிலிருந்து விலகி, படைப்பை மார்க்சியக் கோட்பாட்டின்படி அணுகுதல், விமர்சித்தல் என்ற நிலைக்கு ரகுநாதன் மாறினார். பின்னர் அவருடைய விமர்சனங்கள் மதிப்பு வாய்ந்ததாக

வரவில்லை. கா.சிவத்தம்பி, கைலாசபதி, நா.வானமாமலை, கோ.கேசவன், எஸ்.வி.ராஜதுரை, கோவை ஞானி, அ.மார்க்ஸ், ரவிக்குமார் போன்றவர்கள் மார்க்சிய அணுகுமுறையிலான விமர்சனப் போக்கை முன்னெடுத்து, தமிழில் புதிய விமர்சன மொழியை, அழகியலை உருவாக்க முயன்றார்கள். கு.ப.ராஜகோபாலன், புதுமைப்பித்தன், சி.சு.செல்லப்பா, வெங்கட்சாமிநாதன், தருமு சிவராமு, சுந்தர ராமசாமி போன்றவர்களுக்குப் படைப்பின் அழகியலே முக்கியமாக இருந்தது. ஆனால் மார்க்சியக் கோட்பாட்டுத் திறனாய்வாளர்களுக்குப் படைப்பின் கருத்தும் அதன் சமூகப் பின்னணியுமே முக்கியமாக இருந்தன. அழகியல் அந்த அளவுக்கு முக்கியத்துவம் அற்றதாக இருந்தது. ரசனை முறைத் திறனாய்வு, பகுப்புமுறைத் திறனாய்வு, பண்டித முறைத் திறனாய்வு, சமூகநோக்குத் திறனாய்வு என்ற அளவுகோலின்படிதான் க.கைலாசபதியின் விமர்சன முறை இருந்தது. இந்த இடத்தில் வையாபுரிப் பிள்ளை 'அகவயத் திறனாய்வு, புறவயத் திறனாய்வு' என்ற முறையில் படைப்பை நோக்கினார் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ரவிக்குமார் கோட்பாட்டு அடிப்படைகளை மட்டுமின்றி அழகியலையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தன் விமர்சனங்களை முன்வைத்தார்.

*1980* காலப் பகுதியில் 'அமைப்பியல்வாதம்' என்பது அறிமுகமானதும் அமைப்பியல்வாத அடிப்படையில் இலக்கியப் படைப்புகளை விமர்சனம் செய்கிறமுறை உருவாயிற்று. அமைப்பியல்வாத முறையில் விமர்சனம் எழுதியவர்கள் என்று தமிழவன், க.பூரணச்சந்திரன், நோயல் இருதயராஜ் போன்றவர்களைச் சொல்லலாம். அமைப்பியல்வாதம் குறித்த விவாதம் தமிழில் சிறிது காலமே இருந்தது. *1990*களில் பின்அமைப்பியல், பின்நவீனத்துவம், கட்டுடைத்தல் என்ற விவாதம் தமிழில் உருவாயிற்று. இலக்கியப் படைப்புகளைக் கட்டுடைத்தல், பின்நவீனத்துவப் பார்வையில் விமர்சித்தல் என்று உருவான சூழலில் நாகார்ஜுனன், அ.மார்க்ஸ், ரவிக்குமார், க.பஞ்சாங்கம், வேத சகாயகுமார், எம்.டி.முத்துகுமாரசாமி போன்றோர் எழுதினார்கள். இப்போக்கும் சிறிது காலமே உயிரோடு இருந்தது.

**கல்விப் புலத் திறனாய்வு, விமர்சனம் எப்படி இருக்கிறது?**

தமிழக கல்விப் புலத்தில் இருக்கிற பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தலித்திய நோக்கு, மார்க்சிய நோக்கு, பெண்ணிய நோக்கு, இருத்திலியல் நோக்கு, பின்நவீனத்துவ நோக்கு என 'நோக்கு' நோக்கு' என்று நோக்குகிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால் ஒரு மரத்தை மரமாகப் பார்க்காமல் மரத்தை ஒரு தலித் வைத்தார், அதனால் 'தலித்' மரம், ஒரு பிராமணர் வைத்தார், அதனால் அது பிராமண மரம், ஒரு பெண் வைத்தார், அதனால் அது பெண் மரம், முஸ்லிம் வைத்தார் அதனால் அது முஸ்லிம் மரம், கிறிஸ்துவர் வைத்தார், அதனால் அது கிறிஸ்துவ மரம் என்று சொல்வதைப் போலத்தான் இருக்கிறது. நாவலை நாவலாகவும், கவிதையைக் கவிதையாகவும் பார்க்கவேண்டும். தலித்தியப் பார்வையில், தலித்திய நோக்கியல் என்றால் தலித் சார்பு நிலையோடு ஒரு படைப்பை அணுகுகிறார்கள் என்று அர்த்தம். பெண்ணிய நோக்கில், பெண்ணியப் பார்வையில் பார்க்கிறேன் என்றால் பெண்ணியச் சார்பு நிலை ஏற்படுகிறது. சார்பு




நிலையோடு ஒரு படைப்பை அணுகுவது விமர்சனமல்ல. இவர்களுக்குக் கலையம்சத்தைவிட கருத்து, தீர்வு மட்டுமே முக்கியம். வாழ்க்கையைப் பார்ப்பதற்கு, வாழ்க்கையைப் பற்றி நிஜமாகப் பேசிய படைப்புகளைப் பார்ப்பதற்கு எந்தக் கண்ணாடியும் அவசியமில்லை. திட்டமிட்டே கண்ணாடியோடுதான் ஒரு படைப்பை அணுகுவேன் என்று சொல்வது, எழுதுவது, பேசுவது விமர்சனமாகாது. தரவுகளின் அடிப்படையில், கோட்பாடுகளின், கொள்கைகளின், இசங்களின், முன்தீர்மானத்தின்படி ஒரு படைப்பை அணுகி, ஆய்வாளர் எழுதுகிற கட்டுரைகள் விமர்சனம் அல்ல. பேராசிரியர்கள் எழுதுகிற திறனாய்வு என்பதெல்லாம் விமர்சனம் அல்ல. விமர்சகர் வேறு. திறனாய்வாளர் வேறு. விமர்சன மொழி என்பது வேறு. திறனாய்வு மொழி என்பது வேறு. திறனாய்வுக்கும் மதிப்புரைக்கும் வித்தியாசம் உண்டு. திறனாய்வுக்கும் ஆராய்ச்சிக்கும் (ஆய்வு) வித்தியாசம் உண்டு.

**பாரதியை விமர்சகர் என்று சொல்வீர்களா?**

பாரதியை விமர்சகர் என்று கூற முடியாது. அவர் எழுதியிருக்கிற சிறுசிறு குறிப்புகளிலிருந்து அவருடைய இலக்கிய ரசனையை அறிய முடியும். வள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள் என்று ஒரு தர வரிசைப் பட்டியலை தன்னுடைய இலக்கிய வாசிப்பினூடாக உருவாக்கித் தந்திருக்கிறார். பாரதிக்குள்ளிருந்த விமர்சகன் உருவாக்கிய பட்டியல் இது.

**ஜெயகாந்தன் என்ற ஆளுமையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர் மற்ற எழுத்தாளர்கள் பற்றிக் கொண்டிருந்த மதிப்பீடு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஜெயகாந்தன் எழுதிய காலத்திலும், அவர் எழுதாத காலத்திலும் பல எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள். மற்ற எழுத்தாளர்கள் பற்றி அவர் மௌனம் காத்தார். மௌனம் என்பது உதாசீனம்தான். இலக்கிய மேடைகளிலும், பிற மேடைகளிலும் அவர் வெளிப்படுத்தியது தன்னையும், தன்னுடைய திமிர்த்தனத்தையும் செருக்கையும்தான். அது பெரிய கலைஞர்களுக்கே உரிய செருக்கு என்று விளக்கம்

சொல்லப்பட்டது. ஞானம் கூடக்கூட, அறிவு கூடக்கூடச் செருக்கு அழிந்துபோகும்தானே. அது ஜெயகாந்தனிடம் நிகழவே இல்லை. ஞானச் செருக்கு வேறு. ஆணவச் செருக்கு வேறு. ஜெயகாந்தனிடம் இருந்தது என்ன செருக்கு? இந்த இடத்தில் ‘அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு’ என்ற குறள் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. சுந்தர ராமசாமியுடன் பழகியிருக்கிறேன். அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, பிரபஞ்சன், கலாப்ரியா, அம்பை, ஞானக்கூத்தன் என்று பல எழுத்தாளர்களுடன் எனக்கு நல்ல அறிமுகம் இருக்கிறது. இதுபோன்று இன்னும் பல எழுத்தாளர்களுடன் பழகியிருக்கிறேன். இவர்கள் யாரிடத்திலும் அலட்சியத்தையோ உதாசீனத்தையோ நான் கண்டதில்லை.

*2019ல் வாழ்க்கை என்னவாக இருக்கிறது?*

உணவு ஃபாஸ்ட் புட். உடை ரெடி மேடு. தண்ணீர் வாட்டர் பாட்டில். பேசுவது செல்போனில் மட்டும். பார்ப்பது வாட்ஸ் ஆப் செய்தி மட்டும். அதிகமாகச் செய்கிற காரியம் குறுஞ்செய்தி அனுப்புவது. குழந்தைகளின் விளையாட்டு வீடியோ கேம்ஸ். குழந்தைகளின் அழுகை நிறுத்தும் கருவி செல்போன். நம்பிக்கை அட்சய திருதியையில் நகை வாங்கினால் நகை வளரும். குழந்தைகள் வேண்டுவது வீடியோ கேம்கள் 3ஜியில் டவுன்லோடு ஆக லேட்டாகிறது, 4ஜி போன் வாங்கு என்பது. வீட்டில் இருக்கும் பெண்களின் வேலை சீரியல் பார்ப்பது. வினோதம் பழைய காலத்தில் அம்மனால் அம்மை வந்தது என்று சொன்னதைக் கேட்டுச் சிரித்தவர்கள் தற்போது ஆணை அம்மா என்று வணங்குகிறார்கள் (பங்காரு அடிகள்). பாராட்டு ட்ப்ஸ்மாஷில் நம்முடைய இளம் பெண்களின் நடிப்பு. ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்குள்ளும் செய்கிற காரியம் முகநூல் பார்ப்பது. பார்க்கிற செய்தி பிரேக்கிங் நியூஸ் வைரலாகும் விஷயங்கள். காதலிப்பது முகநூலில் இப்படித்தான் இருக்கிறது. இன்றைய வாழ்க்கையில் ஒருவர் “இது என்னுடைய வாழ்க்கை. அதை நான்தான் முடிவு செய்வேன் என்று சொன்னால் அவர்தான் உலகத்தின் பெரிய முட்டாள். பொது வெளியில் புழங்குவது குறைந்து தனக்குள்ளேயே உள்ளடங்கிப்போகிற மனப்போக்கை இந்தக் காலகட்டம் உருவாகியிருக்கிறது.

**‘கோவேறு கழுதைகள்’ நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது தர வேண்டும் என்று சுந்தர ராமசாமி வாதாடினார். இந்தக் கேள்வி குழப்பமாக உள்ளது.**

**இதன்படி, ‘கோவேறு கழுதை’, ‘செடல்’ படைபுகளின் பின் வந்த இமையம் படைப்புகளுக்கு விருதுகள் கிடைத்துள்ளன என்று கருத இடமுண்டு.**

**எனவே, ‘கோவேறு கழுதை’, ‘செடல்’ படைபுகளின் பின் வந்த பிறர் படைப்புகளுக்கு விருதுகள் கிடைத்துள்ளன என்று வருவது நல்லது உங்களுக்குப் பிறகு எழுத வந்த எழுத்தாளர்களுக்கும் விருது தரப்பட்டிருக்கிறது. ஆனால் உங்களுக்குத் தரப்படவில்லை. இது உங்களுக்கு வருத்தமாக இல்லையா?**

இல்லை. நிச்சயமாக இல்லை. ‘கோவேறு கழுதைகள்’ நாவல் எழுதும்போது சாகித்ய அகாடமி விருது என்று ஒன்று இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. எனக்கு முன்னால் எழுதியவர் எனக்குப் பின்னால் எழுதியவர் என்பதே முக்கியமல்ல. தரமான படைப்புக்கு விருது தரப்பட்டிருக்கிறதா என்பதுதான் முக்கியம். எனக்கு விருது கிடைக்கவில்லை என்பதற்காக நான் வருத்தப்பட்டதே இல்லை. விருதுக்காக எழுதுகிறவன் அல்ல நான். விருதின் வழியாகப் பெறுகிற கௌரவத்தைவிட எழுத்தின் வலிமையால் கிடைக்கிற கௌரவம்தான் எனக்கு முக்கியமானது. விருதுக்காகப் பழைய குப்பைகளை எல்லாம் தொகுத்து வெளியிட்டு விருது பெறுகிறார்கள். அதை நினைக்கும்போது எனக்குக் கூச்சமாக இருக்கிறது.

**அச்சிடப்பட்ட நூல்களைப் படிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்தும், மின்னூல்களைப் படிப்பவர்களின் எண்ணிக்கை பெருகியும் வருகின்றன. எந்த முறையில் படிப்பது நல்லது என்று நினைக்கிறீர்கள்? அச்சுத் துறை நலிவடைந்துவிடுமா?**

என்னுடைய விருப்பம் அச்சிடப்பட்ட நூல்களைப் படிப்பதுதான். அதில் கவனச் சிதறல் ஏற்பட வாய்ப்பில்லை. ஒரு புத்தகத்தைப் படிக்கிறீர்கள் என்றால் சம்பந்தப்பட்ட புத்தகம் மட்டும்தான் உங்களுடன் இருக்கும். மின்னூலில் அப்படியல்ல. ஒன்றை நீங்கள் தேடிப்போனால் அதனோடு தொடர்புடைய பல விஷயங்களுக்கு உங்களை இட்டுச் சென்றுவிடும். மின்னூலில் படிப்பது என்பது செய்தி சேனல்களைப் பார்ப்பது போன்றது. மின்னூலில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் இருப்பதால் இதைப் படிக்கலாம், அதைப் படிக்கலாம் என்று மனம் தாவிக்கொண்டே இருக்கும். அச்சிடப்பட்ட நூலில் அந்தச் சிக்கல் இல்லை. ஒரு புத்தகத்தைக் கையில் வைத்திருப்பது ஒரு குழந்தையை மடியில் வைத்துக்கொண்டிருப்பதுபோல. புத்தகத்திலிருந்து வரும் வாசனையை நுகர்வது தனி அனுபவம். புத்தகத்தைத் தடவிக்கொடுக்க முடியும். கவர் நன்றாக இருக்கிறது, தாள் நன்றாக இருக்கிறது, தரமான அச்சு என்று சொல்வதற்குப் பல விஷயங்கள் இருக்கின்றன. இந்த உணர்வை மின்னூலில் படிக்கும்போது உணர முடியாது. அச்சுத் தொழில் நலிவடைந்துவிடும் என்று சொல்வதை நான் நம்பவில்லை.

**உங்களுடைய படைப்புகள், பிறருடைய இலக்கியப் படைப்புகள் செய்யும் சாதனையாக எதைச் சொல்வீர்கள்?**

ஒரு இலக்கியப் படைப்பைப் படிக்கிறபோது, நீங்கள் இல்லாத இடத்தில் இருப்பீர்கள். நீங்கள் இல்லாத காலத்தில் இருப்பீர்கள். நீங்கள் பழகாத மனிதர்களுடன் பழகுவீர்கள், உறவு கொள்வீர்கள். புதிய கலாச்சார, பண்பாட்டுச் சூழலோடு அறிமுகமாவீர்கள். இதுவரை காணாத நிலவியலைக் காண்பீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, படைப்பில் விவரிக்கப்பட்ட காலம், இடம், நிலம், மனிதர்கள், கலாச்சாரம் அனைத்தும் உங்கள் மனதோடும், நினைவோடும் கலந்து, நீங்கள் உயிருடன் இருக்கும்வரை, உங்களுடனேயே இருக்கும். இந்த நிலையை ஏற்படுத்துவதுதான் இலக்கியப் படைப்பின் சாதனை.

# தலை

## கமலா சுந்தர ராமசாமி

நர்ஸ் குவார்ட்டர்ஸிலிருந்து, திடீரென்று ரகளை நடப்பதுபோல் சத்தங்கள் வந்துகொண்டிருந்தது. கவனித்ததில் ஆலிஸ் அவளுடைய மெலிதான குரலில் காச், மூச்சென்று கத்துவதும், ஒரு பெண் அழுதுகொண்டே பேசும் குரலும், பலர் சொல்லும் சமாதான வார்த்தைகளும் கலவையாகக் காதில் விழுந்தன.



'எனக்கும் உனக்க ஸாரி மாதிரியே எடுத்திருக்கலாம் மஞ்சு...

இல்லக்கா, இந்த சாரியைப் பார்த்ததும் இது ஆலிஸக்காவுக்கு அளகாட்டு இருக்குமென்னு ஷோவிலிருந்து, கொத்தி எடுத்து, அம்மாகிட்டேயும் காட்டினேன். அம்மாவும் கரெக்ட் செலக்ஷன்னு சந்தோஷப்பட்டாங்க' என்று அழுதுகொண்டே பதில் சொல்வதும் கேட்டது.

குவாட்டர்ஸ் என்னுடைய அறைக்கு மிகவும் அருகில் இருப்பதால், வீட்டு ஹாலில் நடக்கும் நிகழ்வைவிட, அங்கு நடக்கும் எந்தப் பரபரப்பும் ஜன்னல் வழி என்னை வந்தடைந்துவிடும்.

"என்ன விஷயம் வனஜா" என்று கேட்டேன்.

வனஜா எங்கள் வீட்டின் அடுக்களைப் பணியாளர். பதினைந்து வருடங்களாகச் சமையல் வேலை செய்பவள். அவள் வேலைக்கு வந்த பிறகுதான் எனது பேரன் சித்தார்த் பிறந்தான். எங்கள் வீட்டிலேயேதான் தங்கல். வேலைக்கு நடுநடுவில் குவாட்டர்ஸுக்குப் போய் வருவாள். ஆலிஸின் நெருக்கமான தோழி. டீ வேளையில் ஒன்றுகூடும் அலுவலக ஊழியர்களுடன் அளவளாவி சிரித்து மகிழ்வது, அவர்களுடன் மதிய உணவு சாப்பிடுவது என்னும் பழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறாள்.

எல்லோருக்குமே அவள் வனஜாக்கா. அடுக்களை அருகில் வந்து வனஜாக்கா வனஜாக்கா என்று கூப்பிடும் ஒலி கேட்டுக்கொண்டே இருக்கும். வனஜாக்கா வென்னி தருவீங்களா, வனஜாக்கா நம்ம ரண்டு டாக்டருமே டீ வாங்கிட்டு வரச்சொன்னாங்க, ஸார் பேப்பர மேஜையிலே வச்சுருக்காங்களாம், எடுத்துத் தருவீங்களா அக்கா என்று ஆயிரம் கேள்விகளுடன் அவளிடம் வருவார்கள். ஞாயிறு அலுவலக விடுமுறை என்பதால், அன்று சீரியல் எதுவும் டிவியில் கிடையாது என்பதால், தனிமையில் தவித்துப் போய்விடுவாள். இல்லாவிட்டால் பக்கத்து ஊர்களில் இருக்கும் உறவினர்களைப் பார்க்கக் கிளம்பிவிடுவாள்.

‘‘ஆலிஸுக்கு நீங்க கொடுத்த ஸாரி பிடிக்கலையாம். மஞ்சுவிடம் வருத்தப்பட்டு பேசியதால் மஞ்சு அழுதுகொண்டு இருக்கிறாள்’’ என்றாள் வனஜா.

என் மகள் ரேவதியும் அவள் கணவர் ராமநாதனும் நடத்தும் என்எஸ்ஆர் மருத்துவமனையில் எல்லா விதமான பணியாளர்களையும் சேர்த்து ஐம்பது பேர் வரை இருக்கிறார்கள். ரேவதியின் அப்பா முக்கிய எழுத்தாளர்களில் ஒருவர் என்பதால் அவர் பெயரைத்தான் ஆஸ்பத்திரிக்கு வைக்க வேண்டுமென்பதில் ராமநாதன் கூடுதல் ஆர்வமாக இருந்தார். ரேவதி கைனகாலஜிஸ்ட். ராமநாதன் எம்.டி. இருவரும் லண்டனில் மேற்படிப்பு படித்துவிட்டு வந்தவர்கள் என்பது அதிகப்படியான தகுதி. படிப்பு தவிர, மருத்துவமனையை எப்படி நடத்தவேண்டும், சுத்தம், சுகாதாரம், நோயாளிகளிடம் எப்படி அன்பாக நடந்து கொள்ளவேண்டும் என்பது போன்ற விஷயங்களையும் தெரிந்துகொண்டு வந்ததால் அதற்கு நல்ல வரவேற்பு இருக்கத்தான் செய்கிறது.

இது மருத்துவமனை ஆரம்பித்து இருபத்தைந்தாவது வருடம். தீபாவளியையும் சில்வர் ஜுப்ளியையும் சேர்த்தே விழா நடந்தது. போனஸுடன் எல்லாப் பணியாளர்களுக்கும் டிரஸ்ஸும் விருந்துமாக அமர்க்களமாகக் கொண்டாடினார்கள். மருத்துவமனையின் அடுத்த தளத்தில் வீடும் அதற்கும் மேல்தளத்தில் நர்ஸ் குவாட்டர்ஸும் இருக்கிறது. பக்கத்துத் தெருவில் அரை ஃபர்லாங் தூரத்தில் ஆண் நர்ஸுகளுக்கான ஹாஸ்டல்.

பணியாளர்களுக்குப் புத்தாடை எடுத்துக் கொடுக்கும் பொறுப்பை ரேவதி என்னிடம் ஒப்படைத்திருந்தாள். சும்மா அமர்ந்திருக்கும் நான் அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன். ரேவதியின் ஏழு வயதுப் பெண் சஹானா குட்டி மாலை வீடு வருவதற்காகக் காத்திருப்பேன். ஏகப்பட்ட ப்ராஜெக்டுடன் களைப்பாக வருவாள். வீட்டில் குழந்தையின் பொறுப்பை ஏற்றிருப்பவர்களுக்காகத்தான் பள்ளியிலிருந்து வீட்டுப் பாடம் கொடுத்தனுப்புகிறார்கள். குழந்தைகளால் தனியாகச் செய்யக்கூடிய காரியமாகவே இல்லை அது. டிபன் கொடுத்து, இருவருமாகச் சிறிது நேரம் விளையாடிவிட்டு, வீட்டுப் பாடங்களை முடிப்போம். பாதித் தூக்கத்திலிருக்கும் அவளுக்கு ஆகாரத்தையும் ஊட்டிவிட்டு, இரவு படுக்கையில் படுக்கும்போதுதான் கதை கேட்பதற்கான ஆவலில் அவள் முகத்தில் சந்தோஷமே வரும். அவளுக்கு தினுசு தினுசாகப் புதுப்புதுக் கதைகள் சொல்லவேண்டும். அதற்கான ஹோம் ஒர்க்கையும் பகலிலேயே செய்து வைத்துக்கொள்வேன். என்னுடைய நேரமும் சுவாரசியமாகவே போய்க்கொண்டிருக்கிறது.

மஞ்சுவிடம் விசாரித்ததில் ‘‘அலுவலகத்தில் பணிபுரியும் பெண்களுக்கு எடுத்திருந்த ஸாரி போன்றில்லாமல், வீட்டு வேலை செய்பவர்களுக்கு எடுத்திருந்த ஸாரி போன்று தனக்கும் எடுத்துவிட்டோம் என்பதுதான் அவங்க மனக்குறை. ஆலிஸ் அக்கா என்னிடம் பெரிய கோபத்தில் இருக்காங்க’’ என்றாள்.

எனக்கு உதவியாக ஆண் பணியாளர்களுக்குத் தேர்வு செய்ய ரமேஷையும் பெண் பணியாளர்களுக்குத் தேர்வு செய்ய மஞ்சுவையும் ஜவுளிக்கடைக்கு அழைத்துச் சென்றிருந்தேன். லேட்டஸ் வகை ஸாரிகள் பற்றி எந்த ஐடியாவும் எனக்கு இல்லை. மஞ்சு ஸாரிகளைத் தேர்ந்தெடுக்க, சிறு சிறு மாற்றத்துடன் ஓகே சொல்லிக்கொண்டிருந்தேன். ரமேஷ் ஆண்களுக்கான பிரிவில் பேண்ட் ஷர்ட் தேர்வு செய்துவிட்டு என் வருகைக்காகக் காத்திருந்தான். பில் போட்டுக் கணக்கை முடித்து, நிறைவுடன் வீட்டுக்கு வந்தோம்.

மஞ்சுவுக்கும் ஆலிஸுக்கும் நெருக்கம் ஜாஸ்தி. மஞ்சுவுக்குச் சின்ன வயதிலேயே அம்மா இறந்துவிட்டதால் ஆலிஸை அம்மா ஸ்தானத்தில் வைத்திருந்தாள். அவர்களுக்குள் எந்த ரகசியமும் கிடையாது. மனம் விட்டுப் பழகுவார்கள். எந்த ஒரு பொருள் வாங்கினாலும் நகையோ, ட்ரஸ்ஸோ, பேனாவோ வாங்கினால்கூட மஞ்சுவுக்கு ஆலிஸிடம் காட்டி சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ளவேண்டும். பணி நேரம் தவிர மற்ற நேரங்களில் இருவரும் சேர்ந்தே இருப்பார்கள்.

இதில் விசேஷம் என்னவென்றால், அந்த ஸாரி ஆரம்பத்தில் ஆலிஸுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. மகிழ்ச்சியாகத்தான் அனைவரிடமும் பகிர்ந்துகொண்டிருந்திருக்கிறாள். டீ வேளைக்கு ஒன்று கூடும்போதுதான் ஆலிஸ் மனதில் அந்த வித்தியாசத்தை சக ஊழியர் ஏற்படுத்தியிருக்கிறாள். அவள் சாதாரணமாகச் சொன்னது இவளுக்குத் தைத்துவிட்டது.

ஆலிஸ் நர்ஸ் குவாட்டர்ஸின் பொறுப்பாளர் வேலைக்கு வந்து பதினைந்து வருடங்களுக்கு மேல் இருக்கும். இவள் வேலைக்கு வந்த ஓரிரண்டு வருடங்களில் சந்திரன் சூப்பர்வைஸர் வேலைக்குச் சேர்ந்தான். பகுதி நேரம் ஆண்கள் ஹாஸ்டலுக்கும் செல்வான். இருவரும் மிகவும் விருப்பத்துடன் சக பணியாளர்களுக்கு டீ போடும் பொறுப்பையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சந்திரன் எப்போதாவது வேலையில் செய்யும் குளறுபடி ஸிஸ்டமேட்டிக்கான ஆலிஸுக்கு எரிச்சலை ஏற்படுத்தும். ஆலிஸ் கீச்சுக் குரலில் கத்துவாள். சந்திரனிடம் அதற்குப் பதிலாகப் புருபுருப்பு வெளிப்படும். பிறகு அமைதியாகிவிடுவார்கள்.

‘‘எங்களுக்குள்ளே பெரிசா சண்டை ஒண்ணும் கிடையாது. சந்திரண்ணன் எங்கள் எல்லாருக்குமே சின்னச் சின்ன உதவிகளை அலுக்காம செய்து தருவாங்க. அண்ணனுக்கு ஆணொன்னு, பெண்ணொன்னு இரண்டு புள்ளங்க. எனக்கும் அதேபோல இரண்டு புள்ளங்க. அவருக்க பெஞ்சாதி ஸ்கூல்ல டீச்சரா இருக்காங்க. அவருக்கப் பையன் பி.இ. முடுச்சிட்டு குஜராத்தில வேலை பாக்கான். பொண்ணு

சின்னது. நாலாவதோ, ஐந்தாவதோ படிக்கு. என் புருஷன் பெஜாம் டாக்டருக்கு டிரைவரா இருக்காரு. எனக்க பொண்ணு பிகாம் படிக்கா. பய பத்தாவது படிக்கான். அண்ணனும் நானும் எங்க குடும்ப மேட்டரெல்லாம் பேசிக்கிடுவோம். ஒதவியும் செய்துக்கிடுவோம்'' என்பாள் ஆலிஸ்.

''அம்மாவுக்கு உதவி செஞ்ச மஞ்சுவிடம் நீ கோபப்படுவது சரியில்லை ஆலிஸு.''

''அதுல்லேண்ணே. அவளுக்க ஸாரி மாதிரி எனக்கும் எடுக்கணும்னு ஏன் தோணாம போச்சுன்னுதான் எனக்கு வருத்தம். அவள எம்மவளா நெனச்சு பளகிட்டிருக்கேன்.''

''அவம்மையா ஒன்ன நினைச்சதுனாலதான் மக வயசிலுள்ள பிள்ளைங்களுக்கு எடுத்த மாதிரியான ஸாரி எடுக்கல. சரிதானே.''

''ஒனக்க மனசுலேதாங் கரும்புள்ளி விளுந்திருக்கு. ஸாரி ரொம்ப நல்லாருக்குன்னுதானே மொதல்லா சொல்லிக்கிட்டிருந்தே?''

''இல்லண்ணே எனக்கு இனிமே மொதல்ல மாதிரி அவகிட்ட பளகிக்கிட முடியாது.''

''சும்மா இரு ஆலிஸு. ஒங்கிட்ட உசுரா இருக்கு அந்த புள்ள. நான் சொன்னா ஒனக்கு புரிய மாட்டேங்குது. ஹெட் நர்ஸ் மாதுரியக்காவ கூட்டிட்டு வாரேன். அவ சொன்னா புரியுதா பாப்பம்.''

''அது ஒன்னும் வேணாண்ணே.''

பணிபுரிபவர்களுக்கும் புதிதாக வேலையில் சேர்பவர்களுக்கும் ஆலிஸ் காட் மதர், சந்திரன் காட் ஃபாதர். எல்லோருமே சுக துக்கங்களை இருவரிடமும் பகிர்ந்துகொள்வார்கள்.

எல்லாப் பணியாளர்களுமே ஆலிஸ், சந்திரனுடன் சேர்ந்து சாப்பிடுவதையே விரும்புவார்கள். சிரிப்பும் கும்மாளமுமாக அவர்கள் உணவருந்துவது தினம் பிக்னிக் என்கிற தோற்றத்தையே ஏற்படுத்தும். கூடச் சென்று உணவருந்துவோமா என்று எனக்கும் தோன்றியிருக்கிறது. அந்தளவுக்கு ஈர்ப்பு.

''எம் புருஷனுக்கும் அவங்க எல்லாரும் கட்டி யிருந்த ஸாரிதான் புடிச்சுது சந்திரண்ணே. நம்ம ஆஸ்பத்திரியில் பிரசவித்த சரஸ்வதியம்மாவுக்க தங்கச்சி கல்யாணத்துக்கு நானும் எம் புருஷனும் வந்திருந்தப்போ, அவங்களையெல்லாம் ஒரே மாதிரி அந்த ஸாரியிலே பார்த்துட்டு, ஆலிஸு ஒனக்கும் இதே மாதிரி ஸாரி எடுத்திருந்திருக்கலாமே. எல்லாரும் ஒரே மாதிரி இருப்பீங்களேன்னு சொன்னாரே. ஜம்பரு தைக்காததுனால அந்த ஸாரிய நானு உடுத்தல. எங்கம்மாகிட்ட தீபாவளிக்கு கோடியாவே அந்த ஸாரிய கொடுத்திரு. அந்த ஸாரி அம்மாவுக்கு ரொம்ப நல்லா இருக்கும்னு சொன்னாரு. நர்ஸ்ங்களுக்கு எடுத்த மாதிரி ஸாரிய உனக்கு நானே எடுத்தாரேன். பிள்ளைகளுக்கும் ட்ரஸ் எடுத்து நம்ம பட்ஜெட்டுக்குள்ள கணக்க முடிச்சிறாலாம்னு சொன்னாரு. 'ஏண்டி புடிக்கலைனா எங்ககிட்ட தள்ளிட்டு நீ புது ஸாரி எடுத்துக்கிடுவாயா'ன்னு பத்ரகாளி ஆட்டம் ஆடிட்டாங்களே எனக்க மாமியார். எனக்கும் அவங்களுக்கும் இப்போ பேச்சுவார்த்தையில்ல. பொஞ்சாதிக்கு பரிஞ்சு பேசுதியான்னு மகங்கிட்டேயும் கோபத்திலே இருக்காங்க.''

எங்கள் செல்ல நாய்குட்டி டிஸ்கோ. தன்னுடைய பிஸியான பணிக்கு நடுவில் டிஸ்கோவைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை ராமநாதனே வைத்துக்கொண்டிருக்கிறார். ஆலிஸும் நாய்ப் பிரியை என்பதால் குளிப்பாட்டுவதற்கும் உணவு கொடுப்பதற்கும் ராமநாதனுக்கு உதவியாக இருப்பாள். ஆலிஸ்பேரில் நாங்களும் சக பணியாளர்களும் வைத்திருக்கும் அன்பு, மதிப்பெல்லாம் அவளுக்கு நன்றாகவே தெரியும்.

அலுவலகத்தில் வேலை செய்பவர்கள், வீட்டில் வேலை செய்பவர்கள் என்கிற எந்தப் பாகுபாடும் இன்றி அனைவருக்கும் ஒரே விதமாகத்தான் உடை எடுத்திருக்கிறோம். டிசைனில் வேண்டுமானால் சிறிது வித்தியாசம் இருக்கலாம்.

''ஆலிஸு, மாதுரியக்கா உன்னய பாக்குதுக்கு வந்திருக்காங்க.''

''என்னண்ணே சொல்லுதே.''

''ஓ, வாங்கக்கா.''

''என்ன ஆலிஸு. நல்லாயிருக்கியா? உனக்கு ஸாரி புடிக்கலைன்னு இப்பத்தான் மஞ்சு சொல்லி வருத்தப்பட்டா. கலர் வித்தியாசமே தவிர மத்திய வயதுகாரங்க எல்லாருக்குமே ஒரே மாதிரி ஸாரிதானே எடுத்துருக்காங்க. எடுப்பாத்தானே இருக்குது. நீ மனசுக்குள்ள எதையோ வச்சுகிட்டு ஸாரி புடிக்கலைங்க ஆலிஸு.''

''இல்லக்கா, ஒங்களல்லாம் மாதிரி நர்ஸ் இல்லேல்லே நான். நர்ஸ் குவாட்டர்ஸிலே வேலை செய்யறவதானேன்னு நினச்சுட்டா மஞ்சு.''

''பாத்தியா இந்த நினைப்புத்தான் ஒன்னைய கஷ்டப்படுத்துது.''

''மஞ்சுவுக்கும் உனக்கும் பிளவு என்பதை எங்களாராலேயுமே நம்ப முடியலை ஆலிஸு.''

நான் பலமுறை கூப்பிட்டுவிட்டும் என்னை வந்து பார்ப்பதைத் தவிர்த்து வந்தாள் ஆலிஸ். வருத்தமும் கூச்சமும் காரணமாக இருக்கலாம். அவள் விரும்பும் ஸாரியை வாங்கி, இப்போதாவது அவள் சமாதானம் அடையலாமென்கிற நம்பிக்கையில் மஞ்சுவிடம் கொடுத்தனுப்பினேன்.

''அம்மா, நம்ம வீட்டில முன்னால் வெளிவேல பார்த்த கோமதியை தீபாவளி பண்டம் செய்ய ஒதவிக்கி கூப்பிடுன்னு சொன்னீங்களே. அவ இப்போ இங்க யில்ல. காக்கும்புதூரிலிருந்து பஸ்ஸில், அளகான ஹேண்ட்பேகை மாட்டிகிட்டு வேலைக்கு வராம்மா. அடையாளமே தெரியல. நாவருகோயிலு ஆபீஸில வேலை செய்யுதாக எங்க ஊரில சொல்லிட்டுத்தான் வாறேன். 'வீட்டு வேலை செய்யுது கொறச்சலில்லா வனஜா'ன்னு சொல்லுதாம்மா. எங்க ஊரிலிருந்து வேலைக்குப் போற பொம்பள பிள்ளைங்களெல்லாம் ஜவுளி கடைக்கும்,

அண்டி ஆஃபீஸுக்கும் பீடி சுத்துதுக்கும் போகுதுங்கோ. வீட்டு வேலைக்குக் கூப்பிட்டா, கொறச்சலுன்னுதான் சொல்லுதுங்கோ''.

''கேட் திறக்கும் சத்தம் கேக்குது. யாரு பாரு?''

''கோபி ஆசாரி வந்திருக்காரும்மா. சுகமில்லாமலிருந்ததினால்தான் ரண்டு நாளா வேலைக்கு வர முடியலைன்னு சொல்லுதாரு.''

''சரி, வேலைய ஆரம்பிச்சுக்கச் சொல்லு. வனஜா, அவனுக்கு சாப்பாடு கொண்டு வரும் செல்லத்தாயிடம் என்னப் பார்த்துட்டு போகணுமாம் சொல்லு.''

''அம்மா, செல்லத்தாயி வந்திருக்கா. இன்னைக்கு சாப்பாடு கொண்டுவர லேட்டாயிடுச்சாம். நீங்க சப்பிட்டு முடிச்சுட்டே போங்கம்மா. அவள கொஞ்சம் நிக்கச் சொல்லுதேன்.''

''சரி.''

''செல்லதாயி, நல்லாயிருக்கியா? உன் புருஷன் உடம்பு சரியில்லைன்னு சொல்லுதாரே. உன் பெரிய பையனுக்கு ஸ்கூல் லீவுதானே. உதவிக்கு அனுப்பேன். அவனும் வேலை படித்துக்கொண்ட மாதிரி இருக்குமே'' என்றேன்.

''அய்யய்யோ வேண்டாம்மா. பய பெறவு பள்ளிக்கூடம் பக்கமே போவ மாட்டான். இந்தத் தொழிலே வேண்டாம்மா. இவரோட போகட்டும். எம்புள்ள இங்கிலீஸிலே பேசணும். நிறைய படிச்சு பெரிய வேலைக்கு போவணும்மா'' என்று சொல்லிவிட்டாள்.

''அம்மா, நம்ம ரோஹிணி அமெரிக்காவிலிருந்து கூப்பிடுதாங்க. சீக்கிரம் வாங்கம்மா. எனக்கு அம்புலி பாப்பாவ ஃபோனில பாக்கணும்மா.''

ஃபிலடெல்ஃபியாவில் டாக்டர் படிப்பை முடித்துவிட்டு என் இரண்டாவது பெண் ரோஹிணி சாண்டக்ரூஸில் பிரபல டாக்டர் பார்பரிடம் வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள்.

ரோஹிணி கான்ஃப்ரன்ஸ் கால் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறாளாம். அதை அவள் தெரியப்படுத்திக்கொண்டிருக்கும்போதே வினோத் போனில் வந்துவிட்டார்.

''மாமி நல்லா இருக்கிறீர்களா? கலிஃபோர்னியா வெதர் உங்களுக்கு ரொம்ப ஒத்துவரும். வந்திருங்கோ மாமி.''

''கண்டிப்பாக வரேன் வினோத்.''

''ரோஹிணி, அங்கு மாற்றல் வாங்கி வருவதற்கான முயற்சியில் முனைப்புடன் இருக்கிறேன். உனக்கு உதவி தேவைப்படும்போது போன் செய். உடன் புறப்பட்டு வறேன்.''

''தேவை இல்லை வினோத். நான் அங்கிருந்து கொண்டுவந்த பார்சலை பிரித்து செட்டில் பண்ணத்தான் உதவி தேவையா யிருந்தது. டாக்டர் பார்பர், டென்த் படிக்கும் அவள் பையனை அனுப்பி, ரேட்டு என்ன என்பதை அவனிடமே கேட்டுக்கொள் என்று சொல்லிட்டாங்க. எட்டு மணி நேரம் வேலை செய்து பார்சலைப் பிரித்து சாமான்களை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து வீட்டைக் கண்ணாடி போல்

> **''சும்மா இரு ஆலிஸு. ஓங்கிட்ட உசுரா இருக்கு அந்த புள்ள. நான் சொன்னா ஒனக்கு புரிய மாட்டேங்குது. ஹெட் நர்ஸ் மாதுரியக்காவ கூட்டிட்டு வாரேன். அவ சொன்னா புரியுதா பாப்பம்.''**

பளிச்சென்று சுத்தம் செய்துவிட்டு, ஞாயிறு எப்போ வேலைக்குக் கூப்பிட்டாலும் வறேன்னு சொல்லிட்டுப் போனான் அந்தச் சின்னப் பையன். அம்மா, அப்பா வசதியா இருக்காங்க, பாக்கெட் மணி தராங்க. எல்லாம் சரிதான். எனக்கு மேல படிக்கணும். என் இஷ்டத்துக்கு செலவு செய்யணும். அவங்க கட்டுப்பாட்டுக்குள் இருக்க முடியாது ஆன்டின்னு சொல்லிட்டுப் போறான்...''

''சரி. அம்புலி குட்டி எப்படியிருக்கா? அப்பாவைத் தேடறாளா?''

''ரொம்ப வினோத். சீக்கிரம் வந்துடுவர்னு சொல்லிண்டிருக்கேன். அவள பிளே ஸ்கூலில சேர்த்திருக்கேன். விரும்பி போயிண்டுருக்கா. அதனால பரவாயில்ல.''

''ரோஹிணி, உன் டாக்டர் ஃப்ரண்ட் மடோனா நடத்தும் பார்ட்டி இன்விடேஷன் கார்டு எனக்கும் வந்திருக்கு. நிகழ்ச்சிக்கு முன்னால் அங்கு வந்துடுவேன்னு நினைக்கிறேன். அவகிட்ட சொல்லிடு. காண்டிராக்டர் ஸ்டீபன் எப்படி இருக்கார்?''

''ரொம்ப நல்ல மனுஷின் வினோத். எல்லோருக்கும் அவரை பிடிக்கிறது. டாக்டர்கள் நடத்தும் பார்ட்டிக்கு எல்லாரையும்போல் மடோனாவும் ஸ்டீஃபனை அழைத்து வருகிறாள். அவர் எல்லாரிடமும் பேசறதுலயோ, மற்றவர்கள் அவரிடம் பழகுவதிலோ இம்மியளவு வித்தியாசமும் இல்லை. இருவரும் சந்தோஷமா இருக்காங்க. சரி. அம்புலியை ஸ்கூலுக்கு ரெடி பண்ணனும். போனை வைக்கிறேன்.''

''அம்மா, வீக் எண்ட் கூப்பிடறேன்.''

''சரிடா ரோஹிணி.''

''டிஸ்கோவின் செல்லக் குரைப்பு கேக்கறதே. யாருகிட்ட கொஞ்சுகிறான் அவன். வனஜா?''

''நம்ம ஆலிஸுகிட்டத்தான் அம்மா.''

''அப்படியா?'' எட்டிப் பார்த்துவிட்டு, ''ரொம்ப நாளாச்சே உன்னப் பார்த்து. எப்படிம்மா இருக்கே ஆலிஸு?'' என்றேன்.

தூரத்தில் நிற்கும் அவள் புன்னனையுடன் தயங்கித் தயங்கி என்னருகில் வந்தாள்.

# மன்னிப்பின் ஊடுருவல்

அகரமுதல்வன்

**யார்?**
**நான்**
**ஏன் வந்தாய்?**
**தெரியாது**
**உள்ளே யார் உன்னோடு?**
**உனக்குத் தேவையற்ற கேள்வி**
**உள்ளே வரலாமா?**
**இல்லை**
**ஏன்?**
**காதல் வரலாற்றை அழித்துவிடுகிறது.**

**- சேரன்**



முன்னொருகாலத்தில் இயக்கத்தினால் தேடப்பட்டுவந்த பூனைச்சுமதியை வளசரவாக்கத்தில் வைத்துக் கண்டான் திருச்செல்வம். கறுப்புநிற அக்டிவா பைக்கில் இரண்டு சின்னப்பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு போகும் பூனைச்சுமதியின் உடல் மெலிந்து போய்விட்டதை எண்ணி திருச்செல்வம் சிகரெட் பிடித்தார். எப்படியாவது அவளின் வீட்டைக் கண்டுபிடித்து பழக்கமாகிவிடவேண்டும் என்ற உத்வேகம் திருச்செல்வத்திற்குள் கொப்பளித்தது. ஆயுதங்கள் மவுனிக்கப்பட்ட பின்னர் சரணடைந்த போராளிகளுள் திருச்செல்வமும் ஒருவர். இரண்டுவருடங்களில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். நாட்டில் வாழமுடியாத சூழ்நிலைகருதி தமிழகத்திற்கு விமானம் மூலம் வந்திறங்கிய திருச்செல்வம் இத்தனை வருடங்களாக வளசரவாக்கத்தில் வசித்துவருகிறார். யார் யாரிடமோ கையேந்திக் குடிக்கவும் வீடு தூங்கிச் சாப்பிடவும் தன்னைப் பழக்கிக்கொண்டிருந்தார். நாட்டிற்குப் போகவேண்டும், அங்கு போனால் திருந்திவிடுவேன் என்று ஒப்புதல் அளிப்பார். இப்படியானதொரு நிலையில் பூனைச்சுமதியின் தரிசனத்தைக் கடவுள் ஏன் தந்தருளினார்



என திருச்செல்வமே கேட்டுக்கொண்டார். பூனைச்சுமதியின் வாளிப்புகள் நிறைந்த சரீரத்தை நினைவுகளின் பக்கங்களில் தட்டிப்பார்த்தார். ஒவ்வொரு நுரைப்பிலும் வடிவின் போதை நிறைந்தது. இப்படியொரு அழகியைத் துரோகியென்று சுட்டுத்தள்ள எண்ணியது மடத்தனமென்று நினைத்தபடிக்கு நடக்கலானார். பூனைச்சுமதியின் வீடு வளசரவாக்கத்தில் எங்கிருந்தாலும் தன்னால் கண்டுபிடிக்க இயலுமெனத் தனக்குத் தானே நம்பிக்கையூட்டினார்.

யாழ்ப்பாணம் தென்மராட்சிப்பகுதியைச் சேர்ந்த பூனைச்சுமதி இராணுவத்தின் ஆதரவாளர். இயக்க ஆதரவாளர்கள் பலரை இராணுவத்திற்குக் காட்டிக்கொடுத்த குற்றங்கள் உறுதிசெய்யப்பட்டு தேசத்துரோகிக்கான தண்டனையை வழங்க புலிகள் இயக்கம் முடிவெடுத்திருந்தது. அந்நாட்களில் இராணுவத்தின் அனுசரணையோடு கொழும்புக்குச்சென்ற பூனைச்சுமதி சில வருடங்களில் இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்தாள். இயக்கம் அழிவைச்சந்தித்த இறுதி நாட்களில் தமிழகமே கொந்தளித்துக்கொண்டிருந்தது. பூனைச்சுமதி ஒரு பெட்டி மத்தாப்புக்களை வாங்கிவந்து வீட்டின் நடுவில் கொளுத்திக் கொண்டாடினாள். இப்படியாகப்பட்ட பூனைச்சுமதியைச் சுட்டுத்தள்ள எண்ணியது மடத்தனம் என்று யோசிக்குமளவு திருச்செல்வம் மடையன் ஆகியிருக்கிறான் என நண்பர்கள் சிலர் கவலைப்பட்டனர். குட்டி யாழ்ப்பாணம் என்றழைக்கப்படும் வளசரவாக்கம் பகுதியிலிருக்கும் ஈழத்தவர் எல்லோருக்கும் பூனைச்சுமதியைத் தெரியாது. ஆனால் இந்தப்பெயரை அறிந்த சிலர் இருந்தனர். பெரும்பாலும் அவர்கள் இயக்கத்தில் பொறுப்பாளர் தரத்தில் இருந்தவர்கள்.

அடுத்தநாள் காலையில் கொஞ்சம் வெள்ளனவே எழும்பிய திருச்செல்வம் நான்கு பக்கமாகப் பிரியும் வீதியின் நடுவில் நின்று எந்தப்பக்கம் இறங்கலாம் என்று யோசித்தார். வலதுகைப்பக்க வீதியால் நடந்து செல்ல முடிவுசெய்தார். வீட்டின் முன்வாசலில் கோலமிட்டபடியிருந்த பல குடும்பப்பெண்களை உற்றுக் கவனித்துக்கொண்டு மிகவேகமாக நடந்துபோனார். பூனைச்சுமதி கோலம் போடும் பழக்கத்திற்கு ஆளாகியிருப்பாளா?ஒவ்வொரு வீட்டிலும் கீழ் வீட்டில் உள்ளவர்களே கோலம் போடுகிறார்கள். ஆகவே அவள் மேல் வீடொன்றில் வசித்தால் எப்படிக் கண்டுபிடிக்க இயலும்? இதுபோன்ற கேள்விகள் திருச்செல்வத்தை உந்தித் தள்ளத் தள்ள நடந்து களைத்தார். ஒரு பணக்காரக் குடும்பஸ்தன் தன்னிலும் பார்க்க நிறைகூடிய நாயொன்றைச் சங்கிலியால் பிடித்தபடி மேய்த்துக்கொண்டிருந்தான். அந்த நாயின் அகலமும் நீளமுமான வாயில் இருந்து எச்சில் ஒழுகிக்கொண்டிருந்தது. தெருவில் நிற்கும் நாய்கள் அதனைச் சுற்றிவளைத்து குரைத்துக்கொண்டிருந்தன. இன்னொரு பெண்மணி தன்னுடைய உடலைக் குறைக்க நடைப்பயிற்சி மேற்கொண்டிருக்கிறாள் போலும். அவளின் பிருஷ்ட அசைவு தாராளமானதாய் இருந்தது. நடையில் வேகம் குறைந்து காலைப்பொழுதின் காட்சிகளை வேடிக்கைபார்க்கத் தொடங்கினார் திருச்செல்வம். வீதிக்கு அந்தப் பக்கத்திலிருக்கும் சேரியில் இருந்து கூலி வேலைக்குச் செல்லும் சனங்கள், ஓரிடத்தில் குமிந்து நின்றனர். வாய் சிவக்க வெற்றிலையைப் போட்டுச் சப்பிக்கொண்டிருந்தனர். ஒரு குடிகாரன் தொப்பென விழுந்து மூக்குடைந்து அப்படியே தூங்கிக்கொண்டிருக்கிறான். மீன்கார அக்கா கூடையைச் சுமந்துகொண்டு வீதியில் ஏறுகிறாள். இப்படியாய் எத்தனையோ பேரைக் கண்டாலும் திருச்செல்வத்தால் பூனைச்சுமதியைக் காணமுடியவில்லை.

காலமை சாப்பிடுவதற்காக உணவகத்திற்குச் சென்றான். தன்னுடைய கையிலிருந்த ஐம்பது ரூபாவை மீண்டும் எண்ணிப்பார்த்து பொக்கெற்றுக்குள் வைத்தான். சாப்பிட்டு முடித்து உணவகத்திற்கு வெளியே நின்று வீதியைப் பார்த்துக்கொண்டு நின்றான். கடுங்கோடையின் வெக்கை மெல்ல மெல்ல ஏறிக்கொண்டிருந்தது. அறையை நோக்கி நடக்க எத்தனிக்கையில் பூனைச் சுமதி அதே அக்டிவாவில் மிக வேகமாகப் போய்க்கொண்டிருந்தாள். திருச்செல்வம் கைதட்டிப் பேர் சொல்லி அழைத்தும் அது பலனளிக்கவில்லை. இதனைப் பார்த்துக்கொண்டு நின்ற ஒரு யாழ்ப்பாணி அண்ணை உங்களுக்கு இதில போன ஆளைத் தெரியுமோ என்று கேட்டதும் திருச்செல்வம் விழிப்படைந்தார். ஓமோம் இவா புதுக்குடியிருப்பு குணம் வாத்தியாற்ற மூத்த மகள்தானே? கேட்டார் திருச்செல்வம். யாழ்ப்பாணிக்குக் கோபம் தலைக்குள் எரிந்தது. என்னைப் பார்த்தால் விசரன் போல இருக்கோ உங்களுக்கு என்று பதிலுக்குக் கேட்டதும், திருச்செல்வம் கொஞ்சம் கலக்கமுற்றார். மேற்கொண்டு அது தெரியாமலிருக்க,

“என்ன நீங்கள் இப்பிடி கதைக்கிறியள், எனக்கு குணம் வாத்தியாற்ற மூத்த மகளைப் போல இருந்தது, அதுதான் கூப்பிட்டனான்” என்று சமாளித்தார். யாழ்ப்பாணியோடு தொடர்ந்து கதையாமல் விரைந்து நடந்து தனது அறைக்குள் நுழைந்தார்.

என்ன பூனைச்சுமதியோட புகலிடத்தைப் புலி கண்டுபிடிச்சதோ என்று அறையிலிருந்த ஜீவகாந்தன் நக்கலாகக் கேட்டதை திருச்செல்வம் பொருட்படுத்தவில்லை. தன்னை விசாரித்த யாழ்ப்பாணி யாராக இருக்கக்கூடுமென யோசித்துக்கொண்டிருந்தார். சிலவேளையில் இப்போது இயக்கமாக நினைத்துக்கொண்டு இருக்கும் சிலர்களில் ஒருவராக இருக்குமோ? அப்படியெனில் தன்னைப்பற்றிய அறிக்கையை அவர்களின் தலைமைக்குக் கொடுத்து மரணதண்டனையை வழங்கிவிடக்கூடுமென திருச்செல்வம் பயந்தார். அன்றைக்கு முழுக்கவே வெளியில் செல்லாமல் அறைக்குள் ஒடுங்கிப்போயிருந்தார். அப்படியெல்லாம் ஒரு புதிய இயக்கமும் கிடையாது, தலைமையும் இல்லை, நீ சும்மா பயந்து செத்துப்போயிடாத, எழும்பி வா சாப்பிட என்று ஜீவகாந்தன் அழைத்தார். இரவுச்சாப்பாடு பெரும்பாலும் கொத்துரொட்டி. வளசரவாக்கம் ஸ்ரீதேவிக்குப்பம் சந்தியில் உள்ள ஈழஉணவகத்தில் இருவரும் போய்ச் சாப்பிட்டனர். இந்தக் கடையில்தான் தியாகிகளும் துரோகிகளும் அகதிகளாக சந்திக்கும் வரலாற்று நிகழ்வுகள் நடந்தபடியிருக்கும். ஜீவகாந்தன் முக்கியமான பொறுப்பில் இருந்தவர். யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆதரவுச் சக்திகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளைச் செய்தவர். அவரின் கடுமையான தாக்குதல் திட்டங்களுக்குள் தப்பிப்பிழைத்து இந்தியாவிற்கு வந்தவர்களில் இருவரை இதே கடையில் வைத்து நேருக்குநேராகச் சந்தித்திருக்கிறார். அதில் ஒரு நாற்பது வயதானவன், என்ன பொறுப்பாளர் துரோகிகளைச் சுடத்தொடங்கி எதிரிகளிட்ட தோத்துப்போய்ட்டியளே என்று கேட்டான். அங்கிருந்தவர்களுக்கு மத்தியில் ஜீவகாந்தன் எதுவும் கதையாமல் ஒரு புன்னகையை உதிர்த்துக் கொத்துரொட்டி சாப்பிடுவதைத் தொடர்ந்தார்.

பூனைச்சுமதிக்கு ஒரே யோசனையாக இருந்தது. இத்தனையாண்டுகளில் தன்னை யாரும் இந்தப்பேரைச் சொல்லி அழைத்ததே இல்லை. பெரும்பாலும் தன்னை அடையாளம்கூடக் கண்டுபிடிப்பதில்லை. ஆனால் இன்றைக்கு இப்படிக் கைதட்டி பேர் சொல்லி அழைத்தது யார் என்ற பதற்றம் அவளுக்குமிருந்தது. எப்போது வேண்டுமானாலும் தான் சுட்டுக்கொல்லப்படலாம் என்ற அச்சத்தில் இத்தனையாண்டுகளாக வாழ்ந்துவரும் பூனைச்சுமதிக்கு இன்று வேறு பெயர். வேறு ஊர். வேறு வாழ்க்கை.

மேனகா அல்பிரட். ஊர் கேரளம், அங்கின ஒரு சிற்றூர். என்ர வீட்டுக்காரர் வெளிநாட்டில உள்ள கொம்பனி யில வேலை செய்கிறார். நானும் என்னோட இரண்டு பிள்ளைகளும் மட்டும்தான். ரூலெட் போட்டிருந்திச்சு அதுதான் விளிச்சேன்.

மாசம் எட்டாயிரம் ரூபாய். அட்வான்ஸ் அறுபதாயிரம். நாளைக்கு காலையில நான் சென்னைக்கு வந்திடுவன். நீங்க அதே அட்ரசுக்கு வந்திடுங்க முடிச்சிடலாம்.

ஆ.. சரி. நன்றி.

பூனைச்சுமதி இப்போது வசித்துவரும் ஸ்ரீலக்ஸ்மி நகர் வீட்டை வாடகைக்குக் கேட்கும்போது இப்படித்தான் போனில் பறைந்தாள். தன்னையொரு மலையாளப் பெண்ணாகக் காண்பித்து அவள் வாழ்ந்துவருகிறாள். பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும் அதே வீட்டிலேயே இருக்கிறாள். மாதத்தின் மூன்றாம் திகதியே வாடகைப்பணத்தை வீட்டின் உரிமையாளருக்கு வங்கியில் செலுத்திவிடுவாள். ஒரு பிரச்சினையும் நேர்ந்ததில்லை. சுற்றத்தில் இருக்கும் சில குடும்பங்களோடு மட்டும் ஒரு மெல்லிய உறவைப் பேணிவந்தாள். தனக்குத் தெரிந்த ஈழத்தமிழில் மலையாள ஒலியை அதிகப்படுத்திச் சிலரோடு உரையாடுவாள். இந்த ஒலியையும் சந்தத்தையும் பயின்றுகொள்ள அவள் எடுத்த பிரயத்தனங்கள் ஏராளம். நிறைய மலையாளப்படங்களைப் பார்த்து பார்த்துக் கொஞ்ச மலையாளச் சொற்களையும் அறிந்திருந்தாள். ஒரு தசாப்தத்திற்குப் பின்னர் அவளே மறந்துபோன பூனைச்சுமதியை அவளுக்கு ஞாபகப்படுத்தியது யார் என்று இரவிரவாக யோசித்துக்கொண்டே இருந்தாள். துருப்பிடித்த அச்சத்தின் பதைபதைப்பு அவளை நடுங்கச்செய்தது. தன்னை வேட்டையாடும் அந்தக் குரலை அவள் ஒரு கனவைப் போல எண்ண முயன்றாள். கொஞ்சம் கொஞ் சமாக மேனகா அல்பிரட் பூனைச்சுமதியாகத் தன்னை உணரத்தொடங்கிய இந்த இரவின் உருவத்தில் குருதித் தடங்கள் அலையலையாய் எழுந்தன.

திருச்செல்வம் அதே கடையில் அடுத்தநாளும் காத்திருந்தார். எதிரே அதே யாழ்ப்பாணியும் நின்றுகொண்டிருந்தான். அங்கிருந்து விலக எண்ணி கொஞ்சம் தள்ளிப்போய் நின்றார். ஆனால் நேரமாகியும் பூனைச்சுமதி அந்த வீதியால் வரவில்லை. யாழ்ப்பாணி அருகில் வந்து என்ன இண்டைக்கு உங்கட குணம் வாத்தியாற்ற மூத்த மகளைக் காணவில்லையோ என்று கேட்டான். நீ ஆர் தம்பி? உமக்கு என்ன வேணும்? நான் ஆரைப்பார்த்துக்கொண்டு நிண்டாலும் உமக்கு என்ன? என்று திருச்செல்வம் பொங்கிக் கதைத்தார். யாழ்ப்பாணி சூழலை விளங்கிக்கொண்டு அங்கிருந்து மறைந்து போனான். வெயில் அடிக்கத் தொடங்கியும் அப்படியே நின்றார். வீதியில் அனல் எழுந்தது. முகத்தை மூடிக் கட்டிக்கொண்டு அக்டிவா பைக்கில் கடை நோக்கிவந்து கொண்டிருந்தாள் பூனைச்சுமதி. திருச்செல்வம் பைக்கை கைபோட்டு மறித்தார். ஆனால் பூனைச்சுமதி பைக்கை நிறுத்தவில்லை. இவளின் ஞாபகக்குகையின் புகைமூட்டங்களுக்கு மத்தியில் ஒரு புலியைப்போலத் துலங்கி வந்தது திருச்செல்வத்தின் முகம். இந்தச் சம்பவத்திற்கு பிறகும் திருச்செல்வம் பூனைச்சுமதியின் வீட்டைத் தேடிக்கொண்டே இருந்தார். பூனைச்சுமதி கடைக்குச் சென்று வீடு திரும்புவதற்குள் ஏகப்பட்ட பதற்றங்களைச் சந்தித்திருந்தாள். தன்னைச் சுட்டுக்கொல்லவேனும் இயக்கமொன்று புதிதாகத்

தொடங்கப்பட்டிருக்குமென பயந்து போனாள். இரண்டு பிள்ளைகளையும் பள்ளிக்கூடம் கூட விடாமல் வீட்டிற்குள் வைத்தே பூட்டி வைத்திருந்தாள். திருச்செல்வம் இரண்டு மூன்று நாட்கள் அந்தக் கடையில் காத்திருப்பதைத் தவிர்த்திருந்தார். மர்மமான யாழ்ப்பாணி பற்றிய பயம் இவரை உலுக்குவித்தது. திருச்செல்வம் பற்றிய பயம் இவளை உறைவித்தது. இப்படியாக ஒருவரையொருவர் கண்டும் காணாமலும் அச்சுறுத்தலானார்கள்.

வெப்பசலன மழை பெய்ய ஆரம்பித்தது. ஐந்து நாட்களுக்கு மேலாக வீட்டிற்குள் முடங்கிப்போயிருந்த பூனைச்சுமதி கதவைத் திறந்து வெளியே வந்தாள். உள்ளே பிள்ளைகள் இருவரும் தொலைக்காட்சியில் காட்டூர்ன் பார்த்தபடியிருந்தனர். மழையின் துளிகள் பூமியிலிருக்கும் வெப்பத்தைக் காற்றில் கலந்தன. அதன் வாசம் வெளியெங்கும் அடர்ந்து நின்றது. வீட்டைக் கண்டுபிடித்து விடலாமெனும் நப்பாசையில் குடையுமில்லாமல் மழையில் நடந்து போனார். கொஞ்சம் தூரமாகவே திருச்செல்வத்தைக் கண்ட பூனைச்சுமதி வீட்டின் வெளியே வந்து மழையில் நனைந்தபடி எதுவந்தாலும் எதிர்கொள்ளக் காத்திருந்தாள்.

திருச்செல்வம் அவளைக் கண்டுவிட்டார். வேகமாக நடக்க ஆரம்பித்தார். அவள் அழையாமலே வீட்டின் வாசற்படிக்கட்டில் போய் அம்ரந்திருந்தார். மழையின் துளிகள் சாய்ந்து பெய்தன. காற்றின் அற்புதமான கணத்தின் மொட்டவிழ்ந்து குளிர் வழிந்தது. பூனைச்சுமதி மழையில் நனைந்தவாறே படிக்கட்டில் அமர்ந்திருக்கும் திருச்செல்வத்தைப் பார்த்து, "நீ ஏன் என்னைத் திரத்திக் கொண்டு திரியிறாய்? உனக்கு என்ன வேணும், என்ர உயிரா?"

உன்ர உயிர் எனக்கு என்னத்துக்கு சுமதி. எனக்கு ஒண்டும் வேண்டாம். உன்னை அண்டைக்கு கண்ட நாளில இருந்து கதைக்கவேணும் போல இருந்தது. அதுதான் வந்தனான்.

எடுத்ததும் மண்டையில போட்டுவிட நிப்பியள். இப்ப என்னத்தை கதைக்க போறியள். கதையுங்கோ என்றாள் பூனைச்சுமதி.

சுமதி, இஞ்சபார், உன்னைச் சுடவேணுமெண்டு இயக்கம் தேடினது உண்மைதான். ஆனால் இன்றைக்கு அதொண்டும் இல்லை, எல்லாமே அழிஞ்சு போச்சு. இயக்கம் உன்னைச் சுடுமென்று நீ எப்பிடி நம்பினியோ, அதுபோல நீ சுடப்படவேண்டிய ஆள்தான் என்று நம்பின ஆளில நானுமொருத்தன். நீ நிறையப்பேரை காட்டிக்குடுத்தனி. அதை நாங்கள் மறந்தாலும் நீ மறக்கமாட்டாய். இப்ப நான் அதை கதைக்க விரும்பேல்ல என்றான்.

"உள்ள வாங்கோ" திடீரென பூனைச்சுமதி இப்படிச் சொன்னதை அவனால் நம்பமுடியாமல் இருந்தது. அவளின் நனைந்து போன சரீரத்தின் மீது இவனின் கண்கள் வண்ணத்துப்பூச்சியைப் போல நின்று சிறகடித்தது. தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த இரண்டு பிள்ளையளுக்கும் திருச்செல்வத்தை அறிமுகப்படுத்தி வைத்தாள். அவர்கள் கார்ட்டுனில் கண்களை வைத்துக்கொண்டு "ஹாய் அங்கிள்" என்றனர். தன்னுடைய அறைக்குள் திருச்செல்வத்தை வைத்துக்கொண்டு கதவிற்குத் தாழ்ப்பாளை போட்டாள். வெளியே மழையின் அழகை இயற்கை எழுதியபடியிருந்தது. தலையைத்துவட்ட



அவசியமின்றி உடலின் சூடு ஈரத்தைப் போக்கியிருந்தது. பூனைச்சுமதி அணிந்திருந்த ஆடைகளை அவிழ்த்துப் புதிதாக உடுப்பை அணிய எத்தனித்தாள். ஒரு பெண்ணின் உடலிலிருந்து வெளிக்கிளம்பும் வாசம், காமத்தின் பீடத்தில் விளக்கேற்றும் மாயச்செயல்களைச் செய்துவிடுகிறது. அந்த அறையில் செங்கழுநீர் மலர்கள் இதழ்களை விரித்து மலர்கின்றன. துயில் எழும் உடல்களின் ஊற்றில் அனைத்து அச்சமும் கரைகிறது. திருச்செல்வமும் பூனைச்சுமதியும் இறுக அணைத்தபடி நின்றனர். புதிய வேதமொன்றைப் பிரசவிக்க எண்ணும் அவதாரம் போல முயங்கிச் சரிந்தனர். வானத்தில் வளைந்து பெருத்த வானவில் அப்போது தோன்றியிருந்தது. மின்னலின் வெளிச்சம் கட்டில் வரையும் மின்னிப் பரவியது. உடைப்பெடுக்கும் ஆற்றின் வல்லபம் போல இயங்கி முடித்திருந்த திருச்செல்வம், பூனைச்சுமதியை நெற்றியில் முத்தமிட்டு எழும்பினான். பொய்கையில் நீராடிய களிப்பு இருவரின் முகத்திலும் பந்தல் போட்டு நின்றது. அன்றைக்கிரவு குழல் புட்டும் மீன்குழம்பும் சாப்பிட்டு முடித்துவிட்டு அல்பிரட் மேனகாவின் வீட்டிலிருந்து வெளியேறிய திருச்செல்வத்தை இருட்டில் நின்றுகொண்டிருந்த மர்மமான யாழ்ப்பாணி பின்தொடர்ந்து நடக்கலானான்.

ஜீவகாந்தனுக்கு தொடர்புகொண்டு தன்னை யாழ்ப்பாணி பின்தொடர்வதைத் தெரிவித்தும் அதில் எந்த மாற்றமும் நிகழவில்லை. திருச்செல்வம் அறைவரைக்கும் எதுவும் கதையாமல் நடந்துவந்த யாழ்ப்பாணி, "துரோகியோட படுத்து எழும்பினாலும் தேசத்துரோகம்தான் மிஸ்டர்

திருச்செல்வம்'' என்றான். திக்கென்று வேர்க்கத்தொடங்கி இதயம் படபடத்துத் துடித்தது. திருச்செல்வம் அப்படியே உறைந்து நின்று திரும்பிப்பார்க்கையில் யாழ்ப்பாணி மறைந்து போயிருந்தான்.

நடந்தவை அனைத்தையும் ஒன்றுகூட மறைக்காமல் திருச்செல்வன் சொல்லிமுடித்தான். மச்சான் நான் சொல்லுறன் என்று கோவிக்காதே, நீ அவளில மையல் கொண்டு இண்டைக்குப் போய்ப் படுத்திட்டாய். இது தொடர்ந்தது என்றால் உனக்குக் கூடாது. கண்டிப்பாய் ஏதாவது பிரச்சினை உனக்கு வரலாம். கவனமாயிரு என்று ஜீவகாந்தன் எச்சரித்தார்.

மொட்டை மாடியில் நின்றுகொண்டு வானத்தைப் பார்த்தார் திருச்செல்வம். நட்சத்திரங்கள் சில பூத்திருந்தன. மழை பெய்து ஓய்ந்த பின்னர் குளிர்ந்து கிடக்கும் பூமியின் தளிர்கள் காற்றில் அசைந்தன. இன்றைக்கு பூனைச்சுமதி அவனிடம் சொன்ன துயர்மிகுந்த சம்பவங்களை எண்ணி எண்ணிக் கலங்கினான். திக்குத் தெரியாத ஒரு பெண்ணின் கண்ணீரையும் அந்த நேரத்து நியாயங்களையும் இப்போதுவரை அவனாலும் ஏற்றுகொள்ளமுடியவில்லை. ஆனால் அவள் அதற்காக வருந்துகிறாள். மன்னிப்புக் கோருகிறாள். இராணுவத்தோடு சேர்ந்து இயங்கியதை ஒப்புக்கொள்கிறாள். இந்த இரண்டு பிள்ளைகளையும் வளர்த்தெடுக்கவே உயிரைப் பிடித்துவைத்திருப்பதாக அவள் கண்ணீர் சிந்தினாள். திருச்செல்வம் எத்தனையோ ஆறுதலையும் சமன்படுத்தல்களையும் சொன்னாலும் அவளால் அழுகையையும் குற்றவுணர்வையும் கட்டுப்படுத்த முடியவில்லை. ''நான் செய்தது தேசத்துரோகம்தான், ஆனால் என்னைத் தேசம் மன்னிக்காதா? உங்கள் துவக்குளில் ஒன்றேனும் மவுனிக்காமல் எனக்காக காத்திருக்கிறதோ என்று அச்சமாய் இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களின் அமைதி குறித்து எனக்கு நிறைந்த நடுக்கம் இருக்கிறது. நீங்கள் கூட என்னைச்சுடுவதற்காக நியமிக்கப்பட்டவர்களுள் ஒருவர்தானே'' என்றாள்.

மனித வாழ்வு நழுவி இரத்தத்தில் விழுந்து உதிரும் நாட்கள் அவை. அப்போது புலிகளுக்கு ஆதரவானவர்களை இராணுவ ஒட்டுக்குழுக்களும் அரசுக்கு ஆதரவான ஆட்களைப் புலிகளும் சுட்டு வீழ்த்திக்கொண்டிருந்த கொடும் ஊழ் ஒரு கொடியாகிப் படர்ந்து வளர்ந்தது. அப்படியான தாக்குதல்களைச் செய்துவந்தவர்களுள் ஜீவ்காந்தனைப் போல திருச்செல்வமும் மிகமுக்கியமானவர். இராணுவத்தின் ஆட்களை அதிரடியாகப் போட்டுத்தள்ளும் சாகஸத்தில் இவருக்கு பெரிய ஈடுபாடு இருந்தது. தேசத்துரோகிகளை அழித்தொழிக்கும் இந்த நடவடிக்கையில் திருச்செல்வத்தின் இலக்குகளில் பூனைச்சுமதியும் அடக்கம். இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டின் ஒரு மழைநாளில் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் பூனைச்சுமதி நின்றுகொண்டிருந்தாள். தகவல் கிடைத்துத் திட்டம் தீட்டப்படுவதற்குள் பேருந்தில் ஏறிச்சென்று தப்பியிருந்தாள். அப்படியொன்று நிகழாதிருந்தால் திருச்செல்வத்தினால் சுட்டுக்கொல்லப்பட்ட தேசத்துரோகியாக வரலாற்றில் இடம்பிடித்திருப்பாள் பூனைச்சுமதி. நினைவின் சாரீரம் ஓங்கி ஒலித்து திருச்செல்வத்தை குமிறி அழச்செய்தது. 'எங்கே நிலம்? எங்கே தியாகம்? எங்கே துரோகம்? எங்கே வெற்றி? எங்கே தோல்வி?' என்று எத்தனையோ 'எங்கே' அந்த மொட்டை மாடியில் திருச்செல்வத்தை சுற்றிவளைத்தது. இரவின் புள்ளினங்கள் கூவி உருகும் சில நிமிடங்களில் திருச்செல்வம் இயல்புக்குத் திரும்பினார்.

ஒருமாதப் பழக்கத்திற்குப் பிறகு வந்த ஞாயிற்றுக்கிழமை அன்று அல்பிரட் மேனகாவும் இரண்டு பிள்ளைகளும் திருச்செல்வமும் வளசரவாக்கம் அன்னை வேளாங்கன்னி தேவாலயத்திற்கு ஒன்றாகப் போயினர். யாழ்ப்பாணி அவற்றைக் கண்காணித்துக் கொண்டிருந்ததை திருச்செல்வம் கவனித்தார். தேவாலயத்தில் பூசை முடிந்து பிள்ளைகள் இருவரையும் வீட்டில் கொண்டுபோய் இறக்கிவிட்டு திருச்செல்வத்தின் அறைக்கு வந்தாள். அவனின் இரண்டு உடுப்பு சூட்கேசுகளையும் தூக்கிக்கொண்டு பைக்கில் வைத்தாள். திருச்செல்வம் மொட்டைமாடியில் இருந்த தனது போர்வையை மடித்துக்கொண்டு கீழே இறங்கினார். பூனைச்சுமதியைச் சந்திக்கக் கூடாது என்பதாலேயே ஜீவகாந்தன் அறையைவிட்டு ஏற்கனே வெளியேறி இருந்தான். யாழ்ப்பாணி இவற்றையெல்லாம் இன்னொரு உயரமான வீட்டின் மொட்டை மாடியில் நின்று பார்த்துக்கொண்டிருந்தான். அல்பிரட் மேனகாவின் சுற்றத்தினர், ''யார் இவரு? யார் இவரு?'' என்று கேட்கத்தொடங்கியதும் எந்தத் தயக்கமுமின்றி இவர்தான் என்னுடைய கணவர் என்று சொல்லத்தொடங்கினாள். வீட்டு உரிமையாளருக்குத் தொடர்புகொண்டு, தனது கணவர் வெளிநாட்டில் இருந்து வந்திருப்பதாகத் தகவல் சொன்னாள். துள்ளி எழுந்து கட்டியணைத்து, என்னை உனது கணவனாக ஏற்றுக்கொண்டமைக்கு நன்றி என்றார் திருச்செல்வம். சிலநாட்களில் தன்னைப் பின் தொடர்ந்த யாழ்ப்பாணி காணாமல் போயிருப்பதை திருச்செல்வத்தால் உணரமுடிந்தது.

மூன்று மாதங்களுக்கு பிறகு சுமதி கருவுற்று இருப்பதாக அறிந்ததும் ஜீவகாந்தனுக்கு தொடர்புகொண்டு மகிழ்ச்சியைப் பகிர்ந்தார். நல்ல சந்தோஷம் திரு என்று மறுபுறத்தில் இருந்து பதில் வந்தது. ஏற்கனவே காணாமல்போயிருந்த யாழ்ப்பாணியை நேருக்கு நேர் சந்திக்கலாம் என்கிற அளவுக்கு இனம்புரியாத துணிச்சலும் உற்சாகமும் தனக்கு வந்திருப்பதாக திருச்செல்வம் சொன்னார். சுமதி தன்னுடைய மேடு பரவிய வயிற்றில் திருச்செல்வத்தின் கைவிரல்களை வைத்துத் தடவினாள். அவனின் கைவிரல்களை சிசுவின் பசுமை பற்றிவிட்டது. இருவரும் கட்டித்தழுவி கண்ணீரில் உடல்மாறி நனைந்தனர்.

தியாகியும் துரோகியும் சேர்ந்து குடும்ப நடத்த அகதிவாழ்வில் பூரணசுதந்திரம் உண்டென்று ஜீவகாந்தன் யாருக்கோ போனில் சொல்லிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் இருந்தவன், ''இல்லை அண்ணை புண்டையாண்டிய சுடவேணும். இவன் செய்தது பச்சைத் துரோகம்'' என்றான். ஜீவகாந்தன் தொடர்பைத் துண்டித்து வானத்தை அண்ணாந்து பார்த்தார். அந்த இரவில் ஒரு பறவை சூனியத்தின் புள்ளியைப் போலத் தனித்துப் பறந்தது.

அப்போது உலகம் அத்தனை விதத்திலும் பைத்தியக்காரத்தனமாகவே இருந்தது.


FOR ALL YOUR REAL ESTATE NEEDS
"WE PROVIDE
ONLY THE BEST SERVICES!"
Market Evaluation
Flexible Commission
Professional Photography & Virtual Tour
Home Staging
Install Sale & Direction Signs
Attractive Advertising of Your Property
Open House Until SOLD
HOMELIFE
Are you thinking of
Buying or Selling your house?
Call Me Today For Your FREE Home Evaluation!
Anton Emmanuel
Sales Representative
Dir: 647 852 8975
Info@antonemmanuel.com
www.realtoranton.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229
Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.

# இனப்பிரச்சினை: வரலாறும் படைப்பிலக்கியமும் - 12

மு.புஷ்பராஜன்

மாங்குளம் இராணுவமுகாம் வீழ்ச்சியின் பின்னர் 1991ல் விடுதலைப்புலிகள் ஒருதலைபட்சமாகப் போர் நிறுத்தத்தை அறிவித்தது. அதிபர் பிரேமதாச உடனே போர்நிறுத்தத்தினை நிராகரித்தார். புலிகளின் சமாதான அறிவிப்பைப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தன "இது புலிகளின் பலவீனப் போக்கையே வெளிப்படுத்துகிறது" என்றார். (ஈ.த.போ.வ. பக்: 713) இதனைத் தொடர்ந்து பொது மக்கள் வாழும் பகுதிகளில் அரசு கண் மூடித்தனமான விமானத் தாக்குதல்களை நிகழ்த்தின. கோவில்கள், பாடசாலைகள் இவர்களது இலக்குகளாக இருந்தன. பொதுமக்கள் மீதான இந்த விமானத் தாக்குதல்கள் பற்றி கொழும்பு பத்திரிகையாளர் ரஞ்சன் விஜயரத்னவிடம் வினவியபோது "யாழ் குடாநாட்டில் வாழும் ஒரு மில்லியன் மக்கள் உயிருடன் வாழவேண்டுமானால் அவர்கள் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறவேண்டும். அவர்கள் தமது புத்தியைப் பாவிக்கவேண்டும். அப்படியல்லாது பிடிவாதமாக இருந்துகொண்டு விடுதலைப்புலிகளை ஆதரிப்பார்களாக இருந்தால் அவர்களுக்கு நல்லதிஷ்ரமாகட்டும்... பொதுமக்கள் பொதுமக்கள் எனக் காரணம் கூறிப் போரை இன்னும் பத்து வருடங்களுக்கு நீடிக்கவேண்டுமென்று விரும்புகிறீர்களா? இன்னும் பத்து வருடங்களுக்குப் போரை நடத்த நான் விரும்பவில்லை. எனது காலக்கொடு என்னுடைய காலக்கெடுதான்" (S.L.W.T.H: 406) என்றார். காலக்கெடு விதித்த பாதுகாப்பு அமைச்சர் 02.03.1991ல் தனது அலுவலகத்திற்குச் செல்லும் வழியில் வெடி மருந்து நிரப்பிய வாகன மோதலின்போது கொல்லப்பட்டார். அவருடன் அவரது மெய்ப்பாதுகாவலர்களும் பொதுமக்களும் கொல்லப்பட்டனர். கொலை நடந்த இடத்தைப் பார்வையிட்ட ஜனாதிபதி பிரேமதாச யுத்தம் தொடரும் என்றார்.




இந்தியாவில் தமிழ்நாடு மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் 1991ன் மே மாத இறுதியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. அப்போது ஆட்சியை இழந்திருந்த ரஜீவ் காந்தி ஆட்சியைக் கைப்பற்றும் வகையில் தீவிரமாக இயங்கினார். இதன் ஒரு பகுதியாகத் தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்க மே மாதம் 21ஆம் திகதி தமிழகம் வந்தார். இதுபற்றிப் பாவை சந்திரன் கூறுகையில், "ரஜீவ் காந்தி தமிழகத்திற்கு வருவது புதிதல்ல. 1984 தொடங்கி 1991 வரை பிரதமர் என்கின்ற நிலையிலும் பிரதமர் அல்லாத நிலையிலுமாக 64 தடவைகள் அவர் தமிழகம் வந்திருக்கிறார். பத்திரமாகத் திரும்பியும் சென்றிருக்கிறார். அதேபோன்று தற்போதும் (1991) பிரசாரம் மேற்கொள்ள மே 21ஆம் திகதி, 8.30 மணியளவில் சென்னை வந்திறங்கினார். விமான நிலையத்திலிருந்து குண்டு துளைக்காத காரில் ஏறிப் பிரச்சாரத்திற்குக் கிளம்பினார். போரூர், பூவிருந்தமல்லி சந்திப்புகளில் வாக்குக் கேட்டுவிட்டு ஸ்ரீபெரும்புதூர் சென்றார். அங்குதான் விரிவான பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

"சாலையோரமிருந்த அன்னை இந்திரா காந்தி சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு அங்கிருந்து நடந்தே பொதுக்கூட்ட மேடைக்குச் சென்றார். வழியில் பொதுமக்களும் தொண்டர்களும் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்ட அவர் மேடையை நெருங்கும்போது அங்கே நின்றிருந்த காங்கிரஸ் பிரமுகர் லதா கண்ணனின் மகள் கோகிலா, ரஜீவ் காந்தியைப் புகழ்ந்து தான் எழுதிய கவிதையை வாசித்துக் காட்டினார். அதைக் கேட்டு மகிழ்ந்த ரஜீவ் கோகிலாவின் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுத் திரும்பினார். கையில் மாலையுடன் நின்றுகொண்டிருந்த ஒரு பெண்ணை பொலிசார் தடுப்பதைப் பார்த்து, அவரை அனுமதிக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்தப் பெண் ரஜீவ் காந்தியை நெருங்கி பாதம் நோக்கிக் குனிந்தபோது பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்து அங்கு கூடியிருந்த 18 பேர் உடல் சிதறி பலியாயினர்." (த.ஈ.போ.வ: பக்: 715) நிகழ்ந்த செய்திகேட்டு தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவுடன் சேர்ந்து உலக நாடுகளும் அதிர்ந்துபோயின. கொலை பற்றிய விசாரணை தொடங்குவதற்கு முன்னரே பத்திரிகைகள் விடுதலைப்புலிகளைக் குற்றம் சாட்டின. ஒட்டுமொத்த இந்திய வெறுப்பும் புலிகள் மீதும் ஈழத் தமிழர் மீதும் கொட்டப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி ஜெயலலிதா, "மத்திய அரசு எல்லாச் சிறிலங்கா தமிழர்களைப் பிடித்துத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதை நான் கோரிக்கையாக அல்லது தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்" (S.L.W.T.H. பக்: 408) என்றார்.

ரஜீவ் காந்தி படுகொலைக்காக சி.பி.ஐ. கூடுதல் இயக்குநர் கார்த்திகேயன் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது. ரஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி விசாரிக்க வர்மா கொமிசனும், இப்படுகொலையின் பின்னணி, அதன் சதிபற்றி ஆராய ஜெயின் கொமிசனும் அமைக்கப்பட்டன. இந்த விசாரணைகள் சரியான திசையில் விசாரிக்கப்படவில்லை என்று குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இது சார்ந்து தமிழக வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்னன் அவர்கள் முன்வைத்த முக்கியமான கேள்விகளில் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறேன்.

"சிறப்பு விசாரணைக்குழு அமைத்து சந்திர சாமி, சுப்ரமணியசுவாமி, சந்திராசாமி, ஆயுத விற்பனையாளர் கசோகி ஆகியோரையும் ரஜீவ் கொலை வழக்கில் விசாரிக்க வேண்டும் என ஜெயின் கமிஷன் கூறியுள்ளதே? விசாரணை நடைபெற்றதா? அதன் முடிவு என்ன? அரசாங்கம் ஏதும் ஒரு முடிவுக்கு வராதபோது சுப்ரமணியசுவாமி மட்டும் விடுதலைப்புலிகள்தான் ரஜீவைக் கொன்றார்கள் எனக் கூறியதன் மர்மம் என்ன? பல கோணங்களில் விசாரிக்கப்படவேண்டிய ஒரு கொலைப் பின்னணியை விடுதலைப்புலிகள் கொன்றார்கள் என்ற ஒற்றைக் கோணத்தில் நடாத்த வற்புறுத்திய கார்த்திகேயனின் நோக்கம் என்ன? சிறப்பு விசாரணை அதிகாரி ரகோத்தமன், இந்தியப் புலனாய்வுத் துறையில் இயக்குநராக இருந்த எம்.கே.நாராயணன் ரஜீவ் கொல்லப்பட்ட அந்த இடத்தில் பிடிக்கப்பட்ட வீடியோ ரேப்பை தராமல் மறைக்கிறார் என்ற பகிரங்க குற்றச்சாட்டிற்கு பதில் என்ன? திருச்சி வேலுச்சாமி கூற்றுப்படி சுப்ரமணியசாமி, ரஜீவ் படுகொலை நடந்த ஒரு சில நிமிடங்களுக்குள்ளாகவே ரஜீவ் கொலை செய்யப்பட்டார் என்று கூறியதைப் பற்றி ஏன் இதுவரை விசாரிக்கவில்லை? ரஜீவ் கொலை வழக்கில் ஜெயின் மற்றும் வர்மா கமிஷன் அரசாங்கத்திற்குக் கொடுத்த முக்கிய கோப்புகள் அடங்கிய (file No 1/12014/5/91-IAS/D111) எங்கே? சந்திரசாமியின் நெருங்கிய நன்பரும் அன்றைய பிரதமருமான நரசிம்மராவ் அந்த முக்கியக் கோப்புகளை அழித்ததன் மர்மம் என்ன? எந்த முக்கிய நாடுகளையும் நபரையும் காப்பதற்காக அந்தக் கோப்புகள் அழிக்கப்பட்டன? வெளிநாட்டு உளவு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் சங்கேத மொழியில் சந்திரசாமி மற்றும் சுப்பிரமணியசாமியிடம் ரஜீவ் கொலை பற்றி நடத்திய உரையாடல் என்று பதிவு செய்து வைத்திருந்த முக்கிய ஆதாரம் ஒன்று பிரதம அலுவலக உயர் அதிகாரி தொலைந்து விட்டதாகக் கூறுவது எப்படி? (ர. கா. ப. சி. டா. சீ. புக்: 3435)

ஈழத்திற்கு மீண்டும் திரும்புகையில் இலங்கைப் படையினருடன் தமிழீழ விடுதலைப்புலிகள் கடுமையான யுத்தத்தில் ஈடுபட்டனர். 1991ஆம் ஆண்டு ஜூன் 12ல் கிழக்கு மாகாணத்தில் கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினருக்கு உணவு கொண்டுவந்த டிரக்ரர் வண்டி கண்ணி வெடிக்கு உள்ளாகியதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலாக பொதுமக்களைப் பழிவாங்க இராணுவத்தினர் முனைந்தனர். விக்கிபீடியாவின் தகவலின்படி 'சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்த இராணுவத்தினருடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த 10 துணைப்படை



யினரும் விரைந்தனர். இவர்களிடமிருந்த ஆயுதங்கள் களையப்பட்டன. ஆயுதங்கள் களையப்பட்ட துணைப்படையினர் கிராமத்திற்குச் சென்று தாக்குதல் நடத்தப்போவதை எச்சரித்தனர்'. (1991 Kokkaddichcholai Massacre WiKipedia)

கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, முதலைக்குடா ஆகிய கிராமங்களில் 'ஆடிய வெறியாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 150 பொதுமக்கள் அடித்தும் வெட்டியும் கொல்லப்பட்டனர். அருகிருந்த பாடசாலையில் இருந்து பன்னிரண்டு வயதுச் சிறுமி உட்பட 6 பாடசாலை மாணவிகள் கூட்டுப் பலாத்காரம் செய்யப்பட்டார்கள். இப்படுகொலை பற்றித் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜேசேப் பரராசசிங்கம் குரலெழுப்பினார். நிலைமையின் கொதி நிலையைத் தணிக்கும் முகமாக ஜனாதிபதி பிரேமதாசவும் பிரதமர் டி.பி.விஜயதுங்கவும் ஒரு விசாரணைக் குழு அமைத்தார்கள். இலங்கை வரலாற்றில் விசாரணைக் குழுக்கள் தமிழர்களுக்கு நீதி வழங்குதல் என்பது மிக மிக அரிதானதே.

1991 ஜுன் 21ல் விடுதலைப்புலிகள் கொழும்பிலுள்ள இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகத்தின் மீது தற்கொலைத் தாக்குதலலை நடத்தினர். இதில் "70 பேர் வரை கொல்லப்பட்டதுடன் 50க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் சுயாதீனமான தகவலின்படி இறந்தவர்கள் எண்ணிக்கை 500 வரை அதிகரித்திருந்ததாகச் சொல்லப்பட்டது." இதனைத் தொடர்ந்து வடக்கில் ஜுலை 10ஆம் திகதி ஆனையிறவு இராணுவ முகாமை முற்றுகையிட்டு புலிகள் தாக்குதல் நடத்தினர். 24 நாட்கள் நடந்த இந்த யுத்தத்தில் விடுதலைப்புலிகள் பலத்த இழப்புக்களுடன் தோல்வியைத் தழுவினர். இந்தப் போரில் இராணுவத் தரப்பின் தகவல்களின் படி "150 இராணுவத்தினர் இழப்புக்களுடன் 600 வரையிலானவர்கள் காயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகளின் 425 உடல்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்". விடுதலைப்புலிகள் தமது தரப்பில் 800 போராளிகளை இழந்ததாகவும் 1000 போராளிகள்வரை காயமடைந்ததாகவும் தெரிவித்தனர்... "பிரபாகரனின் புகைப்படத்தை முன்னட்டையாகக் கொண்ட கொங்கொங்கின் 'ஏசியா வீக்' 1991 ஒகஸ்ட 23ஆம் திகதி இதழில் எட்டு வருட உள்நாட்டு யுத்தத்தின் பின் சிறிலங்கா இரு தேசங்களைக் கொண்ட ஒரு தீவாகத் தோன்றுகிறது எனக் குறிப்பிட்டுள்ளது." (S.L.W.T.H: பக்: 450)

முடிவற்றுத் தொடர்ந்துகொண்டிருந்த யுத்தத்தில் எந்த அரசியல் தீர்வும் எட்டாத நிலையில் ஜனாதிபதி பிரேமதாச 'தமிழ் மக்களுக்கு ஈழம் தவிர எல்லாம் தருவதாக' தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அமைச்சர் தொண்டமான் தீர்வுக்கான முயற்சியை முன்னெடுத்தார். அரசியல் தீர்வுத்திட்டம் பற்றிய பேச்சுக்கள் பெரும்பாலும் கடிதப் போக்குவரத்திலேயே நடைபெற்றது. தொண்டமான் முன்வைத்த தீர்வுத்திட்டத்தில் மாகாண அரசு என்ற சொற்பிரயோகம், பிரகடனப்படுத்தப்படாத போர்நிறுத்தம் ஒன்றைப் புலிகள் மேற்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கைகள் புலிகளை அசௌகரியப்படுத்திய போதிலும் கடிதப் போக்குவரவுகள் அதுசார்ந்து நடைபெற்றன. தொண்டமானின் முயற்சி கொழும்பு, வெளிநாட்டுப் பத்திரிகைகளால் பிரபலமாக்கப்பட்டன. இந்நிலையில் தொண்டமான் புதுடில்லி சென்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் உட்பட பலரையும் சந்தித்தபின் சிங்கள அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தொண்டமான் "தீர்வுத்திட்டத்தில் பல சொற்பதங்கள் விவாதத்துக்குரியதாக இருந்தாலும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை, திருகோணமலைத் துறைமுக சுயாட்சி அமைப்பின் நிர்வாகத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்பவைகள் தென் இலங்கைத் தீவிரவாதிகள் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தின." (தொ.ச.மு.சி.பே: பக் 39) "தொண்டமான் தீர்வுத்திட்டம் தமிழீழத் தனியரசுக்கான அத்திவாரம் என்பதே சிங்கள இனவாத அரசியல்வாதிகள் பௌத்த பீடங்கள் கருதின. தொண்டமான் மீது சிங்கள இனத்தின் விரோதி சதிகாரன், பிரபாகரன் ஆவி என்றும் திட்டினர்." (தொ.ச.மு.சி.பே: பக்:41) செல்வாக்கு மிக்க பௌத்த தேரரான வல்பொல ராகுல தேரர் "தொண்டமானின் தீர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை முழுச் சிங்கள இனமும் வெகுண்டெழுந்து எதிர்க்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இன்னொரு வலிமைமிக்க தேரரான மடிகே பண்ணசீக தேரர் 29ஆம் திகதி டிசம்பர் கொழும்பு ஞாயிறு வாரப் பத்திரிகைக்குக் கொடுத்த அறிக்கையில் "இந்தத் திட்டமானது பெரும்பான்மை இனத்தைச் சிறுபான்மை இனராக்கும் முயற்சி. எனவே எவ்வளவுக்கு எவ்வளவு அதனை அவமதிக்க முடியுமோ அவ்வாறு செய்து முற்று முழுதாக அத்திட்டத்தினை நிராகரிக்க வேண்டும்" (S.L.W.T.H: 451) என்றார்.

1992 ஒகஸ்ட் 8ஆம் திகதி வடக்கில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் ஊர்க்காவல்துறையில் கண்ணிவெடி மூலம் கொல்லப்பட்டனர். இதுபற்றி விடுதலைப்புலிகள் உரிமை கோரினர். அதன்பின் "தமிழர் பிரச்சினைக்கு இராணுவத்

தீர்வு என்பது பயனற்றது என்பதை உணர்ந்திருப்பார்கள் என பி.பி.சி. விடுதலைப்புலிகளை மேற்கோள் காட்டி அறிவித்தனர்.'' (S.L.W.T.H. பக்:452) இதனைத் தொடர்ந்து 27 ஓகஸ்ட் அன்று இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான "Water Jet" என்ற விரைவுப் படகு முல்லைத்தீவுக்கு அண்மித்த பகுதிகளில் வைத்து விடுதலைப்புலிகளால் கடத்திச் செல்லப்பட்டது. 60அடி நீளமும் 15அடி அகலமும் நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்ட இக்கப்பலைப் புலிகளிடம் இழந்ததால், கடற்படையினருக்கு ஒரு பெரிய இழப்பாக இருந்ததுடன் கடற்படையினர் 24மணி நேரமும் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டனர்.

இராணுவம் வழமைபோல் பொதுமக்கள்மீது தமது தாக்குதலை நிகழ்த்தினர். 1992 ஒக்ரோபர் 26, 27ஆம் திகதிகளில் அளவெட்டி, வசாவிளான், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளில் விமானத் தாக்குதல்களை நிகழ்த்தினர். 1993 ஜனவரி 2ல் கிலாலிக் கடலேரிப் பாதையால் சிறு படகுகளில் பயணம் செய்துகொண்டிருந்த பொதுமக்கள்மீதான தாக்குதலை நிகழ்த்தினர். இதில் 50 வரையிலான மக்கள் கொல்லப்பட்டும் 15 பேர் காயமும் அடைந்தனர். இதில் ஆறு பெண்களினதும் எட்டு ஆண்களினதும் உடல்கள் கிளிநொச்சிக்கு அண்மையிலுள்ள கடலேரியில் ஒதுங்கிக் கிடந்தன. 1993 ஜனவரி 13ல் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான சதாசிவம் கிருஷ்ணமூர்த்தியும் (கிட்டு) அவருடன் பயணித்த ஏனைய போராளிகளும் சர்வதேசக் கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டனர். அவர்களை இந்தியப்படைகள் கைதுசெய்ய முயன்றபோது அவர் கப்பலைக் குண்டுவைத்துத் தகர்த்துத் தற்கொலை செய்துகொண்டார். இதில் கிட்டுவும் ஏனைய எட்டுப் போராளிகளும் மரணமடைந்தனர். ஏனையோர் கைதிகளாக இந்தியா கொண்டுசெல்லப்பட்டனர். இந்தத் துயர்மிகு நிகழ்வினால் தமிழீழம் எங்கும் மூன்று நாட்கள் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த அநீதியான இழப்பு சார்ந்து எஸ். சிவநாயகம் அவர்கள் தமது நூலில் "ரஜீவ் காந்தியின் படுகொலைக்கும் அமைதிப்படையினர் விடுதலைப்புலிகளிடம் சந்தித்த மோசமான வீழ்ச்சிக்கும் சரியான சந்தர்ப்பத்தில் இந்தியா பழிவாங்கிக்கொண்டது. இந்தியாவிற்கு ரஜீவ் காந்தியின் முக்கியத்துவத்தைவிட கிட்டுவின் உயிர் தமிழ் மக்களுக்கு மிகவும் பெறுமதியானது.'' (S.L.W.T.H. பக்: 455) எனக் குறிப்பிட்டார்.

தெற்கில் மாகாண சபைகளுக்கான தேர்தல் (1993 மே 19) ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்த ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி 1993 ஏப்ரல் 23ல் கொழும்பின் புறநகர்ப் பகுதியான கிரிலப்பனயில் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். வழமைபோல் அரசு விடுதலைப்புலிகள் மீதே பழியைப் போட்டது. அதேவேளை இக்கொலை பற்றி வேறு பல ஊகங்களும் கொழும்பில் உலவின. கொழும்பிலுள்ள 'த இந்து' நிருபருக்கு காமினி திசநாயக்க அளித்த நேர்காணலில் கூறியதாக ப்ரொண்ட் லைன் 1993 மே 21 இதழில் "அரசாங்கத்தின் மத்தியிலுள்ள ஒரு தீய சக்தி விடுதலைப்புலிகளின் ஒருவரை அடையாளப்படுத்திக் குற்றம் சாட்டுவதைக் காண்கிறோம். அரசாங்க ஊடகம் இதை ஒவ்வொரு மணித்தியாலயமும் திரும்பத் திரும்ப பறைசாற்றுவதன் மூலம் தேர்தலைப் பின்போட முயல்கிறது. தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே மிகப்பெரிய அளவில் முன்னணி வகித்ததனால் லலித் கொலை செய்யப்பட்டார். மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடைந்தபின் அரசாங்கமோ அன்றிப் பிரேமதாசவோ அரசைத் தொடர்ந்து நடத்துவது கடினமாகவே இருக்கும்.'' (S.L.W.T.H. 451)

அத்துலத் முதலியின் படுகொலை நடைபெற்று ஒரு வாரங்கள் கடந்த நிலையில் 1993 மே 1ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாச மே தின ஊர்வலத்தில் பவனி வரும்போது மருதானை ஆமர் வீதிச் சந்தியில் நிகழ்ந்த தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவருடைய பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட 24 பேர்கள் கொல்லப்பட்டனர். அரசாங்கம் இக்கொலைக்கு விடுதலைப்புலிகளே காரணம் எனக் கூறியது. அதேவேளை பிரேமதாச கொல்லப்பட்ட செய்தி கேட்டு தென்னிலங்கையின் சில பகுதிகளில் பட்டாசு வெடித்து மகிழ்ந்ததாகவும் தகவல்கள் கசிந்தன. அத்துடன் பிரதம மந்திரி டிங்கிரி பண்டா விஜயதுங்க மே 7ஆம் திகதி பதில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். பொறுப்பேற்றுக்கொண்டதும் 'இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை. இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே' என்று அறிவித்தார்.

இந்த அரசியல் சூழலின் காலப்பகுதியை வெளிப்படுத்தும் நாவல் எதுவும் அக்காலத்தில் வெளிவரவில்லை. ஆயினும் புலிகள் பிரேமதாச பேச்சுவார்த்தை முறிந்தவுடன், புலிகள் தவிர்ந்த ஏனைய குழுக்கள் அரச இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய புள்ளியைத் தழுவி சண்முகம் சிவலிங்கம் அவர்கள் 'தொலைந்துபோன கிரகவாசி' என்றொரு சிறுகதை எழுதியுள்ளார். இச்சிறுகதை அவரது 'காண்டாவனம்' தொகுதியில் இடம்பெற்றுள்ளது. இக்கதை கிழக்கு இலங்கையைப் பின்புலமாகக் கொண்டது.

•

**தொலைந்து போன கிரகவாசி:** அந்தப் பாடசாலை சுற்றி வளைக்கப்பட்டது. எவரும் அன்று கைது செய்யப்படவில்லை. ஆனால், ரஞ்சன் என்ற மாணவனைப் படையினர் விசாரித்துள்ளனர். மறுநாளும் சுற்றிவளைப்பு நிகழ்ந்தபோது, சிஸ்டர் மரியாளுடன் இருந்து படங்கள் வரைந்துகொண்டிருந்த ரஞ்சனும் இன்னொரு மாணவனும் கைதுசெய்யப்பட்டனர். அன்று மாலையே அந்த இன்னொரு மாணவன் விடுவிக்கப்பட்ட போதிலும் ரஞ்சன் விடுவிக்கப்படவேயில்லை. தாசிசியஸ் மாஸ்டரின் மகன் ரஞ்சன். அவரது இன்னொரு மகனின் பெயர் பிரகஷ்தன். மாஸ்டர் ஒரு மார்க்சியவாதி, இலக்கியவாதியும்கூட. அவரது மார்க்சிய, இலக்கியப் பாசறையில் வளர்ந்தவர்கள் பலர். தனது மகன் எதற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறான் என்ற விபரம் எதுவும் அவருக்குத் தெரியவில்லை. போர்ச் சூழலில் இராணுவ அதிகாரிகளுடன் பேசுவதற்கு இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்களைத்தான் வாலாயமானவர்கள். ஐயாத்துரை, சாக்கன் மற்றும் இன்பம் ஆகியோரைத்தான் நம்பியிருக்கிறார். இன்பம் மாஸ்டரின் கையைப் பிடித்து

வளர்ந்தவன் மட்டுமல்லாது அவரின் பாசறையிலும் வளர்ந்தவன்.

இராணுவத்திடம் பிடிபட்டிருக்கும் மகனை வெளியில் எடுக்கவேண்டிய அவரசத் தேவை மாஸ்டர் முன் இருந்தது. அன்று இராணுவமுகாமிற்கு ஐயாத்துரை செல்வதற்கு ஆயத்தமாக நிற்கையில் அவருக்குத் தொலைபேசி அழைப்பு. 'மாஸ்டர்' என்று சொல்லிக் கேட்டது. ஐயாத்துரை மூக்குக் கண்ணாடியூடாக மாஸ்டரைப் பார்த்தார். பிறகு சோர்ந்து, 'நாளைக்குப் போகலாம் இருட்டிவிட்டது' என்றார். மறுநாள் ஐயாத்துரையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. குணத்தார் உதவிக்கு முன்வந்தார். போன் பண்ணிவிட்டு, 'நாளைக் காலையில் விட்டிருவாங்க' என்றார். நாளை இராணுவ முகாமிற்குத் தன்னுடன் குணத்தாரையும் வரும்படி கேட்டுக்கொண்டார் மாஸ்டர்.

பிரிகேடியர் ரணவாக்கையைச் சந்தித்தபோது "விசாரணை இன்றும் முடியவில்லை நாளை விடுகிறோம்" என்றார். மகனைப் பார்க்க அவருக்கு அனுமதிக்கவில்லை. ஆனால், குணத்தார் சென்று பார்த்து வந்து 'ஒரு பிரச்சினையும் இல்ல ஆள் கலாதியாக இருக்கிறார்' என்றார். குணத்தாரின் பதிலும் மகனுக்குச் சாப்பாடும் உடுப்பும் கொடுக்க முடிந்தமையும் மாஸ்டருக்கு நிம்மதிதான். 'இந்த இரவுதானே, மகனே பொறுத்துக்கொள்' எனறது அவர் மனம். மறுநாள் நிலாவணை முகாமிற்கு குணத்தாருடன் சென்று மேஜர் தவளக்கலவுடன் பேசினார். மேஜர் தனது பதிவேட்டைப் புரட்டியும் முன்னர் மாஸ்டர் அளித்த பழைய வாக்குமூலத்தையும் தெடர்புகாட்டி ரணவாக்கைக்கு சிபார்சுக் கடிதத்தைக் கொடுத்தார். திரும்பி வருகையில் முகாமின் ஒரு அறையில் ரஞ்சன் துருதுருத்த கண்களோடு தரையில் குந்தியபடி இருந்து மாஸ்டரைப் பார்த்தான். திரும்பி தவளக்கலவிடம் ஓடிய மாஸ்டர் "சேர் சேர் என்ர மகன் இங்கேதான் வைக்கப்பட்டிருக்கிறார்" என்றார், மேஜர் அனுதாபமான புன்னகையுடன் 'இன்று மாலையில் அவர்களை இங்கிருந்து கொண்டுபோவார்கள். நாளை காலையில் விடுவிக்கப்படலாம்' என்றார். 'ஏன் இங்கு கொண்டுவந்தார்கள்' என்ற ஒரு தந்தையின் மனநிலையை மேஜர் பொருட்படுத்தவே இல்லை. 'ஏன் உங்கள் மகனைக் கைதுசெய்தார்கள்' என்று மேஜர் தவளக்கல தன் குரலை உயர்த்தினான்.

**இராணுவமுகாமில் மாஸ்டரைக் கண்டதும் ரணவாக்கை சீறி விழுந்தான் 'நீ என்ன பேயனாக இருக்கிறாய் ஐ.சி.ஆர்.சி. என்ன எங்களுக்குத் தலைமைத் தளபதியா? அநியாயமாக உன் மகனைக் கொல்லப் பார்த்தாள் அந்த நோர்வேக்காரி!' என்று கூறி தனது திறமைகளையும் விளக்கினான்.**

'அப்பாவிகளின் கைதுகளுக்கு என்ன காரணம் இருக்கிறது? முகமூடி தலையை ஆட்டினால் சரி. ரஞ்சனை முகமூடியிடம் கூடக் காட்டவில்லையாம்... பிரகஷ்தனின் சகோதரன் என்பதுதான் காரணம் என்றால் பிரகஷ்தனின் மற்றைய சகோதரர்களையுமல்லவா கொண்டு போகவேனும்? எல்லாம் மர்மமாக இருக்கிறதே. நாளைக்கு மகன் விடுதலையடையாவிட்டால் காரணத்தை எப்படிக் கண்டடைவது?' மாஸ்டரின் மனம் அலைமோதியது. சாக்கன், இன்பம் பற்றியும் அவர் நினைத்துப் பார்க்கிறார். 'சாக்கன் சாக்கு வியாபாரியுமாம்... சாக்குத் தேடி அடிக்கடி மரியாள் இல்லத்திற்குப் போய் வந்தவனாம். அங்கிருக்கிற பையன்களை விசாரித்தவனாம். அதற்குப் பிறகுதான் பாடசாலையில் சுற்றிவளைப்பு. அன்று ரஞ்சன் லீவு. அடுத்த நாள் சனி, சிஸ்டர் விடுதிக்குப் போன் செய்து ரஞ்சனை அழைப்பிச்சதாம். பாடசாலைக்குரிய வரைபடங்களை சிஸ்டர் சொல்லியபடி ரஞ்சன் வரைந்துகொண்டிருந்த போதுதான் இரண்டாவது சுற்றிவளைப்பும் நடந்து. ரஞ்சன் கைதானான்... ரஞ்சனைக் கைது செய்வதற்காகவே இரண்டு நாள் சுற்றிவளைப்பும் நடந்திருக்கிறது என்பது மரியாள் இல்லத்திலுள்ள பையன்களின் முடிவு.. சரி எப்படியெனினும் ரஞ்சன் கைதுக்குக் காரணம் என்ன? சாக்கனுடன் அதைத் தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டும் என்று பையன்கள் சொல்கிறார்கள். இதைத் தவளக்கலவிடம் போய் செல்லலாமா?'

'இன்பம் என் நிழலிலே வளர்ந்தவன். சிறுவயதில் என்னை அம்மாச்சி அம்மாச்சி என்று சொல்லிக் கையைப் பிடித்துக்கொண்டு திரிந்தானே!... என்னுடைய மார்க்சியக் கருத்துக்களை உள்வாங்கியவன். அதே கருத்தோட்டத்தில்தான் எதிர்ப்பட்ட ஒரு இயக்கத்தில் சேர்ந்தவன். என்ன மாயப்பொடி பூசி நம்மூரின் முத்தான சில மணிகளை அந்த இயக்கத்திற்குச் சேர்த்துக் கொடுத்தவன்... இன்பமும் தப்பிப் பிழைத்து தொலைந்துபோன கிரகவாசியாகி ஊரோடு சேர்ந்திற்றான்.' மாஸ்டர் இன்பத்துடன் நடந்த உரையாடலை நினைவு கொண்டார். 'ரஞ்சன் என் மடியில் வளர்ந்த பிள்ளை அம்மாச்சி. அவனுக்கு ஏதும் நடக்க நான் விடுவேனா?' உரையாடல் முடிவில் மறுபடியும் சொன்னான்: 'அம்மாச்சி நீங்க போய்வாங்க பயப்பிடாமல். நான் ரஞ் சனைக் கவனித்துக் கொள்கிறேன். முடியுமானால் நாளைக் காலை நானே அவனை வீட்டுக்குக் கூட்டி வருகிறேன். பிரசித்தப் படுத்த வேணாம். நீங்க இப்போ போங்கோ.'

மாஸ்டருக்கு இதைவிட வேறென்ன வேண்டும். ஆனால், மறுநாள் இன்பத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்பத்தைத் தேடி அவர்கள் முகாமிற்குச் சென்றபோதுதான் சாக்கனின் தரிசனம்தான் கிடைத்தது. சாக்கன் தன் வீரப்பிரதாபங்களை மாஸ்டரிடம் கொட்டினான். உருண்டு



திரண்ட கைகளையும் கால்களையும் காட்டினான். லெபனானில் பயிற்சி எடுத்தபோது எடுத்த படங்களைக் காட்டினான். 'கிறிசோஸ்ரம் கிறீன்' மைதானத்தை உள்ளடக்கியிருந்த கிடுகுக் கொட்டில்கள் கொண்ட அகதி முகாம்தான் அவர்களது ராஜதானி. அதற்கு அப்பால் நாலைந்து எல்லைப் புறங்கள் என்ற அவர்களது இராஜ் ஜியம்! இந்த இராஜ்ஜியத்துள் மாற்றான் படையின் ஒரு ஈ, எறும்பு கூட நுழையாமல் பாதுகாப்பதுதான் சாக்கனின் சாம்ராஜ்ஜியக் கடமை. அவனே சாட்சாத் உளவுப் பிரிவுத்துறை பிரிவுத் தலைவர். அவனே இந்த சாம்ராஜ் ஜியத்தின் தொலைந்து போன கிரகவாசிகளின் உதிரிக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம்!'

சாக்கனுடனான இந்த உரையாடல்களின்போது இராணுவ உளவுத்துறை ஏற்பாட்டில் இன்பத்தின் பங்கு என்ன என்று கேட்டபோது சாக்கன் சற்று யோசித்து 'இன்பத்தார் இராணுவ உளவுத்துறை வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்' என்றான். உளவுத்துறை வலையமைப்பு எப்படியிருக்கிது என்ற கேள்விக்கு 'ஒவ்வொரு ஊரிலும் ஒரு சாராயக்கடை இருக்கு. சாக்குகளுக்கு இடையில் சாராய வியாபாரம். எங்கள் உளவுகள் சாராயத்தில் நனைந்துதான் வரும். நான் தைரியமாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சந்தியில் நின்று சத்தம் போட்டும் சொல்வேன், இதுதான் எங்கள் வலையமைப்பு என்று. ஒளித்தொளித்து என்றாலும் சாராயம் குடிக்கிறவன் எங்களிடம் வரத்தான் செய்வான். எல்லா ரகசியமும் சாராயத்தில் கரையும்... உங்களுடைய ஃபைலும் எங்களிடம் இருக்கு. உங்கள் பிள்ளைகளின் ஃபைலும் இருக்கு. பிரகஷ்தனுடைய முழு ஃபைலும் இருக்கு. ஆனால் பழிவாங்கப் பேவதில்லை. எங்களுக்கு எங்களுடைய பாதுகாப்புத்தான் முக்கியம். ரஞ்சனுடைய உளவுத் தகவல்களை நான் சேகரித்தது உண்டு. ஆனால், அவருடைய கைதுக்கு நானோ என்னுடைய உளவுத் தகவல்களோ பொறுப்பில்லை.' 'பின்ன யார் பொறுப்பு.' சூட்டோடு சூட்டாக மாஸ்டர் கேட்டார். வாயெடுத்த சாக்கன் அமுக்கிக்கொண்டான். மாஸ்டரை உற்றுப் பார்த்துவிட்டு றணவாக்கையிடம் கேட்டுப்பாருங்கள் என்றான். அப்போது சிஸ்டர் மரியாளை விசாரணைக்குக் கொண்டுசெல்கிறார்கள் என்ற செய்தி வந்தது.

சிஸ்டர் மரியாளுக்குக் குற்ற உணர்வு, வரைபடங்கள் வரைய அழைத்ததால்தான் ரஞ்சன் கைதுசெய்யப்பட்டான் என்ற குற்ற உணர்வு, பிஷப்பிற்கும் ஃபாதர் சந்திராவிற்கும். ஒன்றிற்கு பத்துத் தடவை போன் செய்தும் நேரிலும் சென்றிருக்கிறார். பிஷப்பின் வேண்டுகோளை பிரிகேடியர் ரணவாக்கை சம்மதித்தவேளைதான் ஐ.சி.ஆர்.சி. வந்து ரஞ்சன் கைதுபற்றி ரணவக்கையிடம் விசாரித்தது. 'பையன் றிலிசாகிவிட்டான். இந்த முகாமில் இல்லை. வேறு முகாமில்' என்று முன்னுக்கு பின் முரணாகச் சொல்லிப் பின்னர் 'பையனை காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கவா' என ரணவாக்கை ஆத்திரத்துடன் கேட்ட தகவல்களை குணத்தார் மாஸ்டர் வீடு வந்து கூறியபோதுதான் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்தார்.

இராணுவமுகாமில் மாஸ்டரைக் கண்டதும் ரணவாக்கை சீறி விழுந்தான் 'நீ என்ன பேயனாக இருக்கிறாய் ஐ.சி.ஆர்.சி. என்ன எங்களுக்குத் தலைமைத் தளபதியா? அநியாயமாக உன் மகனைக் கொல்லப் பார்த்தாள் அந்த நோர்வேக்காரி!' என்று கூறி தனது திறமைகளையும் விளக்கினான். 'அப்பாவிகளையும் குற்றவாளிகளையும் எங்களுக்கு பார்த்தவுடனே தெரியும். சாதாரண மக்களையும் தந்திரோபக்காரர்களையும் திறந்தமனம் உள்ளவர்களையும் சிந்தனையாளர்களையும் கூட நாங்கள் இனம்கண்டு கொள்வோம்' என்றார். மேலதிகமாக கிரகம் மாறிப் போனவர்கள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவன் ஐ.சி.ஆர்.சி. மீது கோபமுற்று, பையனை 'டம்' பண்ணிவிட்டு ஆள் இல்லை என்று ஐ.சி.ஆ.சி.க்குச் சொல்லலாம்தானே என பிரிகேடியருக்குச் சொன்ன தகவலையும் ரணவாக்கை சொன்னான்.

'யார் ஐயா அந்த பாராத் துருப்பு கிரகவாசி' எனக்கேட்ட மாஸ்டர் மனம் தீயாக 'நான் அவனைக் கண்டுபிடிப்பேன். நீங்கள் சொல்லவேண்டாம் ஐயா. நான் அவனைக் கண்டுபிடிப்பேன்' எனத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டார். மாஸ்டர் நினைவில் சிஸ்டரின் விசாரணையில் மகனின் கைதுக்கான காரணங்கள் புதைந்திருக்கும் என முதலில் சென்னவன் இன்பம்தான். பாடசாலை சமூகவியல் கழகத்திற்காக, உதவி அரசாங்க அதிபர் பிரிவு வரைபடங்களையும் மாவட்ட மாகாண சபைகள் பற்றி வரைந்த படங்களையும் சாக்கன் மரியாள் இல்லத்தில் களவாடி அவை பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையதென்ற கருத்தோற்றத்தை ரணவாக்கைக்கு ஊட்டியிருக்கக் கூடுமென்று இன்பம் சொல்லுகிறானாம். இன்பத்தின் கூற்றை சிஸ்டர் மரியாள் நம்புகிறாள். சாக்கன் இதை மறுக்கிறான். ரஞ்சன் வரைந்த வரைபடங்களைத் தான் களவாடியது உண்மை என்றும் அவை தன்னிடம் இருந்து களவாடப்பட்டுவிட்டன என்றும் ஏதோ ஒரு வகையில் தன்னை மாட்டிவிட இன்பம் எத்தனிப்பதாகவும் தன்னைப் பாதுகாப்பதற்காக இயக்கத்தைக்கூடக் காட்டிக் கொடுக்கக் கூடியவன் இன்பம் என்று சாக்கன் சிஸ்டரிடம் கூறியுள்ளான்.

மாஸ்டர் எல்லாவற்றையும் எடைபோடுகிறார். அவரது கணிப்பில் சாக்கன்தான் பிரிகேடியருடன் நெருக்கமாக இருக்கிறான். ரஞ்சனை 'டம்' பண்ணிவிடலாம் என்ற கொடூரத்தையும் முன்வைத்தவன் அவன்தான் எனவும் கருதுகிறார். 'அடே சாக்கா உன் துவக்குக்கு நான் பயப்பிட மாட்டேன். மகனே என்னென்ன காயத்தோடு இருக்கிறாயோ, எதுவும் நடக்கலாம் என்று வாளா இருந்து விடுபவன்

நானல்ல, என் உயிரைக் கொடுத்தாவது உன்னை மீட்பேன். என் அடுத்த நடவடிக்கைகளுக்கு முன் எதற்கும் இன்பத்தை ஒருமுறை சந்திக்க வேண்டும் நாளை.' மாஸ்டர் மனம் கருதியது. இன்பம் கையை விரிப்பான் என்று மாஸ்டர் எதிர்பார்க்கவில்லை. அவன் புதிராகவும் இருப்பதாக மாஸடர் உணர்ந்தார். அவனுடனான உரையாடலில் தனக்கான எல்லைகளைக் கூறிக்கொண்டாலும் யாரே ஒருவன் ரஞ்சனை 'டம்' பண்ணச் சொன்னதாமே என்ற கேள்விக்கு இன்பம் சாக்கனையே குற்றம் சாட்டினான். சாக்கனுக்கு என்ன விரோதம் என்று கேட்டபொழுது அவன் இரண்டு பக்கம் நிற்பதை ரஞ்சன் மேலிடத்திற்கு அறி வித்துவிடுவானோ என்ற பயம்தான் என்றான். சாக்கனும் இரண்டு பக்கமும் நிக்கிறானா என்ற கேள்விக்கு இன்பம் தடுமாறத் தொடங்கினான்.

தீப்பற்றி ஆவியாகித் திரிந்த மாஸ்டர் நேரில் தவளக்கலவுடன் பேசினார். மாஸ்டரின் அனுமானங்களைத் தவளக்கல கவனமாக கிரகித்துக் கொண்டிருந்தபோது அங்கு தற்செயலாக ரணவாக்கையும் வந்து சேர்ந்தார். எந்த முகமனும் இல்லாமல் தவளக்கல கதிரையில் சாய்ந்திருந்தவாறு றணவக்கையிடம் கேட்டார்.

'ராணா, இவரது மகன் வரைந்ததாகச் சொல்லப்பட்ட வரைபடங்களை உங்களிடம் தந்தது யார்?' றணவாக்கை கதிரையில் அமர்ந்தபடி அலட்டிக்கொள்ளாமல் சொன்னார்

"இன்பம்."

"இவருடைய மகனை 'டம்' பண்ணலாம் என்று சொன்னது?"

"ஏன்? ஏன்?..." ரணவக்கை எரிச்சல் கொண்டவர்போல் மாஸ்டரைப் பார்த்தார்.

"ஏன் அந்த ரகசியங்கள் இப்போது?"

"அது இப்போது வெளியே வந்துவிட்டது."

"இன்பம் என்னோடு கொண்ட தொடர்புகள் மிகவும் ரகசியமானவை. அவனைக் காட்டிக்கொடுக்க நான் விரும்பவில்லை."

"முந்திச் சொன்னது."

"வாய் தவறிச் சொன்னது. நான் இவரைக் கவனிக்கவில்லை."

இது போதாதா மாஸ்டருக்கு. அவர் தேடிய கேள்விக்கு பதில் கிடைத்துவிட்டது. மாஸ்டர் எவ்வளவுதான் மனத்தளவில் பழிவாங்குதல் பற்றி நினைத்தாலும் ஒரு சாதாரணனால் அன்றைய சூழலில் எதையும் இலகுவில் நடைமுறைப்படுத்த முடிவதல்ல.

இப்போது வாடிவீட்டு வீதி ஏற்றத்து ராணுவத் தடையரணுக்கு சற்றுத் தள்ளி தகர்க்கப்பட்ட ஒரு கட்டிடத்தின் கூரையின் கீழ் மாஸ்டரும் அவர் மனைவி சுவர்னாவும் இன்னும் கனகாவும் ரஞ்சனை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். மகன் வருவது தெரிந்தது. வாடிவீட்டின் தாழ்விலிருந்து மேட்டுக்கு மெல்ல மெல்ல ஏறி வந்து கொண்டு இருந்தான். நைந்த கோலத்தில் சித்திரவதைக்குள்ளான மற்றொருவனைத் தாங்கலாக அணைத்து வந்து கொண்டிருந்தான். அவன் உதடுகள் வெடித்துப் போய் இருந்தன. முன்னம் பற்களில் இரண்டு இல்லை. உடலெங்கும் இரத்தம் ஓடிப்போன ஊமைக் காயங்கள். தாய் ஓவென்று கதறினாள். கன்னிகா கைகளைத் துடைத்துக்கொண்டு கைலேஞ்சியை வாய்க்குள் அமுக்கிக்கொண்டிருந்தாள். மகன் வந்த கோலமும் மாஸ்டர் உணர்வுகளைத் தீப்பிழம்பாக ஆக்கின. அதை அவர் "நான் தீப்பற்றி எரிந்தேன். உள்ளங்கால் இருந்து உச்சம்தலைவரை அக்கினிப் பிழம்பானேன். அப்படியே உயர்ந்தேன். இராணுவ முகாமையும் உருக்கித் தணலாக்கிக் கொண்டு உயர்ந்தேன். எத்தனை வருடங்கள் இடையில்...

அந்தத் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. மூன்று வேட்டுக்கள். தொலைந்துபோன அந்தக் கிரகவாசி கிடந்தான். இரத்தவெள்ளத்தில். இந்த அம்மாச்சியின் காலைப் பற்றிக்கொண்டு துடித்தான். மகனே என்று கத்திக்கொண்டு அவனிடம் ஒடி வந்தவள் அவனுடைய தாய் அல்ல. என் மகனின் ரஞ்சனின் தாய்தான். என் தீ அடங்கிற்றா? உண்மைக்கு உண்மையான என் அழகிய மகனின் பொய்ப் பல் இரண்டையும் பார்க்கும் போதெல்லாம் நான் இன்னமும் கொளுந்துவிட்டு எரிந்துகொண்டுதான் இருக்கிறேன்" என்ற மாஸ்டரின் மன வெம்மையுடன் கதை முடிகிறது.

இச் சிறுகதை மேலே நான் குறிப்பிட்ட வகையில் எழுதப்படவில்லை. இன்பம் சுடப்பட்டு இறந்த பின் 'எத்தனை வருடங்கள் இடையில்..' என்பதன் மூலம் பல வருடங்கள் கழிந்த பின்னர்தான் மேலே குறிப்பிட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவத்துடன் அவர் இன்பம் பற்றிய மீதான நினைவின் மீட்டலாகவே இக்கதை தொடர்ச்சி இடம்மாறி முன் பின்னாக, குறுக்கு நெடுக்காகப் படர்கிறது. நனவேடை உத்தி. இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட மகனைப் பற்றிய ஒரு தந்தையின் மன அலைவே கதை முழுவதும். இராணுவத்தினரிடம் கைதியாகும் ஒருவர் திரும்பி உயிரோடு வருதல் என்பது நீதியின் பேரில் அல்ல, இராணுவ அதிகாரியின் கருணையில் பேரில்தான். ஆனால், அந்தக் கருணை சாத்தியமான ஒன்றல்ல. இக்காலத் துயரில் இராணுவத்திடம் கைதான தமது பிள்ளையை மீட்டிட அலைந்த, தீப் பற்றி ஆவியாகித் திரிந்த பல பெற்றோரில் ஒருவர்தான் மாஸ்டர். மகன் துருதுருத்த கண்ணால் பார்த்ததை 'நீ பார்த்த பார்வைதான் நெஞ்சைக் குடைகிறது' என்றும் மகனை 'டம்' பண்ண ஆலோசனை கூறியதைக் கேட்டு 'என் ஆன்மா விஸ்வரூபம் கொண்டது. துப்பாக்கியும் கையுமாகத் திரிகிற ஒரு தோரணை எனக்கு வந்தது'. அவர் மனைவி பற்றி 'அவள பார்க்க முடியல்ல, சோறும் இல்ல, தண்ணியும் இல்ல. கிடந்த கிடயாய்க் கிடந்து புலம்புகிறாள்' என்பவையெல்லாம் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வில் பொது விதியாய் அமைந்து இருந்தது.

இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்கள் புலிகளால் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பவர்கள். புலிகளையும் அவர்களை ஆதரிப்பவர்களையும் பழிவாங்கும் மனநிலையில்தான் அவர்கள் இருப்பார்கள். அரசுக்கு அரசியல் ரீதியாகவும் இராணுவத்தினருக்கு உளவு சார்ந்தும் அவர்கள் முக்கியத்துவம் உடையவர்கள். கைது செய்யப்பட்டவர்கள் சார்ந்து இராணுவத்தை அணுகுவதற்கும் பொதுமக்கள் இவர்களையே சார்ந்திருக்கவேண்டியும் இருந்தது. இவர்களிடம்

இருந்த ஆயுதங்கள், இராணுவப் பின்னணி ஆகியவை இயல்பான காலங்களில் கைகூடமுடியாத செயல்களைச் சாத்தியப்படுத்தியுள்ளன. ‘புதுக் கல்யாணம். ரம்பை போன்ற பெண்’ இயக்கம் அவனுக்குக் கொடுத்த பரிசுகளில் அவளும் ஒன்று. இயக்கத்தினால் சேர்ந்த ஒரு நாட்டாண்மை இல்லாமல் இன்பம் அந்தப் பெண்ணைக் கற்பனை கூடச் செய்து பார்த்திருக்க முடியாது’ (பக்:201) என்று ஆசிரியர் இன்பம் சார்ந்து குறிப்பிட்டாலும், ஆயுதம் தாங்கிய அனைத்து இயக்கங்களுக்கும் இயக்கம் சார்ந்த நாட்டாண்மை இருந்ததுதான்.

தொலைந்து போன கிரகவாசிகள் பற்றிக் கூறுகையில் வசதியாக வாழ்ந்தாலும் ஆபத்தான வாழ்க்கை தலைக்கு மேல் கத்தி தொங்கும் வாழ்க்கை. ‘இன்று மட்டும்தான் அவர்களுக்கு நிஜம். இன்று மட்டும் என்றுகூடச் சொல்ல முடியாது. இரவா பகலா என்பது கேள்வி. இரவோடு இரவாகவும் போகலாம். பகலோடு பகலாகவும் போகலாம். இதோ இந்த நிமிடம் மட்டும்தான் நிஜம். இதற்குள் இந்த வாழ்க்கையை முற்று முழுதாக வாழ்ந்து முடித்து விட வேண்டும்’ என்ற துடிப்பு.’ இதை ‘சகாராப் பாலைவனத்தின் சாண் உயரப் பூக்காடு நினைவுக்கு வருகிறது. எல்லாம் ஒரு அங்குலத்திற்குமேல் இல்லை. எல்லாம் ஒரு மூன்று நாள் வாழ்க்கை. முளைப்பதும் வளர்வதும் ஒரு நாள். பூப்பதும் கருவுறலும் ஒரு நாள். காய்ப்பதும் கனிவதும் வித்துக்களைப் பரப்புவதும் ஒரு நாள். மூன்று நாட்களுக்குள், ஒரு ஞாயிறின் சிரிப்பு தேய்வதற்குள் அல்லது ஒரு பனிப் புயல் தீர்வதற்கு முன் முடித்துக் கொள்கின்ற மூன்று நாள் தலைமுறைகள்’ என அழகாக ஒப்பிடுகிறார்.

இந்த ஆபத்திலிருந்து தப்ப புலிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்பவர்களும் உண்டு. அது இன்பத்தின் கூற்றாக வெளிப்படுகிறது. ‘நான் அந்தப்பக்கம் போவதில்லை. போனா இந்தப் பக்கம் என்னைக் காவு கொண்டுவிடும். அகதி முகாமுடன் என் பணி முடிந்து விடுகிறது. அதற்குள் மட்டும்தான் என் ஆட்ட ஓட்டம் எல்லாம். அதை மீறி நான் ராணுவத் தரப்போடு தொடர்புகொண்டால் நாளைக்கு எதிரே இருக்கிற லைற் போஸ்டில்தான் நீங்க என்னைப் பாப்பீங்க’. இருந்த பழிவாங்கும் மனநிலை இங்கு இன்பத்தின் மூலம் வெளிப்படுகிறது. சிறு வயதிலிருந்து அம்மாச்சி அம்மாச்சி என்று சொல்லி வளர்ந்தவன். மாஸ்டரின் இலக்கியப் பாசறையில் இணைந்தவன். அவரின் மார்க்சியக் கருத்துக்களை உள்வாங்கியவன். இறுதியில் மாஸ்டரின் மகனை இராணுவத்திடம் மாட்டிவிட்டவனும் ஆதற்கும் மேலே போய் ‘டம்’ பண்ணச் சொன்னவனும் அவனாகத்தானே இருந்தான். இறுதியில் ‘ரஞ்சனுக்கும் நீங்கள் பயப்படும் இயக்கத்திற்கும் தொடர்பு இருக்கிது என்றா உனது எண்ணம்’ என்ற மாஸ்டரின் கேள்விக்கு ‘இல்லாவிட்டால் ஏன் வீட்டை விட்டு அவனை மரியாளின் இல்லத்தில் வைத்தீர்கள்’ என்று முழுசாகவே வெளியே வந்தானே! போராட்டத்தில் ஏற்பட்ட இந்த துயரச் சூழல் பற்றி மாஸ்டர் ஒரு ஏக்கம் இருந்தது. ‘எல்லோரும் விரும்பிய இலட்சியம் ஒன்று இருந்ததுதான். எனினும் எல்லாம் இப்படிக் கைநழுவி முதலுக்கே நஷ்டம் ஏற்பட்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழவேண்டிய நிலை ஏற்படும் என்று யார் நினைத்தார்கள்?’ (பக் 201 203) என்கிறார்.

இந்தச் சிறுகதையில் இன்பம்தான் ரஞ்சன் கைதுக்கும் ‘டம்’ பண்ணும் ஆலோசனைக்கும் காரணம் என்பதை இராணுவ உயரதிகாரிகள் இவ்வளவு இலகுவாகச் செல்வார்களா என்ற கேள்வி எழுகிறது. அது அவ்வளவு இலகுவானது அல்ல. அது உண்மையாக இருப்பின் ஒரு அதிசயமான புறநடையே. சில பெயர்கள் குறிப்பாக பிரகஷ்தன் என்ற பெயர் செல்லப்படுகிறது. ‘காண்டாவனம்’ என்ற சிறுகதைத் தொகுதியை வாசித்தவர்களுக்கு பிரகஷ்தன் யார் எனப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், ‘தொலைந்து போன கிரகவாசி’ என்ற இந்தத் தனித்த சிறுகதையில் ரஞ்சனின் சகோதரன் என்று மட்டும் வெளிப்படுகிறது. பிரகஷ்தன் பற்றிய சிறு குறிப்பாவது இச்சிறுகதையின் விளக்கத்திற்காகவும் அக்கால கைதுகளின் பின்புலப் புரிதலுக்காகவும் இடம்பெற்றிருக்க வேண்டும் என்று கருதுகிறேன். புவனன் என்பது மற்றொரு பெயர். இவர் பற்றிய எந்த விபரமும் இல்லை. ஆனால், ‘தவளக்கலவைச் சந்தித்துத் திரும்புகையில் புவனன் முன்னால் நடக்க பின்னால் நடந்த நான் தற்செயலாக...’ (பக்:199) என்று வருகிறது.

சண்முகம் சிவலிங்கம் ஈழத்து இலக்கியத்தில் கவிதை, சிறுகதை, விமர்சனம், இதழியல் எனப் பல துறைகளிலும் தன் கலைசார்ந்த ஆளுமையைப் பதித்தவர். அவரின் இச்சிறுகதை ஈழப் போராட்ட வரலாற்றில் துயர்மிகுந்த ஒரு அத்தியாயத்தினை வெளிப்படுத்துகிறது.

...


**ஆதார நூல்கள்:**

*1. ஈழத் தமிழரின் போராட்ட வரலாறு: பாவை சந்திரன். வெளியீடு: கண்மணி கிரியேட்டிவ் வேல்ஸ், முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டி பஜார், தியாகராய நகர் சென்னை 600 017.*

2. SRI LANKA: WITNESS TO HISTORY; S.Sivanayagam, Published: Sivayogam, 180 – 186, Upper Tooting Road, London SW17 7EJ

*3. ரஜீவ்காந்தி படுகொலை சிவராசன் டாப் சீக்ரெட், சிறைவாசி இரா.பொ. இரவிச்சந்திரன். தொகுப்பாளர்: ஏகலைவன். யாழ் பதிப்பகம்; 10/61, 7வது தெரு, கம்பர் நகர், கொளத்தூர், சென்னை 600 082*

*4 தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்: அன்ரன் பாலசிங்கம். வெளியீட்டுப் பிரிவு: தமிழீழ விடுதலைப்புலிகள் சித்திரை 1992, தமிழீழம்.*

# ஒரு ருமேனியனுடன் உரையாடுவது எப்படி?

சிறில் அலெக்ஸ்

லண்டனுக்கு நேராக மேற்கே இருக்கிறது மெய்டன்ஹெட். தமிழில் மொழிபெயர்த்தால் கன்னியின் தலை என்று பொருள். ஆனால் அதன் உண்மையான அர்த்தம் கன்னித்தன்மையே. கன்னியின் தலையைக் கொய்துவிட்டான் என்றால் கன்னித்தன்மையை பறித்துவிட்டான் என அர்த்தம். ஷேக்ஸ்பியர் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். சில முக்கியமான அலுவலகங்கள் இங்கு இருப்பதால் வாரநாட்களில் மெய்டன்ஹெட் சுறுசுறுப்புடன் இயங்கும். வார இறுதியில் போர்சங்கு ஊதப்பட்ட நகரைப்போல இருக்கும். இங்கு வேலை நிமித்தமாக ஒரு வீட்டின் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்துக் குடியேறினேன். நான்கு படுக்கை அறைகளைக்கொண்ட அந்த வீட்டில் மூன்றில் இந்தியர்கள், நான் உட்பட. ஒன்று காலியாக இருந்தது.

ஒருநாள் நள்ளிரவில் முன்கதவு திடீரென ஆரவாரத்துடன் திறக்கப்பட்டது. தூக்கம் கலைந்து தடுமாற்றத்துடன் எழுந்து சென்றேன். 'ஹலோ. மன்னிக்கவும், உங்களை எழுப்பிவிட்டதற்கு.' கையில் இருந்த பெட்டியைக் கீழே வைத்தபடி கை நீட்டினான் ஒரு வெள்ளைக்காரன். அவனது ஆங்கில உச்சரிப்பு அவன் பிரெக்ஸிட்டுக்குக் காரணமானவர்களில் ஒருவன் என்று காட்டியது. தயக்கத்துடன் அவன் கையைப் பற்றினேன். அவனது உடலிலிருந்த தடுமாற்றம் கண்களில் இல்லை. 'நீ... இந்த நேரத்துல.. சுலைமான்...' கையை விடுவித்துக்கொண்டு அவன் சரசரவென அறைக்குள் நுழைந்துவிட்டிருந்தான்.



சுலைமான் வீட்டின் சொந்தக்காரர். 1979ல் அவரது அப்பா வாங்கிய வீடு இது. அதைத் தட்டி எடுத்துப் புதுப்பித்து வைத்துள்ளார். பிளம்பர் செய்த குழப்படியால் நீலப் பக்கம் சூடாகவும் சிவப்புப் பக்கம் ஜில்லாகவும் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. சமையலறையில் கறுப்பும் வெள்ளையுமாக டைல் ஒட்டப்பட்டிருந்தது. அதிக செலவாகிவிட்டது என்று குறைபட்டுக்கொண்டார் சுலைமான். பல வீடுகளை வாடகைக்கு விட்டிருந்தாலும்

‘வாஷிங் மெஷின் ரெம்ப நேரம் ஓடுதே?’ என்றால் ‘எனக்கென்ன தெரியும். என் பொண்டாட்டிதான் துணி துவைப்பா’ என்கிற அளவுக்கு வீட்டைப்பற்றித் தெரிந்தவர். டேக்ஸி ஓட்டுநர் என்றாலும் முக்கிய வருமானம் வீட்டு வாடகைதான். அவர்தான் இப்படி திடுதிப்பென யாரோ ஒரு ‘அந்நியனுக்கு’ மீதமிருந்த அறையை வாடகைக்கு விட்டிருக்க வேண்டும். ‘பாக்கிஸ்தானி துரோகி’ என என் அறை நண்பர் அடுத்த நாள் மூஞ்சை சுருக்கினார். ‘இந்தியர்கள்தான் நல்ல வாடகைக்காரங்கன்னு புளுகினான்ல?’ அவரது கரிசனை வாடகை மீதுதானேயன்றி காரர்கள்மீதல்ல எனச் சொன்னேன். ‘இவனப் பாத்தா ருமேனியனாட்டம் இருக்கான். குளிக்காத, ஒழுக்கங் கெட்ட பயலுக.’ நண்பர் தனக்குத் தெரிந்த ருமேனியத் தகவல்களை வெறுப்புடன் பகிர்ந்துகொண்டார்.

நிக்கோல் ஒல்லியாய் சராசரியைவிட சற்று உயரம் குறைவாயிருந்தான். தலைமுடியை அடிப்பாகம் முள்போலச் சிறியதாகவும் மேல்பாகம் நீளமாகவும் வைத்திருந்தான். வயதை எளிதில் கணிக்க முடியவில்லையென்றாலும் நடுவயதுக்காரன் என்பது தெரிந்தது.

அடுத்த நாள் என் நண்பர் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்தார். ‘சீ.. ப்ளீஸ் கால் தட் சுலைமான். ஃபோன் போடுங்க பாஸ்.’ அவர் இந்திக்காரர் என்பதால் என்னிடம் அவர் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும். எனவே கோபம் வெளிப்பட ஆனால் சத்தம் குறைவாகப் பேசினார். ‘என்ன ஆச்சு?’ என்றேன். ‘குளிக்கிறான்.. அந்த வெள்ளைக்காரன்’ என்றார். ‘ஓ.. குளிக்கமாட்டான்னு சொன்னீங்கல்ல?’ இந்தப் படத்துக்கு வசனம் தேவையில்லை என்பதைப்போல என்னைப் பார்த்து முறைத்தார் நண்பர். ‘நீ வேணா போய்ப் பாரு. நிர்வாணமா குளிக்கிறான் இடியட்.’ அதை இவர் எப்படிப் பார்த்தார் என என்னால் யூகிக்க முடிந்தது.

குளிர்காலத்தில் குளியலறையில் சுடு நீரில் குளித்தால் சுவர்களுக்கு ‘வியர்க்கும்’ என்று சுலைமான் குளியலறையின் சன்னலை அகலத் திறந்து வைத்துவிட்டுச் சென்றிருந்தார். சுலைமான் கான்சென்ட்ரேஷன் எனச் சொன்னதை என் நண்பர் கண்டென்சேஷன் என சரி செய்தார். ‘நான் ஏன் பாஸ் பாக்கணும். அதான் நீங்க நல்லா பாத்துட்டீங்களே’ என்று சொல்லிச் சிரித்தேன். அவருக்கு நிக்கோலை அறவே பிடிக்காமல் போய்விட்டது. ‘யாரு சார் இவன்? இவனுக்கு எப்படி இந்த வாடக கட்டுப்படியாவும்? சுலைமான் கடங்காரன்.. வீடுகட்ட கடன் வாங்கிட்டு திருப்பி குடுக்க முடியாம குடிவச்சிருக்கான்.’


நிக்கோல் மெல்ல சமையலறையை ஆக்கிரமிக்க ஆரம்பித்தான். அங்கிருந்த நான்கு கபோர்டுகளில் ஒன்றை வலுக்கட்டாயமாகக் காலி செய்து எடுத்துக்கொண்டான். நண்பர் வீட்டுக்கு வரும்போது அவரது வெங்காயப் பை வாய்திறந்து மேடை மேல் கிடந்தது. ஃபிரிட்ஜின் முதல் அடுக்கையும் எடுத்துக்கொண்டான். ‘இப்ப என்னோட சப்பாத்தி பாக்கெட் எதுன்னு எப்புடி கண்டுபிடிக்கிறது பாஸ்?’ ஃபிரிட்ஜிலிருந்த நண்பர்களின் உணவுகள் கலந்துவிட்டிருந்தன. பின்னால் இரண்டு சப்பாத்தி பாக்கட்டுகளுமே திறக்கப்படாமலிருந்ததைத் தெரிந்துகொண்டேன். நண்பர் கோபத்துடன் ‘நான் வேற வீட்ட பாக்கப்போறேன் பாஸ்’ என்றார். அதிலிருக்கும் சிரமங்களை அவர் முழுவதும் அறிந்திருப்பார். எங்கே சென்றாலும் ஏதேனும் ஒரு சங்கடம் இருக்கத்தான் செய்யும். அந்த சங்கடம் ஒரு மனிதனாக இருப்பதில் கொஞ்சம் வசதிதான் என்று நான் நினைத்தேன்.

அன்று மாலை நண்பர்கள் ஆளுக்கொரு பக்கமாகச் சென்றிருக்க நிக்கோலும் நானும் மட்டுமே வீட்டிலிருந்தோம். அவன் இருப்பது எனக்கும் நான் இருப்பது அவனுக்கும் தெரியாத அளவுக்குத்தான் அன்று முழுவதும் போனது. இரவில் சமைக்கச் செல்லும்போதுதான் அவனும் சமையலறைக்குள் நுழைந்தான். கைகளை நீட்டி ‘என் பெயர் நிக்கோல்’ என்றான். ‘அன்னைக்கு ராத்திரியில பாத்தேனே’ என்றேன். ‘ஓ நீங்க எல்லாம் ஒரே மாதிரி இருக்கீங்க. கொஞ்சம் பிடிபடல’ என்றான். அவனது ஆங்கிலம் ஒரே நேரத்தில் இறந்த காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் பாய்ந்துகொன்டிருந்தது. சில வார்த்தைகளை அவன் புரிந்துகொள்ளவில்லை. சில வார்த்தைகளை என்னைப் புரிந்துகொள்ள விடவுமில்லை. ‘நான் ருமேனியன்’ என்றான். ‘ம்ம்ம்’ என்றேன் நண்பர் நிபுணர்தான். ‘எங்க நாடு ரெம்ப சின்னது. உங்க நாடு பெருசு’ என்றான். ‘ஒரு கோடி பேர் இருப்பாங்களா உங்க நாட்டுல?’ என்றேன். ‘ரெண்டு கோடி’ என்றான். அவனுடன் எதைப்பற்றி உரையாடுவது என்று குழம்பினேன்.

‘என்ன வேல பாக்குற?’ என்றேன். ‘கொன்ஸ்ரக்ஷன்’ என்றான் கட்டட வேலை எனப் புரிந்துகொண்டேன். ‘நான் கம்பெனிக்கு டைரெக்டா வேல பாக்கேன் தெரியுமா, ஏஜென்ஸி வழியா இல்லையாக்கும்’ என்று பெருமையுடன் சொன்னான். இதில் என்ன வித்தியாசம் என எனக்குத் தெரியவில்லை. முதல் நாள் அவன் கையைக் குலுக்கியபோது சொரசொரப்பாக இருந்தது நினவுக்கு வந்தது. ‘சூப்பர்வைசரா?’ என்று கேட்டேன். அவனுக்குப் புரியவில்லை. ‘நான் எல்லா வேலையும் செய்வேன். லேபரர்’ என்றான். என்னால் நம்பமுடியவில்லை. இருபது வருடப் படிப்பை முடித்துக்கொண்டு, அனுபவம் பெற்று, ஆங்கில உச்சரிப்பைத் திருத்திக்கொண்டு, பலகோடி மக்களின் சுகாதாரத்தை முடிவு செய்யும் மென்பொருட்களை உருவாக்கிக்கொண்டிருக்கும் என் நண்பர்களும் நானும், ‘ருமானி’ என வெறுக்கப்படுகிற இந்த ருமேனியனும் ஒரே வீட்டில் எப்படி வந்து சேர்ந்தோம். எங்கேயோ தவறு நடந்திருக்கிறது. நண்பர் சொன்னது சரிதான். சுலைமான் சரியில்லை.

‘நீ என்ன குடிக்கிற?’ என் கிளாஸைச் சுட்டிக்காட்டி கேட்டான். அது மதுபானம் என்பதை அவன் எளிதில் யூகித்திருப்பான். ‘கோன்யாக்’ என்றேன். ‘ம்ம்ம்.. பிரெஞ்ச். எங்க ஊர்ல அருமையான ஒயின் தயாரிப்போம். என் வீட்டுலேயே பெரிய திராட்ச தோட்டம் உண்டு.’ ‘ஓ, அப்ப நீ அத வித்து பெரிய ஆளாயிரலாமே’ என்றேன். ‘எங்க ஊர்ல எல்லா வீட்டுலயும் தோட்டம் உண்டுமாக்கும். அஞ்சு பைசா தேறாது’ என்றான். ‘என் பிரண்ட் வரும்போது அம்மா எனக்கு ஒயின் குடுத்தனுப்புவா. உனக்கு கண்டிப்பா தர்றேன்.’ நான் நன்றி தெரிவித்தேன்.

ஒரு ருமேனியனுடன் பேசிய பழக்கம் இல்லாததால் வழக்கமான ‘வீட்ல எல்லாரும் சௌக்கியமா?’ என்கிற கேள்வியைக் கேட்டு வைத்தேன். ‘வீடா?’ என்று வியந்தான்.



'கல்யாணமாயிடுச்சா..?' மாற்றிக் கேட்டேன். 'ஆமா..' என்றவன் தொடர்ந்து, 'இப்ப தனித்தனியா இருக்கோம்' என்றான். 'ஆமா வேலைன்னா அப்படித்தான?' என்றேன் சற்று ஆறுதலாய். அவன் 'இல்ல இல்ல.. நாங்க பிரிஞ்சிட்டோம்' என்றான். 'அஞ்சு வருசம் இருக்கும்' வலக்கையை உயர்த்தி விரல்களைப் பறக்கும் பல்லி போல விரித்துக்காட்டினான். 'குழந்தைங்க இல்லியா?' என்றேன். 'பொண்ணுக்கு பதினாலு வயசு.. பையனுக்கு பத்து. என் வாழ்க்கை ஷிட்' என்றான். அவன் அறிமுகப்படுத்திக்கொண்டபோதிருந்த புன்னகை ஸ்டிக்கரைப்போல அவன் முகத்தில் ஒட்டியிருந்தது. அவன்மேல் பரிதாபம் வந்தது. 'அவங்களப் போய் பாக்கிறதுண்டா?' தயக்கத்துடன் தலையசைத்தான். 'என் வாழ்க்கை ஷிட் ஆயிடுச்சு நண்பா' என்றான் மீண்டும். 'என் தமையர் என்மேல் சினம் கொண்டனர்; திராட்சைத் தோட்டத்திற்கு என்னைக் காவல் வைத்தனர்; என் தோட்டத்தையோ நான் காத்தேன் அல்லேன்!' சாலமனின் இனிமைமிகு பாடல்வரியை நினைவுபடுத்திக்கொண்டேன்.

'என் அப்பாவுக்கு பராசிலிஸ்..' 'பாராலிஸிஸ்?' என்று வலப்பக்க உடலை இறுக்கிக்கொண்டு இடக்கையால் மேலிருந்து கீழாக சுட்டிக்காட்டினேன். 'ஆமா.. பாரா சிலிஸ். மூன்று வருசமா படுக்கையில இருக்காரு. அம்மாவுக்கும் வயசாயிடுச்சு. என் வாழ்க்கை ஷிட் மேன்.' 'குழந்தைங்களுக்கு பணம் அனுப்புறதுண்டா?' என்றேன் 'எல்லா நேரமும்' என்றான். அவனது வாழ்க்கையின் அந்தரங்க நுழைவாயில் ஒன்றின்முன் நின்றுகொண்டிருந்ததைப் போலிருந்தது. 'ஆனாலும்.. என் வாழ்க்கை ஷிட் பாரு.. இன்னைக்கு என் பொண்ணுக்கு ஃபோன் போட்டேன். அவ எடுக்கவேயில்ல.' அவனை உற்சாகப்படுத்த 'பிசியா இருந்திருப்பா' என்றேன். 'இல்ல இல்ல.. அது அப்படித்தான்' என்றான்.

'யாரு கண்டா.. எனக்கும் ஒரு இளம் பெண் கிடைக்குமாயிருக்கும்.' அவன் புன்னகையில் அசட்டுத்தனம் கலந்திருந்தது. 'இங்க லண்டன்ல நான் ஒருத்திய காதலிச்சேன். என்னோட மச்சானோட காதலியோட தோழி அவ.' நான் நின்றுகொண்டிருந்த அந்தரங்கத்தின் கதவு வெறும் கதவுதான். அங்கு கோட்டையொன்றுமில்லை. நான் அதை உள்வாங்கிக்கொள்ள திரும்பச் சொன்னேன் 'உன்னோட கஸினோட காதலியுடைய ஃபிரண்ட்?' 'ரெம்ப அழகான பொண்ணு. எனக்கு ரெம்பப் பிடிக்கும். ரெம்ப நல்ல பொண்ணு. எனக்கு கறுப்பிகள ரெம்பப் பிடிக்கும். ஆனா இந்தமாதிரி ரெம்பக்கறுப்பா இருக்கிறவங்கள இல்ல.' சமையலறையில் கறுப்பு மேடையில் கறுப்பு நிறத்தில் இருந்த மைக்ரோவேவைச் சுட்டினான். அந்த நிறத்தில் கைகளும் கால்களும் உடலும் தலையும் கொண்ட ஒரே உருவம் துணிக்கடை பொம்மைதான். 'கொஞ்சம் கம்மி கறுப்பா இருந்தா ரெம்ப பிடிக்கும்.' நான் என் கைகளைக் காட்டி 'பிரவுனா?' என்றேன். 'ஆமா ஆமா பிரவுன்' என்றான். 'நான் முன்னால ஒரு ஜிப்ஸி பெண்ண காதலிச்சேன் அவள எனக்கு ரெம்ப பிடிக்கும்..' 'ஜிப்சி.. நாடோடியா அவளோட திரிஞ்சியா?' அவன் அதைக் கேட்கவில்லை. 'இவ இந்த பிரவுன் பொண்ணு என்ன கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டா. கல்டூரே ஒத்துவராதாம்.' 'கல்ச்சர்..?' 'ஆமா.' எனக்கு அந்த பிரவுன் மெல்லத் துலங்கி வந்ததுபோல இருந்தது. 'நான் கிறிஸ்ட்டியன். அவ ஹிந்த்த்.' 'இந்து?' ஆமென்று தலையாட்டினான். 'என் வாழ்க்கை ஷிட் மேன். நீ ரெம்ப நல்லவன், அழகானவன்னு சொன்னா. ஆனா கல்டுட்ரெ ஒத்துவராதுன்னு சொல்லிட்டா. என்கூட வேல பாத்தா..' 'எங்க?' ரெஸ்டாரண்ட்டுல..' 'அவளுக்கு கல்யாணமா யிடுச்சா?' 'இல்ல இல்ல.' 'என்ன வயசிருக்கும்?' 'அவ வயசு முப்பத்தஞ்சு, எனக்கு நாப்பத்தஞ்சு.' 'ம்ம்ம்..'

இந்த இடத்தில் உரையாடல் சட்டென்று சறுக்கி ஷிட் இல்லாத பாதையொன்றை நோக்கிப் பாய்ந்தது. 'எனக்குப் பொண்ணுங்கள ரெம்ப பிடிக்கும்' என்றான். கண்களில் குறும்பு மிளிர்ந்தது. 'ஐ லைக் ஹாட் புஸி.' இதை சரியாகச் சொல்லத் தெரிந்திருந்தான். அவனது கைகள் காற்றில் ஒரு பெண்குறியை உருவகித்தன. அவனது இடுப்பு முன்னும் பின்னும் ஆடியது. முன்னங்காலிலிருந்து உந்தி அசைந்து கொண்டிருந்தான். ஒரு மோசமான நீலப்படத்தில் நடிக்கப் பழகுபவனைப்போல முகத்தின் அசைவுகள் தெரிந்தன. ஸ்டிக்கர் புன்னகை நீண்டு கோணலாகியிருந்தது. சற்று நேரம் கழித்து சுதாகரித்து என்னை நோக்கினான். 'தப்பா நினைக்காத நண்பா. நான் ஆம்ப்புள. கே கிடையாது.' 'சே.. சே.. பரவாயில்ல.. நீ நார்மலான ஆள்தான்' என்றேன். அவன் சற்று பதட்டத்துடன் 'நார்மலைப்' புரிந்துகொள்ளாமல் திரும்பக் கேட்டான். 'என்னது..?' 'நீயும் எல்லாரையும் போலத்தான்' என்றேன். 'ஆமா' என்றபடி சமையலறைக் கதவைத் திறந்து வெளியேறினான். ருமேனியனுடன் பேசுவது அவ்வளவு கடினமல்ல என்று உணர்ந்தேன்.

# கவிதைகள்

## தர்மினி

### 1

நித்திரை வந்தால் கனவு வருகிறது.
கனவு கண்டால்
அது ஆழ்ந்த உறக்கத்தின் அறிகுறியாம்.
இல்லை
இரவின் நல்ல நேரங்கள் அநியாயம்.
பயம், அழுகை, நடுக்கம், கோபம், வெறுப்பு...
காட்சிகள்... காட்சிகள்...
நினைவுகள் கோரங்களைச் சுமக்கின்றன.
கைகளும் கால்களும் முகடெங்கும் சிதறியிருக்கின்றன.
தலைகள் முளைத்த துவக்குகள் எனதுடலில்
நடக்கின்றன.
இறங்க வழியற்றுப் பயங்கர உயரத்தில் அந்தரித்து
நிற்கிறேன்.
புத்தம்புதிய பாரச்சுவர்கள் என் மேல் விழுகின்றன.
தீவில் தனித்தழும் என்னை
விமானங்களில் வந்திறங்கிய
றோஸ்நிற மனிதர்கள் துரத்திப் பிடிக்கின்றனர்.
கிர்றெனச் சுழன்றோடும் கம்பிகளோடு
அம்மர்ம மணிக்கூடு சுவரில் கொழுவப்பட்டுள்ளது.
தப்பிக்க முடியாத காலம் மூச்சுத் திணறுகிறது.
பனிக்கட்டியின் நடுவில் புதைந்த உடலோ
துடித்தபடி விழிக்கிறது.

குறிப்பு:

இதை எழுதி முடித்தபின்
கனவொரு வழக்கொழிந்த சொல்லென்கிறது வாசிப்பு.
அதற்காக இன்றைக்கும் கனவு வராமலா இருக்கும்?

### 2

கணினி முன் இருக்கிறேன்
யாரோ என் பின்னால் நின்று
ஒவ்வொரு எழுத்தாக உற்றுப் பார்க்கிறார்.
பிடரி கூசுகின்றது.
விரல்கள் தடுமாறி
எந்தெந்த எழுத்துகளைத் தட்டுகின்றன?
நினைத்தவை கலைந்து போகின்றன.
ஒன்றையும் யோசிக்க விடாமல்
இங்கு ஒரு கூட்டம் மனிதர்களின் கூச்சல் கேட்கிறது.
இவ்வீட்டுக்கதவு
மூன்று பூட்டுகளால்தான் பூட்டப்பட்டுள்ளது.

# சித்திரபீக்கா பாயிஸ்

*—1—*

சதுப்பு நிலக் கொக்கின் கால்கள்
இப்பெருவெளியின் சதுப்புக்கழனிகளில்
தாவிக் கொள்கிறது கொக்கின் கால்கள்

செம்மஞ்சள் நிறச்சந்தர்ப்பங்களை
எதுவும் புரியாத உணர்வுகள்
அகத்துள் நுழைந்து மேவிக்கொள்கிறது

அறுவடையின் பின்னரான நிழல்
விளைச்சலைப்பெருக்கி
பெரும் மூட்டைகளாய்க்குவிக்கிறது
தழும்புகளைப் பொத்தியபடி
தகர்த்துப்பொடியாக்கும் உணர்வுகள்
துகள்களின் வடிவங்களை
நீலக்குயிலின் (இசைத்து) மீனல்களோடு
இசையால் நீள்கிறது

கண் இமை எங்கும்
வாய்க்காலின் தெளிந்த சாயலை
பெருக்கிக் கொள்கிறது பேராறு

மடித்துக்கொள்ள முடியாமல்
அமர்ந்திருந்த கால்களை
கொக்கின் அலகுகளின் செழுமை
மீன்களை செதில் நீக்கி
ததும்பி வழியச் செய்கிறது.

*—2—*

நேற்றைய பள்ளியின் ஞாபகம்
எனதின் மகளை
பள்ளியிலிருந்து அழைத்து வரும்போது
எனக்குள் நுழைகிறது
ஒற்றைக்காம்பின் நுனியில்
பழுத்திருக்கும் பள்ளியின் நினைவுகள்.

சிறகிருந்த நினைவுகளோடு
பட்டாம்பூச்சியாய்ப் பறந்து
வாழ்வின் இலட்சியங்களை
ஆசான்களிடம் ஒப்புவித்த
ஒப்பந்தங்கள் மனசுள் மேவிப்பாய்கிறது.

ஒவ்வொருவரதும் ஒப்புவித்தல்கள்
வைத்தியராய், ஆசானாய், இஞ்
சினியராய்
இன்னோரன்ன பட்டியல்பட்டது.

இலட்சியங்களின் இமைகள்
குறையாகவும் குனுகலாகவும் மாறி
விட்டது
அவகாசமின்மையாய்
அழியப்பட்டிருக்கும் ஒப்புவித்தல்களை
வாழ்வின் தருணங்கள்
அழித்திருக்கிறது.

நேற்றைய பள்ளியின் நினைவுகள்
வழிந்து ஓடியதின் பின்னர்
குறையாய்த் தெரியும் இலட்சியக்
குடுவைகள்
வாழ்வின் முழுமையை மீட்டி நிற்கிறது.



# ஆழியாள்

## நித்திரை செப்டெம்பருக்குப் போனபோது

அன்றிரவு
ஓகஸ்ட் முடிந்தது

கட்டிலில் சரிய முன்
மாதத்தை மாற்றி,
நாட்காட்டியை
லாந்தர் விளக்குப்போல்
தொங்கவிட்டேன்

செப்டெம்பர்
ஊசலாடியது

வழுவழுத்த பக்கம்
கோலாலம்பூர் இரட்டைக் கோபுரங்களில் இருந்து
பியூஜி மலைச் செர்ரிப்பூக் கிளைகளாக மாறி
மெல்ல அசைந்தது
தென்னல்,
குளிர்மையின் வாசனையைத்
தூவி விரவிற்று

நித்திரை இப்போது
ஆறுதலாக ஓகஸ்டிலிருந்து
செப்டெம்பருக்குப் போய்க்கொண்டிருந்தது

கழுத்துவரை
நட்சத்திரக் கம்பளி இரவைப் போர்த்திக்
குறட்டையில் கிடந்த மாதுமை,
ஜூலை
சொர்க்க லோகமாய் இருக்கிறதென்றாள்
எதேட்சையாக

சரி சொர்க்கத்தை
ஒரு தரம்
பார்த்துவிட்டுத் திரும்பலாமே என்று
மூவரும் ஒன்றாய்ப் போய் இறங்கினோம்

அங்கே அந்தோனியோ விவால்டி
நான்கு பருவகாலங்களையும்
அப்போதுதான்
மீட்டி முடித்திருந்தார்

இடைவேளையில்,
முபொவுடன்
மதுவனும், பௌசரும்
சுவாரசியமாய்க்
கிணுகிணுத்துக் கொண்டிருந்தார்கள்

அவர்களின் வரிசையில்
நாங்களும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டோம்.

அடுத்து
தெட்சணாமூர்த்தியின் தவில் கச்சேரி

ஒரே கைதட்டல்;
கனபேர் வந்திருக்கவில்லை.

## சுவரேறிக் குதிக்கும் கோபம்

எல்லாக் காலங்களிலும்
மாசற்ற காற்றைப் போல்,
சுவையற்ற தண்ணீரைப் போல்
விலைமதிக்க முடியாததாகவே
இருக்கிறது நட்பு

அவள் தனக்கு முன்
சிறுகுன்றை உருட்டி வைத்துவிட்டு
உட்கார்ந்திருக்கிறாள்

சுவர்களை எழுப்புவதற்குப் பதிலாக
பாலங்களை நீளமாய்க் கட்டு என்று
பசிய மனதொன்றில்
கன்னியாஸ்திரி எழுத்தாணியால்
பொறித்து வைத்தாள்

கல் ஒவ்வொன்றாய்க் காவி
நாளும் பொழுதும் கட்டிய
பால்யத்துப் பாலங்களில்,
ஒன்றாய்க் குளித்துச் சாப்பிட்டுக்
கூடி விளையாடிய நண்பர்கள்
நிலத்து நீராகி,
நீர் தேடும் வேர்களுடன்
ஐக்கியமாய்ப் போனார்கள்

நேரக்கயிறு இப்பொழுதில்
இங்குமங்குமாய்
ஊசலாடுகிறது

வெண் சிறகுகளை அகல விரித்துப்
பதகளித்து வருகிறது
அம்புலன்ஸ்

இராட்சத ஒலிப்பானைப் போல்
காதுச்சவ்வுகள்
அதிர்கின்றன

அபாய விளக்கு
மாறி மாறிச் சுழன்று
சிவப்பாயும் நீலமாயும்
ஒளிர்கிறது

இனிச் சுணக்கமின்றிக்
குன்றை உருட்டி விடு
நாங்கள்
சுவர்களைத் தகர்க்கும்
தருணம் இது.

# இருவிதமான மழை


நெடுந்தீவுமுகிலன்

*மழை 01*

அடைமழை பெய்கிறது.
கூரைகள் வழியாக ஒழுகும் மழைநீருக்கு
குழந்தைகள் பாத்திரம் வைக்கிறார்கள்.
மின்சாரம் தடைப்படுகிறது.
விறகுகள் நனைந்து விடமதிய உணவும்
கனவாகி விடுகிறது.
நாய்பூனை கோழிகள் எல்லாம் நனைந்து
நனைந்து நடுவீட்டிற்குள் வருகின்றன.
கிணறு நிரம்பி பக்கத்து வாய்க்காலோடு கலக்கிறது.
சாக்கடை நீர் மணக்கிறது.
பாட சாலை கொப்பி புத்தகங்கள்
பாதுகாப்பிற்காகஅடுப்படி பறணில் வைக்கப்படுகிறது.
கோதுமை மாபையை தலையில் போட்டுக்கொண்டு...
காயவிடப்பட்ட துணிகள் எடுக்கப்படுகின்றன.
மரங்கள் முறிவதும்.... தவளைகள் கத்துவதும்....
கேட்டு கேட்டு அலுத்து விடுகிறது.
இரவுப்படுக்கைக்கு பக்கத்து கோயிலுக்கு போவதாக...
எல்லோரும் முடிவு எடுக்கிறார்கள்.

*மழை: 2*

அடை மழை பெய்கிறது
குளிரென்று கொஞ்சம் ஏசியை குறைத்துக்
கொள்கிறார்கள்.
மின்சார அடுப்பில் அவசர அவசரமாக....
சூடான கோப்பிதயாரிக்கப்படுகிறது.
குழந்தைகள் காகிதக்கப்பல்களை..
சரி செய்கிறார்கள்.
யன்னல்கள் சாத்தப்பட்டுதூ வானத்திற்கு...
எதிராய் திரைச்சீலையும் மாட்டப்படுகிறது.
வாகனங்கள் உள்ளுக்கு எடுத்துவிடப்படுகின்றன.
வானிலை அறிக்கைகள்...
ரீ.வியில் பார்க்கப்படுகிறது
இனிய மழை நாளைப்பற்றி...
உறவுக்காரர்களோடு “ஸ்கைப்பில்” பேசப்படுகிறது
சாது வாய்த்தூக்கம் வந்ததும் கம்பளியைப் போட்டுக்
கொண்டு கதவுகளை அடித்துச்..
சாத்திக்கொள்கிறார்கள்.
வெளியே முத்ததங்களினது சத்தம்மழையின்
இரைச்சலைத் தாண்டியும் கேட்டுக்கொண்டிருந்தது



# களப்பூரான்

**ஒத்திவைப்புகள்**

எல்லை வீதியில்
ஒரு சமாதானக் கூட்டம்.

எங்களை ஓரிரவில் வெளியேற்றினார்கள்
குமுறினார் ஒருவர்
நீங்கள் காட்டிக்கொடுப்பவர்கள்
மறுதரப்பில் ஒருவர் கத்தினார்
உங்களைப் பாதுகாத்தோம்
ஒரு அசரீரி கேட்டது.

பஸ்ஸில் வந்த எங்கட ஆக்களை
ஏன் வெட்டினீர்கள்?
பஞ்சு மிட்டாய் விற்க வந்தவர்களை
நீங்கள் என்ன செய்தீர்கள்?
வாக்குவாதம் தொடர்ந்தது.

கும்பிடும்போதே கொலையானோமென்றார் ஒருவர்
அதில் பாதி நாங்கள் செய்யவில்லை
ஒருவர் உறுதி செய்தார்.

எல்லைகள் கடந்து காணிகள் வாங்குகின்றீர்கள்
நமது நாட்டின் எல்லைகள்
சுற்றிக் கடல் என்றார் பொதுவர்.

உங்கள் தொழிற்சாலைகளில்
எங்கள் குமருகளைச் சிதைக்கின்றீர்கள்
நீங்கள் பன்மையில் பேசுகின்றீர்கள்
சமாளித்தார் ஒரு முதலாளி.

இரு தரப்பிலும் குற்றங்கள் உள்ளன
சகலரும்
அதை புரியவும் ஏற்கவும் வேண்டும்
ஒரு முதியவர் சொன்னார்.
வெளிநாட்டு விருந்தினர்களும்
உள்ளூர் ஒட்டுண்ணிப் படைகளும்
இயலாது என்றனர்.

கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.



## சாம்பல் மேடு

மீள் குடியேற வந்தேன்
அடையாள அட்டை, காணிப் பத்திரம்
பிறப்புச் சான்றிதழ்
எதுவும் இல்லாது.

அண்ணன்
கோடுபோட்ட ஊத்தைச் சாறன் கட்டிருந்தார்
தலை முழுவதும் கிரவல் புழுதி
அக்கா
மூன்று மாசம் முழுகாமல் இருந்தாள்
குண்டடியில் பாதிக்கால் போய்
இரத்தம் வழிந்திருந்தது.

பட்டுப்போன கருத்தக் கொளும்பானில்
அறுந்த கழுத்துச் சங்கிலி
குசினிப் படியில் நெளிந்த கோப்பை
முன் வீட்டில்
என் கள்ளக் காதலி ஜிம்மி.

வடக்கே ஐயாவின் தோட்டக்காணி
நாலு பக்கமும்
நான் ஈரமாக்கும் வேலிக்கட்டைகள்.

நக்கிக் குடிக்க
நல்லையா மாஸ்ரரின் கொட்டுக் கிணத்தடி
பேலுவதற்கு பின் வளவு
குலைப்பதற்கு கோயில் ஒழுங்கை
ஓடி விளையாடிக் காதல் செய்ய
பள்ளத்து வளவு
எதையும் காணவில்லை.

எஞ்சியிருந்த சாம்பல்மேடுகளில்
வெள்ளைப் புற்கள் முளைதிருந்தன
எது
எனது மேடு?



# அந்து மீறல்

தேவ அபிரா

கதலைன்* வந்தாள்.

துருவலிட்ட பிட்டும் உறைக்காத மீன் பொரியலும்
வைனுடன் கலந்தன.

மனமாரப் பேசிக் காலாற நடப்போம் வாவென்றாள்.

நாங்கள் வெளியில் இறங்கிய பொழுது
இலையுதிர்காலம் எங்களை வனத்துள் இழுத்தது.
வலுக்கத்தொடங்கிய காற்றோ
பைன் இலைகள் போன்று
அடர்ந்த அவளின் முடியைக்
கலைக்கமுடியாமற் தோற்று
அதனிற் வண்ணவிலைகளைச் சொருகியது.
பாதி திறந்த கஸ்தான்யே பழம் போலக் கண்கள் ஒளிர
அளவளாவிய அவள் உதடுகள்;
குலாவிய கண்கள்.

உலாவிய இடம் மறந்தேன்.

உடல்களை நெருக்கிய ஒற்றையடிப்பாதை.
எவ்வளவு தூரம் நடந்திருப்போம்?
எவ்வளவு நெருங்கியிருப்போம்?

வார்த்தைகளுக்கும் மௌனத்துக்குமிடையிற்
கால்களுக்கிடையில்
இலையுதிர்கால மரங்களின் விதைகள் குறுகுறுத்தன.

வனத்தின் வாசமோ?
கணத்தின் மோகமோ?
குழைந்த கண்களைக் கண்டாள்.
இழைந்த கையை விலக்கிப்
பிடரியிற் தட்டிச் சொன்னாள்:
"முதிராத கனியைத் தொடாதே!"

அவள் பிரிந்த முடக்கில்
நிறம் கொண்ட கனவுகளை
இலைகளாக உதிர்க்கும்
அம்பர் மரம்** போல
நான் உறைந்தேன்.

இலையுதிர்காலச் சூரியன்
சுடாதென்றார்களே!

* கதலைன் Kathalijn

* அம்பர் மரம் Amberboom Liquidambar styraciflua
Worplesdon



# சீதாகாந்த் மஹாபத்திர கவிதைகள்

தமிழில்: சோ.ப

*1. வாரணாசியில் அம்மா*

மெல்ல தஸாஸ்வமேத காட் படிகளில் இறங்கி
ஓடத்தில் அமர்ந்தோம்
"இங்கே கங்கை வடக்கு நோக்கிப்
பாய்கிறது, அல்லவா?"
நீ கேட்டாய்
"ஆம்" என்றேன் நான்
படகோட்டி வலித்துக் கொண்டிருந்தான்
நீ கங்கையைப் பார்த்துக் கொண்டிருந்தாய்
நான் உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தேன்
நீ என்ன சிந்தித்துக் கொண்டிருப்பாய்
என யோசித்தேன்

ஒரு போத்தல் கங்கை நீரை
நீ எடுத்துச் செல்லக் கூடும்
உன் உறவினர்களுக்குக் கொடுக்க!
உன் மகன் பள்ளிப் பருவத்தில்
தினமும் சித்ரோத்பல ஆற்றை
ஓடத்தில் கடந்ததை நினைத்துப் பார்க்கிறாயோ?

படகோட்டி வலித்துக் கொண்டிருந்தான்
கங்கையின் துரித பெருக்கும்
கரையில் அரைகுறையாக எரிந்த பிணங்களிலிருந்து
சுருண்டெழும் புகையும்
ஒன்று கலந்தன
ஒரு நாள்
உன் வாய்க்குள்
ஒரு துளி கங்கை நீரை வார்ப்பேன் என்றோ
புனித கங்கையில்
உன் அஸ்தியைச் சொரிவேன் என்றோ
அப்போது நான் எண்ணவேயில்லை.

2. ஹரித்துவாரில் அம்மா

எட்டு வருஷங்களுக்கு முன்
மெலிந்த பறவையைப் போலிருந்த
உன்னுடலை அக்கினி தேவனின்
கைகளில் ஒப்படைத்து
பதிலாக, ஒரு சின்னஞ்சிறு என்பை
நினைவுச் சின்னமாகப் பெற்றுக் கொண்டேன்

அதன்பின் மாரியும் கோடையும் இளவேனிலும்
எட்டு முறை வந்து போயின
இன்னும் பிறக்காத உன் பேரப்பிள்ளைகள்
பகல் வேளைகளில் குறும்பு செய்கின்றனர்
வழமைபோல் பொறுமையில்லாத
உன் இளைய மகன்
உன்னிடம் ஓடிவந்து விட்டான்
இங்கிருக்கும் உன் மக்களுக்கு
நீ வாழும் உலகம்
மணக்கத் தொடங்கிவிட்டது

எவ்வாறு துளசி மாடத்தின்முன்
ஒவ்வொரு மாலையும் நீ விளக்கேற்றினாயோ
அவ்வாறு உன் நினைவாலயத்தில்
ஒரு கவளம் படையல் செய்கிறோம்
எங்கள் மகிழ்ச்சிகளையும்
அவலங்களையும் பார்த்தபடி
சுவரில் படமாக வீற்றிருக்கிறாய்
அந்த நினைவுச் சின்னத்தைச் சுமந்து கொண்டு
வழிநெடுக உன் உள்ளங்கையின் வருடலை
உணர்ந்தபடி
என் நீண்ட பயணத்தைத் தொடங்கினேன்
நான் நோயுற்றுக் கிடந்தபோது
என் அருகிலிருந்து நீ பேசிய சொற்கள்
உன் ஆசிகள், உன் பிரார்த்தனைகள்
யாவும் சின்னமாக மாற
அதைக் கங்கைக் குளிர்நீரில்
என் கண்ணீரோடு காணிக்கை செய்தேன்

கங்கை நீரின் தீண்டுதலை
என் பிள்ளைப் பருவத்து
சித்ரோத்பல நீரின் தொடுகை போலவும்
சுவர்க்கத்துவாரில் அப்பாவின் சிதைக்குக்
கொள்ளி வைத்தபின் நான் இறங்கிய
கடலின் தொடுகை போலவும் உணர்ந்தேன்

இந்தக் கணத்திலிருந்து
நீ
பூரணமாக உடலை உகுத்துவிட்டாய்
துயருறும் எம் இதயங்களில்
என்றும் ஒரு நிழலாக விளங்குவாய்!



# நதி வட்டம்

வ.ஐ.ச.ஜெயபாலன்

கடற்கொள்ளை அடித்த முகில்
காமத்தில் மலையேற
குறுஞ்சிப்பூ மடிமீது
பெயல்நீராய் நெழிந்தேன்

யாருமற்ற மலைக்காட்டில்
தீயாக பூத்து
செம்பவளமாய் உதிரும்
பலாச மரங்களே வியக்க
பகல் ஒளியில் சிலம்பமாடி
வண்ணங்களாய் இறுமாந்தேன்.

பசிய கிளை உடைத்துப்
பசியாறும் யானை மந்தை நாண
மீண்டும் கிளைகளாய் நிறைந்து
குருத்தெறிந்து சிரிக்கும்
பச்சை மூங்கில்களின் கீழே
ஈழவரை நினைத்தபடி
மலைகளைக் கடந்துவந்தேன்.

வழிநீள வழிநீள
பாய்ந்தும் விழுந்தும்
தழுவிய தேவதையர்
மார்பால் உரைத்துவிட்ட
கொச்சி மஞ்சள் கமழ
நெடுந்தூரம் வந்துவிட்டேன்.

காற்றில் இப்ப கரிக்கிறது உப்பு.
கமழ்கிறது தாழம்பூ
இனிக்குது கடற்பறவை
இசைக்கிற நாடோடிப் பாடல்

சந்தனமாய் தேய்கிற வாழ்வில்
எஞ்சிய வானவில் நாட்கள்
போதை தருகிறது.
என்றாலும்
கடல் புகுந்த ஆறு, முகிலாகி
மீண்டும் மலையேறும்
நதி வட்டப் பெரு வாழ்வில்
முதுமை எது? சாவு எது?

இன்னும் நீராட வாராத
வனதேவதைக்காக
இறுதிவரை ஆறாய் இருப்பேன்.

# விரிந்துகொண்டுவரும் தீ

**கற்கி**

நறுங்குறுந்தகம் விரித்து
மண்மகள் உறங்கினள் - என்று
மணிநேரம் தெளித்து
மாதவிக் கொழுந் ''தீ''
கடைவாய் அன்னத்தை
கணவனுக்குயிட்டு ஆறத்தழு 'வீ',

'அவன் மலர்ச்சூட்டி'
வீதிக்குச் சென்றான்
வெட்டுண்டு கிடந்தான்,

ஆயல் குடிலில்
அலறல் சத்தம்
சேதி அறிந்தாள் - ஞானச்
செறுக்குடன் கிளர்ந்தாள்,

கணவனுக்கு கண்டாள்
கம்பலை யானாள்
தலைமகள் இலக்கணம்
'உடன்புகுதள்' எனினும்
நீதி அறியாமல்
நிலையிழக்கலாது - எனக்
கூவி எழுந்தாள்
கோட்டையை அடைந்தாள்,

வெல்லும் சொல்கோண்டு - காவல்
வேலியை வென்றாள்
கோட்டையுள் புகுந்தாள் - கொற்கை
கோவை கண்டாள்
'முத்தையும், மாணிக்கத்தையும்'
மாற்றறியா மடையன?
மன்னவன்,

ஓர்சிலப்பெடுத்தாள்
ஓங்கி அறைந்தாள்
உடைந்தது சிலம்பு
தெரித்ததது மாணிக்கம்
அதிர்ந்தது கோட்டை,

''யானோ மன்னன், யானோக் கள்வன்''
'கெடுக என் ஆயுள்' என
கெட்டது ஆவி,

தலைமைகள் ஒழுங்கு தான்
பிழலாகாது என
பாண்டிமாதேவியும்
பாடலையும் வீழ்ந்தாள்,

உதிரம் சிந்த
''ஓர் முலைத்'' திருகி
''அத்தனர் அறவோர்,
பசு,சிசு,பெண்டீர்,பெரியோர் - எனத்
அறம் தவிர்த்து
சேர்க செந்தழலென
இட்டது செஞ்சோல்
பட்டது நெருப்பு,

வானவர் இறங்கி
''ஊழ்வினை பயனிது''
வருந்தி உறைக்க,

கோவம் தணிந்தாள்
குறவர் குடில்
குன்றை அடைந்தாள்

வானவர்கோவும்
இறங்கி வந்து
வாழ்த்தி நின்றான்
கொழுனனோடு
கோதையும் பிறந்தநாள்,

சோரன் செங்குட்டுவன்
சிலையாய் செய்ததும்
''மணிமேகலை'' எனக்
காப்பியம் பிறந்ததாம் ,
''கொற்றவை''என்றோர்
கொடுந்தமிழ் நூலும்,
''காற்சிலம்போசை''எனுமோர்

கவிதைத் தொகுப்பும்,
''எச்சிலம்பு உடைந்தனள் ''
என்பர் ஆய்வு நூலும்,
''நாற்று நடத கையும்
நடனமாடத காலம் வீண்''
ஆட்டி அம்மே என
அறிவுமதி பாடலும் ,
''பால் நகையாள், வென்முத்து
பல்நகையாள்''எனக்
கவிக்கோ கவிதையும்,

என்னம்மே ,என்னம்மே
இன்னும் விரிந்துக்கோண்டுருக்கிறது
நீ வீசிவிட்டுப்பொன
ஒரு துளி ''தீ''

# பிரபஞ்ச நூல்

ஷோபா சக்தி

இந்தக் கதையைத் தனது இரகசியக் குரலைக் கலையவிடாது, தகரத்தில் மெல்லிய ஆணி முனையால் கிறுக்குவது போன்ற கூசிய தொனியில் ஏற்ற இறக்கங்களின்றி சித்திரைலிங்கம் என்முன்னே சொல்லத் தொடங்கினான். நடுநடுவே கதையை நிறுத்தி அதே இரகசியக் குரலில் என்னிடம் சந்தேகங்களும் கேட்டான்.

நான் 2012ல் சித்திரைலிங்கத்தை சென்னை புத்தகச் சந்தையில் கடைசியாகப் பார்த்தது. மனைவி பிள்ளைகளுடன் 'க்ரியா புத்தகக் கடை'க்குள் நின்றுகொண்டிருந்தான். கையில் 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' வைத்திருந்தான். என்னைக் கண்டதும் முதல் வார்த்தையாக "மச்சான் நீ இந்த அகராதியில் ஏதோ பிழை இருக்கிறது என்று எழுதியிருந்தாய். அதுதான் வாங்கிச் சரி பார்க்கப் போகிறேன்" என்றான். அன்றிரவே அவுஸ்திரேலியா திரும்பும் அவசரத்திலிருந்தான்.

க்ரியாவில் அந்தச் சந்திப்பு நிகழ்ந்து ஏழு வருடங்கள் கழித்து, 2019 புதுவருடம் பிறந்த நள்ளிரவில் சிட்னியின் புறநகர்ப் பகுதியான செவன் ஹில்ஸிலுள்ள சித்திரைலிங்கத்தின் வீட்டில் நாங்கள் மறுபடியும் சந்தித்துக்கொண்டோம். ஒரு நாடகத்தில் நடிப்பதற்காக நான் பிரான்ஸிலிருந்து கிளம்பிப்போய் அப்போது சில மாதங்கள் சிட்னியில் தங்கியிருந்தேன்.



நள்ளிரவில் புது வருடம் பிறந்து ஆளுக்காள் வாழ்த்துச் சொல்லிக் கொண்டாடியதும் சித்திரைலிங்கத்தின் மனைவி வானதியும் குழந்தைகளும் படுக்கைக்குப் போய்விட, நானும் சித்திரைலிங்கமும் வீட்டின் பின்புறம் ரசனையுடன் அமைக்கப்பட்டிருந்த தோட்டத்தில் தனியாக நாற்காலிகளில் அமர்ந்தோம். ஜனவரி மாத இரவில் கூட சிட்னியில் வெப்பக் காற்றடிக்கிறது. வானம் முப்பரிமாண ஓவியமொன்றுபோல நட்சத்திரங்களை நெருக்கமாக அடுக்கி வைத்திருக்கிறது. இந்தக் காலத்தில் பிரான்ஸில் வானம் பனிப் பாளமாகத் தரைக்கு இறங்கிவரும்.

சித்திரைலிங்கத்திற்கு மது அருந்தும் பழக்கமில்லை. எனக்காக மதுவும் சிகரெட்டுகளும் வாங்கி வைத்திருந்தான். சித்திரைலிங்கத்தின் வீட்டை மூன்றடுக்கு மாளிகை என்றுதான் சொல்லவேண்டும். அவன் வைத்திருக்கும் காரும் அப்படியானதுதான். நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசு நிர்வாகத்தின் கணினித் துறையில் உயர்ந்த பதவி யிலிருந்தான். ஆனால் ஐம்பது வயதான அவன் எழுபது வயதுத் தோற்றத்திலிருந்தான். ஆள் முப்பது கிலோதான் தேறுவான். ஆடை அணியும் முறைகூடக் கிழவர்களைப் போலாயிருந்தது. தலையில் ஒரு மயிர் கிடையாது. முன்வாய்ப் பற்கள் நான்கு விழுந்து பொய்ப்பற்கள் கட்டி யிருப்பதாகச் சொன்னான். எனது நீண்ட தலைமுடியைத் தனது கைகளால் தடவிப்பார்த்து ஆராய்ந்து, உண்மையான முடியா இல்லை நாடகத்திற்காக வைத்த டோப்பாவா எனக் கேட்டான். பகடி விட்டாலும் சரி மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி பயந்தாலும் சரி முகத்தை ஒரே மாதிரியாகத்தான் சீரியஸாக சித்திரைலிங்கம் வைத்திருப்பான்.

இந்தக் கதையைச் சொல்வதற்கு முன்பு எப்படிக் கதையை ஆரம்பிப்பது எனத் தெரியாமல் சித்திரைலிங்கம் தட்டுத் தடுமாறித் தேவையில்லாதது எல்லாம் பேசிக்கொண்டிருந்தான். பின்பு, தனது கைத்தொலைபேசியை அணைத்து வைத்துவிட்டு, தோட்டத்திற்குள் நுழையும் வீட்டின் பின்புறக் கதவுகளை வெளிப்பக்கமாகத் தாழிட்டுவிட்டு, நாற்காலியை நகர்த்தி எனக்கருகே போட்டுக்கொண்டு இந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். கதை ஒரு புத்தகத்தைப் பற்றியது.

*2*

சித்திரையில் பிறந்ததால்தான் எனக்கு சித்திரைலிங்கம் என்று அழகான பெயர். நாஞ்சில் நாடனின் 'எட்டுத் திக்கும் மதயானை' நாவலில் பூலிங்கம் என்றொரு பெயர் உண்டு. அது இன்னும் திறமான பெயர். இங்கே என்னுடைய அலுவலகத்தில் வெள்ளைக்காரர்கள் என்னை 'சித்' என்று அவர்களின் வசதிக்குச் சுருக்கிக் கூப்பிடுவதை நான் ஏற்றுக்கொள்வதில்லை. இதனாலேயே அலுவலகத்தில் நாலைந்து பிரச்சினைகள் வந்திருக்கின்றன. வில்லியம் ஷேக்ஸ்பியர் என்றும் கப்ரியல் கார்ஸியா மார்குவெஸ் என்றும் நாங்கள் உச்சரிக்கிறோம்தானே. இவர்களின் நாக்குகளிற்கு மட்டும் சித்திரைலிங்கம் என உச்சரிப்பதில் என்ன பிரச்சினை!

1985ஆம் ஆண்டு சித்திரைமாதம் எனக்குப் பதினாறு வயது முடிந்திருந்தது. என்னுடைய பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக என்னுடைய கிராமத்திலிருந்து நான்கு நண்பர்களை அழைத்துக்கொண்டு யாழ்ப்பாண நகரத்துக்குப் போனேன். எங்கள் ஐவரில் மூத்தவனுக்குப் பத்தொன்பது வயது. இளையவனுக்குப் பதினைந்து வயது.

எங்களில் யாருக்கும் குடிக்கும் பழக்கம் இல்லை. மூத்தவன் மட்டும் இரகசியமாக சிகரெட் குடிப்பான். மத்தியானம் பரடைஸ் ஹோட்டலில் பிரியாணி சாப்பிட்டுவிட்டு, அதற்கும் மேலாக லிங்கம் கூல் ஃபாரில் சர்பத் குடித்துவிட்டு, வின்ஸர் தியேட்டரில் மதியக் காட்சிப் படத்துக்குப் போனோம். சிவாஜியும் அம்பிகாவும் நடித்தது... 'காலம் மாறலாம் நம் காதல் மாறுமா' என்றொரு பாட்டு இருக்கிறது.. என்ன படம் அது?

"வாழ்க்கை.."

அதேதான்.. படம் முடிந்தவுடன் நடந்து பண்ணைப் பாலத்துக்கு வந்தோம். ஊர் திரும்ப பஸ்ஸுக்குக் காசு இருந்ததுதான். என்றாலும் மண் அள்ளவரும் ட்ராக்டர்களில் தொற்றிக்கொண்டு ஊர் திரும்புவதில்தான் எங்களுக்கு மகிழ்ச்சி.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு நாளைக்கு ஐம்பது ட்ராக்டர்களாவது எங்கள் கிராமத்திற்கு மண் அள்ள வரும். அந்த ட்ராக்டர் சாரதிகளும் எங்களிற்குப் பழக்கமானவர்களாகவே இருப்பார்கள். அந்தச் சாரதிகளில் மோட்டாண்டி எங்களுக்கு நெருங்கிய பழக்கம். எங்களைக் கண்டால் தானாகவே ட்ராக்டரின் வேகத்தைச் சற்றே குறைப்பார். ஓடும் ட்ராக்டரில் நாங்கள் தொற்றி ஏறிப் பெட்டிக்குள் குதிப்போம். அன்றும் அதுதான் நடந்தது.

பண்ணைப் பாலத்தால் மோட்டாண்டியின் ட்ராக்டர் எங்களை ஏற்றிக்கொண்டு கிராமத்தை நோக்கிப் பறக்கலா யிற்று. நாங்கள் சினிமா நடிகர்களிற்கு மட்டுமல்லாமல் ட்ராக்டர் சாரதிகளிற்கும் தீவிர ரசிகர்களாயிருந்த பருவமது. மோட்டாண்டி சிவந்த மேனியும் சுருட்டைத் தலையும் கொண்ட கவர்ச்சிகரமான மனிதர். அவர் எப்போதும் கட்டும் பற்றிக் சாரத்தை முழங்கால்வரை வழித்துவிட்டுக்கொண்டு வாயில் 'த்றீரோஸ்' சிகரெட்டையும் வைத்துக்கொண்டு அசுர வேகத்தில் அவர் ட்ராக்டர் ஓட்டுவது தொங்கலாயிருக்கும். அவர் ட்ராக்டரைத் தாறுமாறாக ஓட்டும் வேகத்தால்தான் அவருக்கு மோட்டாண்டி என்ற பெயர் கிடைத்திருக்கவேண்டும்.

ட்ராக்டரின் வெற்றுப் பெட்டி பண்ணைப் பாலத்தில் தூக்கி தூக்கிப் போடும். அந்தப் பெட்டிக்குள் 'பலன்ஸ்' பண்ணி நிற்பது எங்களின் சாகசமாக இருக்கும். யாழ்ப்பாணத் திலிருந்து பண்ணை பிரதான வீதியின் வழியாக மூன்று கட்டைகள் தூரம் ஓடினால் எங்கள் கிராமம் வந்துவிடும். வீதியிலிருந்து ஒரு கட்டைத் தூரத்தில்தான் தெற்குப் புறமாகக் குடிமனைகள் இருந்தன. பிரதான வீதியருகில் குடிமனைகள் கிடையாது. வெறும் தரவை நிலத்திற்குள்ளால் அந்த வீதி செல்லும். வீதியில் குட்டி வழிப் பிள்ளையார் கோயிலும் அதற்குச் சற்றுத் தள்ளி, ஒருமாதம் முன்பாகப் புதிதாக முளைத்த ஒரு தேநீர்க் கடையுமிருந்தன. அந்தக் கடையை நல்லூர்ப் பக்கத்திலிருந்து வந்த ஒரு நடுத்தர வயதுத் தம்பதிகள் நடத்தி வந்தனர். அந்தக் கடைக்காரரின் சரியான பெயர் என்னவென்று தெரியவில்லை. அந்தக் கடைக்கு 'பப்பன் கடை' என்று கிராமத்தவர்கள் பெயரிட்டிருந்தார்கள். கடைகாரரை 'பப்பன்' என்றுதான் கூப்பிடுவோம்.

அப்போதெல்லாம் எனது கிராமத்து மக்கள் தேநீர்க் கடைகளுக்குப் போவதில்லை. யாழ்ப்பாணச் சந்தைக்குப் போனால் கூட கடைகண்ணியில் பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்காமல் வீட்டுக்குத் திரும்பிவந்துதான் தொண்டையை நனைப்பார்கள். பப்பன் கடை வரும்வரை எங்கள் கிராமத்தில் தேநீர்க் கடையே இருக்கவில்லை. எங்களை

மாதிரி நட்டாமுட்டி பொடியன்கள் மட்டுமே பப்பன் கடைக்குப் போய் கல்லுப் போன்ற வாய்ப்பன் சாப்பிட்டுத் தேநீர் குடிப்போம். மற்றப்படிக்கு அந்த வழியால் போகும் லொறி, ட்ராக்டர் சாரதிகள் அங்கே சிலவேளைகளில் தேநீர் குடிப்பார்கள்.

பப்பன் கடையில் ஒரு சுடுதண்ணீர்ப் பானையும் நாலைந்து கிளாசுகளும் இருக்கும். ஒரு தட்டில் சுட்ட வாய்ப்பன்கள். மற்றபடிக்கு நாலைந்து யானைச் சோடாக்கள், பீடி சிகரெட் இவ்வளவும்தான் அந்தக் கடை. நான்கு பக்கங்களிலும் கிடுகுகளால் மறைக்கப்பட்டு பனையோலையால் கூரை வேயப்பட்ட அந்தக் கடை இருந்த இடம் அரசாங்கக் காணிதான். பிரதான வீதியோரமாக இருந்த உவர்நில அரசாங்கக் காணிகளை அப்போது யார் வேண்டுமானாலும் பிடித்துக் குடிசை போட்டுக்கொள்ளலாம். இப்போது அந்த இடத்தில் இந்தியாக்காரர்கள் வந்து அதிகாரிகளுக்குக் காசுகொடுத்து உறுதி முடித்து ஓர் 'இன்டர்நஷனல் ஸ்கூல்' கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஐம்பது பரப்பில் சுற்றிவர மதில் எழுப்பிவிட்டார்கள். ஊருக்குச் சென்றபோது பார்த்தேன்.

பப்பன், தனது கடையை மாலை ஆறுமணிக்கு அடைத்துவிடுவார். கடையில் பெயருக்குத்தான் தேநீர் வியாபாரம் நடப்பதாகவும் இரவுகளில் அந்தக் கடைக்குள் விபச்சாரத் தொழில் நடப்பதாகவும் ஊருக்குள் சிலர் பேசிக்கொண்டார்கள். பொழுதுபட்ட பிறகு யாழ்ப்பாணத்திலிருந்து அந்தக் கடைக்கு ஒரு மஞ்சள் நிறப் பெண் வருவதாகவும் அவள் வந்த பின்பாக யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்ஸிலோ மோட்டார் சைக்கிளிலோ வாடிக்கையாளர்கள் வந்து இறங்குவதாகவும் பேச்சிருந்தது.

எங்கள் கிராமத்தில் இந்த விபச்சாரப் பிரச்சினை கனகாலமாக இருந்து வந்தது. அப்போது யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் நிற்கும் விபச்சாரிகளை வாடிக்கையாளர்கள் அழைத்துக்கொண்டு போக யாழ்ப்பாண நகரத்தில் லொட்ஜ்கள் கிடைப்பது லேசான விசயமில்லை. முழு யாழ்ப்பாண நகரத்திலுமே இரண்டோ மூன்றோ லொட்ஜ் கள்தான் இருந்தன. அதனால் வாடிக்கையாளர்களை அழைத்துக்கொண்டு விபச்சாரிகள் பஸ் பிடித்து எங்கள் ஊர் பிரதான வீதியில் இறங்கிவிடுவார்கள். பிரதான வீதியின் வடக்குப்புறமாகப் பரவைக்கு கடலையொட்டி கன்னாவும் நொச்சியும் பற்றைகளாக வளர்ந்துகிடக்கும். அந்தப் பற்றைகளிற்குள் புகுந்து அவர்கள் மறைந்துகொள்வார்கள். எங்களிலும் மூத்த எங்களது கிராமத்து இளைஞர்களின் கண்களில் அவர்கள் எப்போதாவது சிக்கினால், இளைஞர்கள் அவர்களை நன்றாக அடித்து உதைத்துத் துரத்திவிடுவார்கள். இதையொரு சமூகசேவையாக அந்த இளைஞர்கள் ஊருக்குள் பெருமையாகச் சொல்லிக்கொள்வார்கள். இதெல்லாம் அன்றுவரை நான் கேள்விப்பட்டிருந்த விசயங்கள்தானே தவிர, என் வாழ்வில் நான் ஒரேயொரு விபச்சாரியைக் கூட அதுவரை நேரில் பார்த்திருக்கவில்லை.

ஆனால் ஒரு விபச்சாரி எப்படியிருப்பாள் என்று எனக்கொரு கணக்கிருந்தது. நான் வாசித்த கதைகளிலிருந்து அந்தச் சித்திரத்தை நான் கலவையாக உருவாக்கி வைத்திருந்தேன்.

**சித்திரைலிங்கம் எப்போதும்போலவே தனது முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு இல்லை என்பதுபோல தலையாட்டி என்னை மறுத்துவிட்டுக் கதையைத் தொடர்ந்தான்:**

அழகான பெண் ஒருத்தி விபச்சாரத்திற்கு வா என ஒரு ஐயரை ஆசைகாட்டிக் கூப்பிட்டு நளினமாகப் பேசிக் காசையும் வாங்கிக்கொண்டு, கும்பிட்டுவிட்டு வருகிறேன் என வேதக் கோயிலிற்குள் நுழைந்து மறைந்துவிடுவாளே, கதைக்கு தட்சணை எனப் பெயர்.. யார் அந்தக் கதையை எழுதியது?

"அலெக்ஸ் பாரதி.."

ஆம்! என்னவொரு எழுத்தாளர் அவர்!! பெரிதாகக் கவனம் பெறாமலேயே போய்விட்டார். நீங்கள் இரண்டுபேரும் வேதக்காரர்கள் என்பதாலோ என்னவோ உங்களுடைய கதை எழுதும் முறையில் ஓர் ஒற்றுமையிருக்கிறது. நாங்கள் வந்த ட்ராக்டர் பப்பனின் தேநீர்க் கடையை நெருங்கியபோது எங்களிற்கு எதிரே, தேநீர்க் கடைக்குச் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த யாழ்ப்பாண நகரத்திலிருந்து வந்த பஸ்ஸிலிருந்து இறங்கி, தலையில் சேலையால் முக்காடிட்டுத் தலையைக் குனிந்தவாறு ஒரு பெண் பப்பன் கடையை நோக்கி விறுவிறுவென நடந்தார். பஸ் உறுமிக்கொண்டு மீண்டும் புறப்பட்டபோது அந்தப் பெண் சற்றே திரும்பிப் பார்த்து தன்னுடைய கையால் காதொன்றைப் பொத்திக்கொண்டார். அவரது தோளில் ஒரு கறுப்புநிறக் கைப்பை தொங்கியது. அலெக்ஸ் பாரதியின் கதையில் வரும் விபச்சாரியின் தோளிலும் ஒரு கறுப்புநிறக் கைப்பை தொங்கும்.

அவர் எங்கள் ட்ராக்டரைக் கடந்துபோனதும் ட்ராக்டர் சாரதி மோட்டாண்டி சிரித்துக்கொண்டே தலையைத் திருப்பி எங்களைப் பார்த்துச் சொன்னார்:

"தம்பியவை.. சோடாமூடி போகிறது."

கதையை இடைநிறுத்திய சித்திரைலிங்கம் என்னிடம், "அந்தக் காலத்தில் யாழ்ப்பாண இளைஞர்களிடையே எந்தச் சொல் அதிகமும் பிரபலம் சொல் பார்ப்போம்?" என்று கேட்டான்.

இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது! எனவே நான் உடனேயே, "தமிழீழம் என்ற சொல்தான்" என்றேன்.

சித்திரைலிங்கம் எப்போதும்போலவே தனது முகத்தை சீரியஸாக வைத்துக்கொண்டு இல்லை என்பதுபோல

தலையாட்டி என்னை மறுத்துவிட்டுக் கதையைத் தொடர்ந்தான்:

‘தமிழீழம்’ என்ற சொல்லைக் காட்டிலும் ‘சோடாமூடி’ என்ற சொல்தான் அப்போது யாழ்ப்பாண இளைஞர்களிடையே அதிகமும் பிரபலம். தமிழீழம் என்ற சொல்லைக் கேள்விப்படாதவன் யாழ்ப்பாணத்தில் இருந்திருக்கலாம். ஆனால் சோடாமூடி என்ற சொல்லைத் தெரிந்திராதவன் எவனுமில்லை.

விபச்சாரம் செய்யும் பெண்களை அப்போது யாழ்ப்பாணத்தில் ‘சோடாமூடி’ எனச் சொல்வார்கள். இந்தப் பெயருக்கான காரணம் யாருக்கும் சரிவரத் தெரியவில்லை. ஒரு முறை திறந்தால் மறுபடியும் மூட முடியாது என்பதால் சோடாமூடியென்று பெயர் எனச் சிலர் சொன்னார்கள். ஒருவன் இருட்டுக்குள் ஒரு விபச்சாரியோடு உறவு கொண்டுவிட்டுச் சில்லறை நாணயங்கள் எனச் சொல்லிச் சில சோடாமூடிகளைக் கொடுத்து ஏமாற்றிவிட்டுச் சென்றதால் அந்தப் பெயர் வந்தது எனச் சிலர் சொன்னார்கள். யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் ஆதியில் நின்ற விபச்சாரிக்கு சோடாமூடியென்ற பட்டம் என்பதால் அதுவே எல்லா யாழ்ப்பாண விபச்சாரிகளிற்கும் அடையாளப் பெயராகத் தொடர்ந்தது என்றும் சிலர் சொன்னார்கள்.

ட்ராக்டர் ஓடிக்கொண்டிருக்கும்போதே நாங்கள் ஐவரும் ஆளுக்கொரு பக்கமாக பெட்டியிலிருந்து குதித்து வீதி யோர மணற் திட்டுகளில் விழுந்தோம்.

எங்களில் மூத்தவன்தான் கதையை ஆரம்பித்தான்.

“கேள் சித்திரைலிங்கம்! ஊருக்குள் வந்து வேசையாடிவிட்டுப் போவதை நாங்கள் அனுமதிக்க முடியாது.”

அதுவொரு தெந்தெட்டான காலம் என்றுதான் சொல்லவேண்டும். இராணுவத்தை இயக்கங்கள் முகாம்களிற்குள் முடக்கிவிட்டிருந்தார்கள். பொலிஸ் நிலையங்களை இயக்கக்காரர்கள் தாக்கி அழிக்கத் தொடங்கிய பின்பு பொலிஸ் நிர்வாகம் ஊருக்குள் கிடையாது. பதிலுக்குப் பல இயக்கங்களும் இருந்து பொலிஸ் வேலையைச் செய்தாலும் எங்களுடைய சின்ன... சிறிய கிராமத்திற்குள் இயக்கங்களின் நடமாட்டம் அதிகமிருப்பதில்லை. இதனால் எங்களது கிராமத்தில் நாங்கள் நான்கு பேர்கள் சேர்ந்தால் எதையும் செய்யக்கூடிய ஒரு நிலையிருந்தது. கல்லூரிகளில் படிக்கின்ற பொடியன்கள் என்று கிராமத்திற்குள் எங்களுக்குக் கொஞ்சம் மரியாதையுமிருந்தது. எங்களிலும் மூத்த இளைஞர்களில் சிலர் இந்தியாவிற்கு இயக்கப் பயிற்சிக்குப் போனதாலும் மற்றவர்கள் சவூதிக்கும் ஜெர்மனிக்கும் புறப்பட்டுப் போய்விட்டதாலும் விடலைகளான எங்களுடைய கைகளில்தான் கிராமமிருந்தது. நல்லது கெட்டது எல்லாவற்றிற்கும் நாங்கள்தான் முன்னே நின்றோம்.

அராலிச் சந்தியையும் யாழ்ப்பாண நகரத்தையும் இணைக்கும் பிரதான வீதிதான் எங்கள் கிராமத்திற்குள்ளால் நீள்கிறது. அந்த வீதியால் போகும் வாகனங்கள், வீதியைக் கடக்கும் ஓர் ஆட்டை மாட்டைத் தப்பித் தவறி மோதிவிட்டால் நாங்கள்தான் பஞ்சாயத்து செய்வோம். எங்களுக்கு இயக்கத் தொடர்புகள் இருப்பது போன்றவொரு தோற்றத்தையும் ஊருக்குள் உருவாக்கி வைத்திருந்தோம். எப்போதாவது ஊருக்குள் இயக்கங்கள் வந்தால் நாங்கள்தான் முன்னின்று கூடமாட உதவிகள் செய்வோம். அப்போதெல்லாம் என்ன பெரிய உதவி.. கூட்டங்கள் வைக்க இடம் தேடிக்கொடுப்பது, உணவுப் பார்சல்கள் பெற்றுக்கொடுப்பது அவ்வளவுதான்.

சில முன் இரவுகளில் பிரதான வீதியோரத்தில் பனை மரங்களிற்குப் பின்னால் மறைந்து நிற்போம். பனைமட்டை அல்லது தடியை உரப் பையால் சுற்றி வைத்திருந்து துவக்குப் போல பாவனை செய்வோம். வீதியால் தனியாக ஏதாவது வாகனம் வரும்போது பனைமர மறைவிலிருந்து திடீரென ஆளுக்கொரு திசையில் வீதியில் குதிப்போம். வாகனங்களை நிறுத்தச் சொல்லி ‘செக்’ செய்வோம். பின்பு பனங்காட்டிற்குள் மறைந்துபோவோம். இயக்கம் போல பாவனை செய்வது எங்களுக்கொரு ‘த்ரில்’ விளையாட்டு. வாகனத்தில் வருபவர்கள் எங்களை இயக்கம் என நினைத்து வியப்பும் மிரட்சியும் பணிவுமாக எங்களைப் பார்ப்பதில் எங்களுக்கொரு போதை. நான் விபச்சாரி ஒருத்தியை அதுவரை பார்த்திருக்காதது போலவே வாகனக்காரர்களிலும் பலர் இயக்கப் பொடியன்களை அதுவரை கண்டிருக்கமாட்டார்கள்.

சில சமயங்களில் வீதியில் தனியாக வரும் மோட்டார் சைக்கிள்களைக் கடத்தி அரை மணிநேரம் காத்திருக்குமாறு மோட்டார் சைக்கிளில் வந்தவர்களிடம் சொல்லிவிட்டு ஏதோ தாக்குதலுக்குப் போகின்றவர்கள் போன்ற தோரணையில் எங்களில் மூவர் மோட்டார் சைக்கிளில் ஏறிப் பறக்க, மிச்சப் பேர்கள் மோட்டார் சைக்கிளில் வந்தவரை பனைங்கூடலிற்குள் அழைத்துச் சென்று தடுத்து வைத்து ஏதாவது ‘அட்டாக்’ கதை சொல்லித் தாக்காட்டிக்கொண்டிருப்பார்கள். சொன்னமாதிரியே அரைமணி நேரத்தில் திரும்பவும் மோட்டார் சைக்கிளை ஒப்படைத்துவிடுவோம். மோட்டார் சைக்கிள் ஓட்ட அந்த வயதில் யாருக்குத்தான் ஆசையிருக்காது!

இப்போது, பப்பன் கடைக்குள் நடக்கும் விபச்சாரத்தை ஒழிப்பதென நாங்கள் தீர்மானித்தோம். பப்பன் கடைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி, அந்த மஞ்சள் நிற விபச்சாரியை அங்கிருந்து துரத்திவிடுவதாக முடிவு செய்தோம். வழமைபோலவே அன்றைக்கான புனைபெயர்களை நாங்கள் எங்களுக்குச் சூட்டிக்கொண்டோம். இயக்கப் பாணியில் தாக்குதலொன்றுக்குச் செல்லும்போது எங்களிற்குள் ஆளையாள் சொந்தப் பெயரில் அழைத்துக்கொள்வது எங்களது வழக்கமில்லை.

எங்களில் மூத்தவன் எப்போதும் தனக்கு முஸ்லீம் பெயர்களைத்தான் வைத்துக்கொள்வான். அரபுப் பெயர்களில் அவனுக்கு ஒரு மோகமிருந்தது. பப்பன் கடைத் தாக்குதலுக்காக அவன் தனக்கு வைத்துக்கொண்ட பெயர் அலாவுதீன். நான் என் பெயரைச் சற்றே மாற்றி வைத்தியலிங்கம் என வைத்துக்கொண்டேன். எனக்கு அப்படியான பெயர்களில் ஓர் ஈர்ப்பு. மற்ற மூவரும் பிரசாத், ரோம், எஸ்ஸெல்லார் எனப் பெயர்களை வைத்துக்கொண்டார்கள்.

**மற்றைய மூன்றுபேரும் கடகடவென மாறி மாறிக் கேள்விகள் கேட்டு விசாரணை நடத்த நான் மட்டும் சும்மா நிற்பது எனக்குக் கூச்சமாயிருந்தது. நான் மஞ்சள் நிறப் பெண்ணின் கன்னத்தில் ஓர் அறை கொடுத்துவிட்டு அவரது கைப்பையைப் பறித்துக்கொண்டேன். நான் இழுத்த வேகத்தில் கைப்பையின் பட்டை கிழிந்து பை கையோடு வந்துவிட்டது.**

நேரம் அப்போது மாலை ஆறு மணியிருக்கும். நாங்கள் ஐவரும் சட்டைக் கைகளை மடித்துவிட்டுக்கொண்டு ஒருவர் பின் ஒருவராகப் பப்பன் கடையை நோக்கி வேகமாக நடந்தோம். இந்த நேரத்திலெல்லாம் இந்தப் பிரதான வீதிப் பகுதி பெரிதாக ஆள் நடமாட்டம் இல்லாமற்தான் கிடக்கும். கிராம மக்கள் பஸ் ஏறுவதற்கு மட்டும்தான் பிரதான வீதிக்கு வருவார்கள். மாலை ஆறுமணிக்குப் பிறகு யாரும் கிராமத்திலிருந்து வெளியே கிளம்பமாட்டார்கள். எப்போதாவது வரும் பஸ்ஸிலிருந்து நகரத்தில் வேலை முடிந்துவரும் ஓரிருவர் பிரதான வீதியில் இறங்கிக் குடிமனைக்குள் போனால்தானுண்டு.

நாங்கள் பப்பன் கடையைச் சுற்றிவளைத்து உள்ளே பாய்ந்தபோது, பப்பனின் கடை அடைக்கப்பட்டு ஓர் ஆள் குனிந்து நுழையுமளவிற்கு வாசற் தட்டி திறந்திருந்தது. முதலில் அந்தத் தட்டியைத்தான் பிடுங்கி எறிந்தோம். கடைக்கு உள்ளே பப்பன் அடுப்பில் வேலையாக இருந்தார். தரையில் சாயவோலைப் பாயில் அமர்ந்து பப்பனின் மனைவியும் சற்று முன்னே பஸ்ஸிலிருந்து இறங்கிவந்த பெண்ணும் வெற்றிலை சப்பிக்கொண்டிருந்தார்கள். முன்னால் போன அலாவுதீன் தடாலடியாக அந்தப் பெண்ணுக்கு கன்னத்தில் அறைந்த அறையின் வேகத்தில் அந்தப் பெண்ணின் வாயிலிருந்த வெற்றிலைச் சாறு அலாவுதீனின் டிஸ்கோ சேர்ட் முழுவதும் தெறித்தது. அந்தப் பெண் திகைத்துப்போய் தனது கன்னங்களை இரண்டு கைகளாலும் பொத்திக்கொண்டு எழுந்து நின்றார். கடைசியாக நான் ஒரு விபச்சாரியை என் கண்களால் கண்டுவிட்டேன்.

அந்தப் பெண், கிராமத்தவர்கள் பறைந்த மாதிரி மஞ்சள் நிறப் பெண்ணல்ல. பொதுநிறமான பெண்தான். ஆனால் முகத்தில் மஞ்சளை அப்பிப் பூசிக் கழுவியது பளீரெனத் தெரிந்தது. எங்களது கிராமத்தில் அப்போது முகத்துக்கு மஞ்சள் பூசும் பழக்கமே இருந்ததில்லை. அந்தப் பெண்ணின் அகன்ற நெற்றியில் விபூதித் தீற்றலும் அதன் கீழே கறுப்பு நிறத்தில் திலகமுமிருந்தன. அந்தப் பெண்ணின் உயரம் சாதாரணமாக இலங்கையில் காணமுடியாத உயரம். கிட்டத்தட்ட ஆறடி இருப்பார். சற்றே மெலிந்த தோற்றம். பரட்டையான சுருள் முடி, நாடியில் எம்.ஜி.ஆருக்கு இருப்பது போலவொரு வெட்டு. அவர் கட்டியிருந்த ஊதா நிறச் சேலை அவரது கால்களை முழுவதுமாக மறைக்க இயலாமல் பாதங்களிற்கு ஓரடி மேலே நின்றது. வயது முப்பதிலிருந்து முப்பத்தைந்துக்குள் இருக்கலாம். ஒரு பக்கக் காதுத் துவாரத்திற்குள் பஞ்சு வைத்திருந்தார். கறுப்பு நிறம் ஊறிய அந்தப் பஞ்சு அருவருப்பாயிருந்தது. ஆனால் வெற்றிலைச் சாறால் கனிந்திருந்த அவரது மெல்லிய உதடுகளின் வசீகரத்தை என் வாழ்க்கை முழுவதும் என்னால் மறக்க முடியாது என்றுதான் நினைக்கிறேன். அதை மறப்பதானால் சத்திமுத்தப் பாணரின் ‘பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்’ என்ற வார்த்தைகள் ஒருபோதும் என் நினைவில் வராமலிருக்க வேண்டும்.

நாங்கள் பப்பன் கடையை நாசம் செய்தோம். தேநீர்ப் பானையைத் தூக்கி வீதியில் வீசினோம். மூன்றே நிமிடங்களில் நாங்கள் ஐவரும் சேர்ந்து பப்பன் கடையைச் செத்தை வேறு கூரை வேறாகப் பிரித்துப் போட்டுவிட்டோம். பப்பனுக்கும் கன்னத்தில் சில அறைகளும் புட்டத்தில் காலால் சில உதைகளும் விழுந்தன.

“இது என்ன வேசையாடுவதற்கான ஊரென்று நினைத்தாயா?”

“ஐயோ தம்பிமார் நான் அப்படிச் செய்வேனா.. இது என்னுடைய தங்கச்சி, என்னைப் பார்த்துவிட்டுப் போக வந்திருக்கிறாள்.”

பிரசாத் சொன்னான், “நாங்கள் இவளை விசாரிக்க வேண்டும்!”

அப்போதுதான் பப்பனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் நாங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்க வேண்டும். யார் இயக்கம் யார் இயக்கமில்லை எனக் கண்டுபிடிக்க முடியாத காலமல்லவா அது. பப்பன் நடுங்கத் தொடங்கினார். பப்பனின் மனைவி எங்களின் கால்களில் விழுந்து மன்றாடத் தொடங்கினார். அந்த மஞ்சள் நிறப் பெண்ணோ இப்போது திகைப்பிலிருந்து நீங்கி எங்களைச் சாதாரணமாகப் பார்த்தார். எங்களை இயக்கம் என அவர் நம்பியதால் ஒருவேளை அவர் பாதுகாப்பாக உணர்ந்திருக்கலாம்.

நாங்கள் பப்பன் கடைக்குள் நுழையும்வரை, அந்தப் பெண்ணை அடித்து மறுபடியும் யாழ்ப்பாணத்திற்குத் துரத்திவிடுவதே எங்களது திட்டமாயிருந்தது. ஆனால் இப்போது பிரசாத் அந்தப் பெண்ணை விசாரிக்க வேண்டும் எனச் சொன்னவுடன் அதையும் செய்துவிடலாம் என எங்களிற்குத் தோன்றியது.

நாங்கள் அந்தப் பெண்ணை எங்களுடன் வரச் சொன்னோம். அந்தப் பெண் கொஞ்சம் தயங்கியபோது எஸ்ஸெல்லார் காலைத் தூக்கி அந்தப் பெண்ணின் வயிற்றில் எத்தினான். அந்தப் பெண் 'அம்மோய்' என முனகிக்கொண்டு வயிற்றைக் கைகளால் பொத்திக்கொண்டு தரையில் உட்கார்ந்தார். பின்புறமிருந்து அவரது முதுகில் ஒரு மிதி விழுந்தது. அந்தப் பெண் எதுவும் பேசாமல் எழுந்து தனது கறுப்பு நிறக் கைப்பையையும் எடுத்துக்கொண்டு எங்களுடன் வரத் தயாரானார்.

நாங்கள் மஞ்சள் நிறப் பெண்ணை அழைத்துக்கொண்டு அருகிலிருந்த பனங்காட்டிற்குள் நுழைந்தோம். எங்களில் சின்னவனான ரோம் என்று பெயர் வைத்துக்கொண்டவனை, யாராவது வருகிறார்களா என எல்லாப் பக்கமும் சுற்றிப் பார் என 'சென்ரி'யாகப் போட்டுவிட்டு, அந்தப் பெண்மீதான புலன் விசாரணையைத் தொடங்கினோம். அந்தப் பெண் எந்த ஒளிவு மறைவுமின்றி, தனது பிள்ளைகளிற்குச் சாப்பாடு கொடுப்பதற்காக விபச்சாரம் செய்வதாகச் சொன்னார். கதைப் புத்தகங்களில் வரும் எல்லா விபச்சாரிகளும் இதைத்தானே சொல்கிறார்கள் என நினைத்துக்கொண்டேன். 'பொன்னகரம்' கதை ஞாபகம் வருகிறதல்லவா உனக்கு.. எங்களது விசாரணை தொடரலாயிற்று.

"அடையாள அட்டையை காட்டு.."

"இல்லை.. தொலைந்து போய்விட்டது."

"எந்த ஊர்?"

"கோணாந்தோட்டம்.."

"ஒரு ஆளுக்கு எவ்வளவு வாங்குவாய்?"

"இருபத்தைந்து ரூபாய்.. சில நேரம் முப்பது ரூபாய்.."

"புருஷன் இல்லையா?"

"மன்னாரில் கருவாடு காயப்போடும் வேலைக்கு போனவர் காணாமற் போய்விட்டார்."

"பிள்ளைகள்?"

"மூன்று பிள்ளைகள். மூத்தவனிற்கு ஐந்து வயது, கடைசிக்கு இரண்டு வயது."

மற்றைய மூன்றுபேரும் கடகடவென மாறி மாறிக் கேள்விகள் கேட்டு விசாரணை நடத்த நான் மட்டும் சும்மா நிற்பது எனக்குக் கூச்சமாயிருந்தது. நான் மஞ்சள் நிறப் பெண்ணின் கன்னத்தில் ஓர் அறை கொடுத்துவிட்டு அவரது கைப்பையைப் பறித்துக்கொண்டேன். நான் இழுத்த வேகத்தில் கைப்பையின் பட்டை கிழிந்து பை கையோடு வந்துவிட்டது.

அந்தக் கைப்பையைத் திறந்து பார்த்தேன். உள்ளே ஒரு கைக்குட்டை, சில சில்லறை நாணயங்கள், ஒரு பொட்டலத்தில் மஞ்சள் கிழங்குத் துண்டுகள், சீப்பு, பழுப்பேறிய ஒரு வெள்ளைத் துணித்துண்டு, இவற்றுடன் ஒரு புத்தகமும் இருந்தது. நான் அந்தத் துணியைத் தொட்டுவிட்டாமல் கவனமாகப் புத்தகத்தை விரல்களால் தூக்கியெடுத்துப் பிரித்துப் பார்த்தேன். அந்தப் புத்தகம் பிரபஞ்சன் எழுதிய 'ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பு.

எனக்கு அப்போது கதைப் புத்தகங்கள் படிப்பதில் ஒரு வெறியேயிருந்தது. ஊரில் நல்ல புத்தகங்கள் கிடைப்பது குறைவு. எங்களது கிராமசபை நூலகத்திலிருந்த இருநூறு புத்தகங்களையும் படித்து முடித்துவிட்டிருந்தேன். தமிழ்வாணன், சுஜாதா, ஜெகசிற்பியன், ஜி.நேசன், செங்கை ஆழியான் எனப் படித்திருந்தேன். புதுமைப்பித்தனின் ஒரு சிறுகதைத் தொகுப்புக் கூட அப்போதே படித்திருந்தேன். ஆனால் பிரபஞ்சன் என்ற பெயரை இப்போதுதான் முதன்முதலாகப் பார்க்கிறேன். நான் அந்தப் புத்தகத்தை என்னிடமே வைத்துக்கொண்டு கைப்பையை அந்தப் பெண் முன்னால் தூக்கி வீசினேன்.

அந்தப் பெண் குனிந்து கைப்பையை எடுத்துக்கொண்டு என் கையிலிருந்த புத்தகத்தையே பார்த்துக்கொண்டு நின்றார். அவரது மெல்லிய உதடுகள் குவிந்திருந்தன.

"வேசையாடுவதற்கு எதற்குப் புத்தகம்?" எனக் குரலை உயர்த்தி உறுக்கிக் கேட்டேன்.

"அரைவாசிப் புஸ்தகம்தான் படித்திருக்கிறேன்..." என்று அந்தப் பெண் சொன்னார். அப்போது அவர் புன்னகைப்பது போலத்தான் எனக்குத் தோன்றியது. அந்தப் புத்தகத்தாலேயே நான் அந்தப் பெண்ணின் கன்னத்தில் அடித்தேன். அந்தப் புத்தகத்தை அந்தப் பெண்ணிடமிருந்து எடுத்துக்கொள்வதென நான் புத்தகத்தைப் பார்த்தபோதே முடிவு செய்திருந்தேன்.

இப்போது எங்களில் மூத்தவனான அலாவுதீன், அந்தப் பெண்ணுக்கு அறிவுரைகள் சொல்லத் தொடங்கினான். ஒழுக்கமாக வாழ்ந்து கூலி வேலை செய்தாவது பிள்ளைகளைக் காப்பாற்றச் சொன்னான். அதன் பின்பு அந்தப் பெண்ணிற்கு, விபச்சாரம் செய்ததற்காகத் தண்டனை வழங்கலானோம்.

எங்களில் ஒருவன் கையில் காய்ந்த பனைமட்டையுடன் தயாரானான். அவன் "சேலையைத் தூக்கிப் பிடி" எனச் சொல்ல, அந்தப் பெண் "அடிக்காதீர்கள்" என முனகியவாறே தனது சேலையை உள்பாவாடையோடு சேர்த்து முழங்கால்கள்வரை தூக்கினார். "இன்னும் தூக்கு" என்று சொல்லி அந்தப் பெண்ணின் பிடரியில் ஒரு தட்டுத் தட்டினான் அலாவுதீன். இப்போது மஞ்சள் நிறப்பெண் இடுப்புவரை தூக்கினார். அந்தப் பெண் உள்ளாடை எதுவும் அணிந்திருக்கவில்லை. அவரது இடுப்பில் இருந்த கறுப்புக் கயிறு அரைஞாண்கொடி மஞ்சள் படிந்து அழுக்கு மஞ் சள் கயிறாயிருந்தது. அதன் கீழே காய்ந்து வற்றிப்போயிருந்த அவரது புட்டங்களில் அடர்த்தியாகத் தேமல் படர்ந்திருந்தது. அந்தத் தேமல் மீது நான்கு பனைமட்டை அடிகள் விழுந்தன. ஒவ்வொரு அடிக்கும் முனகிக்கொண்டே அந்தப் பெண் கால் விரல்களில் எழுந்து நின்றார். அவரது கைகள் ஒவ்வொரு அடிக்குப் பின்பாகவும் பின்பகுதியைத் தேய்த்துவிட்டுக்கொண்டன. அவர் வாயில் 'ஸ்ஸ்ஸ்...' என்ற மெல்லிய ஊளை வலியோடு எழுந்தது.

தண்டனை முடிந்ததும், இனிமேலும் ஊருக்குள் இருக்காமல் பஸ்ஸைப் பிடித்து உடனடியாக யாழ்ப்பாணம் போகுமாறு அந்தப் பெண்ணிடம் சொல்லிவிட்டு நாங்கள் கிளம்பினோம். அந்தப் பெண் என்னைப் பார்த்து 'புஸ்தகம்' என்றார். 'ஓடு' எனச் சொல்லி இன்னுமொரு உதை கிடைத்தது மஞ்சள் நிறப் பெண்ணுக்கு.



நான் வீட்டுக்கு வந்ததும் எனது அறைக்குள் போய் கட்டிலில் படுத்துக்கொண்டு பிரபஞ்சனின் புத்தகத்தை விரித்துப் படிக்கத் தொடங்கினேன். புத்தகத்தில் மனம் செல்வதாக இல்லை. புத்தகத்தின் பக்கங்களில் அந்தப் பெண்ணின் இடுப்பிலிருந்த மஞ்சள் அரைஞாண்கொடி நாடாப்புழுப்போல நெளியலாயிற்று. நான் என் வாழ்க்கையில் முதன்முதலாகப் பார்த்த வயது வந்த பெண்ணின் நிர்வாணம் அதுதான். கட்டிலில் எழுந்து உட்கார்ந்து அந்தப் புத்தகத்தில் தூமைத் துணியின் வீச்சம் வருகிறதா என மறுபடியும் மறுபடியும் முகர்ந்து பார்த்தேன்.

இரவுணவைச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் பிரபஞ்சனின் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினேன். மெதுமெதுவாகப் புத்தகம் என்னைத் தன்னுள் உள்வாங்கத் தொடங்கியது. மூன்றாவது கதையைப் படித்து முடிக்கும் தறுவாயில் என் அறையின் ஜன்னலில் ரோம் தோன்றினான்.

வெளியே வந்தபோது ஒழுங்கைக்குள் அலாவுதீன் நின்றான். ‘அந்த விபச்சாரி ஊரைவிட்டுப் போய்விட்டாளா எனப் பார்க்கப் போகிறோம், வருகிறாயா?’ என்றார்கள். வீட்டுக்குள் அப்பா சாய்மனைக் கட்டிலில் இருந்து பிபிஸி தமிழ் செய்தியறிக்கை கேட்டுக்கொண்டிருந்தார். அம்மாவிடம், நாடகம் பழகப் போகிறோம் எனச் சொல்லிவிட்டுக் கிளம்பினேன். ‘நாளைக்குக் கல்லூரி இருக்கிறதல்லவா.. சீக்கிரமாக வந்துவிடு’ என்றார் அம்மா. மற்றைய இருவரின் வீடுகளிற்கும் போய் அவர்களையும் கூட்டிக்கொண்டு போனோம். அவர்களின் வீட்டிலும் அதே நாடகம் பழகும் பொய்தான். இந்தப் பொய் எப்போதும் செல்லுபடியாகக் கூடிய பொய். ஏனென்றால் நாங்கள் உண்மையிலேயே வருடத்திற்கு இரண்டு நாடகங்களாவது கிராமக் கோயில் திருவிழாக்களில் அரங்கேற்றிவிடுவோம். பிரசாத் நாடகத்தை எழுதுவான். அலாவுதீனுக்கு எல்லா நாடகத்திலும் கதாநாயகன் வேடம். கதாநாயகி பாத்திரம் எப்போதும் எனக்குத்தான். உனக்குத் தெரியுமா? நான் அவுஸ்திரேலியா வந்த புதிதில் தமிழ்ச் சங்க விழாவில் சந்திரமதிக்கு நடித்திருக்கிறேன்.

அப்போது நேரம் இரவு பத்துக்குக் கிட்டமுட்டயிருக்கும். நாங்கள் ஊர்மனையைத் தாண்டி, வயல்வெளிகளையும் பனங்கூடல்களையும் கடந்து பிரதான வீதியில் ஏறினோம். வீதி அமைதியாகக் கிடந்தது. அப்போது இரவு நேரங்களில் பண்ணை வீதியால் வரும் வாகனங்களின் மீது கோட்டையிலிருந்த இராணுவத்தினர் இடைக்கிடை சுடுவதுண்டு. அதனால் பத்து மணிக்குப் பிறகு அந்த ரோட்டில் போக்குவரத்தே இருக்காது.

நாங்கள் பப்பனின் கடையைப் பதுங்கிப் பதுங்கி நெருங்கியபோது உள்ளே பேச்சுக் குரல்கள் கேட்டன. அது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது உண்மை.

நாங்கள் பிய்த்துப் போட்டுவிட்ட வந்த பப்பன் கடையின் செத்தைகள் இப்போது மறுபடியும் நிமிர்த்தி வைக்கப்பட்டிருந்தன. வெளியிலிருந்து செத்தைத் துவாரம் வழியாகப் பார்த்தபோது கூரையில்லாத அந்த அடைப்புக்குள் குப்பி விளக்கு வெளிச்சத்தில் பப்பனும் அவரது மனைவியும் தரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அருகே சாயவோலைப் பாயில் அந்த மஞ்சள் நிறப் பெண் படுத்திருந்தார்.

நாங்கள் இருளில் நின்றுகொண்டு “அந்தப் பட்ட வேசையை வெளியே அனுப்பு” எனக் குரல் கொடுத்தோம். பப்பன் விளக்கைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியே வந்தார்.

“அதுதானே அவளைத் தாறுமாறாக அடித்துவிட்டீர்கள், இனியென்ன தம்பிமார்?”

இப்போதும் பப்பனின் குரலில் பணிவு இருந்தாலும் அந்தக் குரலில் ஓர் எரிச்சலும் இழையோடுவது போலிருந்தது.

“அவளை ஏன் இன்னும் இங்கே வைத்திருக்கிறாய்?”

“அனுப்பத்தான் பார்த்தேன்.. ஆனால் பஸ் ஒன்றும் வரவில்லை. காலையில் முதல் பஸ்ஸில் அவள் போய்விடுவாள் தம்பி.”

அந்த மஞ்சள் நிறப் பெண் சத்தம் கேட்டுத் தூக்கத்திலிருந்து எழுந்திருந்தார். குப்பி விளக்கின் ஒளியில் அவரது நிழல் செத்தையில் ஆடியது. அவரை நாங்கள் மீண்டும் விசாரிக்க வேண்டும் என்றோம். இப்போது பப்பனுக்கு நாங்கள் இயக்கப்பொடியன்கள் இல்லை என்பது தெளிவாகவே தெரிந்திருக்கும். ஆனாலும் நாங்கள் ஊர்ப் பொடியன்கள். வந்தான் வரத்தானான அவர் எங்களை எதுவும் செய்துவிட முடியாது என்பதும் அவருக்குத் தெரியும். என்றாலும் அவர் அந்தப் பெண்ணை எங்களோடு இரவில் அனுப்ப முடியாதென்றும் எதுவானாலும் காலையில் வந்து பேசிக்கொள்ளலாம் என்றும் சொன்னார்.

நாங்கள் பப்பனை மண்ணில் தள்ளிக் கால்களால் உதைப்பதைப் பார்த்ததும் அந்த மஞ்சள் நிறப் பெண் எங்களோடு வரத் தயாரானார். இவ்வளவு பிரச்சினையிலும் பப்பனின் மனைவி வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. ஆனால் எங்களை எரித்துவிடுவதுபோல பார்த்துக்கொண்டிருந்தார்.

அந்த மஞ்சள் நிறப் பெண்ணோடு நிலா வெளிச்சத்தில் நாங்கள் பிரதான வீதியால் நடந்தோம். இப்போது எஸ்ஸெல்லார் ஒரு வில்லுக்கத்தி கொண்டுவந்திருந்தான். அதை அந்தப் பெண்ணினது கழுத்தில் வைத்து அவரை முன்னே நடத்தினான்.

கத்தியை உணர்ந்ததும் அந்தப் பெண் ''எனக்குத் தலையை மொட்டை வழிக்கத்தானே போகிறீர்கள்?'' என்று கேட்டார்.

பனங்காட்டுக்கு நடுவே அந்தப் பெண்ணை உட்கார வைத்துவிட்டுநாங்கள்ஐவரும்சுற்றிஉட்கார்ந்துகொண்டோம். ஜெயமோகன் எழுதும் மகாபாரதம் தொடர் படிக்கிறாயா என்ன? நீ படிக்கமாட்டாய்!

எங்களில் யார் அந்தப் பெண்ணை முதலில் தொட்டது என்பதை அந்த இருளுக்குள் அனுமானிக்க முடியவில்லை. ஆனால் எங்கள் எல்லோரது கைகளும் ஒரே நேரத்தில் அந்தப் பெண்ணின் உடலின் பாகங்களைப் பிசைந்துகொண்டிருந்தன.

இப்போது அந்தப் பெண்ணைத் தவிர நாங்கள் யாருமே பேசவில்லை. அந்தப் பெண் மட்டுமே பேசினார். 'என்னை விட்டுவிடுவீர்கள் இல்லையா..' எனத் திரும்பத் திரும்பக் கேட்டார். அந்தப் பெண்ணின் மார்பில் நான் முகத்தைத் தேய்த்தபோது அவர் என் தலையைத் தடவிக் கொடுத்தது போலத்தானிருந்தது. 'உங்களுடைய பெயர் என்ன?' என்று மஞ்சள் நிறப் பெண் என்னிடம் கேட்டார். நான் 'வைத்தியலிங்கம்' எனக் கிசுகிசுத்தபோது அந்தப் பெண்ணின் மார்பு ஒருமுறை குலுங்கியது.

அந்தப் பெண் மூத்திரம் பெய்து விட்டு வருகிறேன் என்றார். இங்கேயே பெய் என்றோம்.

இவ்வளவு ஆட்கள் இருந்தால் எனக்கு மூத்திரம் வராது என்றார் அந்தப் பெண். நால்வர் விலகிச் செல்ல ஒருவன் மட்டும் அந்தப் பெண்ணுடன் நின்றான். ஐந்து நிமிடத்துக்குப் பிறகு அவன் அடுத்தவனைக் கூப்பிட்டான். இப்படியாகப் பத்துத் தடவைகள் நிகழ்ந்தன.

நான் அந்தப் பெண்ணின் மீது இயங்கியபோது அவரது மெல்லிய வசீகர உதடுகளில் முத்தமிட முயன்றேன். அந்தப் பெண் உதடுகளை உள்பக்கமாக மடித்து வாயை இறுக மூடிக்கொண்டிருப்பது தெரிந்தது. நான் அவரது வாயில் முத்தமிட முயன்றபோது அவர் முகத்தை அங்குமிங்குமாக அசைத்தவாறிருந்தார். நான் அவரின் வாய்க்குள் எனது ஆட்காட்டி விரலை வைத்து அவரது வாயைத் திறக்க முயன்றேன். வாயைத் திறந்து மஞ்சள் நிறப் பெண் மெல்லிய குரலில் கேட்டார்:

''நான் இன்னும் அந்தப் புஸ்தகத்தைப் படித்து முடிக்கவில்லை திருப்பித் தருகிறீர்களா தம்பி..''

காலையில் அப்பாவின் மோட்டார் சைக்கிளில் அவரோடு ஏறி கல்லூரிக்குச் சென்றுவிட்டேன். பாடப் புத்தகங்களோடு பிரபஞ்சனின் நூலையும் எடுத்துப் போயிருந்தேன். ஆனால் அந்தப் புத்தகத்தின் ஒரு பத்தியைக் கூட என்னால் மனமூன்றிப் படிக்க முடியாமலிருந்தது.

முழுவதுமாக, கடந்த இரவு நடந்தவை பற்றிய யோசனைதான் எனக்கு. நடந்த விசயம் ஊருக்குள் தெரியவருமா? பிரச்சினை இயக்கங்கள் வரை போகுமா? ஏதாவதொரு இயக்கம் எங்கள் ஐவரையும் வரிசையாக மின்கம்பங்களில் கட்டி, கழுத்தில் 'கற்பழிப்புக் குற்றவாளிகள்' என அட்டை எழுதிப்போட்டு நெற்றியில் சுடுமா என்றெல்லாம் மண்டை ஓடிவெளித்தது. நாங்கள் மஞ்சள் நிறப் பெண்ணை பலாத்காரம் செய்யவில்லை என்றுதான் என் மூளை சொல்லியது. அந்தப் பெண் எங்களுக்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லையே. அந்தப் பெண்ணை அனுப்பும்போது ஐந்துபேரும் கையிலிருந்த காசுகளைப் போட்டுக் கிட்டத்தட்ட நூறு ரூபாய்கள் அந்தப் பெண்ணிடம் கொடுத்திருந்தோம். நடந்தது காசுக்கு விபச்சாரம். விபச்சாரம் செய்தவர்கள் இயக்கத்திடம் போனால் முதலில் அவர்களுக்குத்தான் பிரச்சினை. எனவே அவர்கள் இயக்கத்திடம் போக வாய்ப்பில்லை. எங்களைப் பற்றி ஊருக்குள் பப்பன் சொன்னாலும், சனங்கள் நாங்கள் சொல்வதைத்தான் நம்புவார்கள். தவிரவும் பப்பன் தனது கடைக்குள் வைத்து விபச்சாரம் நடத்துவதாக ஏற்கனவே ஊருக்குள் பேச்சிருந்ததால் பப்பனின் பேச்சு ஊருக்குள் எடுபடாது. நாங்கள் செய்ததற்குச் சாட்சிகளும் கிடையாது. நாங்கள் ஐந்துபேரும் எங்களது வாய்களை இறுக மூடிக்கொண்டிருந்தால் அதுவே போதுமானது.

அதற்குப் பின்பு சரியாக முப்பத்து நான்கு வருடங்கள் எங்களது வாய்கள் மூடியிருந்தன. இப்போதுதான் முதன்முதலாக உன் முன்னேதான் வாயைத் திறந்து நான் அது பற்றிப் பேசுகிறேன்.


அந்த இரவு நிகழ்ந்து ஆறுமாதத்திலெல்லாம் நாங்கள் குடும்பத்தோடு கொழும்புக்குப் போய் அங்கிருந்து அவுஸ்திரேலியா வந்துவிட்டோம். மற்றைய நான்கு பேரில் ஒருவன் கனடா போய்விட்டான். காலப்போக்கில் மற்றைய மூவரும் ஒருவர் பின் ஒருவராக ஐரோப்பா போய்விட்டார்கள். உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் நண்பர்கள் ஐந்துபேரிடமும் எப்போதும் தொடர்பும் உறவுமிருக்கிறது.

நாங்கள் ஐவரும் ஒருமுறை ஜெர்மனியில் குடும்பங்களோடு சந்தித்துக்கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. ஆளையாள் தனியாகவும் சந்தித்திருக்கிறோம். சந்திக்கும்போதெல்லாம் பழைய கதைகளைப் பற்றி நாங்கள் பேசி மாளாது. ஊரில் நடந்த ஒவ்வொரு சிறு சம்பவத்தையும் மனதில் ஞாபகம் வைத்துப் பேசிச் சிரிப்போம். சிறுவயதில் நாங்கள் செய்த நன்மை தீமைகள் எல்லாவற்றையும் பற்றிப் பேசிக்கொள்வோம். ஆளையாள் கேலி செய்வோம். ஆனால் ஒரேயொரு முறைகூட நாங்கள் அந்த இரவு குறித்தோ, அந்த மஞ்சள் நிறப் பெண் குறித்தோ சாடைமாடையாகக் கூட எங்களிற்குள் பேசிக்கொண்டதே கிடையாது. அன்றைய இரவில் நடந்த சம்பவம் என் மனதின் ஒரு மூலையில் அவ்வப்போது நெருடிக்கொண்டிருந்தாலும் அது என்னை

காலத்தின்

# அஞ்சலி

## ஓவியர் கருணா



பேசிமுடியா கதைகள் கொண்டவன்
வரைந்து முடியா ஓவியன்
காலம் சஞ்சிகையுடன்
கனகாலம் நடந்தவன்

எப்போதும் பெரிதாகத் தொந்தரவுபடுத்தியதில்லை என்றுதான் சொல்வேன். ஆனால் நான் பிரபஞ்சனைச் சந்தித்த இரவில் எல்லாம் மாறிப் போயிற்று.

இரண்டு வருடங்களிற்கு முன்பு, ஜனவரி விடுமுறையில் மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிச்சென்று யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு நான் நான்குநாள் பயணமாகச் சென்னை புத்தகச் சந்தைக்குப் போனேன். கே.கே. நகரில்தான் தங்கியிருந்தேன்.

மூன்றாவது நாள் இரவில் கே.கே.நகரின் பொன்னம்பலம் சாலையிலுள்ள வீதியோரத் தேநீர்க் கடையொன்றில் தேநீர் சொல்லிவிட்டு நின்றுகொண்டிருந்தபோது, முப்பத்துநான்கு வருடங்களிற்கு முன்பு என் கையில் கிடைத்த புத்தகத்தின் பின்னட்டையிலிருந்த உருவம் என்னை நோக்கிச் சடுதியில் வருவதை உணர்ந்து உறைந்துபோய்விட்டேன். நீலநிறத்தில் ஜிப்பாவும் வெள்ளை நிறத்தில் காற்சட்டையும் அணிந்திருந்த பிரபஞ்சன் அங்குமிங்குமாகப் பராக்குப் பார்த்தவாறு நடந்து வருவதைக் கண்டேன். அவரிடம் போய்ப் பேசலாமா வேண்டாமா என்ற சிறு மனப் போராட்டத்தில் நான் இருந்தபோது, அவரது பார்வை என்னில் விழுவது போலிருந்தது. அந்தப் பார்வை என்னை அவரிடம் அழைத்துக்கொண்டது.

அவர் முன்னே போய் என் நெஞ்சில் கைவைத்துத் தலைசாய்த்து வணக்கம் சொன்னேன். முகம் மலர்ந்து சிரித்தார். "உங்களுடைய எல்லா நூல்களையும் படித்திருக்கிறேன்.. ஒரு தேநீர் சாப்பிடலாமா?" என்றேன். "சாப்பிடலாமே" என்றார் பிரபஞ்சன்.

அடுத்து என்ன பேசுவதென்று தெரியவில்லை. மஞ்சள் நிறப் பெண் என் தலையை உலுக்கத் தொடங்கியிருந்தார். எச்சிலை விழுங்கியவாறு 'வானம் வசப்படும்' நாவலின் சிறப்புகளைச் சொல்லத் தொடங்கினேன். தேநீர்க் கோப்பையை வைத்திருந்த என் கை நடுங்கிக்கொண்டிருந்தது. பிரபஞ்சன் சட்டென என் கையைப் பிடித்தார். "உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.." என்று மறுபடியும் சிரித்தார். அவரில் கமழ்ந்த நறுமணம் என்னை மூழ்கடித்தது.

அதிக நேரம் நாங்கள் பேசவில்லை. அவர் ரசித்துத் தேநீரைப் பருகி, அதன் பின்பு ஒரு சிகரெட்டை அவர் மெதுமெதுவாகப் புகைத்து முடிக்கும்வரைதான் பேசினோம். அது முதற் சந்திப்பு என்ற மாதிரியில்லாமல் வெகுநாளைய நண்பன் ஒருவனோடு பேசுவதுபோல பிரபஞ்சன் பேசிக்கொண்டிருந்தார். என் முன்னே பிரபஞ்சன் வெளிச்சச் சொரூபம் போல ஒளிர்ந்துகொண்டிருந்தார். அவர் முன்னே என்ன பேசுவது என்று தெரியாமல் குழம்பிப்போய் "எனக்கும் உங்களுக்கும் ஒரு தொடர்புள்ளது, எனது பெயர் சித்திரைலிங்கம், உங்களது இயற்பெயர் வைத்தியலிங்கம்" என்றெல்லாம் உளறிக்கொட்டினேன். வைத்தியலிங்கம் என்று உச்சரிக்கும்போதே நான் மஞ்சள் நிறப் பெண்ணிடம் 'என் பெயர் வைத்தியலிங்கம்' எனச் சொல்லிவைத்தது என் மூளையில் தைக்க அங்கே துவாரம் ஏற்பட்டு அது பெரிதாகலாயிற்று..

பேச்சின் போக்கில் பிரபஞ்சன் "உண்மையிலேயே வாழ்க்கை என்பது எனக்கு எழுத்துத்தான் சித்திரைலிங்கம், ஆனால் அந்த வாழ்க்கைக்கு அர்த்தமுள்ளதா என்பதுதானே தவிர்க்க முடியாத நம்முடைய வாழ்நாள் கேள்வியாகவுமிருக்கிறது இல்லையா..." என்று சொல்லிப் பேசிக்கொண்டே போனார். ஆனால் என்னால் அவரது பேச்சைத் தொடர்ந்து செல்ல முடியவில்லை. என் மூளைத் துவாரத்தில் மஞ்சள் நிறப் பெண் புகுந்துகொண்டு என்னை வதைக்கத் தொடங்கினார்.

*3*

முப்பது கிலோ புத்தகப் பொதியுடன் விமானத்தில் கொழும்புக்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போது என் மனம் முழுவதும் மஞ்சள் நிறப் பெண்ணே நிறைந்திருந்தார். என் கண்களில் கண்ணீர் வருவதுபோல உணர்ந்து கண்களைத் தொட்டுப் பார்த்தேன். அங்கே கண்ணீர் இல்லை. கண்ணீரை வரவழைக்க முயன்றேன் என்றுதான் சொல்ல வேண்டும். கொழும்புவரை அது வரவேயில்லை.

யாழ்ப்பாணம் போனதும் மனதில் ஒரு யோசனை தோன்றியது. அந்த மஞ்சள் நிறப் பெண்ணுக்கு இப்போது மிஞ்சி மிஞ்சிப் போனாலும் எழுபது வயதுதானிருக்கும். அவரைத் தேடிக் கண்டுபிடித்தாலென்ன என்று யோசித்தேன். தேடிக் கண்டுபிடித்து என்ன செய்யப் போகிறேன்? பணம் கொடுக்கப் போகிறேனா? தெரியாது! ஆனால் அவரைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற எண்ணமே என் மனம் முழுவதும் நிறைந்து என்னை அலைக்கழித்தது. ஆனால் அதற்கு வாய்ப்பே இல்லை என்று என் அறிவு சொல்லிற்று.

அந்த மஞ்சள் நிறப் பெண்ணின் பெயர்கூட எனக்குத் தெரியாது. அந்தப் பெண்ணிடம் அவரது பெயரை நாங்கள் கேட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. மற்றைய நான்கு பேருக்கும் போன் செய்து விசாரிக்கலாமா என்றுகூட எனக்குத் தோன்றியது. நிம்மதியாக இருக்கும் அவர்களையும் இந்த வதை வளையத்திற்குள் இழுத்து வரவேண்டாம் என நினைத்து அந்த யோசனையைக் கைவிட்டேன். அந்தப் பெண் சொல்லிய ஊரின் பெயர் ஞாபகமிருக்கிறது. மச்சானின் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு கோணாந்தோட்டத்துக்குப் புறப்பட்டேன்.

முப்பது வருடங்களிற்கு முன்பு கோணாந்தோட்டம் ஒரு சேரி போலதான் இருந்தது. இப்போது அது மாறி யாழ்ப்பாண டவுனின் ஒரு பகுதியாகிவிட்டது. இந்தச் சன நெரிசலுக்குள், பெயர் தெரியாத மஞ்சள் நிறப் பெண்ணை நான் எங்கே கண்டுபிடிப்பது? அவரை எதிரே பார்த்தால் கூட என்னால் அடையாளம் காணமுடியுமா என்ன! இன்று இரவு உன்னை அழைத்துவர நான் செவன் ஹில்ஸ் ரயில் நிலையத்திற்கு வந்தபோது நீ என்னையே அடையாளம் கண்டுபிடிக்கவில்லையே. ஏழு வருடங்களிற்குள் என்னில் இத்தனை தோற்ற மாற்றமென்றால், இத்தனை வருடங்களில் மஞ்சள் நிறப் பெண்ணின் தோற்றம் எவ்வளவு மாறியிருக்கும்!

நான் மோட்டார் சைக்கிளில் கோணாந்தோட்டத்தைச் சுற்றிவரும்போது ஓர் இடத்தில் ஒரு நினைவுக் கல்லைக்

**இரண்டு வருடங்களிற்கு முன்பு, ஜனவரி விடுமுறையில் மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிச்சென்று யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு நான் நான்குநாள் பயணமாகச் சென்னை புத்தகச் சந்தைக்குப் போனேன். கே.கே. நகரில்தான் தங்கியிருந்தேன்.**

கண்டேன். 1993ஆம் வருடம் அந்த இடத்தில் சந்தை இருந்ததாகவும் சந்தையின் மீது விமானத் தாக்குதல் நடந்து ஐம்பத்தேழு பேர்கள் கொல்லப்பட்டதாகவும் அந்த நினைவுக் கல்லில் குறித்திருந்தது. மஞ்சள் நிறப் பெண்ணும் அந்தக் குண்டு வீச்சில் இறந்திருக்கக் கூடும் என நினைத்துக்கொண்டேன். உண்மையில் அப்போது எனது மனம் ஏனோ அமைதி அடையலாயிற்று. ஒருமுறை நினைவுக்கல்லை உற்றுப் பார்த்து மெதுவாகத் தலைசாய்த்துவிட்டுக் கிளம்பினேன். நான் அவுஸ்திரேலியா திரும்பியதன் பின்னாக மஞ்சள் நிறப் பெண் மெதுமெதுவாக என் மனதிலிருந்து விலகிப் போய்விட்டார்.

இப்போது, ஒரு மாதம் முன்பாக ஒரு வெள்ளிக்கிழமை மாலையில், இங்கே மே ஹில்ஸில் இருக்கும் முருகன் கோயிலுக்கு என் மனைவியை காரில் அழைத்துச் சென்று இறக்கிவிட்டு வீடு திரும்பினேன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையிலும் முருகன் கோயிலுக்கு அவள் தவறாமல் போவாள். இரவு எட்டு மணிக்கு மறுபடியும் அவளை அழைத்துவர வேண்டும். அன்றைக்குத் திரும்பிவந்து கட்டிலில் படுத்துக்கிடந்து வாசிக்கத் தொடங்கியவன் அப்படியே கண்ணயர்ந்து தூங்கிவிட்டேன். எட்டுப் பதினைந்துக்கு மகள் தொலைபேசியோடு மேலே படியேறி வந்து என்னை எழுப்பினாள். மனைவிதான் அழைத்திருந்தாள்.

“கண்ணயர்ந்துவிட்டேன்.. இதோ கிளம்பி வருகிறேன் அல்லது ஊபர் எடுத்து வா” என்றேன். “வேண்டாம், எனக்குத் தெரிந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்கள் காரில் அழைத்துவந்து விடுவார்கள்” என்றாள். சரியென்று சொல்லிவிட்டுக் கீழே சென்று இரவுச் சமையலை ஆரம்பித்தேன்.

வாசல் கதவைத் திறந்துகொண்டு மனைவி வரும் ஓசை கேட்கவும் வரவேற்பறைக்குப் போனேன். மனைவியுடன் ஓர் இளைஞனும் ஒரு தடிமனான பெண்மணியும் உள்ளே வந்தார்கள். வந்தவர்களை உட்கார வைத்துவிட்டு அவர்களை எனக்கு என் மனைவி அறிமுகப்படுத்தலானாள்.

அந்தப் பெண்மணியின் பெயர் செல்வம் அன்ரியாம். முருகன் கோயிலுக்கு அவரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வருவதால் என் மனைவிக்குச் சிநேகிதமாம். கூட வந்திருப்பது அவரின் இளைய மகனாம். ‘ரோயல் அவுஸ்திரேலியன் நேவி’யில் வேலையிலிருக்கிறானாம். என் மனைவி சொல்லாவிட்டால் கூட நான் அதைக் கண்டுபிடித்திருப்பேன் என்றுதான் நினைக்கிறேன். அந்த இளைஞன் நடக்கும் தோரணையிலும் உட்கார்ந்திருக்கும் கம்பீரத்திலும் அந்த மிடுக்கு இருந்தது.

மனைவி, விருந்தாளிகளுக்குத் தேநீர் தயாரிக்கக் குசினிக்குள் போய்விட, நான் விருந்தாளிகள் முன் உட்கார்ந்து என்ன பேசுவதென்று யோசித்துக்கொண்டிருந்தேன். செல்வம் என்ற அந்தப் பெண்மணி என்னிடம் ஏதோ கேட்டபோதுதான் நான் அவரின் முகத்தைக் கவனித்தேன். அவரது நாடியில் எம்.ஜி.ஆருக்கு இருப்பதுபோல ஒரு வெட்டு இருந்தது. அது எனக்குத் தெரிந்த முகம் போல இருந்தது.

என் இரத்தம் அப்போது தண்ணீராக மாறியது. அந்தப் பெண்மணியை மேலும் கீழுமாகப் பார்த்தேன். தளதளவென்று செழிப்பான தேகம். சற்றே வெளிறிய நிறம். முன்னந்தலையில் முடி செறிவில்லாமலிருக்க முக்கால் நெற்றி மறையுமாறு குங்குமம் வைத்திருந்தார். முதுகைக் கூனிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். நீல நிறத்தில் வெள்ளிச் சரிகையிழைத்த சேலை அணிந்திருந்தார். பளீரிட்ட மூக்குத்திக்குக் கீழே அவரது உதடுகள் சுருங்கிப்போயிருந்தன. இவர்தானா அந்த மஞ்சள் நிறப் பெண்?

அவர்கள் பதினைந்து நிமிடங்கள் என் வீட்டில் இருந்திருப்பார்கள். வேலை, கப்பலில் வந்த அகதிகள், கோயில், விஜய் சேதுபதியின் நடிப்பு போன்ற வழமையான பேச்சுகள்தான் பேசிக்கொண்டோம். தேநீர் குடித்துவிட்டு அவர்கள் போய்விட்டார்கள். நான் சமையலை விட்டுவிட்டு என்னுடைய அறைக்குள் போய் இருந்துகொண்டேன்.

என்ன முட்டாள்தனமான எண்ணமிது? இந்தப் பெண்மணிதான் மஞ்சள் நிறப் பெண் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் அந்த முகம் எனக்குத் தெரிந்த முகம்போல ஏன் தோன்றுகிறது? அந்தப் பெண்மணியைப் பற்றி மேலும் விபரங்கள் என் மனைவிக்குத் தெரிந்திருக்குமா? நான் மனநோய் பிடித்தவன் போலாகிவிட்டேன். என் ஒவ்வொரு ரோமக்கால்களிலும் வதை புகுந்துகொள்ளலாயிற்று.

அடுத்தநாள் பேச்சுவாக்கில் என் மனைவியிடம் “நேற்று வந்தாரே செல்வம் அன்ரி.. எங்கே இருக்கிறார், எப்போது அவுஸ்திரேலியாவுக்கு வந்தாராம்?” எனக் கேட்டேன். “அவர் வந்து கன காலமிருக்கும், பிள்ளைகள் இங்கேதான் படித்தவர்களாம், ரோஸ் பேயில் அவர்களுடைய வீடிருக்கிறதாம்..” என்றாள் மனைவி. சிட்னியில் செல்வந்தர்கள் வசிக்கக் கூடிய கடற்கரையோரப் பகுதி ரோஸ் பே.

அதற்குப் பின்பு நான் இரண்டு தடவைகள் ரோஸ் பேக்குப் போனேன். ஏனென்று தெரியாது. அதுதான் சொன்னேனே மனநோய் பிடித்தவனாகிவிட்டேன் என்று. ரோஸ் பே தெருக்களில் காரைச் சுற்றிச் சுற்றி ஓட்டிக்கொண்டிருந்தேன். அடுத்த வெள்ளிக்கிழமை மனைவியை அழைத்துக்கொண்டு முருகன் கோயிலுக்குப் போனபோது நானும் கோயிலுக்கு உள்ளே நுழைந்தேன். கூடியிருந்த முகங்களை ஒவ்வொன்றாகக் கவனித்துப் பார்த்தேன். அங்கே செல்வம் என்ற அந்தப் பெண்மணி இல்லை.

சென்ற டிசம்பர் 21ஆம் தேதி ஒரு வெள்ளிக்கிழமை. அன்று மாலையில் எனக்குச் சாவு குறித்த தகவல் கிடைத்தது. சற்றே தணிந்திருந்த என் மனநோய் நெருப்புப் போல என்னில் பற்றிப் படரலாயிற்று. கிறிஸ்துமஸ் விடுமுறை முடிந்ததும் மனநோய் மருத்துவரிடம் போயே ஆகவேண்டும் என மனதிற்குள் தீர்மானம் செய்துகொண்டேன். மனைவியை முருகன் கோயிலுக்கு அழைத்துச் செல்கையில் கதையோடு கதையாக ''செல்வம் அன்ரி இன்றைக்கு வருவாரா?'' எனக் கேட்டேன். ''அன்ரி மாடிப்படியில் காலிடறி விழுந்து நடக்க முடியாமல் இருக்கிறாராம்'' என்றாள் மனைவி. பின்பு, அவள் எப்போதும் செய்வதுபோலவே தலையை மில்லி மீட்டரளவு இடமும் வலமுமாக அசைத்துக்கொண்டே நாவால் இரண்டுதரம் 'ச் ச்' என ஒலி எழுப்பிவிட்டு ''அன்ரியைப் போய்ப் பாரக்க வேண்டும்'' என்றாள். நான் அமைதியாகக் காரைச் செலுத்திக்கொண்டிருந்தேன். கோயிலில் அவளை இறக்கிவிடும்போது ''கிறிஸ்துமஸ் நாளன்று அன்ரியைப் போய்ப் பார்க்கலாம்'' என்றேன்.

கிறிஸ்துமஸ் அன்று காலையிலேயே நானும் மனைவியுமாகப் பலகாரங்கள் தயாரித்தோம். மாலையில் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள ப்ளாக் டவுனிலிருந்து என்னுடைய தங்கை வந்து சேர்ந்ததும், பலகாரங்களைப் ப்ளாஸ்டிக் பாத்திரங்களில் போட்டு எடுத்துக்கொண்டு மனைவி தயாரானாள். நான் முதல்நாள் இரவே என்னுடைய புத்தக அலுமாரியிலிருந்து பிரபஞ்சனின் நான்கு புத்தகங்களை எடுத்துப் பொதிசெய்து வண்ணத் தாளால் மூடி ஒட்டி வைத்திருந்தேன். நான் யார் வீட்டுக்குப் போனாலும் புத்தகங்களையே பரிசாகக் கொடுப்பதால் என் மனைவிக்கு எல்லாமே வழமைபோலத்தான் தோன்றியிருக்கும்.

ரோஸ் பேயை நாங்கள் சென்றடையும்போது மாலை ஏழு மணியிருக்கும். ஒரு சிறிய குன்றில் அந்த அழகிய வீடு தனித்திருந்தது. வீட்டின் பின்புறமாகக் கடலில் விழுந்துகொண்டிருந்த சூரியனின் இறுதி வெளிச்சம் அந்த வீட்டையும் தோட்டத்தையும் பாதி இருளாயும் பாதி ஒளியாயும் துலங்கச் செய்த காட்சி அபோரிஜினல் பழங்குடிகள் வரைந்த சித்திரம் போலிருந்தது.

எங்களை எதிர்பார்த்து செல்வம் அன்ரி வரவேற்பு அறையில் இருந்தார். இளைய மகனும் அவனுடைய வெள்ளைக்கார மனைவியும் இரண்டு குழந்தைகளும் அங்கிருந்தார்கள். நான் உள்ளே நுழைந்ததுமே அந்த வீட்டின் வரவேற்பறையைக் கவனமாகப் பார்த்தேன். ஒரு புத்தகத்தைக் கூட அங்கே காணவில்லை. தனியாகப் புத்தக அறை இருக்குமோ என்னவோ! அல்லது நான்தான் என் மனநோயின் பிரகாரம் புத்தகங்களைச் சுமந்து வந்திருக்கிறேனா?

செல்வம் அன்ரி வசதியான நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தார். சிவப்பு நிறத்தில் நீண்ட கவுன் அணிந்திருந்தார். அவர் அருகே ஊன்றுகோல் ஒன்று சுவரோடு சாத்திவைக்கப்பட்டிருந்தது. அவர் அங்கும் இங்கும் உடலைத் திருப்பும்போது அவரது முகம் கோணிக்கொண்டது. வலியால் அவதிப்படுகிறார். நான் அவரை நோக்கி நடந்துபோனேன். கையிலிருந்த புத்தகப் பொதி உண்மையிலே பிணக் கனம்தான் கனத்தது. ''நத்தார் வாழ்த்துகள் அன்ரி'' என்று சொல்லி அந்தப் பொதியை அவரின் கைகளில் கொடுத்துவிட்டு அவரின் அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டேன்.

அந்தப் பெண்மணி அந்தச் சிறிய பொதியைப் பிரிக்கவே சிரமப்படுவது தெரிந்தது. கீழுதட்டைப் பற்களால் கடித்தவாறு அந்தப் பொதியைப் பிரித்தார். உள்ளேயிருந்த புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தவரின் கண்கள் ஒரு கணம் அசையாமல் நின்றன. கண்கள் மீண்டும் அசைந்தபோது முகத்தில் சட்டெனத் தோன்றிய ஒரு வெட்கத்தோடு அவர், ஒரு புத்தகத்தின் பின்னட்டையில் செம்மஞ்சள் வண்ண ஜிப்பாவும் கறுப்புக் குளிர்க் கண்ணாடியும் அணிந்து அச்சாகியிருந்த பிரபஞ்சனைப் பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாயால் முத்தமிட்டார்.

நான்கு நாட்கள் தாமதமாக, இன்று பிரபஞ்சன் இருந்திருந்தால் அவரது வாழ்நாள் கேள்விக்கு விடை கண்டுபிடித்திருப்பார் என நான் அப்போது நினைத்துக்கொண்டேன்.

சித்திரைலிங்கம் கதையைச் சொல்லி முடித்துவிட்டுத் தனது கண்களைக் கைகளால் அழுந்தத் தேய்த்துவிட்டான். பின்பு, ''இப்போதும் பார் என் கண்களில் நீரே வரவில்லை'' என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்து ''உனக்கு எப்போதாவது கண்ணீரோ அல்லது எனக்கு வந்ததுபோல மனவருத்தமோ, வதையோ வந்திருக்கிறதா?'' எனக் கேட்டான்.

நான் எதுவும் சொல்லாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன். சித்திரைலிங்கம் எப்போதும் போல சீரியஸாகத் தனது முகத்தை வைத்துக்கொண்டே என் கண்களைப் பார்த்துச் சொன்னான்:

நீ பிரான்ஸை அவுஸ்திரேலியாவாக்கி, உன்னுடைய பெயரை சித்திரைலிங்கம் என்றாக்கி கதையொன்று எழுதி அதைத் தணித்துக்கொள்வாய்!

●

# விமானப் பயண உபாதைகள்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**

நீங்கள் இங்கே வாசிக்கப்போகும் அடுத்த வரிகள், பிரிட்டிஷ் நாளிதழான 'த கார்டியன்' ஆசிரியர் கடிதப் பக்கத்தில் ஒரு வாசகர் எழுதியது: "சூறாவளிகளுக்குப் பெயர்கள் வைக்கத் தொடங்கிவிட்டோம். இந்தப் பெயர்கள் எல்லாம் ஆங்கிலப் பெயர்களாக இருக்கின்றன. இந்த நாடு பல்லின, பல்சமய மக்களைக்கொண்ட நாடு. ஆகை யினால் பல் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்க இனிமேல் தாரீக், முகமது என்ற பெயர்கள் வைக்கவேண்டும்." கடிதம் எழுதியவர் ஏன் இந்துப் பெயர்களும் சூட்டவேண்டும் என்று சொல்லவில்லை என்று தெரியவில்லை. இங்கிலாந்தில் இந்துக்களும் இருக்கிறார்கள். இப்போது இது முக்கியமல்ல. இங்கே நான் எழுதப்போவதும் புயல் காற்றுப் பற்றியதும் அல்ல. ஆனால் இந்த தாரீக், முகமது என்ற பெயர்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். என்னுடைய வாழ்வில் உக்கிரவீச்சுப் புயலாக வராவிட்டாலும் எனக்கு நிகழ்ந்த ஒரு சின்ன நவீன உபத்திரவங்களில் இந்தப் பெயர்களுக்குச் சம்பந்தம் உண்டு.




சில நாட்களுக்கு முன் ஒரு கருத்தரங்குக்காக நான் டப்ளின் போகவேண்டியிருந்தது. சில நாட்கள் என்றால் நேற்று அல்லது முந்தாநாள் அல்ல. யாழ்ப்பாண வழக்கு மொழி அகராதியில் சில நாட்கள் என்றால் பண்டார வன்னியன் ஆட்சிக்காலம் வரை போகும். சில வருடங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். நான் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினுக்குப் போவது முதல் தடவையல்ல. இது மூன்றாவது முறை. போய் வந்த அந்த நாட்களில் இங்கிலாந்திலிருந்து அயர்லாந்துக்குப் போவதற்கு விசா தேவையில்லை. கடவுச்சீட்டும் தேவையில்லை. இப்போது போல் சப்பாத்து, இடுப்பில் அணியும் பட்டியைக் கழற்றி, அரை நிர்வாணமாக ஒளிவருடி இயந்திரத்துக்குமுன்



நிற்கத் தேவையில்லை. அயர்லாந்து இங்கிலாந்தின் முதல் காலனிகளில் ஒன்று. ஆனால் இன்று இங்கிலாந்திலிருந்து சுதந்திரமடைந்த ஒரு தனி நாடு. பிரயாணத் தேவைகளுக்கு ஒருங்கிணைந்த நாடாகவே கணிக்கப்பட்டது. போய் வர எந்த மாதிரியான தடங்கல்களும் இல்லை.

நவீன காலனியத்தின் பயன்களில் ஒன்று, கைப்பற்றிய நாடுகளுக்கிடையே மனிதர்களுக்கான சுதந்திரமான நடமாட்டம். காலனிய நாட்களில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இந்த மாதிரி எந்தக் கட்டுப்பாடுமில்லாத தாராளமான போக்குவரத்து இருந்தது. ஆங்கில ஆட்சியின் ஆரம்ப கட்ட உச்ச நாட்களில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் போவதைவிட, தென் இந்திய நகரகங்களுக்குப் போவது மிகச் சுலபமான காரியம். இலங்கையிலிருந்து அந்த நாட்களில் முக்கிய காரியங்களுக்கு யாழ்ப்பாணத்தார் துறைமுக நகரங்களான பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, வல்வெடித்துறையிலிருந்து கடல் மார்க்கமாக பாக்கு நீரிணையைக் கடந்து நாகர்கோயில், மதுரை, சிதம்பரம், சென்னை போன்ற தென் தமிழ் நகரங்களுக்குப் போய்வந்தனர்.

இந்த வசதியைப் பயன்படுத்தித்தான் சீ.வை தாமோதரம் பிள்ளையும், ஆறுமுக நாவலரும் தமிழ்நாட்டுக்கு அடிக்கடி போயிருப்பார்கள். தாமோதரம் பிள்ளை தமிழ்ப் பிரதிகளைத் தேடிப்போனார். நாவலர் இராமலிங்க சுவாமிகளுடன் வாதாட சிதம்பரம் நீதித்தலம் போனார். இந்த இருவரும் கொழும்புக்குப் போயிருப்பார்களா என்பது தெரியாது. புகையிரதம் யாழ்ப்பாணத்திற்கு 1905ல்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு முன் தரை மார்க்கமாக கொழும்பு போக கிட்டத்தட்ட ஒரு மாதம் பிடிக்கும் என்று முத்துத்தம்பிப்பிள்ளை தனது யாழ்ப்பாண சரித்திர நூலில் கூறுகிறார். கால் நடையாக அல்லது மாட்டு, குதிரை வண்டிகள் மூலந்தான் பயணிக்க வேண்டியிருந்தது. A9 இன்னும் திறக்கப்படவில்லை. இப்படி சுதந்திரப் போக்குவரவைப் பயன்படுத்தி இந்தியாவிலிருந்து இலங்கை வந்தவர்களில் ஒருவர் எம்.ஜி.ராமச்சந்திரனின் தகப்பனார் மேலக்காடு கோபால மேனன். ஒரு பிராமண விதவையுடன் கொண்ட தொடர்பினால் அவரை அவருடைய சமூகம் ஒதுக்கி வைத்தபோது, சிலோனுக்கு ஓடிவர வசதியாயிருந்தது. இன்றைய ஆரிய சிங்கள தேசியவாதச் சொல்லாடலில் இவர் ஒரு கள்ளத்தோணி. நல்ல வேளை அந்த வார்த்தை இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இது இந்தியத் தமிழர்களின் மதிப்பைக் குறைத்து இழிவுபடுத்தும் சொல். சிங்கள அரசியல் காரணங்களுக்காக இந்தச் சொல் என்ன விதத்தில் பயன்படுத்தப்பட்டது என்று இதை வாசிக்கும் இன்றைய தலைமுறையினர் உங்கள் பெற்றோரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

நான் சொல்லவந்ததைவிட்டு எங்கேயோ தள்ளிப் போகிறேன் போல் தெரிகிறது. இனி விஷயத்துக்கு வருகிறேன். நான் டப்ளின் போகவேண்டிய நாளில் பேர்மிங்காம் விமான நிலையத்துக்கு வந்தேன். நான் பிரயாணம் செய்யும் முன் என்னென்ன கொண்டுபோகவேண்டும் என்று, அந்த நாட்களில் சலவையாளருக்கு உடுப்புப் போடும்போது ஒரு பட்டியல் தயாரிப்பதுபோல் மூன்று மாதங்களுக்கு முன்னமே ஒரு தாளில் ஒரு மை எழுத்துப் பேனாவினால் எழுதி வைத்துவிடுவேன். இவற்றில் பயணச்சீட்டைவிட மிக முக்கியமானது பஞ்சு மொட்டு. முழுகும்போது தண்ணீர் காதுக்குள் போய்விட்டால் அது மாதிரி உபத்திரவம் உலகில் ஒன்றும் இல்லை. காது குடைந்துகொண்டிருந்தால் கருத்தரங்கில் அதிகம் கவனம் செலுத்தமுடியாது.

நான் இங்கிலாந்துக்கு முதலில் வந்தபோது லண்டன் வழியே பேர்மிங்காம் விமான நிலையத்தில்தான் வந்திறங்கினேன். அன்றைய பேர்மிங்காம் பறப்பகம் பருத்தித்துறை பட்டண சபை கந்தோர் போல் ஒரு சின்ன, மக்கான, மந்தமான

கட்டடமாக இருந்தது. அப்போது பொருட்களைச் சுமந்து செல்லும் பட்டை ஒன்றுதான் இருந்தது. ஆகையினால் உங்கள் பெட்டி, சாமான்கள் உங்களை வந்தடைய லண்டனிலிருந்து பேர்மிங்காம் பறந்த நேரத்தைவிட அதிகமாக இருக்கும்.

புதிப்பிக்கப்பட்ட பேர்மிங்காம் விமான நிலையம் கச்சிதமான கட்டடம். ஒரு நெருக்கமான மருட்சியைத் தரும். ஏதோ ஒரு பழக்கப்பட்டவரின் திருமணம் நடக்கும் கல்யாண மண்டபத்துக்குள் போவது போல் இருக்கும். எல்லோரும் பரிச்சயமானவர்கள் போல் தென்படுவார்கள். சிரித்த முகத்துடன் வரவேற்பார்கள். உங்களுக்கு இவர்களில் யாரையும் தெரிந்திருக்காது.

பயணப்பதிவு செய்யுமிடத்தில் என்னை அப்படிச் சிரித்த முகத்துடன் அழைத்தவரின் மேசைக்குப் போனேன். அவரின் இந்த மென் சிரிப்பு பதனம் செய்யப்பட்டது. அன்றைக்கு நூறு தடவையாவது இப்படி உற்பத்தி செய்யப்பட்ட சரட்டுச்சிரிப்பை என்னைப்போன்ற பயணிகளுக்கு உதிர்த்திருப்பார் என்று நினைக்கிறேன். இப்படி பயணப் பதிவு மேசைக்கு முன்னால் நிற்கும்போது செய்யவேண்டிய முக்கியமான காரியம்: துக்கம் விசாரிக்கப் போகும் வீட்டில் அதிகம் பேசாது இருப்பது போல் அமைதியாக தேக மொழியில் வந்த விஷயத்தை முடித்துக்கொள்வது நல்லது. மணிரத்தினம் படத்தில் வரும் கதாபாத்திரங்கள் போல் ஒரு சொல் அல்லது பாதி வசனங்கள் பேசினால் போதும். முக்கியமாக வடிவேலாக மாறாதிருப்பது நல்லது. 9/11க்குப் பிறகு விமான நிலைய அதிகாரிகள் மொக்கு நகைச்சுவைகளைக் கேட்பதற்குத் தயாராக இல்லை. நானும் எந்த நாடகப் பள்ளியிலும் சொல்லித் தராத புன்னகையை என் முகத்தில் உருவாக்கிக்கொண்டு அவரை அணுகினேன். நம் ஊர் விதானையாருக்கு விண்ணப்பம் கொடுப்பது போல் என்னுடைய பயணச் சீட்டைத் தயவுடன் கொடுத்தேன். தரையில் உருண்டு புரளவில்லை. இன்றைய பயணச் சீட்டுக்கள் உயிரற்ற அச்சுப்படிவுகள். கணினியால் ஆக்குவிக்கப்பட்டவை. சாவு அறிவிப்புச் செய்தி துண்டறிக்கை போல் வெள்ளைத்தாளில் கருப்பு எழுத்துருவிலானவை. கணினி யுகத்துக்கு முன் விமானப் பயணச்சீட்டுக்கள் கல்யாணப் பத்திரிகைபோல் விதவிதமான நிறங்களில் ஒவ்வொரு விமான நிறுவனமும் வழங்கும். தபால் தலைகள் சேகரிப்பது போல் ஒரு காலகட்டத்தில் விமானப் பயணச்சீட்டுகளைச் சேகரிப்பது ஒரு விருப்பார்வ வேலையாக இருந்தது. கணினியின் உட்புகுவினால் அழிந்துபோனவைகளில் ஒன்று இந்தச் சேகரிப்புக் கலையாகும்.

என்னுடைய பயணச்சீட்டை மேலும் கீழுமாகப் பார்த்தவர், உங்கள் கடவுச்சீட்டு என்றார். எதற்குக் கடவுச்சீட்டு நான் திருப்பிக் கேட்டேன். இது ஒட்டகச் சிவிங்கிக்கு ஏன் கழுத்து நீண்டது என்று கேட்பது போன்றது. டப்ளின்தானே போகிறேன், பலமுறை போயிருக்கிறேன், கடவுச்சீட்டைப் பற்றி ஒருவருமே கேட்டதில்லை என்றேன். அது முன்பு, இப்பொழுது எல்லாம் மாறிவிட்டது, ஒன்பது பதினொன்று என்றார். அவர் ஒன்பது பதினொன்று என்று சொன்னது மும்பாய் பணயக்காரரின் மறைபுதிரான புதைந்த பாஷை போல் பட்டது. அவர் என்னைக் கூர்ந்து பார்த்தார். அவருக்கு நான் இன்னும் மின்சாரமே வராத அமேசான் காடுகளில் இருந்து வந்தவன் போல் தோன்றியிருக்கலாம். இனி என்ன செய்யலாம் என்று யோசித்தபோது உங்களை விசாரிக்கவேண்டும், ஒரு அறையின் எண்ணைச் சொல்லி அங்கே போகச்சொன்னார்.

அந்த அறைக்குப் போனதுந்தான் தெரிந்தது. இது இரண்டாம் பரிசோதனை இடம் என்று. எல்லைப் பாதுகாப்பு அகராதியில் இரண்டாம் பரிசோதனை உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் உத்தரிப்பு ஸ்தலம் போன்றது. இறந்த ஆன்மாக்களுக்கு நியாயம் தீர்க்கும் இடம். அங்கிருந்தவர்களைப் பார்த்தேன். ஏழு அல்லது எட்டுப் பேர்கள் இருந்திருப்பார்கள். எதிர்பார்த்தபடி எல்லோருமே கறுப்பு அல்லது பழுப்பு நிறம். என் நினைவில் ஷாரூக் கான், கமலஹாசன், அப்துல் கலாம் வந்து போனார்கள். மாற்று கிரகங்களில் வசிக்கிறவர்களுக்கு மட்டும். இவர்கள் எல்லோரும் அமெரிக்கா சென்றபோது எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளால் இரண்டாம் பரிசோதனைக்கு உட்பட்டவர்கள். ஷாரூக் கானுக்கு அந்தப் பாக்கியம் இரண்டு தடவை கிட்டியது. இங்கிலாந்திலிருக்கும் எந்த அகதிகள் தடுப்புக் காவல் நிலையத்துக்கு என்னை அனுப்பப் போகிறார்கள் என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

என்னுடைய பெயர் கொத்துரொட்டி செய்யப்பட்டு அழைக்கப்பட்டது. ஒரு தனி அறைக்குப் போனேன். உள்ளே இருந்த இருவரைப் பார்த்ததும் என் இரத்த அழுத்தம் துபாயிலிருக்கும் Burj Khalifa நெடிய கட்டட அளவுக்கு உயர்ந்தது. இருவரும் பிரிட்டிஷ் ஆசியர்கள். கால்களை இறுக்கிப் பிடிக்கும் புட்டுக்குழல் போல் கால்சட்டை அணிந்திருந்தார்கள். பிரிட்டிஷ் ஆசியர்கள் தோளில் மரத்துண்டுடன் பிறந்தவர்கள். என்னுடைய பயணங்களில் இவர்கள் குடிவரவுப் பரிசோதனையை அதிகார மேசை யிலிருந்ததால் தவிர்த்திருக்கிறேன். இவர்களுடைய வேலை ஒப்பந்தத்தில், பழுப்பு நிறமுடையவர்கள் ஐக்கிய இராச்சியத்துக்குள் நுழைந்தால் வாட்டி எடுக்கவேண்டும் என்று கட்டாய நிபந்தனையாகச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். வந்தேறிகளை வறுத்தெடுப்பதை ஒரு கலையாக மாற்றி யிருக்கிறார்கள். நிச்சயமாக இவர்களிடையே அன்னை தேரேசாக்கள் இருப்பார்கள். இதுவரை நான் சந்திக்கவில்லை. இவர்கள் ஆங்கில அரசின் மழுப்பலான பல்பண்பாட்டுக் கொள்கையின் மேலீடான மேற்கோள்கள். சம்பிரதாயப்படி அவர்களே தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் சொன்ன பெயர்கள் தாரீக், முகமது.

# ஒரு பெண் நாடோடியின் கதைகள்

டிசே தமிழன்

Tales of a Female Nomad: Living at Large in the World By Rita Golden Gelman

அநேகமாகப் பயணங்களைப் பற்றி எழுதியவர்கள், ஒரு குறிப்பிட்ட காலம் வரை பல்வேறு நாடுகளுக்குப் பயணஞ் செய்துவிட்டு, மற்றவர்களைப் போல ஒரு சாதாரண நாளாந்த வாழ்க்கை வாழ்வதற்கு வந்துவிடுபவர்களாக இருப்பார்கள். அநேகர் தமது துணையைப் பயணங்களிடையே கண்டுகொண்டவர்களாகவோ அல்லது இணையாகப் பயணம் செய்திருப்பின் அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்க அன்றாடங்களுக்குத் திரும்பியிருப்பதையோ பல பயண நூல்களில் வாசித்திருக்கின்றேன். ஆனால் ரீட்டாவின் இந்த நூல் இதுவரை நான் வாசித்த பயண நூல்களில் இருந்து வித்தியாசமானது. ரீட்டா கிட்டத்தட்ட பதினைந்து வருடங்கள் ஒரு 'நாடோடியாக' அலைந்து திரிந்ததை இதில் எழுதியதோடல்லாது இப்போதும் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் நீண்டகாலம் தங்காது தொடர்ந்து 'ஒரு உரிய முகவரியின்றி'ப் பயணித்தபடியே இருக்கின்றார்.



ரீட்டா சிறுவர்களுக்கான நூல்களை எழுதுகின்ற ஒரு எழுத்தாளர். அவரது 45ஆவது வயதில், அவரின் குழந்தைகள் இருவரும் வளர்ந்து பல்கலைக்கழகம் செல்கின்ற காலகட்டத்தில் குடும்பவாழ்க்கையில் அலுப்பு ஏற்பட, கணவரைப் பிரிந்து முதன்முதலில் இரண்டு கிழமைகள் மெக்ஸ்சிக்கோவிற்குத் தனியே பயணம் செய்கின்றார். இதுவரை பத்திரிகை ஆசிரியராக இருக்கும் கணவரோடு உயர்மட்டங்களில் நடக்கும் கொண்டாட்டங்களிலும் / இரவு விருந்துகளிலும் பங்குபற்றிய ரீட்டாவிற்கு அவை எல்லாவற்றிலுமிருந்தும் ஓர் இடைவெளி தேவைப்படுகின்றது. இரண்டு வாரங்கள் எனத் தொடங்கும் பயணம், கணவரின் முகந்திருப்பல்களால் இரண்டு மாதங்களாக மாறுகின்றது.

ரீட்டா ஏற்கனவே மானுடவியலில் முதுகலையும் படித்திருந்ததால், அவர் ஏனையோர் வழமையாகப் போகும் இடங்களுக்குப் போகாது, மெக்ஸ்சிக்கோவின் பூர்வகுடிகள் வசிக்கும் Zapotec கிராமத்துக்குச் செல்கின்றார். அங்கே செல்லும்போது அவருக்கு அவர்களின் மொழி தெரியாதது மட்டுமில்லை, நண்பர்கள் என்றும் கூட அங்கு எவருமில்லை. ஆனால் அங்கே போய் ஒரு மாதத்திற்கு மேலாகத் தங்குகின்றார். முதலில் அவரை ஏற்றுக்கொள்ளாது புறக்கணிக்கும் அந்த மக்கள், பிறகு அவர்களின் கலாசார முறைப்படி ஆடைகளை அணியத்தொடங்கும்போது ஏற்றுக்கொள்ளத் தொடங்குகின்றனர். இவ்வாறு முதலாவது தனிப்பயணத்தையே வித்தியாசமாகச் செய்யும் ரீட்டா, மீண்டும் அமெரிக்கா திரும்பும்போது, அவரின் கணவர் மணவிலக்குக் கேட்க, அது நிறைவேறியவுடன் ஒரு நாடோடியைப் போலப் பயணிக்கத் தொடங்குகின்றார்.

அடுத்த பயணத்தில் குவாத்தமாலா, ஈக்குவடார், நிக்கரகுவா போன்ற பல நாடுகளுக்குப் பயணிக்கின்றார். நிக்கரகுவாவில் புரட்சி நடந்து அமெரிக்காவில் அந்தப் புரட்சி பற்றி வேறொரு கதை சொல்லப்பட்டிருக்க, ரீட்டா அந்த மக்களுக்குள் சென்று அவர்கள் எதை உணர்கின்றார்கள் என்பதை உள்ளபடி எழுதுகின்றார். ரீட்டா நிக்கரகுவாவிற்குப் போகின்ற காலம் எண்பதுகளின் பிற்பகுதியாக இருக்கின்றது. ரீட்டா இடங்களைப் பார்ப்பதைவிட மக்களையும், அவர்களின் கலாசாரங்களையும், உணவுவகைகளையும் கற்றுக்கொள்ள ஆர்வங்காட்டுவதோடு அந்தந்த நாட்டு மக்களின் பேசுமொழியையும் கற்றுக்கொள்கின்றார்.

எங்கு போயினும் மிகவும் வறுமையான, மற்றவர்கள் அருகில் சென்று பார்க்கத் தயங்கும் மனிதர்களிடையே சென்று ரீட்டா தங்குகின்றார். அவர்களில் ஒருவராகத் தன்னை மாற்றிக்கொள்கின்றார். இதற்கு அவர் கற்றுக்கொண்ட மானுடவியல் அவரையறியாமலே உதவிக்கொண்டிருக்கின்றது. ஒருமுறை ஓரிடத்தில் கணவர் மனைவியை அடிப்பதை உணர்கின்ற ரீட்டாவிற்கு இந்த விடயத்தில் எப்படி இடையீடு செய்வது என்பதற்கும் பிறரின் கலாசாரத்திற்குள் எளிதில் நுழையக்கூடாது என்கின்ற மானுடவியலில் அடிப்படைப்பண்பு நிதானமாக யோசிக்கவைக்கிறது.

இவ்வாறு ரீட்டா பல்வேறு நாடுகளுக்கு அலைந்து திரிந்ததை எழுதினாலும் என்னை மிகவும் கவர்ந்தது அவர் தென்கிழக்காசியாவுக்குச் செய்யும் பயணங்களின் பகுதியேயாகும். ரீட்டா கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் பாலியில் தங்கி வாழ்ந்திருக்கின்றார். அந்தக் காலப்பகுதியிலேயே அவர் மனிதர்கள் அவ்வளவு எளிதாக நுழையமுடியா இந்தோனேசியாக் காடுகளுக்குள் அதை வருடக்கணக்காய் ஆய்வு செய்யும் குழுவோடு சென்று ஒரங்குட்டான் குரங்குகளைப் பற்றிய மிக அற்புதமான விவரணைகளை நமக்குத் தருகின்றார். அவர் செய்கின்ற ஒவ்வொரு பயணமும் அவர் சிறுவர்களுக்குக் கதைகளை எழுதுகின்றபோது புதிய சாளரங்களைத் திறந்து விடுகின்றன.



பாலியில் அழிந்துகொண்டு போகும் அரச பரம்பரையினரின் வீட்டில் தற்செயலாகத் தங்க (ஒருவகையில் அது நமது சிற்றரசர்கள் போன்றது) ரீட்டா பிறகு அந்த அரச பரம்பரையின் கதையை நமக்குச் சொல்ல விரும்புகின்றார். அரசபரம்பரையின் கடைசி வயோதிபர் அந்த நகரிலே இருக்க அவரது பிள்ளைகளோ இந்தோனேசியாவின் தலைநகருக்கு வசதி வாய்ப்புக்கள் தேடிக் குடிபெயர்ந்துவிட்டிருக்கின்றனர். இந்த வயோதிபரும் இல்லாமல் போனால் இந்த அரசபரம்பரையின் கதையை வெளியுலகில் யாரும் அறியமாட்டார்களென ரீட்டா அதை ஒரு நூலாகக் கூட எழுத விரும்புகின்றார். ஆனால் அரசபரம்பரையின் சொல்லக்கூடாத இரகசியங்களைச் சொல்வதால் கறுப்பு மாந்திரீகத்தை அந்த அரசரின் சகோதரர் செய்துவிட்டார் என்ற அச்சத்தில் அந்தக் கதை நூலாக வெளிவருவதை அந்த அரசரே வேண்டாமெனப் பிறகு நிறுத்திக் கொள்கின்றார். எனினும் ரீட்டா அந்த வயோதிபரைத் தனது வாழ்க்கையின் பல்வேறு விடயங்களுக்கான ஒரு ஆசானாகக் கொள்கின்றார். அந்த அரசர் இறந்துபோனபின்னும் ரீட்டா அந்த வீட்டிலேயே பல வருடங்கள் தங்கியிருக்கின்றார்.

இவ்வாறு அவர் பாலியில் இருந்தாலும் பாலி மக்கள் இன்னும் கடைப்பிடிக்கும் வர்ணாசிரமத்தின் படிநிலைகளைப் பற்றியும் விரிவாகக் குறிப்பிடுகின்றார். சாதியின் கடைநிலையில் இருக்கும் மக்கள் தங்களிடையேயும், தங்களின் மேல்நிலையில் இருக்கும் மனிதர்களோடும் எப்படி மொழியில் வேறுபாடு காட்டிக் கதைக்கின்றனர் என்பதையும் எழுதுகின்றார். இந்தப் படிநிலைகள் இருப்பதாலேயே அவர் பாலியில் அந்தப் பிரதேசத்து மக்களின் மொழியைக் கற்பதைத் தவிர்த்து, இந்தோனேசிய மொழியைக் கற்றுக்கொள்ளவும் விரும்புகின்றார்.

இவ்வாறே அவர் வேறு சில ஜேர்மனிய நண்பர்களோடு இந்தோனேசியாவின் அடர்ந்த காடுகள் / மலைகளுக்குள் சாகசப் பயணம் செய்கின்றார். உண்மையில் அது பப்புவா நியூகினியாவின் ஒரு பகுதி என்றாலும், 60களில் ஐநா சபை அதை அரைவாசியாகப் பிரித்து இந்தோனேசியாவுக்குத் தாரை வார்த்திருக்கின்றது. அந்தப் பூர்வகுடிமக்கள் பப்புவா நியூகினியாவின் மண்ணிற மக்களோடும் கலாசாரத்தோடும் நெருக்கமான பிணைப்புக்கள் கொண்டிருக்கின்றபோது



இந்தோனேசியாவுக்கு எந்தவகையிலும் தொடர்பில்லாத அவர்களின் நிலப்பரப்புக்களைத் தாரை வார்த்ததைக் கடுமையாக ரீட்டா இந்நூலில் விமர்சிக்கின்றார். ஒன்றுமே அறியாத மிகுந்த அப்பாவியான மக்களை இந்தோனேசியா அரசும் / பொலிசும் சித்திரவதைகள் செய்து இரண்டாந்தர மக்களாக நடத்துவதைக் கண்டு ரீட்டா அதிர்ச்சியடைகின்றார். அம்பையும் வில்லையும் தவிர வேறெந்த ஆயுதத்தையும் அறியாத அந்தப் பூர்வகுடிகள் என்றோ ஒருநாள் தமது சந்ததிகள் போராடி இந்தோனேசியா அரசிடமிருந்து விடுதலை பெறும் என்று நம்பிக்கை கொள்கின்றனர். எனினும் ரீட்டா அந்தக் கனவு என்றுமே நிறைவேறாத கனவு என்பது மட்டுமில்லாது இந்தப் பூர்வகுடிகளில் வளமான நிலமும், கலாசாரமும் இந்தோனேசியா அரசால் விரைவில் அபகரிக்கப்படப்போகின்றது என்பதையும் அறிந்துகொள்கின்றார்.

ரீட்டா செய்கின்ற பயணங்கள் எல்லாம் 80களின் பிற்பகுதியிலும், 90களிலும் நடைபெறுவதாகும். இன்று தொலைநுட்பம் உலகையே ஒரு சிறுகிராமமாகச் சுருக்கியபின் இப்படியான பயணங்களைச் செய்வது அவ்வளவு கடினமில்லை. ஆனால் அன்று அவ்வளவு வசதிகள் இல்லாதபோது, தனித்தும், மொழிகூடத் தெரியாத நிலப்பரப்புகள் எங்கும் அலைந்தும் திரிந்த ரீட்டாவின் துணிச்சல் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதுதான். இந்தப் பயண நூலின் மூலமாக பயணஞ்செய்வதற்கு வயது ஒரு தடை இல்லை என்பதையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ரீட்டா நமக்குத் தெரியப்படுத்துகின்றார். வசதியான ஹொட்டல்களை விட்டு backpack ஆகத் திரியும்போது அவர் சேர்ந்து திரிகின்ற நண்பர்கள் அனைவருமே அவரை விட அரைவாசி வயதுடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் ஒருபோதும் ரீட்டாவை விலத்துவதில்லை. தங்களோடு சேர்த்தே அவரையும் கூட்டிச் செல்கின்றார்கள். சிலவேளைகளில் வயதின் காரணமாக வேகமாகப் போகாதபோதும் அவருக்காகத் தமது பயணங்களை அவர்கள் மெதுவாக்குகின்றனர். அதேபோல இன்னொரு அவதானத்தையும் ரீட்டா இந்தப் பயணங்களிடையே முன்வைக்கின்றார். முப்பது வயதுக்கு உள்ளேயுள்ள ஆண்களே நிறையப் பயணிக்கின்றார்கள். தன்னைப் போன்ற 40ற்கு மேற்பட்டவர்களில் பெண்களே தனித்துப் பயணிக்கின்றனர் என்றும், ஆண்களை அவ்வளவாகக் காணவில்லை என்றும் குறிப்பிடுகின்றார். சிலவேளைகளில் ஆண்களுக்கு 40களில் அலுப்பு வந்து வீட்டு ஷோபாவில் வசதியாக ஓய்வெடுத்துக்கொள்கிறார்கள் போலுமென நகைச்சுவையாக எழுதிச் செல்கின்றார்.

இது சற்று நீண்ட நூல். கிட்டத்தட்ட அவரது பதினைந்து வருட அலைதலை மிக விரிவாகச் சொல்கின்றது என்பதால் அந்தளவுக்கு நீண்டிருக்கிறது. சிலவேளைகளில் இரண்டு நூல்களாக எழுதியிருந்தால் நன்றாக இருந்திருக்குமோ என்று தோன்றியது. ரீட்டா இஸ்ரேலுக்குப் போய் தனது வேர்களின் பகுதிகளைத் தேடுவதையும், தாய்லாந்திற்குப் போய் அவர்களின் மரபான உணவுவகைகளைப் பழகுகின்ற பகுதிகளையும் எனக்கு அவ்வளவு ஆர்வமில்லாததால் வாசிப்பில் மிக விரைவாக நான் தாண்டிப்போய்க் கொண்டிருந்தேன்.

இந்த நூலை எழுதி கிட்டத்தட்ட இப்போது எண்பதுகளை எட்டப்போகும் ரீட்டா இன்னும் பயணம் செய்வதில் அலுக்காதவராக இருக்கின்றார் என்பது குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது. மேலும் தான் பயணிக்கும் எந்த நிலப்பரப்பு மக்கள் மீதும் தனது புரிதல்களை / அறிதல்களைத் திணிக்காது அவர்களை அவர்களின்போக்கில் ரீட்டா விளங்கிக்கொள்வதுந்தான் இந்தநூலில் இன்னும் அழகானது.

பப்புவா நியூகினியாவின் (இந்தோனேசியாவின்) ஒரு அடியாழக் காட்டுக்குள் ரீட்டா பயணித்துக்கொண்டிருப்பார். அப்போது இதுவரை வேற்று மனிதர்களைக் காணாத ஆதிகுடிகளை இவர் சந்திக்கின்றார். மேலும் இவர் நிறமும் வேறானதாக இருப்பதால் இவரைச் சந்திக்கும் ஒரு பெண்ணும் குழந்தையும் இவரைக் கண்டு தொலைவில் பயந்துபோய் நிற்கின்றனர். ரீட்டா அவர்களை நெருங்க என்ன வழி என யோசிக்கின்றார். அவர் தனது மேற்சட்டையைக் கழற்றிவிட்டு அந்தப் பெண்ணைப் போல மார்புகளை மறைக்காது விடுகின்றார். இப்போது அந்தப் பெண்ணும், குழந்தையும் அவரின் மார்புகளைத் தடவிப்பார்த்து இவரும் தம்மைப் போல ஒரு மனிதர்தானென உணர்ந்து ஸ்நேகமுடன் சிரிக்கின்றனர்.

இவ்வாறான எளிய மனிதர்களையும், நாம் அருகில் பார்த்திராத பூர்வகுடிகளின் பழக்கவழக்கங்களையும் இன்னும் பல அற்புதத் தருணங்களையும் இந்த நூலில் பல்வேறு இடங்களில் காணக்கிடைப்பதால் இதை வாசிப்பது மிகுந்த சுவாரசியமாக இருக்கிறது.

# அந்திமக் காலத்தின் இறுதி நேசம்

தக்ஷிலா ஸ்வர்ணமாலி,

தமிழில்: எம். ரிஷான் ஷெரீப்

**எழுத்தாளர் பற்றிய குறிப்பு:**

தக்ஷிலா ஸ்வர்ணமாலி

சமூகம் சார்ந்த விடயங்களை மிகுந்த அவதானிப்புடன் எழுதி வரும் எழுத்தாளரும், கவிஞருமான இவர், பாடசாலையொன்றில் ஒரு பட்டதாரி ஆசிரியையாகக் கடமையாற்றி வருகிறார். மூன்று கவிதைத் தொகுப்புகள், இரண்டு சிறுகதைத் தொகுப்புகள், இரண்டு சிறுவர் இலக்கியப் பிரதிகள், மூன்று சமூகவியல் கட்டுரைத் தொகுப்புகள், ஒரு நாவல் என இதுவரையில் பல தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.



அந்தத் தெருவினிடையே ஓரிடத்தில் அந்த முதியவர் இருந்தார். அந்தத் தெருவினிடையே ஓரிடத்தில் அந்த முதியவரது வீடும் இருந்தது. அந்த வீடானது, அந்த முதியவரின் பின்புறமாக வீற்றிருந்தது. வீட்டைச் சூழவுமிருந்த வீட்டுத் தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்த நுழைவாயிற்கதவின் அருகில் அந்த முதியவர் சக்கர நாற்காலியொன்றில் அமர்ந்திருந்தார். வீட்டு முற்றத்தில் முதுமையடைந்திராத மரங்கள் ஆங்காங்கே நிமிர்ந்திருந்து முதியவரைப் பார்த்துக்கொண்டிருந்தன. மரங்களிடையே இடைவெளி காணப்பட்டது. நன்றாகப் பராமரிக்கப்படும் பூச்சாடிகள் சிலவற்றை வீட்டை நெருங்கும்போது காணக் கிடைத்தது. சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த அம் முதியவர், கண்ணிமைக்காமல் அத் தெருவையே பார்த்துக்கொண்டிருந்தார். இப்பொழுது யாராவது தன்னைப் பார்க்கக் கூடுமென அம் முதியவர் பார்த்துக்கொண்டேயிருந்தார்.

தெருவில் அந்தளவு ஆட்கள் நடமாட்டமில்லை. எப்போதாவது யாராவது வருவார்கள். ஓரிருவர்

**“அப்படியிருந்தாலும் அவ்வளவுதாங்க. அவளும் புருஷனோட போய், குழந்தை பெத்து வளர்த்து.... அப்புறம் எங்க நேரமிருக்கும் எங்க கூட இருக்க?”**

முதியவரை ஏறெடுத்துப் பார்ப்பார்கள். அநேகமானவர்கள் முதியவரைக் கண்டுகொள்ள மாட்டார்கள். மிகவும் அபூர்வமாக எவராவது ஒருவர் நின்று ஏனோதானோவென்று ஓரிரு வசனங்களை முணுமுணுத்துவிட்டுச் செல்வார். முதியவர் பூரித்துப் போக மாட்டார். நடுத்தர வயதைத் தாண்டிக்கொண்டிருந்த பெண்ணொருத்தி, இடைக்கிடையே முதியவரது வீட்டினுள்ளிருந்து எட்டிப் பார்ப்பாள். அவர் அந்த இடத்தில் அப்படியே இருப்பார். அவள் மீண்டும் தனது வேலைகளைத் தொடர வீட்டுக்குள் செல்வாள்.

அந்த நுழைவாயிலையொட்டி அமைந்திருந்த தெரு, நிழல் அடர்ந்தது. அந்தத் தெருவின் இருமருங்கிலும் மரங்கள் பலவும், கட்டடங்கள் சிலவும் நின்றுகொண்டிருந்தன. அந்தத் தெருவில் பேரூந்து ஓடவில்லை. அந்தத் தெருவில் இரண்டு, மூன்று மைல் தொலைவில் அந்த இளம்பெண்ணின் வீடிருந்தது. அந்த வீட்டுக்குச் செல்ல இன்னுமொரு வழியுமிருந்தது. அந்தப் பாதையின் இருமருங்கிலும் கட்டடங்கள் பலவும், மரங்கள் சிலவுமாக நின்றுகொண்டிருந்தன. அந்த இளம்பெண் ஒவ்வொரு நாளும் பேரூந்திலேறி அந்தப் பாதையின் வழியேதான் பயணித்து வந்தாள். ஒரு நாள் அவள் பேரூந்தில் ஏறாது தவிர்த்துவிட்டு, இடப்பக்கத் தெருவில் நடந்து சென்றாள். பேரூந்துகள் ஓடாத, மரங்கள் அடர்ந்த அத் தெருவின் நிழல் வழியே மேனி நுழைத்து அவள் தனது வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அந்த மூன்று, நான்கு மைல் தூரத்தையும் நடந்து கடக்கவேண்டும். அந்தத் தெருவினிடையே ஓரிடத்தில் அந்த முதியவர் இருந்தார். அந்தத் தெருவினிடையே ஓரிடத்தில் அந்த முதியவரது வீடும் இருந்தது. முற்றத்தின் மூலையிலிருந்த நுழைவாயிற்கதவின் அருகில் அந்த முதியவர் சக்கர நாற்காலியொன்றில் அமர்ந்திருந்தார்.

அந்த இளம்பெண் மிகவும் மெதுவாக அடி வைத்து நடந்தாள். அவளைக் கண்டதுதொட்டு தன்னைத் தாண்டிச் செல்லும்வரை அந்த முதியவர் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார். அவள் அவரைக் கண்டாள். அவள் புன்னகைத்தாள். அது அவள் எல்லோருக்கும் வழங்கும் புன்னகை. முதியவரும் புன்னகைத்தார். அது அவரது நினைவுக்கெட்டிய விதத்தில் எவருக்கும் வழங்கியிராப் புன்னகை. இளம்பெண்ணின் நடைவேகம் மெதுமெதுவாகக் குறைவதை முதியவர் அவதானித்தார். அவள் திரும்பினாள். முதியவர் பூரித்தார்.

“ஐயாவை எங்கேயோ பார்த்த ஞாபகம்.”

“எனக்கும் மகளை எங்கேயோ பார்த்த ஞாபகம்.”

“நான் இதற்கு முன்பு இந்த வழியா நடந்து போனதில்ல.”

“பக்கத்திலா இருக்கீங்க?”

“இங்கிருந்து ரெண்டரை மைல் தூரமிருக்கும். மூவாற்றைக் கடந்து போகணும்...”

“நடை ஏன்?”

“சும்மா தோணுச்சு. அந்தத் தெரு போல இல்ல இந்தத் தெரு. இந்தத் தெரு ரொம்ப இதமாயிருக்கு.”

“கால் வலிக்குமே?”

“இல்ல.”

“இயலுமான காலத்தில நானும் நடந்திருக்கேன் வேண்டிய மட்டும்.”

“ஐயாவுக்கு மட்டுமில்ல... எனக்கும் கூடத்தான் நடக்கவே முடியாத ஒரு காலம் வரும். எல்லோருக்குமே அப்படித்தானே?”

“உள்ளே வாங்க. தேத்தண்ணி ஒண்ணு குடிச்சுட்டுப் போகலாம். பொஞ்சாதி இருக்கா.”

“இப்ப முடியாது. இன்னொரு நாள் வரேன்.”

“இப்படித்தான் சொல்வீங்க... ஆனா வர மாட்டீங்க.”

“இல்ல... நிஜமா வரேன். இன்னிக்கு ரொம்ப தாமதமாகிட்டுது. வரத் தாமதமாகும்னு வீட்ல சொல்லக் கூட இல்ல. வீட்ல பயப்படுவாங்க.”

“திரும்ப எப்ப வருவீங்க?”

“முடியுமானப்போ வருவேன். இப்ப போயிட்டு வரேன்.”

பூ அலங்காரச் சேலை. இருபுற வகிடெடுத்து ஒற்றைப் பின்னலாக்கிய பொலிவற்ற கூந்தல். கோப்பிப் பூ புன்னகை. மெல்லிய தென்றலுக்கு அசையும் அரச மரக் கொழுந்து போன்ற விழிகள். தங்க நிறத்தில் பளபளக்காத, பல காலமாக வெயிலில் வாடி நிறமிழந்த கன்னங்கள். எனினும் உத்வேகத்தில் துடிக்கும் கன்னங்கள். முதியவருக்குள் அந்த இளம்பெண் அடிக்கடி தென்பட்டாள்.

‘முடியுமானப்போ வருவேன். இப்ப போயிட்டு வரேன்.’

நடுத்தர வயதைக் கடந்து கொண்டிருந்த பெண்மணி அவருக்கு சேவகம் செய்யும்போதும், அவள் அவரைப் படுக்கைக்குக் கூட்டிச் செல்லும்போதும், அவருக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றும்போதும், அவருக்கு அந்த இளம்பெண் தென்பட்டாள். முதியவர் இரு விழிகளையும் திறந்து நடுத்தர வயது பெண்மணியை ஏறிட்டுப் பார்த்தார்.

‘என்னுடனேயிருந்து கிழவியாகிட்டாள். ஒரு காலத்தில் அந்தப் பிள்ளையை விட அழகாக இருந்தாள். பாவம் அந்தப் பிள்ளை. நடந்தே போயிருப்பாள். அந்தத் தெருவில் பேரூந்து போகும்போது எதற்காக இந்தத் தெருவில் நடந்து வந்தாளோ? நடந்து வந்ததுவும் நல்லதுதான். இல்லாவிட்டால் நாங்கள் எவ்வாறு சந்தித்திருக்க முடியும்? அங்கேயும் இங்கேயும் பராக்கு பார்த்துப் பார்த்து மெதுமெதுவாக நடந்துபோனாள். ரொம்ப தூரம் நடக்கவேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேயில்லை. இன்றுதான் இந்தத் தெரு வழியே முதன்முறையா போயிருக்காள்னா திரும்பவும் வருவாளோ மாட்டாளோ என்னவோ. ஆசைக்கு ஒரு தடவை நடந்து பார்த்திருப்பாள். அதற்காக திரும்பவும் இதே வழியில் வருவாளா என்ன?! ஆனா வரேன்னு சொன்னாளே. ஆட்டோ ஒண்ணுலயாவது வருவாள் ஒருநாள்.’

“மகன் இந்தத் தடவை விடுமுறைக்காவது வருவானா?”

“போன தடவையும் வரேன்னு சொல்லிட்டு வரலையே. நீங்க அவனை எதிர்பார்த்துட்டிருக்க வேணாம். வந்தாலும் ஒண்ணுதான். வரலைன்னாலும் ஒண்ணுதான்.”

“மகன் வர்றது உனக்குப் பிடிக்கலைல்ல? மகனோட சின்ன வயசுல கூட உனக்குப் போட்டி மகனோடுதான். மகனை விடவும் உன் மேல நான் பாசமா இருக்குறதைப் பார்க்குறதுதான் எப்பவும் உன்னோட ஆசை.”

“அப்படியொண்ணும் இல்லைங்க. அந்தக் குழந்தையை நல்லபடியா வளர்த்தெடுக்கணும்னுதானே உங்க விருப்பமிருந்தது.”

“மகளொருத்தியாவது பிறந்திருந்தா நல்லாயிருந்திருக்கும்... இல்ல?”

“அப்படியிருந்தாலும் அவ்வளவுதாங்க. அவளும் புருஷனோட போய், குழந்தை பெத்து வளர்த்து.... அப்புறம் எங்க நேரமிருக்கும் எங்க கூட இருக்க?”

“அந்தப் பிள்ளைக்குன்னா நேரமிருக்கும் போல.”

“எந்தப் பிள்ளைக்கு?”

“வரேன்னு சொல்லுச்சே.”

“யாரு?”

“உன்னாலயும் முடியலை இப்போ எனக்கு தனியா சேவகம் செய்ய.”

“எனக்கு இன்னும் சக்தியிருக்குங்க. உதவிக்கு நம்பிக்கையான ஒருத்தர் கிடைக்குறதும் லேசில்ல இந்தக் காலத்தில.”

“அதைவிட நல்லது நாங்க ரெண்டு பேரும் இப்படியே தனியா இருக்குறது. நான் அந்தப் பிள்ளையைப் பற்றி யோசிச்சுட்டிருந்தேன்.”

‘என் புருஷனோட ஞாபக சக்தி குறைஞ்சிட்டு வருது.’ நடுத்தர வயதைத் தாண்டிக்கொண்டிருந்த அந்தப் பெண்மணி நினைத்துக்கொண்டாள்.

‘அந்தப் பிள்ளை கனவிலாவது வந்தா நல்லாயிருக்கும். அவ்வளவு சீதேவியான, இரக்கமான பிள்ளையை ரொம்ப நாளைக்குப் பிறகு கண்டிருக்கிறேன். எப்பவும் சிரிச்சுக்கிட்டேயிருக்கா. அது போலிச் சிரிப்புமில்ல. இதே தெரு வழியே நாளைக்கும் வந்தா நல்லது. திரும்ப வரும்போது நகரத்திலிருந்து ஆட்டோ ஒண்ணுல வரச் சொல்லணும். ஆட்டோ காசு நாம கொடுக்கலாம்னு பொஞ்சாதிக்கிட்ட சொல்லணும்.’

முதியவர் அந்த இளம்பெண்ணைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டேயிருந்ததனால், நள்ளிரவும் கடந்த பிறகே அவருக்கு நித்திரை வந்தது. எனினும் கனவில் அவள் வரவில்லை. காலை நேரம் முழுவதும் அவர் அதற்காகக் கவலையுடன் காணப்பட்டார்.

“என்னை வாசலுக்குப் பக்கத்துல விட்டுட்டு உன் வேலைகளைக் கவனியேன். ஒண்ணுக்குப் போகணும்னா நான் உன்னைக் கூப்பிடுறேன்.”

மத்தியானமாகும்போது முதியவர் உத்தரவிட்டார். நடுத்தர வயதைத் தாண்டிக்கொண்டிருந்த பெண்மணி அந்த முதியவரை சக்கர நாற்காலியோடு நுழைவாயிலருகே தள்ளிக்கொண்டு வந்தாள்.

‘பொஞ்சாதிக்கிட்ட சொல்லி சாப்பாட்டையும், தண்ணீரையும் இங்கேயே கொண்டு வந்துடணும். சாப்பிடப் போற அந்த நேரத்துல, இந்த இடத்தை அந்தப் பிள்ளை தாண்டிப் போய்ட்டான்னா? இந்த நேரம்தான் அந்தப் பிள்ளை வேலை விட்டுப் போறான்னா அவள் எங்கே வேலை பார்க்கக் கூடும்? தோற்றத்தையும், வந்த நேரத்தையும் வச்சுப் பார்த்தா ஏதாவது ஸ்கூல்ல வேலை பார்க்கத்தான் அதிக வாய்ப்பிருக்கு’ என முதியவர் பார்த்துக்கொண்டிருந்தார். முதியவர் காத்துக்கொண்டேயிருந்தார்.

•

“போன கிழமை நீ அந்தத் தெரு வழியா நடந்து போனதைக் கண்டதா ஹாமினே சொன்னா?”

“அந்தப் பொம்பளை பட்டப்பகல்ல ஒரு மோகினியைக் கண்டாளோ என்னவோ?!”

“நீ அன்னிக்கு தாமதமாத்தான் வீட்டுக்கு வந்திருந்தாய். நான் வரப்போதான் நீ சேலை மாத்திட்டிருந்தாய்.”

“அன்னிக்கு ஸ்கூல்ல மாலை வகுப்பிருந்துச்சு.”

“என் காதுல பூ சுத்த இந்த டீச்சரால முடியாது.”

“அவ்வளவு சந்தேகமா என் மேல?”

“வேற ஆட்களைப் போல உனக்கு கள்ளப் புருஷன் இருப்பான்னு எல்லாம் எனக்கு சந்தேகம் இல்ல. ஆனா நீ என்கிட்ட பொய் சொல்றேன்னு மட்டும் புரியுது. நான் திட்டப் போறேனா என்ன? போற, வர்ற இடங்களை சொல்லிட்டுப் போ மெனிக்கா. அந்தப் பாழுந் தெருவுல ராத்திரி நேரம் ஒரு வாகனத்தைக்கூடக் கொள்ளையடிச்சாங்களாம். அந்தத் தெருவோரத்துல இருக்குற ரப்பர் தோட்டத்துலதான்



‘அந்தப் பிள்ளையோட வயசுல என் பொஞ் சாதியும் அந்தப் பிள்ளையை விட அழகா யிருந்தா. அந்தப் பிள்ளையோட கையில குடையொண்ணு கூட இருக்கல.’

முதியவர் காத்துக்கொண்டிருந்தார். முதியவர் நுழைவாயிலருகே அமர்ந்து பார்த்துக்கொண்டேயிருந்தார். அவள் வரவில்லை. முதியவர் மீண்டும் மீண்டும் வழி பார்த்துக்கொண்டேயிருந்தார். ஒருநாள் அவள் வந்தாள்.

“மகளுக்கு உடம்பு சரியில்லாமப் போச்சோ?”

“ஐயோ இல்ல ஐயா… வேலை கொஞ்சம் கூடிப் போச்சு. ஸ்கூல்ல பரீட்சை விடைத்தாளெல்லாம் திருத்துற வேலை நிறைய இருக்கு இந்தக் காலத்துல.”

ஒருத்தனைக் கொன்னு சடலத்தைக் கொண்டுவந்து போட்டிருந்தாங்க.”

“அது ராத்திரியில… இது பட்டப் பகல்.”

“எதுவாயிருந்தாலும் அந்தத் தெருவுல பூனை, நாய்கூட நுழையாத இடங்கள்தான் நிறைய இருக்கு.”

‘அந்த ஐயா என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாரோ தெரியாது. இருக்காது. இப்பொழுது என்னை ஞாபகமும் இருக்காது. என்னைப் போல ஒருத்தியைச் சந்தித்ததும் நினைவிருக்காது. வயதாகிவிட்டது அல்லவா? ஆனால் தவறியேனும் என்னை நினைவிருந்தால்?’

சோர்ந்து போன, கலங்கிய, உட்புதைந்த முதிய விழிகள். நீண்ட கூரிய மூக்கு. அகன்ற உதடுகள். மிக நெடுங்காலத்துக்குமுன் போர்க் காலத்தில் அந்த முதியவர் அதே அங்கங்களோடு பலம் மிக்க இளைஞனாக இருந்திருக்கக் கூடுமென திடீரென அந்த இளம்பெண்ணுக்குத் தோன்றியது. அவள் அந்த இளைஞனின் தோற்றத்தைச் சிந்தித்துப் பார்க்க முயற்சித்தாள். அந்த இளைஞனது உடலைக் கற்பனை செய்து பார்ப்பது ஒருபுறம் இருக்க, அந்த முதியவரது தற்போதைய உருவம்கூடத் தனக்குச் சரியாக நினைவி லில்லை என அவளுக்குப் புரிந்தது.

அவர் முதியவர். அந்த முதியவருக்கு அவளது கண் இமைகளையும், அகன்ற புருவங்களையும், மெல்லிய உதடுகளையும், சிறிய நாசியையும், வட்ட முகத்தையும், பின்னலிலிருந்து தப்பி கூந்தல் விழுந்திருந்த நெற்றியையும், அழகற்ற மேனியையும் ஒவ்வொன்றாக மிகச் சரியாக நினைவுபடுத்திப் பார்க்க முடிந்தது. ‘அந்தப் பிள்ளை அழகானவள்.’ முதியவர் காத்துக் கொண்டிருந்தார். முதியவர் நுழைவாயிலருகே அமர்ந்து பார்த்துக்கொண்டே யிருந்தார். அவள் வரவில்லை.

“ஸ்கூல்ல பாடம் நடத்துறவங்கன்னு எனக்கு தோணுச்சு. ஏன் மகள் இவ்வளவு தூரம் நடந்தே போறீங்க? பஸ்ல போகாம இந்த வழியாப் போற நாட்கள்ல ஆட்டோல போங்க. நான் காசு தரேன்.”

“ஐயோ வேணாம் ஐயா… எனக்கு ஒரு களைப்புமில்ல. இந்தத் தெரு ரொம்ப அமைதியான தெரு.”

“அன்னிக்கு நாங்க சந்திச்சு ஒரு மாதமிருக்கும் இல்லையா?”

“இல்ல ஐயா… ரெண்டு கிழமை கூட இல்ல.”

“அதை விடக் கூடுதலா இருக்கும்னு எனக்குத் தோணுச்சு. வாங்க உள்ளே போகலாம். இன்னிக்கு மனுஷி வீட்ல இல்ல. என்னை இங்கே உட்கார வச்சுட்டு டவுணுக்கு சீக்கிரமாப் போயிட்டு வந்துடறேன்னு சொல்லிட்டுப் போனா. மகள் என்னை உள்ளே கூட்டிட்டுப் போய், எனக்கும் சேர்த்து ஒரு தேத்தண்ணி ஊத்தித் தாங்க.”

“நான் ஐயாவுக்குன்னு சூப் தயாரிச்சு சுடுதண்ணி போத்தல்ல ஊத்தி எடுத்துட்டு வந்திருக்கேன்.”

“மகளே தயாரிச்சதுன்னா நல்ல சுவையாயிருக்கும்.”

“ஐயோ, எனக்குன்னா அவ்வளவு சுவையா சமைக்கவெல்லாம் தெரியாது ஐயா.”

“என்மேல உள்ள இரக்கத்துலதானே மகள் இதைத் தயாரிச்சீங்க? அதுவே போதும் எனக்கு. நாங்க உள்ளே போய்க் குடிப்போம் ரெண்டு பேருமா.”

இளம்பெண், முதியவரது சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டு வீட்டினுள்ளே போனாள். அந்த வீடு சற்றுப் பெரியதாக இருந்தது. உள்ளே நிறைய இடமிருந்தது. அவள் முதியவரின் முன்னால் அமர்ந்துகொண்டாள். போத்தலிலிருந்த சூப்பை கோப்பையில் ஊற்றிக் கொடுத்தாள்.

“மகள் பாதி குடிச்சுட்டுக் கொடுங்க.”

''ஐயோ அது சரியில்ல.''

''நாந்தான் சொல்றேன்ல.''

அவள், அவர் கூறியதைச் செய்தாள்.

''ஐயா ரொம்ப காலமா உடம்பு சரியில்லாம இருக்கீங்களா?''

''முன்பிருந்ததவிட இப்ப கொஞ்சம் நல்லாருக்கேன். முன்பு படுக்கையிலேதான் கிடந்தேன். எல்லா சேவகமும் என்னோட பொஞ்சாதிதான் செஞ்சிட்டிருக்கா. இப்ப கதிரையில நேரா உட்கார முடியும். கையைப் புடிச்சுக்கிட்டு எழுந்திருச்சு கட்டிலுக்கு மாறவும் முடியும். எனக்கு புற்றுநோயிருப்பது மூளையில்தானே. ஆபரேஷன் பண்ணாங்க. ஊசி மருந்துகளும் முடிஞ்சது. இப்ப மருந்து குடிச்சிட்டிருக்கேன்.''

முதியவரை நெருங்கி அமர்ந்திருந்த இளம்பெண், கதிரையின் பின்னால் சாய்ந்து அமர்ந்தாள். 'இனி வரத் தாமதிக்கக் கூடாது.' முதியவரின் பூரித்த விழிகளை, கலங்கிய விழிகளால் இளம்பெண் பார்த்துக்கொண்டிருந்தாள். முதியவர் இடைவிடாது கதைத்துக்கொண்டிருந்தார். நெடுங்காலமாக எவரிடமுமே கூறாதவற்றையெல்லாம் கூறிக்கொண்டிருந்தார். எவரிடமும் கூற முடியாதிருந்ததையெல்லாம் கூறிக்கொண்டிருந்தார். 'சுகவீனமுற்றிருந்ததால், முதியவராகத் தோற்றம் தருகிறபோதும் நிஜமாகவே அவ்வளவு வயதிருக்காது.' அவர் பழைய காதலிகளைக் குறித்தும், காதலர்களைக் குறித்தும்கூடக் கதைத்தார். அண்மையில் மரணித்த இறுதிக் காதலியைப் பற்றியும் குறிப்பிட்டார்.

''ஆஸ்பத்திரிக்கு வந்து ரொம்ப அழுதாள். உடம்புக்கு ரொம்ப முடியாம இருக்கும்போது ரெண்டு, மூணு வாட்டி வீட்டுக்கும் வந்திருந்தாள். இப்பவும் இருந்திருந்து யாராவது பார்க்க வருவாங்க. வந்தாலும் ஞாயிற்றுக்கிழமைதான் வருவாங்க. வீட்டுல ரொம்ப தனிமையாயிருக்கு. புத்தகங்களோ பத்திரிகைகளோ வாசிக்கவும் முடியாம பார்வை மங்கிடுச்சு. டீவி பார்த்துட்டிருக்குறதும் கஷ்டமா இருக்கு. அதுல இப்ப பார்க்குறதுக்கும் ஒண்ணுமில்ல. நான் காரணமா மனுஷிக்குக்கூட வெளியே எங்கேயும் போகக் கிடைக்குறதில்ல.''

''அவங்களுக்கு வெளியே எங்கேயாவது போகணும்னா சொல்லுங்க... ஐயாவப் பார்த்துக்க நான் வரேன். அவங்களுக்குப் போயிட்டு வந்துடலாம்.''

''அப்படி நடந்தா நல்லதுதான். அவ எங்கேயும் போனாலும் இல்லேன்னாலும் எங்ககூட இருந்துட்டுப் போக மகள் அடிக்கடி வாங்க. மகளோட வீட்டுல யாரெல்லாம் இருக்கீங்க?''

''நானும், அண்ணாவும் மட்டும்தான்.''

''அப்போ அண்ணாக்கிட்ட சொல்லி வைங்க.''

''அண்ணா ஒண்ணும் சொல்ல மாட்டார் ஐயா... அவருக்குப் புரியும்.''

'நானும் என் புருஷனும்னு சொல்லாம ஏன் அண்ணான்னு சொன்னேன்?' என அவளுக்குத் தோன்றியது. 'அது என் புருஷன்தானே? அண்ணா பழைய வீட்டில்தானே இருக்கிறார்? புருஷனைப் புருஷன்னு சொல்லியிருந்தால் என்ன நடந்திருக்கும்? அண்ணான்னு சொன்னதனால் புருஷன் அண்ணனாகி விடுவாரா என்ன?'

•

''வெளியே காணலைன்னுதான் உள்ளே வந்தேன். ஐயா தனியாவா இருக்கீங்க?''

''மகன் வந்திருக்கான். பொஞ்சாதி ஊருக்குப் போயிட்டா. என்னைப் பார்த்துக்க மகன் இருக்கான் இல்லையா? மனுஷி திரும்ப வர மாட்டாளோன்னும் பயமாயிருக்கு. அவ இருக்கும்போதுன்னா எனக்கு தூக்கம் வரும்வரைக்கும் தலையைத் தடவி விட்டுட்டேயிருப்பா. மகன் அப்படியில்ல.''

''ஐயா கட்டிலுக்கு வாங்க. நான் ஐயாவுக்கு நித்திரை வரும்வரைக்கும் தலையைத் தடவி விடுறேன். ஐயா எப்பவும் சாயந்தரம் கொஞ்சம் தூங்கி எழுந்திருப்பீங்க இல்லையா?''

''மகள் வந்திருக்குறப்ப எனக்குத் தூக்கம் அவசியமில்ல. எனக்கு மகளைப் பார்த்துக்கிட்டே விழிச்சிட்டிருக்குறதுதான் இப்ப தேவையாயிருக்கு.''

''மகனா இப்போ சமைக்கிறதெல்லாம்?''

''மகனுக்கு சமைக்கத் தெரியாது. அதுவும் மனுஷி சமைக்கிறதுபோல வராது இல்லையா? மகன் கடையிலிருந்து சாப்பாடு வாங்கி வருவார்.''

''நான் திரும்ப வர்றப்போ ஐயாவுக்கு சோறு சமைச்சு எடுத்துட்டு வரேன்.''

''கொண்டு வர வேணாம். இங்கேயே சமைச்சிடுங்க மகள்.''

''மகன் இன்னிக்கு சாப்பாடு வாங்கிட்டு வந்திருக்காரா?''

''இன்னுமில்ல. மகன் தூங்கிட்டிருக்கார்னு நினைக்கிறேன். நான் கூப்பிட்டா மட்டும்தான் அறையைவிட்டு வெளியே வருவார். அதுக்கும் பல தடவை கூப்பிட வேணும். மகள் இதை யாரிடமும் சொல்ல வேணாம்.''

''முடிஞ்சப்ப எல்லாம் நான் வரேன். நான் சமைச்சு முடிக்குற வரைக்கும் படுத்துக்குங்க ஐயா. இல்லேன்னா என்னோடு சமையலறைக்கு வாங்க.''

''எனக்கு ரொம்பத் தாமதமா ஒரு மகள் கிடைச்சிருக்கா. இதுக்கு முந்தி நாம சந்திச்சிருக்க வேணும்.''

''தாமதமாவாவது நாம சந்திச்சிக்கிட்டோமே ஐயா.''

''பொஞ்சாதியும் போயிட்ட பிறகு நீங்களும் இல்லேன்னா எனக்கு என்ன நடந்திருக்கும் மகள்? அந்தளவு அன்பான பொஞ்சாதியையும்விட நான் இந்த மகன் மேல பாசமா இருந்தேன். என்னோட மகன் வந்து, மோசமான வார்த்தைகளால மனுஷியை ரொம்பத் திட்டிட்டான். என் பொஞ்சாதி என்னைத்தான் நேசிச்சாளே தவிர என்னோட சம்பளத்தையோ, இந்த வீட்டையோ அல்ல

மகள். நான் இந்த சொத்துக்களையெல்லாம் என்னோட மகன் பேருக்குத்தான் எழுதி வச்சிருக்கேன்னு தெரிஞ் சிருந்தும் என் பொஞ்சாதி என்கூடத்தான் இருந்தா. மனசு நொந்து இப்ப அவ போயிட்டா. பொஞ்சாதி கூட இருக்கும்போதுகூட நான் தனியாத்தான் இருக்கேன்னு தோணுச்சு. மகன் வந்தா எல்லாம் சரியாகிடும்னு நம்பிட்டிருந்தேன். ஆனா எனக்கு இப்பதான் புரியுது. இப்பதான் நான் தனிச்சிருக்கேன். மகளால மட்டும்தான் அந்தத் தனிமையைப் போக்க முடியும். நான் ரொம்ப காலத்துக்குப் பிறகு ஒரு கவிதை எழுதியிருக்கேன். அந்தக் கவிதை கூட மகளைப் பற்றித்தான். கட்டிலுக்குப் பக்கத்துல இருக்கும். கையெழுத்து கோணலாகிட்டுது இப்போ. சில சொற்கள் சரியாக நினைவில்ல. அணையப் போகும் விளக்குக்கு நெய் ஊற்றுபவள். விளக்கின் சுடர் அணைய விடாதவள். இப்படி ஏதோ...''

தனக்கு அந்த முதியவரை ஏறெடுத்துப் பார்க்குமளவுக்குத் துணிவில்லை என இளம்பெண்ணுக்குத் தோன்றியது. எனினும் அவள் மிகச் சிரமப்பட்டு அவர் மீதிருந்த பார்வையை அகற்றாதிருந்தாள். இளம்பெண் மெதுவாக முதியவரின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''ஐயாவோட வீட்டைப் போல எங்க வீட்டுல, அவ்வளவு வசதிகள் எல்லாம் இல்ல. பகல் நேரத்துல வீட்டுல யாரும் இருக்கிறதுமில்லை. ஐயா மனசை சமாதானப்படுத்திக்குங்க. மகன் ஐயாவை நேசிக்கிறார். மகன்கள் அப்படித்தான். அன்பை வெளிக் காட்டிக்கிறதில்ல.''

''நாங்க எங்கேயாவது வெளியே போகலாம் மகள்.''

''மகன்கிட்டயும் சொல்லிட்டுப் போகலாம் ஒருநாள்.''

''மகன்கிட்ட சொல்லிட்டுப் போகக் கிடைக்காது மகள். அக்கா கூட வெளியே எங்காவது போயிட்டு வரட்டுமான்னு நான் நேத்து மகன்கிட்ட கேட்டேன். அவனுக்கு இஷ்டமில்ல. வேணாம்னுட்டான். மகளை அறிமுகப்படுத்திக்கவும் அவனுக்கு விருப்பமில்ல. பொஞ்சாதியைப் போல என்னை வாசலுக்குப் பக்கத்துல விடுறதுமில்ல. நிறைய சட்ட திட்டங்கள்.''

''மகன் வாசலுக்குப் பக்கத்துல கூட்டிட்டு வரலைன்னா, மனசை சமாதானப்படுத்திக்கிட்டு ஐயா வீட்டுக்குள்ளேயே இருங்க. நான் வர்றேன்ல? சாயங்காலம் வேலை முடிஞ்சு போறப்ப இங்க வந்து என்னைக் கூட்டிட்டுப் போங்கன்னு என்னோட அண்ணாக்கிட்ட சொல்லி வைக்கிறேன்.''

''அப்படீன்னா இங்கிருந்து போன் பண்ணி இன்னிக்கும் வரச் சொல்லுங்க.''

அவள் சமைத்தாள். முதியவர் கூற வேண்டியதையெல்லாம் கூறி முடித்து, அவருக்கு தூக்கக் கலக்கம் வரும்வரைக்கும் அவள் அவரது குரலைச் செவிமடுத்துக் கொண்டிருந்தாள். இளைஞன் வந்து முதியவரை படுக்கைக்குக் கூட்டிப் போனான். இளம்பெண் கட்டிலருகே சென்று முதியவரின் தலையைத் தடவிக் கொடுத்தாள். முதியவர் இரு விழிகளையும் மூடிக்கொண்டார்.

''மகள் இப்ப போங்க. இருட்டிடும். அண்ணாவுக்கு வரச் சொல்லியிருக்கீங்கதானே?''

''ஆமா.''

இளைஞன் அவ்வளவாக அவளைக் கவனத்தில் கொள்ளவில்லை. அவ்வளவாகப் புன்னகைக்கவுமில்லை. 'ஐயாவின் உடல்நிலை முன்பை விடவும் இப்போது பலவீனமாக இருக்கிறது' என அவளுக்குத் தோன்றியது. இளம்பெண்ணின் சேலைமுனை முதியவரின் தோளைத் தொட்ட கணத்தில் முருகக் கடவுளின் சரவணப் பொய்கை தொட்டதன் இதத்தைத் தான் உணர்வதாக முதியவருக்குத் தோன்றியது. முதியவர் முருகக் கடவுளை மிகவும் நேசித்தார்.

'அழகிய கடவுள். தூக்கம் வராத நேரங்களில் முருகக் கடவுள் எனக்குத் தனது கரங்களால் காற்று விசிறுவதாக நினைத்துக் கொள்வேன். மனுஷியும் போய் விட்டதால் என்னால் இனி மகளை நினைத்துக்கொள்ள முடியும்.'

•

அவள் நுழைவாயிலைத் தள்ளித் திறந்து முற்றத்தில் பிரவேசித்து வீட்டுக்குள் நுழைந்தாள். யாரும் தென்படவில்லை. பல தடவை அழைத்துப் பார்த்தாள். யாருமே வெளியே வரவில்லை. இளம்பெண் முதியவரின் படுக்கையறை நோக்கிச் சென்றாள். முதியவர் மிகச் சிரமத்தோடு சுவாசித்துக் கொண்டிருந்தார். முதியவர் கண்மூடியிருந்தார்.

''ஐயா.''

முதியவர் விழிகளைத் திறக்கவில்லை.

''மகள்.''

முதியவர் விழிகளைத் திறக்காமலேயே மெதுவாக முணுமுணுத்தார். அவள் கட்டிலருகே நிலத்தில் அமர்ந்துகொண்டாள்.

''சில நாட்கள் அப்பா இப்படித்தான்.''

இளைஞன் எங்கிருந்தோ வெளிப்பட்டான்.

''ஏதாவது சாப்பிட்டாரா?''

''ஊட்ட முடியல. பயப்பட்டு பிரயோஜனமில்லக்கா. டாக்டர்ஸ் சொன்னதைவிட கூட காலம் அப்பா வாழ்ந்துட்டார். அக்கா கதிரையில உட்காருங்க.''

இளைஞன் கட்டிலருகே இருந்த கதிரையொன்றில் அமர்ந்தவாறு முதியவரையே பார்த்துக்கொண்டிருந்தான். இளம்பெண் இருந்த இடத்திலிருந்து அசையாதிருந்தாள்.

''சித்தி?''

''திரும்ப வர மாட்டார்.''

''சொன்னா வருவார்ல?''

''வந்து என்ன செய்யப் போறா? நாந்தான் இருக்கேன்ல?''

''தம்பி... ராத்திரி தனியா?''

**‘அழகிய கடவுள். தூக்கம் வராத நேரங்களில் முருகக் கடவுள் எனக்குத் தனது கரங்களால் காற்று விசிறுவதாக நினைத்துக் கொள்வேன். மனுஷியும் போய் விட்டதால் என்னால் இனி மகளை நினைத்துக்கொள்ள முடியும்.’**

“இல்ல... நான் சமையல் வேலைக்கும் சேர்த்து ஒருத்தனை உதவிக்குக் கூட்டி வந்திருக்கேன்.”

“நான் நாளைக்கு காலைல வரேன்.”

“அக்கா சிரமப்படத் தேவையில்ல.”

இளைஞன் தேவையில்லை என்று கூறியபோதிலும், அவள் மறுநாள் விடிகாலையிலேயே வந்து விட்டிருந்தாள்.

“இப்போ ஐயாவுக்கு எப்படியிருக்கு தம்பி?”

“குறைந்திருக்கு... இன்னும் தூங்கிட்டிருக்கார்.”

இளம்பெண்ணுக்கு முதியவரின் வீட்டில் சொற்ப நேரம் கூடத் தரித்திருக்க அனுமதி கிடைக்கவில்லை.

“உள்ளே போய் கொஞ்சம் பார்த்துட்டுப் போகட்டுமா?”

இளைஞன் எதுவும் கூறவில்லை. இளம்பெண் முதியவரின் அறைக்குள் சென்று அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள். அணையப் போகும் விளக்குக்கு நெய் ஊற்றுபவள். விளக்கின் சுடர் அணைய விடாதவள். முதியவர் கண் திறக்கவில்லை.

“அக்கா கிளம்புங்க. ஸ்கூலுக்குப் போகணும்ல? இன்னிக்கு திரும்ப வர வேணாம். நாளைக்கு வந்தாப் போதும். இப்ப குறைஞ்சிருக்குதானே.”

•

மறுநாளும் அவள் அந்தத் தெருவில் நடந்தே வந்தாள். அது முதியவர் வழிபார்த்திருந்த பாழடைந்த தெரு. அந்த அமைதியான நிழல் தெருவில் நடந்து வந்தாள். சோர்ந்திருந்த கண்களைக் கொண்டு புன்னகைக்கும் அந்த இளம்பெண், பூரித்த விழிகளைக் கொண்ட அம் முதியவரைத் தேடி வந்தாள். முதியவரருகே இருந்த நுழைவாயில். ஆங்காங்கே மரங்கள் வீற்றிருந்த வீட்டுத் தோட்டம். அவை அன்றும்கூட இளம்பெண்ணையே பார்த்திருந்தன. இளம்பெண் வரும்வரை காத்திருந்தன.

நுழைவாயிலருகே அந்தப் பாழடைந்த தெருவில் அன்று மனித நடமாட்டம் அதிகமிருந்தது. நுழைவாயிலருகேயும், முற்றத்திலும், முன்னாலிருந்த தெருவின் இருமருங்கிலும், பலவிதமான வாகனங்கள் பலவும் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த முற்றத்தில் பலதரப்பட்ட மனித உடல்களும் அங்கிங்கென அசைந்துகொண்டிருந்தன. நிறைந்த சனக்கூட்டம். இளம்பெண் வரும்வரைக்கும் காத்துக்கொண்டிருந்த நுழைவாயிலுக்கு மேலால், வீசிக்கொண்டிருந்த மெல்லிய தென்றலுக்கு வெண்ணிறத் துணி அசைந்து கொண்டிருந்தது. பலவித பதாகைகளால் முதியவரின் வீட்டு முற்றம் நிறைந்திருந்தது.

‘பேராசிரியர் சந்திரன் கருணாரத்தினம் அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்கள்’

இளம்பெண் நுழைவாயிலருகே நின்றுகொண்டாள். அந்த முதியவரைக் காணவில்லை. நடுத்தர வயதைக் கடந்து கொண்டிருக்கும் பெண்மணி, சவ வீடு முழுவதும் அந்த இளம்பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தாள். அவள் வந்திருக்கக் கூடுமென, நடுத்தர வயதைக் கடந்து கொண்டிருக்கும் பெண்ணுக்குத் தோன்றியது. அவளிடம் கூற அவளிடம் நிறைய இருக்கிறது.

பலதரப்பட்ட மனிதர்களும், பலதரப்பட்ட விடயங்களை அங்கே செய்து கொண்டிருந்தார்கள். சிலர் தேநீர்க் குவளைகள் கொண்ட தட்டுக்களை ஏந்தியவாறு நடக்கையில், சிலர் குளிர்பானங்கள் கொண்ட தட்டுக்களை ஏந்தியவாறு நடக்கையில், சிலர் பொலீதீனை வெட்டிக் கொண்டிருக்கையில், சிலர் அவர் செய்த சேவைகளைக் குறித்து உளறிக் கொண்டிருந்தார்கள். சிலர் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த முற்றத்துக்கும், அந்த வீட்டுக்கும், அந்தச் சுவர்களுக்கும், அவை அனைத்துக்கும் பல உரிமையாளர்கள் தோன்றியிருந்தார்கள். அந்த முதியவரை மட்டும் காணவில்லை. அந்த சக்கர நாற்காலியும் தென்படவில்லை. அந்த இளம்பெண் அறிந்திருந்த எந்த முகத்தையும் அங்குக் காணக் கிடைக்கவில்லை. அணையப் போகும் விளக்குக்கு நெய் ஊற்றுபவள். விளக்கின் சுடர் அணைய விடாதவள்.

இளம்பெண் முன்னே நடந்தாள். மெதுமெதுவாக நுழைவாயிலைக் கடந்து தெரு வழியே முன்னே நடந்தாள். அந்த முதியவர் நுழைவாயிலருகே இருக்கிறாரா எனத் திரும்பிப் பார்த்தாள். முதியவர் இருக்கவில்லை. அவளது இரு பாதங்களும் பலவீனமடைந்துவிட்டதைப் போல உணர்ந்தாள். அவள் தரித்திருக்கவில்லை. மீண்டும் திரும்பிப் பார்க்காது நடந்துகொண்டேயிருந்தாள்.

அதன்பிறகு அவள் ஒருபோதும் அந்தத் தெருவில் செல்லவேயில்லை. எனினும் அந்தப் பாதையில் திரும்பத் திரும்பத் திரும்ப நடந்து அவரைத் தேட வேண்டுமென அவளுக்கு தினந்தோறும் தோன்றிக் கொண்டேயிருந்தது. அவ்வாறு போகும்போது ‘அந்த முதியவர் அந்தத் தெருவின் இடைநடுவே அந்த நுழைவாயிலினருகே அமர்ந்து பார்த்துக் கொண்டிருப்பாரானால்?!’ என அவளுக்குத் தோன்றியது. எனினும் அவள் மீண்டும் ஒருபோதும் அந்தத் தெருவில் செல்லவேயில்லை.





## கவலை அற்ற
## நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...

சிறந்த ஆலோசனைகளுக்கு எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்

- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drug Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- Life Insurance Products
- RRSP'S & Investments
- RESP – Education Saving Plan
- Final Expense Products
  *(Through Funeral Homes)*

**Mega Financial Group**

416 293 5559 • 416 666 1120
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON

Industrial Alliance · UL Mutual · Assumption Life · Equitable Life of Canada · Desjardins · Canada Life · RBC Insurance · Unity Life of Canada · Transamerica Life Canada · Manulife Financial · Empire Life · Sun Life Financial

## Certificate Programs

Electrical Exam Prep. Course
Electrical AutoCAD

### Computer Technology
Programming
C/C++
Java
Python
VB.Net
MySQL / MS SQL
Software Testing
Android App Development

### Multi Media
Video Editing
Sound Editing
Photoshop
Illustrator

### Accounting
QuickBooks
Sage 50
Sage 300 Accpac

### Microsoft Office
Word
Excel
PowerPoint
Outlook

### Food Handler Certificate
Restaurant Management

Second Career Program
covers Tuition's fee and living expenses
up to **$28000**

## Diploma Programs



**Computerized Accounting**
**Accounting and Payroll**
**Office Administration**
**Food Service Worker**

### Automation Technology
PLC Programming
HMI Programming
VFD Control & Programming
Industrial Control & Comm.
Electrical Design

### CAD/CAM Technology
AutoCAD
SolidWorks
Inventor
MasterCAM
CNC Programming

Now Accepting International Students

# beta College
of Business & Technology

2347 Kennedy Road, Suite 301, Toronto ON, M1T 3T8, Canada
www.betacollege.ca, info@betacollege.ca

**416 449 beta (2382)**

(Approved as a private career college under the Private Career College Act 2005)

